கழக வெளியீடு, ௧௧௧௨

# வேக்பீல்டு பாதிரியார்

மூலம் :

ஆலிவர் கோல்ட்ச்மித்

தமிழாக்கம் :

இரா முத்துக்குமாரசாமி, எம் ஏ, பி லிப்

MADRAS RECORD OFFICE
MADRAS

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி-6. சென்னை -1.
1962

இராசகோபால் பிள்ளை முத்துக்குமாரசாமி (1936)

© 1962 THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LIMITED.

Ed 1 Dec 1962

O111,3LG4H,W
N62

O111,3L26,11
K2

110347

# WAKEFIELD PATHIRIYAR

(VICAR OF WAKEFIELD)

Appar Achakam, Madras-1.

# பதிப்புரை

மேனாட்டு இலக்கியங்களில் மிகச் சிறந்த கதை நூல்களைத் தமிழில் வெளியிட்டு வரும்பணியை மேற்கொண்டு ஸ்காட், டிக்கன்சு போன்ற அறிஞர்கள் பலரின் படைப்புக்களில் சிலவற்றை மொழிபெயர்க்கச் செய்து வெளியிட்டுள்ளோம். அவ்வாறே ஆங்கிலப் பெரும் புலவரான ஆலிவர் கோல்ட்ச்மித்தின் அரிய நூலான 'விகார் ஆப் வேஃபீல்டு' என்பதின் தமிழாக்கமான 'வேக்பீல்டு பாதிரியார்' தற்பொழுது வெளியிடப் பெறுகின்றது.

கோல்ட்ச்மித் பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரும்புலவர். உரைநடை நூல்களையும் நாடக நூல்களையும் கவிதைகளையும் எழுதுவதில் வல்லவர். கோல்ட்ச் மித்தின் இலக்கியத் திறனைப் பெரிதும் மதித்துப் பாராட்டியுள்ளார் டாக்டர் ஜான்சன்.

இயற்கையில் நற்குணம் அமைந்த ஒருவர் எதிர்பாராது ஒன்றன்மேலொன்றாய் ஏற்படும் இன்னல்களுக் குட்பட்டுப் பல கேடுகளை அடைந்து மனங்கலங்காது இறுதியில் தம்முடைய பொறுமைக்கும் மன உரத்திற்கும் பரிசாக நற்பயன்கள் பல எய்திப் பேரின்பம் நுகர்வதை விளக்குவது இந்நூல். வறுமைக்கும் வீண்பகட்டிற்கும் இடையில் சிக்கிச் சீரழியும் ஆங்கிலக் குடும்பமொன்றின் வாழ்க்கையை இந்நூலில் மிக அழகுற விளக்கிச் செல்கின்றார் கோல்ட்ச்மித். குடும்பத்தின் தலைவரான டாக்டர் பிரிம்ரோசே கதையைக் கூறும் முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

இத்தகையதோர் அரிய நூலைத் தமிழில் வெளியிடுவதற்கு நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். இதைத் தமிழில் ஆக்கித்தந்தவர் திரு. இரா. முத்துக்குமாரசாமி. இதுவரை வெளியான தமிழாக்க நூல்களைப் படித்து மகிழ்ந்த அன்பர்கள் இதையும் படித்து இன்புறுவரென எண்ணுகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

## உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | வேக்பீல்டு குடும்பம் | 1 |
| 2. | குடும்ப இடையூறுகள் | 8 |
| 3. | குடியேற்றம் | 15 |
| 4. | புதிய சூழ்நிலை | 26 |
| 5. | புதிய நட்பு | 33 |
| 6. | அமைதியிலே இன்பம் | 40 |
| 7. | நிலக்கிழாருக்கு விருந்து | 47 |
| 8. | களவு தந்த களிப்பு | 56 |
| 9. | பெருநகர்ப் பெண்டிர் | 68 |
| 10. | வறுமையின் துன்பம் | 74 |
| 11. | முயற்சிமேல் முயற்சி | 82 |
| 12. | ஏமாற்றத்தின்மேல் ஏமாற்றம் | 91 |
| 13. | பொருந்தாத அறிவுரை | 102 |
| 14. | தொடர்ந்த துன்பங்கள் | 108 |
| 15. | எல்லாம் அறிந்தவரின் தவறு | 120 |
| 16. | சூழ்ச்சியும் வீழ்ச்சியும் | 129 |
| 17. | நீண்டநாள் மயக்கம் | 139 |
| 18. | ஓடுதலும் தேடுதலும் | 149 |
| 19. | எதிர்பாராத சந்திப்பு | 155 |
| 20. | ஞானக் கிறுக்கு | 161 |
| 21. | நட்பும் ஒற்றுமையும் | 174 |
| 22. | அன்பின் தன்மை | 187 |
| 23. | துன்பமே தருங்குற்றம் | 195 |
| 24. | புதிய இழப்புக்கள் | 203 |
| 25. | தாழ்விலும் வாழ்வு | 212 |
| 26. | சிறையில் சீர்திருத்தம் | 220 |
| 27. | திட்டமும் பணியும் | 228 |
| 28. | அறிவினாலாய பயன் | 234 |
| 29. | மறுமையில் இன்பம் | 254 |
| 30. | நல்லவற்றிற்கு அறிகுறி | 260 |
| 31. | பொறுமை தந்த செல்வம் | 275 |
| 32. | மகிழ்ச்சிதரும் மணங்கள் | 304 |


# வேக்பீல்டு பாதிரியார்

## 1. வேக்பீல்டு குடும்பம்

தனியொருவனாகவே இருந்துகொண்டு மக்கள் தொகையைப் பற்றிப் பேசுபவனைவிடத் திருமணம் செய்து கொண்டு ஒரு பெரிய குடும்பத்தை நடத்துபவனே நாட்டிற்குத் தொண்டு செய்யும் பெருந்தன்மையுடைய மனிதன் என்பது என்னுடைய நெடுநாளைய கருத்து. இந்த நோக்கத்துடன் நான் பாதிரியார் பதவியை மேற்கொள்வதற்கு ஓராண்டுக்கு முன்னரேயே என்னுடைய திருமணத்தைப் பற்றித் தீவிரமாக எண்ணலானேன். என் மனைவியையும் யானே தேர்ந்தெடுத்தேன். எப்படி அவள் தன்னுடைய திருமண உடையைத் தேர்ந்தெடுக்கும்பொழுது அதன் வெளித் தோற்றத்தைக் கண்டு மயங்காது அதன் நீடித்த உழைப்பை ஆராய்ந்து எடுத்தாளோ அவ்வாறே நானும் என் மனைவியைத் தேர்ந்தெடுத்தேன். உண்மையைக் கூற வேண்டுமானால் அவள் இயற்கையில் நற்பண்புடைய சிறந்த பெண். கல்வியில் அந்த நகர்ப்புறத்தில் அவளை விடச் சிறந்தவர்கள் ஒரு சிலர் தாம் உளர். எந்த ஆங்கில நூலையும் பெரிதும் தவறின்றிப் படிக்கக் கூடியவள். ஆனால் ஊறுகாய் போடுவதிலும் சமைப்பதிலும் அவளை வேறு யாரும் மிஞ்சமுடியாது. அவளுடைய சிக்கனத்தால் நாங்கள் பணக்காரர்களாக

ஆகாவிட்டாலும் அவள் குடும்பத்தை மிகச் சிக்கனமான முறையில் நடத்துவதில் தற்பெருமை கொண்டாள்.

எது எவ்வாறிருப்பினும் நாங்கள் ஒருவரை யொருவர் மிகவும் விரும்பினோம். வயது முதிர முதிர எங்கள் அன்பும் முதிர்ந்தது. உலகத்தினர் மீதோ அல்லது ஒருவர்மீது ஒருவரோ சினங்கொள்ளும் வகையில் எதுவும் நிகழவில்லை. நகர்ப்புறத்தில் ஓர் அழகிய வீடும் வீட்டைச் சுற்றியுள்ளவர்களின் நட்பும் எங்களுக்கிருந்தன. அந்த ஆண்டு முழுவதும் ஏழை களுக்கு உதவி செய்வதிலும், கேளிக்கைகளில் பங்கு கொள்வதிலும் சுற்றத்தாரைச் சென்று காண்பதிலும் கழிந்தது. நாங்கள் அஞ்சத்தக்க புரட்சிகளோ அல்லது அழிவுகளோ எதுவும் எங்கள் வாழ்வில் ஏற்படவில்லை. நாங்கள் பெரும்பாலும் நெருப்பின் அருகில் அமர்ந் திருத்தலிலேயே பொழுதைச் செலவிட்டோம். வேனிற் கால அறையினின்று குளிர்கால அறைக்குச் சென்றதே நாங்கள் செய்த குடியேற்றம்.

ஊரின் பெருவழியை அடுத்து நாங்கள் வாழ்ந்து வந்ததால் வழிப்போக்கர்களும் புதியவர்களும் எங்கள் வீட்டிற்கு வந்த வண்ணமே இருப்பர். அவர்கள் பெரும்பாலும் நாங்கள் வழங்கிவந்த புகழ்பெற்ற பழச் சாற்றை அருந்துவதற்கென்றே வருவர். அவர்களுள் ஒருவராவது அதில் குற்றங் காணவில்லை என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நாற்பது தலை முறைக்கு முற்பட்ட உறவை உடைய உறவினர்கள் கூட உறவுமுறையை அறிவிக்கும் அலுவலரின் துணை யின்றியே பழைய உறவை நினைவில் வைத்துக்கொண்டு எங்களை அடிக்கடி காண வந்தனர். அவர்களில் சிலர் இந்த உறவுமுறையைக் கொண்டாடுவதின் மூலம் எங்



களுக்குப் பெரும் புகழ் ஒன்றையும் தேடித்தரவில்லை. ஏனெனில் சிலர் குருடர்களாகவும், சிலர் நொண்டிக ளாகவும் இருந்தனர். அவர்கள் எப்படியிருப்பினும் ஒரே இரத்தத்தில் ஒட்டிப் பிறந்தவர்களாதலின் நம் முடன் ஒரே மேசையில் அமர்ந்துண்ண வேண்டும் என்று என் மனைவி வற்புறுத்தி வந்தாள். இவ்வாறு இருந்ததினால் எங்களிடையே பணக்காரர்கள் இல்லை யாயினும் பொதுவாக இனிய நண்பர்கள் இருந்தனர்.

விருந்தினன் எவ்வளவு ஏழையாக இருந்தானோ அவ்வளவு அவன் நல்ல முறையில் நடத்தப்பெற்ற பொழுது மகிழ்ச்சியுமடைந்தான். மலரின் நிறங்களை யும் வண்ணாத்திப்பூச்சியினுடைய சிறகின் வண்ணங் களையும் காணும்பொழுது சிலர் மகிழ்ந்து புகழ்வது போல நானும் வாடிய முகங்கள் மலர்வதைக் கண்டு மகிழ்ச்சியடையலானேன். உறவினருள் எவனாவது ஒருவன் தீய பண்புடையவனாகக் காணப்பட்ட பொழுதோ, இன்னல் தரும் விருந்தினரை வீட்டை விட்டு விலக்க நேரிடும் பொழுதோ அவருக்குக் குதிரை செலுத்தும் பொழுது அணியும் சட்டை ஒன்றையாவது, அல்லது காலணிகளையாவது, சில சமயங்களில் குறைந்த மதிப்புடைய குதிரை ஒன்றையாவது கடனாகக் கொடுத்து அவர்கள் அவற்றைத் திருப்பிக் கொடுப் பதற்குக்கூடத் திரும்பி வராதவாறு செய்வதில் எனக்கு மன நிறைவு ஏற்படும். இதனால் எங்கள் வீட்டில் இருந்த எங்களுக்கு விருப்பமில்லாத சாமான்களைக் கொடுத்து வீட்டைத் தூய்மைப்படுத்தினோம். ஆனால் எப்பொழுதும் வேக்பீல்டு குடும்பம் வழிப்போக்கரை யாவது ஏழைகளையாவது வீட்டை விட்டு விரட்டியது கிடையாது.

இவ்வாறு மிக்க மகிழ்ச்சியுடன் நாங்கள் பல ஆண்டுகள் வாழ்ந்தோம். இந்த மகிழ்ச்சியின் தரத்தை உயர்த்தும் வகையில் இடையிடையே சில தடைகள் ஏற்பட்டுள்ளன. என்னுடைய பழத்தோட்டத்தைப் பள்ளி மாணவர்கள் பலமுறை சூறையாடியுள்ளனர். என் மனைவி செய்து வைத்த தின்பண்டங்களைப் பூனையாவது பிள்ளைகளாவது திருடித் தின்றுவிடும். நான் சமயச் சொற்பொழிவிலே அவலச்சுவை நிறைந்த பகுதிகளை விளக்கிக் கூறும்பொழுது பெருங்குடி மகனார் உறங்கி விழுவார். பெருங்குடி மகனாரின் மனைவிக்கு என் மனைவி தன் தலை வணங்கி வணக்கத்தைத் தெரிவிக்கும்பொழுது அவ்வம்மையார் பதிலுக்குத் தலை வணங்காமலே சற்றுக் கர்வத்துடன், நிமிர்ந்தபடி வணக்கம் தெரிவிப்பார். ஆனால் இத்தகைய நிகழ்ச்சிகளால் எங்களுக்கு ஏற்பட்ட மனக்கசிவினின்று விரைவில் மீண்டு விடுவோம். மூன்று அல்லது நான்கு நாட்கள் கழிந்ததும் இவற்றிற்கெல்லாம் நாம் ஏன் சோர்வுற்றோம் என்று வியப்படைவோம்.

என்னுடைய குழந்தைகள் கண்டிப்பற்ற முறையில் கல்வி பயின்றதால் தெளிந்த அறிவும் உடல் வலிவும் பெற்றிருந்தனர். ஆண்மக்கள் உழைப்பும் ஊக்கமும் பெற்றிருந்தனர். பெண்மக்கள் அழகும் கவர்ச்சியும் பெற்று விளங்கினர். என்னுடைய இறுதிக் காலத்தில் என்னைக் காப்பாற்றக்கூடிய இத்தகைய மக்களின் சூழலிலே இருக்கும் நான் அபென்சுபர்க் என்ற வீரனைப் பற்றிய புகழ்பெற்ற கதை ஒன்றைக் கூறாமலிருக்க முடியாது. இரண்டாம் ஹென்றி என்ற மன்னன் செர்மனியில் உலா வந்தபொழுது அவனைக் காண்பதற்குப் பல வீரர்கள் பெருஞ் செல்வத்தைக்



கொண்டு வந்தனர். ஆனால் இந்த வீரனோ தன்னுடைய முப்பத்திரண்டு சிறுவர்களையும் அரசனிடம் அழைத்துச் சென்று 'என்னால் தங்களுக்கு அளிக்கக்கூடிய சிறந்த அன்பளிப்பு இவர்கள் தாம்' என்று கூறினான். இதைப் போல எனக்கு ஆறு மக்கள்தாம் இருந்தனர். அவர்களை என் நாட்டிற்கு நான் அளிக்கக்கூடிய பெரும் அன்பளிப்பாக நினைத்து வருகின்றேன். எங்களுடைய மூத்த மகனின் பெயர் 'ஜியார்ஜ்.' அதே பெயருடைய அவன் மாமன் எங்களுக்குப் பத்தாயிரம் பவுன்கள் அளித்துச் சென்றதால் அப்பெயரிடப்பட்டது. இரண்டாவது பெண். அவளுக்குக் கிரிசெல் என்று பெயரிட வேண்டுமென்று நான் கூறியபொழுது புதினங்கள் அதிகமாகப் படித்து வந்த என் மனைவி அவளுக்கு 'ஒலிவியா' என்றுதான் பெயரிட வேண்டுமென்று கூறிவிட்டாள். அடுத்த ஓராண்டுக்குள் ஒரு பெண் மகவு பிறந்தது. இக்குழந்தைக்காவது கிரிசெல் என்ற பெயரை இடவேண்டும் என்று திட்டமிட்டேன். ஆனால் குழந்தை பெயரிடும் நாளன்று காப்புத் தாயாக இருந்த அம்மையார் இக் குழந்தைக்குத் தன் விருப்பப்படி 'சோபியா' என்று பெயரிட்டு விட்டார். எனவே இரண்டு புதுமையான பெயர்கள் எங்கள் குடும்பத்தில் இடம் பெற்றன. ஆனால் இதில் எனக்குப் பங்கு கிடையாது என்று உறுதியாகத் தெரிவிக்கின்றேன். அடுத்து மோசசு பிறந்தான். பன்னிரண்டாண்டுகள் இடைவெளிக்குப் பின் இன்னும் இரு ஆண்மக்கள் பிறந்தனர்.

என்னுடைய பிள்ளைகளைப் பார்க்கும்பொழுது எனக்கு ஏற்படும் பெருமகிழ்ச்சியை நான் மறைக்க முடியாது. என்னைவிட என்னுடைய மனைவிக்குப்

பெருமையும் மன நிறைவும் பெரிதாக ஏற்பட்டன. எங்களைப் பார்க்க வந்தவர்கள் என் மனைவியிடம் "இந் நகர்ப்புறத்திலுள்ள குழந்தைகளிலேயே உங்களுடைய குழந்தைகள் தாம் மிக்க அழகுடையவர்கள்" என்று கூறினால் உடனே என் மனைவி "ஆண்டவன் அவர்களை அவ்வளவு அழகாகப் படைத்திருக்கிறார். அவர்கள் நல்லவர்களாகவும் இருக்கிறார்களென்றால் அழகு எதைச் செய்கிறதோ அதுதான் அழகு," என்று கூறி விடுவாள். அதோடு உண்மையிலேயே நல்ல அழகுடைய அவர்களைத் தலைகளை நன்றாக நிமிர்ந்து இருக்கச் சொல்வாள். என்னைப் பொறுத்த மட்டில் வெளித் தோற்றம் என்பது சாதாரணமானது. இவற்றை யெல்லாம் ஏன் நினைவூட்டினேன் என்றால் ஊரிலுள்ளோர் அனைவரும் பொதுவாக இதைப்பற்றியே பேசுவதால்தான். பதினெட்டு வயதுடைய ஒலிவியா, அவளுடைய அழகைப் பார்த்தே ஓவியர்கள் அழகுத் தெய்வமாகிய ஏபேயின் உருவத்தை வரையும் வண்ணம் அழகுச் செல்வம் கொழித்து விளங்கினாள். சோபியா இவ்வளவு எடுத்த எடுப்பிலேயே கவரும் அழகையுடையவளல்லள். ஆனால் அடிக்கடி பார்ப்பவர்களுக்கு அழகுடையவளாகவே காணப்பட்டாள். ஏனெனில் அவளுடைய அழகு மென்மையானது; அடக்கமுள்ளது; கவர்ச்சியூட்டக்கூடியது. ஒருத்தி முதல் முயற்சியிலேயே வெற்றியடைந்து விடுவாள். மற்றொருத்தி விடா முயற்சியால் வெற்றி பெறுவாள்.

ஒரு பெண்ணினுடைய உளப்போக்கு அவள் இயல்புகளுக்குத் தக்கவாறே அமையும். என்னுடைய பெண்களைப் பொறுத்தவரையாவது அப்படித்தான் அமைந்தது. ஒலிவியா பல அன்பர்களை விரும்பினாள்.



சோபியா ஒருவனைத்தான் விரும்பினாள். ஒலிவியா அடிக்கடி தணிக்க முடியாத பெரும் மகிழ்ச்சியால் தாக்கப்பட்டாள். சோபியா சில சமயங்களில் தான் வெளிப்படையாக இருந்தால் யாராவது எள்ளி நகையாடுவார்களோ என்று அஞ்சி இயல்பான நற்குணங்களையும் மறைத்து வந்தாள். ஒருத்தி நான் இன்பமாக இருக்கும்பொழுது தன் பெரு மகிழ்ச்சியால் எனக்குக் களிப்பூட்டினாள். மற்றொருத்தி நான் சற்றுக் கடுமையாக இருந்த நேரங்களில் தன் அறிவால் என்னை மகிழ்வடையச் செய்தாள். ஆனால் இப் பண்புகள் அவரவர்களிடை ஓங்கி வளரவில்லை. ஏனெனில் அவர்கள் தங்கள் இயல்புக்கு மாறான பண்புடன் நாள் முழுவதையும் கழித்திருப்பதை நான் பலமுறை பார்த்திருக்கின்றேன். துக்க உடை பெரியவளைச் சோகத்திலாழ்த்திவிடும். புது நாடாக்கள் சின்னவளைப் பெருமகிழ்வு கொள்ளச் செய்யும். மூத்த மகன் ஜியார்ஜைப் பெரிய வேலையில் அமர்த்த வேண்டுமென்று நான் விரும்பியதால் அவன் ஆக்சுபோர்டில் கல்வி பயின்று வந்தான். இரண்டாவது பையனை மோசசு வணிகத் துறையில் புக விரும்பியதால் வீட்டிலேயே கல்வி கற்று வந்தான். கடைசி இருவருடைய தனிப் பண்புகளைப் பற்றிச் சிறப்பாகக் கூறுவதற்கொன்றுமில்லை. ஏனெனில் அவர்களுக்கு இவ்வுலகைப் பற்றியே சிறிதளவுதான் தெரியும். சுருங்கக் கூறின் குடும்பப்பற்று எல்லோரிடமும் நிலவி இருந்தது. எல்லோரிடமும் நல்ல பண்பும் இருந்தது. அதுதான் பெருந்தன்மை, நன்னம்பிக்கை, அடக்கம், எளிமை, தீமைசெய்யாமை ஆகியவற்றின் தொகுதி.

## 2. குடும்ப இடையூறுகள்

எங்கள் குடும்பத்தின் வீட்டுப் பொறுப்பனைத்தும் என் மனைவியாலேயே ஏற்று நடத்தப்பெற்றன. இறை வழிபாட்டைப் பொறுத்தமட்டில் முற்றும் அதை என் கண்காணிப்பிலேயே நடத்தி வந்தேன். என்னுடைய ஊதியமாகக் கிடைத்த வருவாயெல்லாம் ஆண்டொன்றுக்கு முப்பத்தைந்து பவுன்களே. அவற்றை எங்கள் குழுவைச் சார்ந்த கோவிலில் வாழ்ந்து வந்த அனாதைகளுக்கும் விதவைகளுக்கும் அளித்து விடுவேன். என்னுடைய மானியத்தைப் பற்றி நான் கவலைப்படுவதில்லை. பயன் நோக்காது பணியாற்றுவதையே ஒரு தனி இன்பமாகக் கருதினேன். மதப் பணியைச் செய்வதற்கு எனக்குக் கீழ் ஆள் வைப்பதில்லை என்றும், ஊரிலுள்ள ஒவ்வொருவரிடமும் பழக வேண்டுமென்றும், திருமணமானவர்கள் அடக்கமாக இருக்குமாறு அறிவு கொளுத்த வேண்டுமென்றும், மணமாகாதவர்கள் மணம் செய்தல் வேண்டுமென்று வற்புறுத்துவதென்றும் முடிவு செய்தேன். எனவே சில ஆண்டுகளில் வேக்பீல்டில் மூன்று புதுமையான தேவைகள் எழுந்துள்ளன என்ற பேச்சு பொதுவாகப் பரவலாயிற்று. அவை, கர்வம் தேவைப்படுகின்ற மத குரு; மனைவிகள் தேவைப்படுகின்ற இளைஞர்கள்; வாடிக்கைக்காரர்கள் தேவைப்படுகின்ற மதுக்கடைகள் என்பன.

எனக்கு எப்பொழுதும் பிடித்த கருத்துக்களுள் ஒன்றாகத் திருமணம் விளங்கியது. அதன் இன்பத்தை நிலை நாட்டுவதற்காக நான் பல விரிவுரைகள் எழுதியுள்ளேன். ஆனால் நான் ஆதரித்துவந்த தனிச்



சிறப்புடைய கொள்கை ஒன்றுண்டு. அது அறிஞர் விச்டன் எண்ணியதுபோல் "இங்கிலாந்துக் கோயிலைச் சார்ந்த எந்தப் பாதிரியும் தன் முதல் மனைவி இறந்தவுடன் மறுமுறை மணம் புரிந்து கொள்வது சட்டத்திற்குப் புறம்பானது" என்பதுதான். ஒரே சொல்லில் விளக்க வேண்டுமானால் நான் ஒருதாரக் கொள்கையை மதிப்பவன்.

இந்த முக்கியமான விவாதத்தில் நான் இளமையிலேயே ஈடுபட்டேன். அதைப்பற்றிப் பெரிய பெரிய தொகுதிகளாக எழுதினேன். அவற்றில் சில பகுதிகளை நானே வெளியிட்டேன். அவை விற்கவில்லை. எனினும் நல்வாய்ப்புள்ள சிலர்தாம் இப்புத்தகங்களைப் படித்தார்கள் என்று எண்ணி ஆறுதலுற்றேன். சில நண்பர்கள் இதை என்னிடமுள்ள குறை எனக் கூறினர். ஆனால் அவர்கள் இந்தப் பொருளை ஆழ்ந்து சிந்திக்கக் கூடிய ஒரு பொருளாகக் கருதவில்லை. நான் அதை மீண்டும் மீண்டும் சிந்திக்க அது மிகமிக முக்கியமானதாக எனக்குத் தோன்றியது. என்னுடைய கொள்கைகளை வெளிப்படுத்துவதில் நான் விச்டனைவிட ஒரு படி மேலே சென்றேன். அவர் தம்முடைய மனைவியின் கல்லறைமீது "வில்லியம் விச்டனுடைய ஒரே ஒரு மனைவி" என்று பொறிக்கச் செய்திருந்தார். நான் என் மனைவி உயிரோடிருக்கையிலேயே அவளுடைய கல்லறையில் பொறிக்கப்பட வேண்டியதை எழுதி வைத்துவிட்டேன். அதில் அவள் சாகும்வரை அறிவுடனும், சிக்கனத்துடனும், பணிவுடனும் நடந்ததாகப் புகழ்ந்து எழுதினேன். அதற்கு ஒரு திருந்திய படியெடுத்து, அழகிய சட்டமிட்டுப் புகை போக்கியின் அருகில் தொங்கவிட்டேன். அது பல பயனுள்ள

நோக்கங்களை நிறைவேற்றியது. என் மனைவி எனக்குச் செய்யவேண்டிய கடமையை அவளுக்கு நினைவூட்டி வந்தது. நான் அவள்பால் கொண்டிருந்த பற்றினுறுதியையும் அது வெளிப்படுத்திக்கொண்டிருந்தது. புகழ்பெற வேண்டுமென்ற அவா அவளை ஊக்கமடையச் செய்தது. தன்னுடைய இறுதியைப் பற்றிய எண்ணம் அவள் மனதில் நிலையாக இருக்கும்படி செய்தது.

திருமணத்தைப் பற்றி நான் மிகவும் ஆதரவுடன் பேசி வந்ததைக் கேட்டதாலோ என்னவோ என்னுடைய மூத்த மகன் கல்லூரிப் படிப்பை முடித்த பின்னர் அருகிலுள்ள ஒரு கோவில் குருவினுடைய மகளின் மீது அன்பைப் பொழிய ஆரம்பித்தான். அக் குரு கோயிலின் உயர்ந்த பதவியிலிருந்தார். அவருடைய மகளுக்குப் பெருந்தொகையையும் அளிக்கக் கூடியவர். ஆனால் செல்வத்திற்காக அவளைத் தேர்ந்தெடுப்பது சிறிய செயல். அரபெல்லா வில்மோட் எல்லோராலும் (என்னுடைய இரு பெண்களைத் தவிர) அழகு மிக்கவள் என்று பாராட்டப்பெற்றவள். அவளுடைய இளமையும், உடற்கட்டும், அறியாமையும் கவர்ச்சிமிக்க அவள் தோற்றத்தால் அதிகரித்துக் காணப்பட்டன. துடிப்பையும் உணர்ச்சியையும் வெளியிட்ட அவள் பார்வை வயதானவர்களைக்கூடத் தவறான வகையில் உற்று நோக்கச் செய்தது. என் மகனுக்கு நான் போதுமான அளவு சொத்து ஒதுக்கிவைப்பேன் என்று வில்மோட்டுக்குத் தெரியுமாதலால் இந்தப் பொருத்தத்திற்கு அவர் மறுப்புக் கூறவில்லை. எனவே மண உறவு ஏற்படப்போகும் இரு குடும்பத்தினரும் மன இசைவுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தோம். நம்முடைய வாழ்நாட்களிலேயே திருமணமாவதற்கு முன்



களவொழுக்கத்தில் பழகி இன்புறுவதில்தான் இன்பம் அதிகமுண்டு என்பதை அனுபவத்தின் மூலமுணர்ந்த நான் அந்த இடைக்காலத்தை நீட்டிக்க விரும்பினேன். அவர்களிருவரும் ஒருவருடன் ஒருவர் நன்குபழகுவதன் மூலம் மகிழ்ச்சியை அதிகமாக அடைந்தார்கள். நாங்கள் பெரும்பாலும் காலையில் இசையால் எழுப்பப் பெற்றோம். சில நாட்கள் வேட்டையாடவும் சென்றோம். காலைச் சிற்றுண்டிக்கும் பகலுணவிற்கும் இடைப்பட்ட வேளையில் பெண்கள் உடைகளைப்பற்றி எண்ணுவதிலும் புத்தகங்களைப் படிப்பதிலும் செலவிட்டனர். புத்தகத்தில் ஒரு பக்கத்தைப் படித்துவிட்டு உடனே கண்ணாடியில் தங்கள் முகங்களையும் பார்ப்பர். புத்தகத்தில் வருணிக்கப்பட்டுள்ள முகத்தின் அழகைவிடத் தங்கள் முகம் அழகாக இருக்கிறதா என்று பார்ப்பார்கள். பகலுணவின் போது என் மனைவிதான் எல்லோருக்கும் பரிமாறுவாள். இது அவளுடைய தாயின் வழக்கம். இந்தச் சமயங்களில் அவள் வகையுணவு ஒவ்வொன்றும் எப்படிச் சமைக்கப்பட்டது என்பதை விளக்குவாள். உண்டபின் பெண்கள் எங்களைவிட்டுப் பிரிந்து அவரவர்களின் அறைகளுக்குப் போகாதிருக்க நான் அவர்களையெல்லாம் பாட்டுப்பாடச் சொல்வேன். சில சமயங்களில் அவர்கள் இசையாசிரியரின் துணையுடன் எங்களுக்கு நல்ல இசைவிருந்து அளிப்பர். உலாவச் செல்லல், தேநீர் அருந்தல், நடனமாடல், விளையாடுதல் முதலியவற்றில் நாளின் மிச்சப்பகுதி சென்றுவிடும். சீட்டாடுவது எனக்குப் பிடிக்காததொன்று. சதுரங்கம் மட்டும் எனக்குப் பிடிக்கும்.

இவ்வாறு சில மாதங்கள் கழிந்தன. இறுதியில் இருவருக்கும் திருமணத்தை நடத்துவதற்குரிய நன்

ணை உறுதிப்படுத்த எண்ணினேம். திருமணத்தை நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை என் மனைவி எவ்வளவு அக்கறையாகச் செய்து வந்தாள் என்பதை நான் விளக்க வேண்டியதில்லை. என்னுடைய பெண்களோ பொறுமையுடன் நோக்கினர். ஆனால் என்னுடைய கவனமெல்லாம் வேறொன்றில் நிலைத்திருந்தது. எனக்குப் பிடித்த கொள்கைக்கு ஆதரவான கட்டுரை நூலொன்றை விரைவில் வெளியிடுவதில் முனைந்திருந்தேன். வாதத்திலும் நடையிலும் சிறந்து விளங்கிய இக்கட்டுரையை என் தலைசிறந்த பணியாக நான் எண்ணி வந்ததால், உள்ளத்திலே பெருமையுடன் என் பழம்பெரும் நண்பரான திரு. வில்மோட்டினிடம் காட்டி அவருடைய ஒப்புதலையும் பாராட்டுதலையும் பெற எண்ணினேன். ஆனால் மிக விரைவில் அவர் என்னுடைய கொள்கைக்கு மாறான கொள்கையில் அதிகப் பற்றுடையவர் என்பதை அறிந்தேன். அவர் கொள்கைக்கு நல்ல காரணமும் இருந்தது. அவர் அப்பொழுதுதான் நான்காவது மனைவியைத் திருமணம் செய்துகொள்ள முனைந்திருந்தார். எனவே எதிர்பார்த்தது போல் இது ஒரு சிக்கலை விளைவித்தது. நாங்கள் செய்யவிருந்த உறவையும் தடை செய்துவிடும் அளவுக்குக் கசப்பு வளர்ந்தது. அதனால் திருமணம் நடத்த உறுதி செய்திருந்த நாளுக்கு முதல் நாள் இதைப்பற்றி விளக்கமாகப் பேசுவோம் என்று முடிவு செய்து கொண்டோம்.

இருபக்கத்திலும் நல்லுணர்ச்சியுடனேயே விவாதத்தை நடத்தினேம். 'நான் புதிய ஒழுங்கை ஏற்படுத்துபவன்' என்று அவர் நிலைநாட்ட விரும்பினர். நான் மறுத்துரைத்தேன். அவரும் பதிலளித்தார். நான் மீண்டும் மறுத்தேன். இவ்வாறு சூடாக உரையாடிக்கொண்டிருந்தபொழுது என்னுடைய உறவினரொருவர் கவலை தோய்ந்த முகத்துடன் என்னை வெளியே அழைத்தார். என்னுடைய மகன் திருமணம் முடியும் வரையாவது விவாதத்தை நிறுத்தி வைக்கச் சொன்னர்.

"அதெப்படி, உண்மையை எவ்வாறு கைவிட முடியும்? அவர் வேண்டுமென்றால் திருமணம் செய்து கொள்ளட்டும். அவர் தவற்றின் எல்லைக்கே அல்லவா சென்று விட்டார். என்னுடைய சொத்தை வேண்டுமென்றாலும் விட்டுவிடுவேன். ஆனால் என் கொள்கையை விட்டுவிட முடியாது" என்று கூறினேன்.

அவர் "உங்கள் சொத்தைப்பற்றி அறிவிப்பதற்கு மிக வருத்தமாக இருக்கின்றது. அது முழுவதும் இப்பொழுது போய்விட்டது. உங்கள் பணம் முழுவதையும் வாங்கிக்கொண்டிருந்த நகரத்திலுள்ள வாணிகன் எல்லாப்பணத்தையும் இழந்துவிட்டான். அவன் பேரிலுள்ள கடனை அடைப்பதற்கு அவனிடம் சிறிது கூடச் சொத்து இல்லை. திருமணம் முடியும்வரை உங்களுக்கோ அல்லது உங்களுடைய குடும்பத்திற்கோ இதைப்பற்றிக் கூறி அதிர்ச்சி விளைவிக்கக்கூடாது என்று எண்ணினேன். ஆனால் இந்தக் கொள்கையில் நீங்கள் கொண்டுள்ள பிடிவாதத்தைத் தணிப்பதற்காகக் கூறினேன். நீங்கள் முன்யோசனையுடன் உங்கள் மகன் அந்த இளம் பெண்ணின் சொத்தை அடையுமட்டுமாவது தணிந்து செல்வீர்களென எண்ணுகின்றேன்" என்று கூறினன்.

"சரி, நீங்கள் கூறுவது உண்மையாகவே இருக்கட்டும். நான் பிச்சைக்காரனுக ஆனாலும் அது என்னை

முட்டாளாக ஆக்கிவிட முடியாது. என்னுடைய கொள் கைகளைக் கைவிடவும் தூண்டமுடியாது. நான் இப்பொழுதே சென்று என் சூழ்நிலைகளைப்பற்றி எல்லோருக்கும் கூறுகின்றேன். விவாதத்தைப் பொறுத்த மட்டில் நான் இதுவரை அவர்சார்பாக விட்டுக்கொடுத்த சிலவற்றையும் மீண்டும் விவாதிப் பேன். இல்லையேல் எப்படியாவது அவர் திருமணம் செய்து கொள்ளட்டுமென்று விட்டுவிடுகின்றேன் ” என்று திருப்பிக் கூறினேன்.

எனக்கேற்பட்ட தீய விளைவுகளை நான் எடுத்துக் கூறியபொழுது எங்களிருவர் குடும்பங்களிலும் ஏற்பட்ட பலவித உணர்ச்சிகளையும் கூறுவது இயலாது. ஆனல் மற்றவர்கள் அடைந்த வருத்தம் காதலரிருவரும் அடைந்த வருத்தத்தை நோக்கும் பொழுது மிகக் குறைவு. இந்த இருவரையும் பிரித்து விடவேண்டு மென்று முன்னரே எண்ணியிருந்த திரு. வில்மோட் இதைக் கேட்டபின் இந்த மணஉறவை முறித்து விடுவது என்று முடிவுசெய்துவிட்டார். அவரிடம் ஒரு நல்ல குணமிருந்தது. அதுதான் முன்யோசனை. அது ஒன்றுதான் இந்த எழுபத்திரண்டாவது வயதில் எங்களிடம் உள்ளது.

## 3. குடியேற்றம்

எங்கள் சொத்து பறிபோய்விட்டது என்ற செய்தி பகைமையால் எழுப்பப்பட்டதாகவோ அல்லது நன்கு அறிவதற்கு முன்னரே கட்டிவிடப்பட்ட கதையாகவோ இருக்குமென்று எங்கள் குடும்பம் நம்பிற்று. ஆனல் நகரிலுள்ள வணிகனிடமிருந்து வந்த கடிதமொன்று ஒவ்வொரு செய்தியையும் உண்மையென வலியுறுத்து வதாய் அமைந்தது. என்னைப் பொறுத்த வரை சொத்து போய்விட்டதைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஆனல் எனக்கு ஏற்பட்ட வருத்தமெல்லாம் என் குடும்பத்தைப் பற்றியதுதான். இனி அவர்களுக்குத் தொடர்ந்து கல்வி அளிக்க முடியாது. நல்லநிலையில் வாழ்ந்தவர்களை இனி வறுமை நிலைக்கு ஆளாக்க வேண்டுமே என்பதே என் கவலை.

அவர்களுடைய துயரத்தை ஆற்றுவ தற்குள் இரண்டு கிழமைகள் கழிந்துவிட்டன. ஏனெனில் அதற்குமுன் ஆறுதல் கூறும்போதெல்லாம் பழைய துன்பமே மீண்டும் நினைவுக்கு வந்தது. இதற்கிடைப்பட்ட காலத்தில் என்னுடைய சிந்தனைக ளெல்லாம் எதிர்காலத்தில் இவர்களைக் காப்பாற்ற எப்படி வருவாயைப் பெருக்குவது என்பதிலேயே ஈடுபட்டன. இறுதியாகச் சற்றுத் தொலைவிலிருந்து ஆண்டுக்குப் பதினைந்து பவுன்கள் வரக்கூடிய பணி ஒன்று கிடைத்தது. அங்கு என்னுடைய கொள்கை களைத் தொந்தரவின்றிப் பின்பற்றவும் முடியும். இத் துடன் ஒரு சிறு பண்ணையையும் நடத்தி என்னுடைய வருவாயைப் பெருக்கிக் கொள்ளலாம் என்ற நோக் கத்துடன் பணக்கவலையை மகிழ்ச்சியுடன் நீக்கி விட்டேன்.

இம் முடிவுக்கு வந்தபின். அடுத்து என்னுடைய சொத்தில் சிதறியிருந்த சில பகுதிகளை ஒன்ருகச் சேர்க்க எண்ணினேன். நான் கடனுகக் கொடுத்திருந்ததைத் திருப்பிப்பெற்று நான் கொடுக்கவேண்டிய கடன்களை யெல்லாம் கொடுத்தேன். மொத்தம் பதினுன்காயிரம் பவுன்களில் நானூறு பவுன்கள் தாம் மிஞ்சின. ஆகையால் என்னுடைய முக்கிய கவனமெல்லாம் என் குடும்பத்தின் வீண்செலவனைத்தையும் அவர்களுடைய புதிய சூழ்நிலைக்கேற்றவாறு குறைத்துக் கொள்ளச் செய்வதில் ஈடுபட்டது. ஏனெனில் பிச்சை யெடுக்க முயல்வது மிகமிகக் கொடியது என்பதை நான் நன்கறிவேன். குழந்தைகளை அழைத்து "நீங்கள் அறியாமை உடையவர்களாய் இருக்கக்கூடாது. முன் யோசனை எதுவும் இவ்வாறு சொத்து அழிந்து போவதைத் தடுத்து நிறுத்தியிருக்காது. ஆனல் இவ்வாறு இழந்ததினல் ஏற்பட்ட விளைவுகளை மாற்ற முன்யோசனை உதவும். நாம் ஏழைகளாகிவிட்டோம். தாழ்ந்த நிலைக்குத் தக்கவாறு நடக்கவேண்டுமென்று நம் அறிவு கட்டளையிடுகின்றது. எனவே எத்தனையோ பேரைத் தாழ்த்திவிட்ட வீண் பகட்டை நாம் சிறிதும் மனக்குறைவின்றி விட்டுவிடுவோம். அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தரக்கூடிய அமைதியை இனி இத்தாழ்ந்த சூழ்நிலையில் தேடுவோம். ஏழைகள் நம்முடைய உதவியின்றி வாழ்கிருர்கள். நாம் ஏன் அவர்களுடைய உதவியை நாடாது வாழக் கற்றுக் கொள்ளக்கூடாது? நாம் இந்தக் கணத்திலிருந்தே பகட்டனைத்தையும் விட்டு விட்டுப் பெருந்தன்மையாக வாழ்வோம். நாம் அறி வோடு நடந்துகொண்டால் நம்மிடம் இப்பொழுது உள்ளதைக் கொண்டே மகிழ்ச்சியாக வாழலாம்.



செல்வம் பற்ருக்குறை யிருப்பினும் குறைவான மனத்தை நாம் வருவித்துக் கொள்வோம்" என்று அறிவுரை புகன்றேன்.

என் மூத்த மகன் கல்விகற்று அறிவுடையவனுய் விளங்கியதால் அவனை இலண்டனுக்கு அனுப்பினல் அவனுடைய திறமைகளால் ஊதியம் பெற்று எங்களையும் ஆதரித்து அவனையும் காப்பாற்றிக் கொள் வான் என்று எண்ணினேன். வறுமை நண்பர்களையும் குடும்பத்தினரையும் பிரித்துவிடும். இது பெருந் துன் பத்தை உருவாக்கக்கூடியது. நாங்கள் முதன் முறை யாகப் பிரியவேண்டிய நாள் விரைவில் வந்தது. என் மகன் தன் தாயிடமும் பிறரிடமும் கண்ணீருடன் விடை பெற்றுக் கொண்டபின் என்னிடம் ஆசிபெறுவதற்காக வந்தான். என்னுடைய உளம் நிறைந்த ஆசியையும் ஐந்து பென்சுகளையும்தாம் தந்தைவழி உடைமையாக அப்பொழுது என்னல் கொடுக்க முடிந்தது.

"முற்காலத்தில் உன்னுடைய முன்னேரில் ஒரு வரான ஹூக்கர் என்பவர் கால்நடையிலேயே இலண் டனுக்குச் சென்றதுபோல் நீயும் இப்பொழுது செல் கின்ருய். அவருக்கு மதகுருவாய் விளங்கிய சுவெல் என்பவர் கொடுத்த குதிரையைப்போல நானும் இம் மரத் தடியாகிய குதிரையைக் கொடுக்கிறேன். வழியில் உனக்கு ஆறுதலளிப்பதற்கு இந்தப் புத்தகத்தையும் எடுத்துச்செல். இதில் உள்ள இந்த இரண்டு வரிகளும் மில்லியன் பவுன் விலை பெறும்—'நான் இளைஞனுக இருந்தேன். இப்பொழுது முதியனுகிவிட்டேன்; எனினும் நல்ல மனிதன் கைவிடப்பட்டதையோ, அவனுடைய வழியினர் பிச்சையெடுத்ததையோ நான்

பார்க்கவில்லை'. நீ பயணம் செய்யும்பொழுது இது உனக்கு ஆறுதலளிக்கட்டும். நீ செல். உன் நல் வாய்ப்பு எதுவாகவாவது அமையட்டும். நான் உன்னை ஆண்டுக்கொரு முறையாவது பார்க்கவேண்டும். ஊக்கமாக இரு. சென்றுவா'' என்று விடை கூறினேன்.

அவன் நேர்மையும் நன்மதிப்பும் பெற்றிருந்த தால் வாழ்க்கை என்னும் நாடக அரங்கினுள் தன்னந் தனியாக அனுப்புவதற்கு நான் வருந்தவில்லை. ஏனென்றால், வெற்றியோ தோல்வியோ எதுகிட் டினாலும் அவன் நல்ல முறையில் நடப்பான் என்பது எனக்குத் தெரியும்.

அவன் புறப்பட்டுச் சென்றது எங்களுக்கும் வழி வகுத்துக் கொடுத்தது. அடுத்த சிலநாட்களில் நாங் களும் புறப்பட்டோம். மணிக்கணக்காக இருந்து அமைதியை ஆனந்தமாக அனுபவித்துவந்த அந்தச் சுற்றுப்புறத்தை விட்டுப்பிரிவது கண்ணீருடன் அல்லாது முடியாது. அந்தக் கண்ணீர் எங்களிடம் இருந்த சிறு மனஉறுதியையும் தளரச்செய்தது. அத்துடன் வீட்டை விட்டுப் பத்துகல் தொலைவு கூட இதுவரை செல்லாத எங்கள் குடும்பம் எழுபது கல் பயணம் செய்யவேண்டுமே என்ற கவலை எங்கள் உள்ளங்களில் நிறைந்திருந்தது. சில கல் தூரம் எங்களுடனேயே தொடர்ந்து வந்து எங்களை வழியனுப்பிய வேலைக்காரர்களின் அழுகை எங்க ளுடைய கவலையை மேலும் பெருகச் செய்தது.

முதல்நாள் பயணம் நாங்கள் செல்லவேண்டிய இடத்திற்கு முப்பது கல் தொலைவில் எங்களை நலமாகக் கொண்டு சேர்த்தது. இரவில் வழியிலுள்ள கிராமத்தி லிருந்த ஒரு சத்திரத்தில் தங்கினோம். சத்திரக்காரர் நாங்கள் தங்குவதற்குரிய ஓர் அறையைக் காட்டிய பொழுது நான் வழக்கம்போல் அவரைப் பேச்சுத் துணைக்கு எங்களுடனேயே இருக்கச் சொன்னேன். அவர் தாம் குடிக்கும் மதுவிற்கெல்லாம் மறுநாள் காலை யில் தொகையைக் கொடுத்து விடுவதாக யிருந்தால் எங்களுடன் இருப்பதாகக் கூறினார். நாங்கள் சென்று தங்கப்போகின்ற இடத்தின் சுற்றுப்புறத்தை அவர் நன்கறிவா ராதலானும், குறிப்பாக அங்கிருந்து சிறு தொலைவில் வாழும் நாங்கள் தங்கப்போகிற வீட்டுக்கு உரியவரான திரு. தார்ன்கில்லைப்பற்றி அவருக்கு நன்றாகத் தெரியு மாதலானும் நான் அவர் கூறிய வாறு தொகையைக்கொடுக்க ஒப்புக்கொண்டேன்.



சத்திரக்காரர் ''தார்ன்கில் உலகிலுள்ள இன்பங்க ளனைத்தையும் விட இன்னும் சிறிது அதிகமாகத் தெரிந்துகொள்ளும் விருப்ப முடையவர். அதுவும் பெண்கள் மீது கொண்டுள்ள பற்று குறிப்பிடத் தக்கது என்று விளக்கினார். தம்முடைய கலைகளையும் கருத்தை யும் எந்த நற்குணச் செயலும் தடைசெய்வதாய் அமையவில்லை என்று அவர் கருதினார். பத்துகல் சுற்றளவிலுள்ள குடியானவ ரனைவர்களுடைய பெண் களையும் கற்பழித்துக் கைவிட்டுவிட்டார். ஆனால் ஒன்றுவது அவருக்கு வெற்றியைத் தருவதாகவோ உகந்ததாகவோ அமையவில்லை'' என்று கூறினார். இந்தச் செய்தி எனக்குச் சற்று வருத்தத்தைத் தந்ததா யினும் என்னுடைய பெண்களுக்கு வேறுவிதமான விளைவுகளை உண்டுபண்ணியது. தாங்கள் அடையப் போகும் வெற்றியை எதிர்பார்த்த அவர்கள் முகங்களில்

மலர்ச்சி காணப்பட்டது. அவர்களுடைய கவர்ச்சியின் மேலும் நற்பண்பின்மேலும் என் மனைவிக்குப் பெரு நம்பிக்கையும் மகிழ்ச்சியும் ஏற்பட்டன.

நாங்கள் இத்தகைய நினைவுகளில் ஈடுபட்டிருந்த பொழுது சத்திரக்காரரின் மனைவி எங்கள் அறையினுள் நுழைந்தாள். அந்தச் சத்திரத்தில் இரண்டு நாட்களாகத் தங்கியிருந்த ஒருவர் தம்மிடம் பணம் இல்லாததால் வாடகையைக் கொடுக்க மறுப்பதாக அவள் கணவனிடம் சொன்னாள்.

''பணமில்லையா, அதெல்லாம் முடியாது. நேற்றுக் கூட நாய்திருடிய முதியவன் ஒருவன் அடிபடுவதைத் தடுப்பதற்காகக் கோயிற் பணியாளனிடம் மூன்று கினி கொடுத்து அவனை விடுவித்தாரே'' என்று மனைவியிடம் கேட்டார்.

அதற்கு அவள் முதலில் கூறியதையே கூறினாள். அவர் அறையைக் காலிசெய்து விடுவதாகக் கூறுகிறார் என்றாள். எப்படியாவது அவரிடமிருந்து வாடகையைப் பெறவேண்டுமென்றாள். இவ்வளவு இரக்ககுண முள்ளவராக வருணிக்கப்பட்ட அந்த மனிதரை அறிமுகப்படுத்திவைக்குமாறு சத்திரக்காரரைக் கேட்டேன். அதற்கு அவர் இணங்க பூவேலைப்பாடுகள் அமைந்த பழைய உடையை அணிந்த முப்பது வயது மதிக்கத்தக்க ஒருவர் உள்ளே வந்தார். அவருடைய உடல் நல்ல கட்டமைந்திருந்தது. முகத்தில் ஆழ்ந்த சிந்தனையால் ஏற்படும் கோடுகள் படிந்திருந்தன. அவர் பழகிய முறையில் ஏதோ மறைவு காணப்பட்டது. அவர் ஆசாரத்தைப் புரிந்துகொண்டவராகவோ அல்லது அதை ஒதுக்கிவிடுபவராகவோ காணப்பட



வில்லை. சத்திரக்காரர் அறையைவிட்டு வெளியேறிய பின் அந்தப் புதியவரிடம் அவர் இதைப்போன்ற சூழ்நிலையில் சிக்கியிருப்பதைக் கண்டு எனக்கு ஏற்பட்ட வருத்தத்தைத் தெரிவிக்காமலிருக்க முடியவில்லை. அவருக்கு அப்பொழுது தேவையாக இருந்த தொகையை நான் கொடுத்தேன்.

''இவ்வுதவியை நான் முழுமனதுடன் ஏற்றுக் கொள்கிறேன். என்னிடமிருந்த பணத்தையெல்லாம் நான் கொடுத்துவிட்டபிறகு எனக்குக் கொடுப்பதற்கு உங்களைப் போன்ற சில நல்ல மனிதர்கள் இருக்கிறார்கள் என்பதை யறிய மகிழ்ச்சியடைகிறேன். எப்படியும் நான் இத்தொகையைத் திருப்பிக் கொடுப்பதற்குத் தங்கள் பெயரையும் முகவரியையும் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்'' என்று அவர் வேண்டினார்.

அவர் அவ்வாறு கேட்டதில் மனம் நிறைந்த நான் என்னுடைய பெயரையும் எனக்கேற்பட்ட இழப்புக் களையும் நான் இப்பொழுது குடியேறப் போகும் இடத்தையும் கூறினேன்.

இதைக்கேட்ட அவர் மகிழ்ச்சியுடன் ''இது நான் எதிர்பார்த்ததைவிட இன்னும் நல்ல வாய்ப்பாகப் போயிற்று. நானும் அதே வழியில்தான் போகிறேன். வெள்ள மேற்பட்டுவிட்டதால் இங்கேயே இரண்டு நாட்கள் தங்க நேரிட்டது. எப்படியும் நாளை ஆற்றைக் கடந்துசெல்லும் அளவுக்கு நீர் வற்றி விடுமென்று எண்ணுகின்றேன்'' என்று உரைத்தார்.

அவர் எங்களுடன் இருந்தால் ஏற்படும் மகிழ்ச்சியை எண்ணி அவரை இரவு உணவுக்குத் தங்குமாறு கேட்டேன். என் மனைவியும் பெண்களும் அவரை

அவ்வாறே கேட்டுக் கொண்டனர். அவரும் அதற்கு இசைந்தார். அவருடைய பேச்சு இனிமை நிறைந்து காணப்பட்டதால் அதைத் தொடர்ந்து கேட்க விரும்பினேன். எனினும் அன்று முழுவதும் பயணம் செய்ததால் ஏற்பட்ட சோர்வைப் போக்குவதற்கும் மறுநாள் செய்யவேண்டிய பயணத்தை எண்ணியும் அனைவரும் தூங்கச் சென்றோம்.

மறுநாள் காலை எழுந்து பயணத்தைத் தொடங்கினோம். என்னுடைய குடும்பத்தினர் குதிரைகள் மீது ஏறிச்சென்றனர். நானும், புது நண்பரான திரு. பர்செலும் நடந்து சென்றோம். வெள்ளம் இன்னும் வற்றவில்லை என்பது தெரிந்ததால் நாங்கள் ஒரு வழிகாட்டியை அழைத்துக்கொண்டோம். அவனும் குடும்பத்தினரும் முன்னால் சென்றனர். நானும் பர்செலும் பின்னால் நடந்து சென்றோம். பர்செல் பல பொருள்களைப் பற்றிப் பேசிக்கொண்டே வந்தார். திரு. தார்ன்கிலைப் பற்றி அவருக்குத் தெரியுமாம். அவரைப் பற்றியும் விளக்கிக் கூறினார். தார்ன்கில் அவருடைய சிற்றப்பாவான திரு. வில்லியம் தார்ன்கில் என்பவரின் பெரும்பாலான சொத்தை அவருடைய விருப்ப ஆவணத்தின்படி ஆண்டு வருகிறார் என்று கூறினார். ''என்ன'' என்று நான் கூவினேன். திரு. வில்லியம் தார்ன்கிலைப்பற்றி நான் நன்றாகக் கேள்விப்பட்டுள்ளேன். அவருடைய நற்பண்புகளும், தாராள மனப்பான்மையும், தனித்தன்மைகளும் உலகறிந்தனவாயிற்றே. அப்பேர்ப்பட்டவருடைய அண்ணன் மகனா இவர்'' என்று ஆச்சரியத்துடன் கேட்டேன். இவ்வாறு தார்ன்கிலைப்பற்றி நெடுந்தூரம் பேசிக்கொண்டு வந்தோம்.



ஆற்று வெள்ளத்திலிருந்து சோபியாவைப் பர்செல் காப்பாற்றல்

என்னுடைய கவனமெல்லாம் பர்செல்லினுடைய பேச்சிலீடுபட்டிருந்தபொழுது நான் முன்னால் செல்ப வர்களைப் பார்த்தது மிகக் குறைவு. திடீரென்று என் குடும்பத்தினரின் கூச்சல் கேட்டது. ஓடிச்சென்று பார்த்தபொழுது என்னுடைய இளைய பெண் ஆற்று வெள்ளத்தின் நடுவில் தவித்துக்கொண்டிருந்தாள். குதிரையினின்றும் தள்ளப்பட்ட அவள் ஆற்றின் வேகத்தோடு போராடிக்கொண்டிருந்தாள். அவள் இரு முறை முழுகி விட்டாள். சரியான சமயத்தில் குதித்து அவளை விடுவிக்க முடியவில்லை. அதிர்ச்சியால் கட்டுண்ட என் உணர்ச்சிகள் அவளைக் காப்பாற்ற முற் படுவதைத் தடுத்தன என்னுடைய நண்பர் மட்டும் அவளுடைய ஆபத்தைக் கண்டு ஆற்றில் உடனே குதித்து அவளைக் காப்பாற்றி எதிர்க்கரையில் சேர்த்திரா விட்டால் அவள் இறந்தே போயிருப்பாள். நாங்கள் ஆற்றின் வழியே கடந்து நலமாக அக்கரையை அடைந்தோம். அவருக்கு நாங்களனைவரும் நன்றி செலுத்தினோம். என் மகளின் நன்றியறிதலை விளக்க முயல்வதைவிடக் கற்பனை செய்து கொள்ளலாம். அவள் சொற்களால் தெரிவித்த நன்றியைவிடப் பார்வையால் அதிகமாகத் தெரிவித்தாள். அவருடைய உதவியை மேலும் விரும்புபவளைப்போல அவருடைய தோள்கள் மீதே சாய்ந்தாள். என்னுடைய மனைவி தன் நன்றியை அறிவிப்பதற்கு ஒருநாள் வீட்டிலேயே விருந்து நடத்த விரும்பினாள். அடுத்த சத்திரத்தில் தங்கி ஒன்றாக உண்டு சற்று இளைப்பாறினோம்.

பர்செல் வேறு வழியில் அங்கிருந்து செல்ல வேண்டியிருந்ததால் எங்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டார். நாங்களும் பயணத்தைத் தொடர்ந்தோம்.



அவர் சென்றுவிட்டதை உணர்ந்த என் மனைவி தனக்கு அவரை மிகவும் பிடித்திருப்பதாகக் கூறினாள். அவர் நம் குடும்பத்தில் உறவு கொள்ளும்படி ஒரு நல்ல குடும்பத்தில் பிறந்து, சொத்தும் இருந்தால் அவரையே தன் மருமகனாக ஏற்றுக்கொள்வேன் என்றாள். அவள் கூறியதைக்கேட்டுச் சிரிப்பதைத் தவிர என்னால் வேறொன்றும் செய்ய முடியவில்லை. ஏனெனில் அதிக மகிழ்ச்சியைத் தரக்கூடிய சிறு ஏமாற்றங்களை நான் என்றுமே வெறுத்தது கிடையாது.

# 4. புதிய சூழ்நிலை

நாங்கள் சென்று பாதுகாப்பாகத் தங்கிய இடம் குடியானவர்களின் சிறு சுற்றுப்புறத்தில் இருந்தது. அவர்கள் தங்களுடைய நிலத்தை உழுது பயிரிட்டு வந்தனர். அவர்களுக்குப் பெருஞ்செல்வம், ஏழ்மை என்ற இரண்டும் தெரியாது. அவர்கள் தங்களுக்குள்ளேயே வாழ்க்கையின் வசதிகளைத்தையும் பெற்றிருந்ததால் தேவையற்ற வசதிகளை நாடி நகரங்களுக்கோ பெரும் பட்டணங்களுக்கோ செல்வது மிக அரிதாக இருந்தது. தன்னடக்கமும் பழக்க வழக்கங்களில் எளிமையும் சிக்கனமாக வாழும் வழக்கமும் அவர்களிடை இயல்பாகவே காணப்பட்டதால் அவர்களுக்குத் தன்னடக்கமாக வாழ்தல் ஒரு நற்பண்பு என்பது அரிதாகவே தெரிந்திருந்தது. உழைக்கவேண்டிய நாட்களில் அவர்கள் மிக மகிழ்ச்சியுடன் உழைத்தனர். விழா நாட்களை ஓய்வும் இன்பமும் பெறக்கூடிய இடைவேளையாகக் கருதி வந்தனர். கிறித்துமசு நாளன்று துதிப் பாடல்களை இனிமையுடன் பாடுவர். வேலன்டைன் நாளன்று உண்மைக் காதலைத் தெரிவிக்கும் முடிச்சுகளைப் போட்டு அவர்கள் விரும்பியவர்களுக்கு அனுப்புவர். சாம்பல் புதன் நாளில் இனிய பண்டங்கள் செய்வர். ஏப்ரல் முதல் நாளன்று கேலியையும் வேடிக்கையையும் வெளிப்படுத்துவர். மைக்கல்மாசு விழாவின் முந்நாளன்று மாலை வாண வேடிக்கைகளை நிகழ்த்துவர். நாங்கள் வருவதை அறிந்திருந்த அந்தச் சுற்றுப்புறத்தில் வாழ்ந்த மக்களனைவரும் அழகாக உடையணிந்து கொண்டு ஊதும் இசைக்கருவியையும்



சிறு மத்தளமொன்றையும் ஒலித்துக்கொண்டு எங்களை எதிர்கொண்டு வரவேற்றனர். எங்களை வரவேற்க விருந்தொன்றையும் ஏற்பாடு செய்திருந்தனர். நாங்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் அதில் கலந்து கொண்டோம். அங்கு நிகழ்ந்த உரையாடலில் நகைச்சுவை இல்லையெனினும் மனக்களிப்பா லேற்பட்ட எல்லோருடைய சிரிப்பும் அதை ஈடு செய்தது.

நாங்கள் குடிபுகுந்த சிறு வீடு குன்றின் சரிவில் அடிப்பகுதியில் அமைந்திருந்தது. வீட்டிற்குப் பின்னால் சிறு காடு ஒன்றும் முன்னால் சலசலவென்று ஓடும் சிற்றாறும் இருந்தன. ஒரு பக்கம் புல்வெளியும் மறு பக்கம் வயல்வெளியும் இருந்தன. இருபது ஏக்கர் பரப்பளவுள்ள வளமான நிலத்தில் என் பண்ணையை அமைத்துக்கொண்டேன். அந்நிலத்தை அதற்கு முன் பயன்படுத்தி வந்தவரிடமிருந்து நூறு பவுன்கள் கொடுத்து வாங்கினேன். அந்தப் பண்ணையைச் சுற்றி எலம் மரங்களும் வேலிச் செடிகளும் வேலியாக அமைந்திருந்ததால் அதைவிட வேறு எதுவும் அப்பண்ணையை அழகு செய்ய முடியாதபடி விளங்கியது. வீடு ஒரே தளமுடையது. ஓலையால் கூரை வேயப்பட்டது. அதன் வழியாக இனிய காற்று வீசிற்று. சுவர்களெல்லாம் அழகாக வெள்ளையடிக்கப்பட்டிருந்தன. அவற்றை என்னுடைய பெண்கள் தாமே தயாரித்த படங்களால் அழகு செய்தனர். ஒரே அறையைச் சாப்பாட்டு அறையாகவும் சமையலறையாகவும் பயன்படுத்த வேண்டியிருப்பினும் அஃது இதமான வெப்பத்தைத்தான் தந்தது. மேலும் அந்த இடம் சுத்தமாக விளங்கியதால் சமையலுக்கு வேண்டிய சாமான்களையும் தட்டுகளையும் செப்புச் சாமான்களையும் சுத்த

மாகக் கழுவி அடுக்குகளில் வரிசையாக அடுக்கி வைத்திருந்தனர். அது கண்களுக்கு இனிமையாக இருந்தது. வேறு மரச்சாமான்களும் தேவைப்படவில்லை. இன்னும் மூன்று தனிப்பட்ட அறைகள் இருந்தன. ஒன்றில் நானும் என் மனைவியும் தங்க முடிவு செய்தோம். இன்னொன்றை என்னுடைய இரண்டு பெண்களும் பயன்படுத்தினர். மூன்ருவதில் இரு படுக்கைகள் இருந்தன. அவற்றில் மற்றக் குழந்தைகளை இருக்கச் செய்தோம்.

எங்கள் குடும்பம் நடத்தும் முறையைக் குடியரசு முறையாக அமைத்து அதற்குக் கீழ்க்கண்ட விதிகளை வகுத்துக் கொண்டோம்: கதிரவனெழும்பொழுது நாங்கள் அனைவரும் பொது அறையில் கூடினோம். அந்த அறையின் நெருப்படியில் இருந்த நெருப்பை வேலையாள் முன்னரே மூட்டிவிட்டிருப்பான். நாங்களொருவருக்கொருவர் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்வோம். வணக்கத்தைத் தெரிவிக்கும் முறையில் உடலசைவுகளும் இருக்கவேண்டியது அவசியமென எண்ணி வந்தேன். ஏனெனில் நல்ல வழக்கங்களில்லாவிடில் உரிமை எப்பொழுதும் நட்பை அழித்துவிடும். நாங்களனைவரும் தலை குனிந்து இன்னும் ஒருநாளை வாழ்வதற்களித்த இறைவனை வணங்கி நன்றி செலுத்துவோம். இக்கடமை முடிந்தவுடன் என் மகனும் நானும் வெளியே பாடுபடுவதற்குச் சென்றுவிடுவோம். என் மனைவியும் பெண்களும் சிற்றுண்டி தயாரிப்பதில் ஈடுபடுவர். அது எப்பொழுதுமே ஒரு குறித்த நேரத்தில் தயாராகிவிடும். இச் சிற்றுண்டியை உண்பதற்கு அரைமணி நேரமும் பகலுணவை முடிக்க ஒருமணி நேரமும் அளிப்பேன். அப்பொழுது என் மனைவியும்



பெண்களும் ஏதாவது பேசி மகிழ்வர். நானும் என் மகனும் தத்துவக் கருத்துக்களைப் பற்றி உரையாடுவோம்.

கதிரவனெழுகையிலேயே நாங்களும் எழுவதால் அவன் மறைந்த பிறகு நாங்களும் வேலையைத் தொடர்ந்து செய்வதில்லை. எங்களை எதிர்பார்த்திருக்கும் குடும்பத்தினர் எங்களை வரவேற்பதற்காகச் சிரிப்புடன் கூடிய பார்வையுடன் தூய அடுப்படியையும், இன்பம் தரும் நெருப்படியையும் ஏற்பாடு செய்து வைத்திருப்பராதலால் வீடு நோக்கிச் செல்வோம். எங்கள் வீட்டிற்கு விருந்தினர் வராத நாளில்லை. சில சமயங்களில் அண்டை வீட்டில் வாழ்ந்த வாயாடியான பிளேம்பரோ வருவார். குழல் ஊதும் குருடர் ஒருவரும் அடிக்கடி வருவார். அவர்கள் எங்களுடைய தயாரிப்பான பழ மதுவை அருந்துவர். அம் மது தயாரிப்பதை நாங்களும் மறக்கவில்லை. அதன் புகழும் சற்றுங்குறையவில்லை. அவர்கள் நல்ல முறையில் பொழுதைக் கழிப்பதற்குப் பல வழிகளைக் காட்டித் துணையாயிருந்தனர். ஒருவர் குழல் ஊதும்பொழுது மற்ெருருவர் சில கதைப் பாடல்களைப் பாடுவார். காலையில் எவ்வாறு நாட்கடனைத் தொடங்குவோமோ அவ்வாறே இரவிலும் முடிப்போம். சிறு பையன்கள் அன்றைய நாள் படிப்பைப் படிக்கவேண்டும். யார் உரத்த குரலிலும், தெளிவாகவும், நல்ல முறையிலும் படிக்கிறார்களோ அவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமையன்று அரைபென்னி ஏழைகளுக்குப் பிச்சை போடுவதற்காகக் கொடுக்கப்படும்.

ஞாயிற்றுக்கிழமை வந்தால் அன்று அழகுப் பொருள்களின் காட்சிநாளாகவே அமையும். அக்

காட்சியை ஆடம்பரத்தையும் பகட்டையும் குறைக்க வேண்டுமென்ற என் விதிகள் தடுக்க முடியாது. வீண் பெருமையைக் குறைப்பதற்கு நான் மிக அழகிய விரிவுரைகளை நிகழ்த்தினேன். அவை பெண்மக்களின் பகட்டை எவ்வளவோ குறைத்தன. இருந்தும் பழைய அழகுப் பொருள்களின்மீது மறைவான பற்றை வைத்திருப்பதைக் கண்டேன். அவர்கள் இன்னும் பின்னல் வேலை நிறைந்த உடை, இடுப்புப் பட்டைகள், உடையில் வைத்துத் தைக்கும் கண்ணாடிகள், கசங்காத துணி வைத்த உடை ஆகியவற்றை விரும்பினர். என்னுடைய மனைவியும் தன்னுடைய செந்நிறப் பட்டாடையின்மீது இன்னும் ஆசை வைத்திருந்தாள். ஏனெனில் முன் ஒருமுறை அந்த உடை அவளுக்குப் பொருத்தமாக இருக்கிறது என்று அவளிடமே கூறிவிட்டேன்.

குறிப்பாக முதல் ஞாயிற்றுக்கிழமை அவர்களுடைய செய்கை என்னை மிகவும் துன்புறுத்துவதாக இருந்தது. எப்பொழுதும் கோயிலுக்கு மற்றவர் சென்று கூடுமுன் சிறிது நேரமாவது முன்னால் நான் சென்றுவிட வேண்டுமென்று விரும்பினேன். அதனால் அதற்கு முன்னாளிரவே பெண்களிடம் கூறி மறுநாள் விரைவாக உடை உடுத்திப் புறப்பட்டுவிட வேண்டுமென்று கூறியிருந்தேன். அவர்களும் என்னுடைய கட்டளையின்படி சரியான நேரத்தில் புறப்பட்டனர். ஆனால் காலை உணவிற்குக்கூட வேண்டியபொழுது மனைவியும் பெண் மக்களும் வழக்கமான பகட்டுடன் வெளிப்பட்டனர். தலையில் நறுமணந் தரும் பொருளைத் தடவியிருந்தனர். முகத்தில் விருப்பத்திற்குத் தக்கவாறு மாவைப் பூசியிருந்தனர். உடை பின்னால் குவிந்து ஒவ்வோர்



அசைவிலும் ஓசையெழச் செய்தது. அவர்களுடைய பகட்டைக் கண்டு என்னால் சிரிக்காமலிருக்க முடியவில்லை. அதுவும் குறிப்பாக என் மனைவியைக் கண்டு மிக வருந்தினேன். அவளிடமிருந்து அதிகமான அடக்கத்தை எதிர்பார்த்தேன். இந்த அவசரத்தில் என் மகனிடம் கோச் வண்டியை உடனே அழைத்துவரச் சொன்னேன். என் கட்டளையைக் கண்ட பெண்மக்கள் மிக்க வியப்படைந்தனர். ஆனால் நான் முன்னைவிட அமைதியாக மீண்டும் கட்டளையிட்டேன்.

"நாங்கள் நடந்தே வந்து விடுவோம். இப்பொழுது எங்களுக்கு வண்டி தேவையில்லை" என்று என் மனைவி கூறினாள்.

"வண்டி கட்டாயம் தேவை. இந்த உடையில் நாம் கோயிலுக்கு நடந்து சென்றால் இக்கிராமத்திலுள்ள சிறுவர்களனைவரும் நம் பின்னால் கிண்டல் செய்து கொண்டு வருவர்" என்றேன்.

"உங்களுடைய குழந்தைகள் எப்பொழுதும் தூய்மையாகவும் அழகாகவும் இருப்பதை நீங்கள் விரும்புவீர்களென நினைத்தேன்" என்று இழுத்தாள் என் மனைவி.

"நீங்கள் தூய்மையாக இருக்க எவ்வளவு விரும்புகிறீர்களோ அவ்வளவு இருங்கள். அப்பொழுது நான் உங்களை இன்னும் அதிகமாக விரும்புவேன்" என்று நான் இடைமறுத்துச் சொன்னேன். "ஆனால் இதெல்லாம் தூய்மையில்லை. வீண் பகட்டுதான். இந்த உடைகளைக் கண்டு சுற்றுப்புறத்திலுள்ள பெண்கள் நம்மை வெறுக்கத்தான் செய்வர். இதே உடைகளைச் சாதாரணத் தையலமைந்த உடைகளாக

மாற்றிக்கொள்ளலாம். மதிப்பான தோற்றத்தை விரும்பும் நமக்கு அழகூட்டும் பொருள்கள் தேவையில்லை. பெருஞ்செல்வர்கள் கூட இத்தகைய உடைகளை விரும்புவதாகத் தெரியவில்லை. சிறிது கணக்கிட்டுப் பார்த்தால் இந்த வீண் பட்டைகளும் ஒட்டுகளும் இந்த உலகில் உள்ள எத்தனையோ ஆடையற்ற மக்களுக்கு ஆடையாக உதவும்'' என்று தொடர்ந்து கூறி முடித்தேன்.

தடுப்புரைக்கு எதிர்பார்த்த விளைவு கிடைத்தது. அவர்களனைவரும் ஒருவித வருத்தமுமின்றி உடை மாற்றச் சென்றனர். அடுத்த நாளே பெண் மக்கள் தங்கள் உடைகளிலிருந்த வீண் பகுதிகளை வெட்டியெடுத்துச் சிறுவர்களான டிக், பில் என்ற இருவர்க்கும் மேலுடையாகத் தைத்துக் கொடுத்தனர். உடைகள் மிக எளிமையாகத் தோற்றமளித்தது எனக்கு மிக்க மன நிறைவை அளித்தது.

## 5. புதிய நட்பு

முன்பு குடியிருந்தவர் வீட்டின் சற்றுத் தொலைவில் திண்ணைபோல் ஒன்றை அமைத்து அதன்மீது நிழல் உண்டாக்கும்படி செடிகொடிகளைப் படர விட்டிருந்தார். காலநிலை நன்றாக இருப்பின் வேலையை விரைவாக முடித்துக்கொண்டு நாங்கள் இந்தத் திண்ணையில் அமர்ந்து கண்ணுக்கெட்டியவரை பரந்து கிடந்த சமவெளியைக் கண்டு மகிழ்வதில் மாலைப்பொழுதைக் கழிப்போம். இங்கு தேநீர்கூட அருந்துவதுண்டு. அது கிடைப்பது அரிதாக இருந்ததாலும் அதைத் தயாரிப்பதில் பெரும் பரபரப்பும் புதுமையும் இருந்ததாலும் அதை எப்பொழுதாவது சில சமயங்களில்தான் குடிப்போம். இதைப் போன்ற நேரங்களில் சிறுபையன்கள் இருவரும் எதையாவது பொழுது போக்கிற்குப் படிப்பர். நாங்கள் தேநீர் அருந்தியபின் அவர்களிருவர்க்கும் தேநீர் கொடுக்கப்படும். சில சமயங்களில் நிகழ்ச்சிகளில் பலவகை இருக்கவேண்டும் என்பதற்காகக் கிதார் இசைக்கருவியுடனிணைந்து இருபெண்களும் பாடுவர். இவ்வாறு அவர்கள் இசை நிகழ்ச்சியில் ஈடுபட்டிருக்கும் பொழுது நானும் என் மனைவியும் காட்டுப் பூக்கள் பூத்துக் குலுங்கும் வயற்சரிவில் காலாற நடப்போம். எங்கள் குழந்தைகளைப் பற்றிப் பேசுவோம். நலத்தையும் ஊக்கத்தையும் தரும் காற்றை உய்த்து மகிழ்ச்சியடைவோம்.

இந்த வகையில் வாழ்க்கையில் ஒவ்வொரு நிகழ்ச்சியும் தனித்தனி இன்பங்களை அளிக்கும் என்பதை உணர்ந்து வரலானோம். ஒவ்வொரு நாளும் காலைப் பொழுது எங்களை உழைப்பதற்காக எழுப்பின. ஆனால்

அந்த உழைப்பினுலுண்டான களைப்பை மாலைப் பொழுது மகிழ்ச்சியின் மூலம் ஈடுசெய்தது.

குளிர்காலத் தொடக்கத்தில் ஒரு விடுமுறை நாளில் வழக்கம்போல் நாங்களனைவரும் வழக்கமான இடத்தில் கூடியிருந்தோம். இளம் பாடகிகள் இசை நிகழ்ச்சியைத் தொடங்கிவிட்டனர். நாங்கள் இதில் ஈடுபட்டிருக்கையில் நாங்கள் உட்கார்ந்திருந்ததற்கு இருபதடி தொலைவில் கலைமான் ஒன்று நொண்டி நொண்டி வருவதைப் பார்த்தோம். அது மருள்வதைப் பார்த்தால் யாரோ வேட்டையாடுபவர்கள் அதைப் பின் தொடர்ந்து வருவதுபோல் தெரிந்தது. அதன் துன்பத்தைப்போக்க எண்ணுவதற்குள் சிறுதொலைவில் நாய்களும் குதிரை வீரர்களும் விரைவாக வந்து அது ஓடிய வழியிலே தொடர்ந்து சென்றதைப் பார்த்தோம். முதலில் சென்ற வேட்டைக்காரனைத் தொடர்ந்து நான்கைந்து பேர் மிகவேகமாக எங்களைக் கடந்து சென்றனர். நாங்கள் உடனே வீட்டினுள் செல்ல எண்ணினேம். ஆனல் ஆர்வமோ அல்லது வியப்போ அல்லது ஏதோ ஒரு மறைவான எண்ணமோ என் மனைவியையும் பெண்களையும் அங்கேயே இருக்கச் செய்தது. கடைசியாக மற்றவர்களைவிடச் சற்றுத் தோற்றத்தில் பெருந்தன்மையுடன் காணப்பட்ட ஓர் இளைஞர் முன்னல் வந்தார். வேட்டையைத் தொடராது சிறிது நின்று அவருடைய பணியாளிடம் குதிரையை விட்டுவிட்டு சிறிது அலட்சியப் பார்வையுடன் எங்களை நெருங்கி வந்தார். அவர் அறிமுகத்தை விரும்பியவராகக் காணப்படவில்லை. நேரே பெண்களிடம் சென்று வணக்கத்தைத் தெரிவித்தார். அவர்களும் தங்களை மறந்து அவரைப் பார்த்துக் கொண்டு நின்றனர். அதன்மேல் அவர் தம்முடைய பெயர் தார்ன்கில் என்று எங்களுக்குத் தெரிவித்தார். மீண்டும் பெண்களுக்கு நன்றி தெரிவித்தார். நல்வாய்ப்பும் நல்லுடையும் உடையவர்கள் இரண்டாம் முறையும் வணக்கம் செய்வதை வெறுப்பதில்லை போலும். அவருடைய நடத்தைகள் சற்று இயல்புக்கு மாறுகக் காணப்பட்ட பொழுதும் சிறிது நேரத்தில் நாங்கள் விரைவில் பழகிவிட்டோம். இசைக் கருவிகள் அங்கு இருப்பதைக் கண்ட அவர் ஒரு பாட்டுப் பாட வேண்டுமென்று வேண்டினர். இந்தப் பெரிய இடத்து உறவை நான் விரும்பாததால் என் பெண்களைப் பாடா திருக்குமாறு கண்ணசைப்பின் மூலம் காட்டினேன். ஆனல் என்னுடைய மனைவி என்னுடைய சைகைக்கு எதிராக அவர்களைப் பாடும்படிக் கண்ணசைத்தாள். எனவே அவர்கள் டிரைடனுடைய பாட்டு ஒன்றைப் பாடினர்.



அவர்கள் பாடிய விதத்தில் இருந்த இனிமையிலும் பாட்டைத் தேர்ந்தெடுத்த விதத்திலும் தார்ன்கில் மிக்க மகிழ்ச்சியடைந்தார். கிதார் கருவியை எடுத்துத் தாமே இசைத்தார். அவர் மிகவும் மோசமாக வாசித்தார். இருந்தும் என்னுடைய மூத்த மகள் கைகளைத் தட்டி அவர் முதலில் கைதட்டியதை வட்டியுடன் சேர்த்துத் தெரிவித்தாள். அவளுக்கு இசை கற்றுக் கொடுத்த ஆசிரியரின் குரலைவிட அவருடைய குரல் மேலும் உரத்துக் காணப்படுவதாகக் கூறினாள். இப் புகழ்ச்சியுரையைக் கேட்ட அவர் தம் தலையை வணங்கினர். அதற்கு அவளும் நன்றி தெரிவித்தாள். அவளுடைய சுவைத் தன்மையை அவர் பாராட்டினர். அவருடைய அனுபவிக்கும் திறமையை அவள் பாராட்டினாள்.

அறிவற்ற தாயும் மட்டற்ற மகிழ்ச்சியுற்று நிலக்கிழாரை வீட்டிற்குள் வந்து பழமதுவை அருந்த வேண்டும் என்று வற்புறுத்தினாள். குடும்பம் முழுவதும் அவரை மகிழ்விப்பதில் ஈடுபட்டது. பெண்களிருவரும் புதிய கருத்துக்கள் என்று தாம் எண்ணியவற்றை அவரிடம் பேசி மகிழ்வித்தனர். மோசசு இதற்கு மாருக மிகப் பழமையானவற்றைப் பற்றி ஒரு கேள்வி கேட்டான். அதைக் கேட்டு அவர் சிரித்ததையே தனக்கு மனநிறைவளிப்பதாக நினைத்தான். சிறுவர்களிருவரும் அவரருகிலேயே ஒட்டிக் கொண்டிருந்தனர். அவருடைய உடையிலிருந்த பூ வேலைப்பாடுகளைத் தம் அழுக்கு விரல்களால் தொடுவதையும், அவருடைய சட்டைப் பைகளின் மேலிருந்த மடிப்பைத் தூக்கி அப்பைகளுக்குள் என்ன இருக்கிறது என்று பார்ப்பதையும் தடுக்க நான் எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. மாலையில் அவர் எங்களிடம் விடைபெற்ருர். அவரை மீண்டும் வருமாறு நாங்கள் அழைத்தோம். அவர் அதற்கு ஒத்துக் கொண்டார்.

அவர் சென்றபின் உடனே அன்று நடந்தவற்றைப் பேச என்னுடைய மனைவி குழுவைக் கூட்டினாள். அவள் அதை ஒரு பெரிய நல்வாய்ப்புக் கிட்டியதாக எண்ணினாள். மேலும் நடக்கப் போகும் புதிய நிகழ்ச்சிகளை அவள் எண்ணி மகிழ்ந்தாள். தங்களுடைய தலைகளை மீண்டும் பெருமையுடன் நிமிர்த்தி நடக்கப்போகும் நாள் விரைவில் வந்து விடும் என்று அவள் எதிர்பார்த்தாள். திருமதிகளான ரிங்ஃள்ர்சு என்ற இரு பெண்கள் மட்டும் ஏன் பெருஞ்செல்வத்தை மணந்து கொள்ளவேண்டும். தன்னுடைய பெண்களுக்கு ஏன் ஒன்றுமில்லாமல் போகவேண்டும்



என்பதற்குத் தனக்குக் காரணமே புரியவில்லை என்று கூறிமுடித்தாள். இவ்வாறு என்னைப் பார்த்து அவள் கேட்டதால் எனக்கும் அதற்குக் காரணம் புரியவில்லை என்றும் திரு சிம்ப்கின்சு அவர்கட்குப் பத்தாயிரம் பவுன் பரிசு குலுக்குச் சீட்டில் கிடைத்தபோது எனக்கு ஒன்றும் கிடைக்காமற் போனதற்கும் காரணம் புரியவில்லை என்றும் கூறினேன்.

இவ்வாறு நான் குத்திப் பேசுவதைக் கேட்ட மனைவி "நீங்கள் இப்படித்தான் எப்பொழுதும் நானும் என் பெண்களும் ஆர்வமாக இருந்தால் அடக்கிவிடுகிறீர்கள். சோபி, நீ கூறம்மா, இன்று புதிதாக வந்தவரைப்பற்றி நீ என்ன எண்ணுகிருய்? அவர் நல்ல இயல்புடையவராக உனக்குத் தோன்றவில்லையா?" என்று கேட்டாள்.

"ஆம் அம்மா! நிறைய நற்பண்புடையவர். ஒவ்வொன்றைப் பற்றியும் நன்ருகப் பேசுகிருர். அவர் எதிலும் தோற்கவில்லை. எவ்வளவு சிறு பொருளோ அதைப்பற்றி அவ்வளவு அதிகம் பேசுகிருர்" என்று விடைகூறினாள்.

"ஆம், ஒரு மனிதனுயிருக்கத் தகுந்தவர். ஆனல் என்னைப் பொறுத்த வரையில் அவரை எனக்கு அதிகமாகப் பிடிக்கவில்லை. அவர் மிக அதிகமாகப் பழகுகிருர். வெட்கமென்பது சிறிதும் இல்லாமற் பழகுகிருர். ஆணவமுமுடையவர். கிதார் இசைப்பதில் மிக்க அதிர்ச்சியை விளைவிக்கக்கூடியவர்" என்று கூறினாள் ஒலிவியா.

இந்தக் கடைசி இருவர் கூற்றுகளையும் நான் கூற்றுக்கு மாருன பொருள்களாலுணர்ந்து கொண்

டேன். சோபியா உள்ளூர வெறுக்கிறாள். ஆனால் ஒலிவியா மறைவாக அவனை விரும்புகிறாள் என்பதைக் கண்டுபிடித்தேன். "அவரைப்பற்றி உங்களிருவருடைய கருத்துக்களும் எவையாகவாவது இருக்கட்டும். உண்மையைக் கூறப்போனால் அவர் என்னை முன்பே கவரவில்லை. தரத்துக்கு மீறிய நட்பு எப்பொழுதும் வெறுப்பில் முடியும். நாம் கீழ்நிலையில் இருப்பதைக் கண்டு அவர் மகிழ்கிறார் என்று எண்ணுகிறேன். நம் நிலையிலுள்ளவர்களிடையேதான் நாம் நட்பு கொள்ள வேண்டும். உழைக்காத சொத்துக்காக வேட்டை யாடுவது ஆணிடமுள்ள வெறுக்கத்தக்க பண்பு. இவ்வாறே சொத்து வேட்டையாடும் பெண்களையும் ஏன் வெறுக்கக் கூடாது என்பது எனக்குப் புரியவில்லை. அவருடைய நோக்கங்கள் உயர்ந்தவையானால் தவறில்லை. ஆனால் அவ்வாறு இல்லாவிடில்—அதைப் பற்றி எண்ணுவதற்கே நடுக்கமாக இருக்கின்றது. என்னுடைய குழந்தைகளின் நடத்தையில் என்னால் குறைகாண முடியவில்லை. ஆனால் அவருடைய பண்பில் சிலகுறைகளைக் காண முடிகின்றது."

நான் மேலும் தொடருமுன் அப்பெருமகனா ரனுப்பிய வேலையாள் குறுக்கிட்டான். அவருடைய நன்றியறிவிப்பையும், சிறிது இறைச்சியையும் சில நாட்கள் கழித்து எங்களுடன் உண்ண வருவதாக ஒருவாக்குறுதியையும் அவன் மூலம் அனுப்பியிருந்தார். இந்த நல்ல சமயத்தில் வந்த செய்தி அவரைப்பற்றி அதிகமாகச் சிந்திப்பதற்கு வாய்ப்புத் தந்ததே தவிர அவரை விலக்குவதற்கு நான் என்ன கூறினாலும் அது எடுபடாததாய் ஆய்விட்டது. எனவே ஆபத்து வருவதை மட்டும் சுட்டிக்காட்டிய மனநிறைவுடன், அதை விலக்குவதை அவர்களுடைய விருப்புவெறுப்புக் களுக்கே விட்டுவிட்டு நான் அமைதியாக இருந்துவிட் டேன். வருமுன் காத்தல் என்பது நல்ல பண்பு. ஆனால் அதைக் காண்பதுதான் மிகஅரிது.



---

# 6. அமைதியிலே இன்பம்

மேற்கூறிய வாதத்தில் நாங்கள் சற்றுக் கடுமை யான முறையிலேயே ஈடுபட்டிருந்ததால் அதை ஒரு வழியாக முடிக்க எண்ணினோம். திரு தார்ன்கில் கொடுத்தனுப்பிய இறைச்சியில் ஒரு பகுதியை இரவு உணவுக்கு வைத்துக் கொள்வது என்று ஒரு மனதாக முடிவுசெய்யப்பெற்றது. அதைத் தயாரிக்கும் வேலை யைப் பெண்மக்கள் ஆர்வத்துடன் ஏற்றுக்கொண் டனர்.

"இந்த நல்ல மகிழ்ச்சியில் பங்கெடுத்துக்கொள்ளப் பக்கத்திலுள்ளவர்களோ அல்லது விருந்தினரோ இல்லாததற்கு நான் மிகவும் வருந்துகிறேன். இதைப்போன்ற விருந்துகளில் விருந்தினரை உபசரிப் பதின் மூலம் இரட்டை மகிழ்ச்சி ஏற்படும்" என்றேன்.

என் மனைவி "இதோ, சோபியாவைக் காப்பாற்றிய வரும், உங்களை வாதில் வென்றவருமான நம் நல்ல நண்பர் திரு பர்செல் வருகிறார்" என்று அறிவித்தாள்.

"வாதில் என்னை வென்றவரா? நீ தவறாக எண்ணுகின்றாய். அதைச் செய்யக் கூடியவர்கள் ஒரு சிலர்தாம் இருக்கிறார்கள். பழமதுவைத் தயாரிப் பதில் உன்னிடமுள்ள தனித்திறமையை நான் குறை கூறவில்லை. அவ்வாறே நீயும் வாதுசெய்வதை என்னுடைய தனித்திறமையாக விட்டுவிடவேண்டும்" என்று கேட்டுக்கொண்டேன்.

நான் இவ்வாறு பேசிக்கொண்டிருந்த பொழுது திரு பர்செல் வீட்டினுள் நுழைந்துவிட்டார். குடும்பத் தினர் அனைவரும் மகிழ்ச்சியுடன் அவரைக் கைகுலுக்கி



வரவேற்றனர். டிக் மிக்க பணிவுடன் அவரை அழைத்து வந்து நாற்காலியில் அமரச் செய்தான்.

அந்த ஏழை மனிதனின் நட்பை நான் இரண்டு காரணங்களுக்காக விரும்பினேன். ஒன்று அவர் என்னுடைய நட்பை விரும்பினார். அவரும் தன்னால் இயன்றவரை மிக்க நட்புடன் என்னுடன் பழகினார். அவருக்கு இன்னும் முப்பது வயதாகவில்லை. அவரை நல்ல பண்புடைய ஏழைமனிதர் என்று சுற்றுப்புறத்தில் வாழ்ந்தவர் அறிவர். அப்பண்பு அவர் இளைஞரா யிருந்த காலத்தில் பயன்படாது என்றுமெண்ணினர். சில சமயங்களில் இடையிடையே சிறந்த அறிவுடைய வரைப் போலப் பேசுவார். ஆனால் பொதுவாக அவர் சிறு குழந்தைகளுடன் பழகுவதைத்தான் அதிகமாக விரும்புவார். அக்குழந்தைகளை இன்னல் விளைவிக்காத சிறு மனிதர்கள் என்று அழைப்பார். அவர்களுக்குக் கதைப்பாடல்களைப் பாடிக்காட்டுவதிலும் கதைகள் சொல்வதிலும் புகழ்பெற்றவர். அவருடைய சட்டைப்பைகளில் குழந்தைகளுக்காக ஏதாவது சில பொருள்களை,—ஒரு துண்டு இஞ்சிரொட்டியோ அல்லது அரை பென்னி ஊதலோ எடுத்துக் கொள்ளாது வெளியில் செல்வதில்லை. ஆண்டுக் கொருமுறை நாங்கள் வாழ்ந்த பகுதிக்கு வந்து சில நாட்கள் தங்குவார். சுற்றுப்புறத்திலுள்ளவர்களின் விருந்தினராகவே இருப்பார். அவர் எங்களுடன் இரவு உணவை உண்ண அமர்ந்தார். அவர் பல பாடல் களைப் பாடினார். பல கதைகளைச் சொன்னார்.

இரவு பதினொரு மணியாகிவிட்டதால் தூங்கச் செல்லவேண்டிய நேரம் வந்துவிட்டது. ஆனால்

விருந்தினரை எங்கே தங்கவைப்பது என்ற எதிர் பாராத சிக்கல் எழுந்தது. வீட்டிலிருந்த அறைகளும் படுக்கைகளும் எங்கள் குடும்பத்தினருக்கே சரியாக இருந்தன. பக்கத்திலுள்ள சத்திரத்திற்கு அனுப்பலா மென்றால் இரவு வெகு நேரமாகிவிட்டது. இவ்வாறு இரண்டுங்கெட்ட நிலையில் இருந்தபொழுது டிக் அவனுடைய அண்ணன் மோசசு அவனுடைய படுக் கையில் படுப்பதற்குச் சற்று இடங்கொடுப்பதாக இருந்தால் தன்னுடைய பகுதியை அவருக்கு விட்டு விடுவதாகக் கூறினான். "நானும் அக்கா இருவரும் அவர்கள் படுக்கையில் இடம் கொடுத்தால் என்னுடைய பகுதியையும் திரு பர்செல்லுக்கு விட்டு விடுகிறேன்" என்று கூறினான் பில்.

"நல்லது செய்தீர் குழந்தைகளே, விருந் தோம்பும் பண்பு கிறித்துவர்களுடைய கடமைகளில் முதலானது. மிருகம் தன்னுடைய குகைக்குச் செல் கிறது. பறவை தன்கூட்டுக்குத் திரும்புகிறது; ஆனால் வீடற்ற மனிதன் தன்னைப் போன்ற வேறொரு மனிதனின் துணையைத்தான் நாடவேண்டும். இந்த உலகத்திலேயே மிகப்பெரிய விருந்தாளியாகிய ஏசு தான் இப்பண்பைக் காக்கவந்தார். அவர் எப் பொழுதும் தமக்கென்று ஒரு வீட்டை வைத்துக் கொள்ளவில்லை. மக்களிடையே விருந்தோம்பும் பண்பு எவ்வளவு இன்னும் உள்ளது என்பதைக் கண்டு பிடிப்பதற்காகவே அவ்வாறு செய்தார் போலும்" என்று குழந்தைகளிடம் கூறினேன். என் மனைவியிடம் "டெபோரா அந்த இரண்டு பையன் களுக்கும் ஆளுக்கு ஒரு பிடி சீனி கொடு. டிக்குக்குக் கொஞ்சம் அதிகமாகவே கொடு. ஏனெனில் அவன் தான் முதலில் கூறினான்" என்றேன்.



விடியற் காலையில் வயலில் அறுவடை செய்வதற் காகக் குடும்பத்தினர் அனைவரையும் அழைத்தேன். விருந்தினரும் உதவி செய்ய முன்வந்தனர். நாங்களும் ஒப்புக்கொண்டோம். எங்களுடைய வேலை சற்று எளிதாகவே இருந்தது. பதர்களை அறுத்துக் காற்றில் பறக்க விட்டோம். சோபியா வேலை செய்வதில் பர் செல் கருத்துடன் உதவி செய்வதை என்னால் கவனிக்காமலிருக்க முடியவில்லை. அவர் தம் வேலையை முடித்தவுடன் அவளுடைய வேலையில் கலந்து கொண்டு நெருங்கி உரையாடினார். சோபியாவின் கருத்தைப்பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். சொத்து முழுவதையும் இழந்த ஒருவரை அவள் எவ்விதச் சூழ்நிலையிலும் விரும்பமாட்டாள் என்ற என் கருத்து அப்படி என்னை நம்பச் செய்தது. அன்றைய வேலை முடிந்தவுடன் மாலையில் திரு பர்செல்லை முன்னாளிரவு எங்களுடன் கழித்தது போல் இன்றும் அழைத்தேன். ஆனால் அவர் மறுத்து விட்டார். வேறொரு நண்பர் வீட்டில் படுக்கச் செல்ல வேண்டுமென்றும் அந்த வீட்டுக் குழந்தைக்கு ஊதலொன்றை எடுத்துச் செல்வதாகவும் சொன்னார்.

அவர் சென்ற பின் உணவுண்ணும் பொழுது அவரைப் பற்றிப்பேச்சு எழுந்தது. "இளமையில் தீ யொழுக்கத்தையும் வீண் ஆடம்பரத்தையும் கைக் கொண்டு ஒழுகுபவர் எப்படி வறுமையால் பின் வாடுவர் என்பதற்கு அந்த மனிதர் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு" என்று நான் தொடங்கினேன்.

"அவர் எந்த விதத்திலும் நல்லறிவை நாடுவதில்லை. இது அவர் ஏற்கெனவே செய்திருந்த தவறுகளைப் பெருக்குகிறது. அவர் ஒரு காலத்தில் ஊக்குவித்தும் கட்டளையிட்டும் வந்த, கும்மாளமிட்டு விருந்துண்ட நண்பர்களும் முகப்புகழ்ச்சி செய்தவர்களும் இப்பொழுது எங்கே? அவருடைய சிறு நகைச் சுவையைக் கண்டு பெரிதும் மகிழ்ந்தவர்கள் இப்பொழுது அவருடைய தவறுகளைக் கண்டு எள்ளி நகையாடுகின்றனர். அவர் ஏழையாகி விட்டார். அவருக்கு ஏழ்மை தகுதியானதுதான். ஏனெனில் அவருக்குத் தனிமையாக வாழ வேண்டுமென்ற அவாவும் பிறருக்கு உதவக் கூடிய திறமையும் இல்லை" என்று கூறி முடித்தேன்.

சில மறைவான காரணங்களால் உந்தப்பட்ட நான் என்னுடைய இக் கருத்தைச் சற்றுச் சினத்துடனேயே வெளியிட்டேன். இதைச் சோபியா மெதுவாக எதிர்த்தாள்.

"அப்பா, அவருடைய முற்கால வாழ்க்கை எப்படியிருந்திருப்பினும் இப்பொழுதைய சூழ்நிலைகளைக் கண்டாவது அவரைக் கண்டிப்பது சரியன்று. இப்பொழுதுள்ள அவருடைய ஏழ்மையே அவர் முன் செய்த தவறுகளுக்குப் போதிய தண்டனை. ஒருவர் தெய்வத்தினால் அவர் செய்த குற்றங்களுக்காகத் தண்டிக்கப்படும் பொழுது அவர்மீது நாம் தேவையற்ற பழிச்சொல்லைத் தூற்றக்கூடாது என்று நீங்களே கூறுவதை நான் கேட்டிருக்கின்றேன்" என்று சோபியா கூறினாள்.

"நீ சொல்வது சரி, சோபியா" என்றான் என் மகன். "பழைய கதைகளுள் ஒன்று இதை நன்கு



விளக்குகிறது. அதில் அபெல்லா என்றவன் நாகரிகமற்ற முறையில் தான் செய்த தவறுகளால் நலிந்திருந்த மார்சியாசு என்பவனை இசைப் போட்டியில் தோற்கடித்து அவன் தோலை உரித்துவிட்டான். அதனால் அபெல்லோவின் தோலை மற்றொருவன் உரித்துவிட்டான் என்று அக்கதை கூறுகிறதல்லவா? ஒரே சூழ்நிலையில் வெவ்வேறு மனிதர்கள் வெவ்வேறு உணர்ச்சிகளையடைகின்றனர். எனவே ஒரு சூழ்நிலையில் பிறருக்கு ஏற்பட்ட உணர்ச்சிகளை அதே இடத்தில் நமக்கு ஏற்படும் உணர்ச்சிகளால் எடைபோடுவது தவறு. எலி வாழுகின்ற வளை நம்முடைய கண்களுக்கு எவ்வளவு இருளாயிருப்பினும் அவ்வெலியின் கண்களுக்கு அது போதிய அளவு வெளிச்சமுள்ள இடமாகவே தோன்றும். உண்மையைக் கூறினால் இந்த மனிதருடைய அறிவு அவருடைய நிலைக்குத் தக்கவாறு அமைந்துள்ளது. ஏனெனில் அவர் உங்களுடன் பேசிக் கொண்டிருந்த பொழுது அவர் காட்டிய சுறுசுறுப்பையும் பேச்சு விறுவிறுப்பையும் நான் இதுவரை வேறு எவர் பேச்சிலும் கேட்டதில்லை" என்றான்.

தங்கையை ஆதரிக்க வேண்டுமென்று ஒரு சிறு நோக்கமும் இதில் இல்லையாயினும், இதைக் கேட்டவுடன் சோபியாவுக்கு வெட்கம் ஏற்பட்டது. அதைத் தன் சிரிப்பின் மூலம் மறைப்பதற்குப் பாடுபட்டாள். மோசசு தன்னிடம் கூறியதைக் கவனிக்காதது போல் காட்டிக் கொண்டாள். அவர் ஒரு காலத்தில் அழகிய இளைஞனாக விளங்கியிருப்பார் என்று அவள் நம்பினாள். அவரைப் பற்றிய ஒவ்வொரு கருத்தையும் அவள் மறுத்ததையும், அவளுடைய நாணத்தையும் நான் உள்ளூர

ஒப்புக் கொள்ளாவிடினும் என்னுடைய ஐயங்களை அடக்கி வந்தேன்.

மறுநாள் எங்களுடைய நிலக்கிழார் வருவார் என்று எதிர்பார்த்ததினால் என்னுடைய மனைவி இறைச்சி உணவைச் செய்யச் சென்று விட்டாள். மோசசு படிக்கச் சென்று விட்டான். நான் சிறுவர் இருவர்க்கும் பாடம் கற்றுக் கொடுத்தேன். என்னுடைய பெண்களும் பிறரைப் போல ஏதோ ஊக்கத்துடன் செய்து கொண்டிருந்தனர். அவர்கள் அடுப்படியில் நெடுநேரமாக எதையோ சமைத்துக் கொண்டிருந்தனர். தாய்க்கு உதவி செய்து கொண் டிருப்பார்கள் என்று முதலில் எண்ணினேன். ஆனால் முகத்தைக் கழுவுவதற்குரிய பொருளை அவர்கள் தயாரித்துக் கொண்டிருப்பதாக டிக் அறிவித்தான். அத்தகைய பொருள்களைக் கண்டாலே இயற்கையாக எனக்கு வெறுப்பு ஏற்படும். ஏனெனில் அவை அழகை அதிகமாக்குவதற்குப் பதிலாக முகத்தைக் கெடுத்துவிடும் என்று நன்ருகத் தெரியும். அதனால் மெதுவாக நான் உட்கார்ந்திருந்த நாற்காலியை நெருப்படியினருகில் நகர்த்திக் கொண்டே சென்றேன். நெருப்பைக் கிளறி விடவேண்டியது போல் கிளறியைக் கையில் பற்றிக் கிளறிவிட்டேன். தற்செயலாக ஏற் பட்டதுபோல் அப்பொருள் வைத்திருந்த பாத்திரத்தைக் கவிழ்த்து விட்டேன். அதைப் போல மீண்டும் தயாரிப்பதற்கு வெகு நேரமாகி விட்டது.

---

## 7. நிலக்கிழாருக்கு விருந்து

எங்கள் நிலக்கிழாரை விருந்தளித்து மகிழ்விக்க வேண்டிய காலைப்பொழுதும் வந்தது. அவரை வரவேற்பதற்கு எவ்வளவு ஏற்பாடுகள் செய்யப்பட் டிருந்தன என்பதை எளிதில் உணரலாம். மனைவியும் பெண்மக்களும் தங்கள் அழகெனும் சிறகை விரித்து மகிழ்ச்சியுடன் காணப்பட்டனர். திரு தார்ன்கில் அவருடைய நண்பர்களான கோயிற் பணியாளர், கோழிக்குத் தீனியூட்டுபவர் ஆகிய இருவருடன் வந்தார். வேலைக்காரர்கள் நிறைய வந்திருந்ததால் அவர்களைப் பக்கத்திலிருந்த சிற்றுண்டிச் சாலைக்குச் செல்லும்படி கட்டளையிட்டார். ஆனால் என்னுடைய மனைவி தன் உள்ளத்தில் ஏற்பட்டிருந்த வெற்றிக் களிப்பால் அவர்களனைவரையும் வீட்டிலேயே உணவு உட்கொள்ள வற்புறுத்தினாள். இவ்வாறு செய்ததினால் அடுத்த மூன்று வாரங்களுக்கு எங்கள் குடும்பம் முழுவதும் குறைவாகத்தான் சாப்பிட முடிந்தது. முன்னாள் பர்செல் வந்திருந்தபொழுது தார்ன்கில் திருமதி அரபெல்லா வில்மோட்டைத் திருமணம் செய்துகொள்ளும் நோக்கத்துடன் இருக்கிருர் என்று குறிப்பாக எங்களுக்குத் தெரிவித்திருந்தார். அப் பெண்ணைத்தான் என் மகன் ஜியார்ஜ் திருமணம் செய்து கொள்வதாக இருந்து தடைபட்டுவிட்டது. இந்தச் செய்தி தார்ன்கிலை வரவேற்பதில் காட்ட வேண்டிய மகிழ்ச்சியைச் சற்றுக் குறைத்திருந்தது.

ஆனால் தற்செயலாக நிகழ்ந்த ஒன்று எங்க ளுடைய கவலையைப் போக்கியது. அது யாதெனில் அங்கிருந்தவருள் யாரோ ஒருவர் அரபெல்லாவுடைய

பெயரைக் குறிப்பிட வேண்டியிருந்தது. அதைக் கேட்ட தார்ன்கில் கோர உருவையுடையவளைப் போய் அழகுள்ளவள் என்று கூறுவதைப் போல முட்டாள் தனம் வேறெதுவும் தமக்குத் தெரியாது என்று சத்தியம் செய்தார்.

''விளக்கு வெளிச்சத்தின் உதவியால் தேட வேண்டிய ஒருத்தி எனக்கு மனைவியாக வாய்க்க வேண்டாம். தேடுவதில் நான் இன்பம் அடையா ததற்காக ஆண்டவன் வேண்டுமானால் என்னையும் கோர உருவினனாக ஆக்கிவிடட்டும்" என்று கூறிச் சிரித்தார். நாங்களும் சிரித்தோம். செல்வர்களின் கேலிகள் எப்பொழுதும் வெற்றியடைந்துவிடும். ஒலிவியாகூட மிகத் தணிந்த குரலில் சிரித்தாள். ஆனால் அது கேட்கக்கூடிய அளவு இருந்தது. அளவிடமுடியாத அளவு நகைச் சுவையை அவர் வைத்திருப்பதாக அவள் எண்ணினாள்.

விருந்து உண்டு முடிந்தவுடன் நான் வழக்கம் போல் கோயிலின் நலத்துக்காக என்று கூறிப் பழ மதுவைச் சுவைக்க எடுத்தேன். தார்ன்கிலுடன் வந்திருந்த கோயிற் பணியாளரும் என்னுடைய வாழ்த் துரைக்கு நன்றி கூறி அவருக்குக் கோயில்தான் விருப்பமுடைய பெண் என்று தெரிவித்தார்.

"பிரேங்க்! உண்மையைச் சொல், ஒரு பக்கம் நீ இப்பொழுது விரும்பும் கோயிலே ஒரு பெண் வடிவில் அழகிய கையுறைகளை அணிந்து கொண்டும் மறுபக்கம் சோபியா கையுறை அணியாது நின்று கொண் டிருந்தால் நீ யாரை விரும்புவாய்'' என்று தார்ன்கில் கேட்டார்.



'இரண்டையும்தான்' என்றார் பிரேங்க்.

அதற்கு அப்பெருமகனார் ''சரி பிரேங்க், இந்தக் கண்ணாடி வேண்டுமானால் நஞ்சாக மாறி என்னைக் கொல்லட்டும். என்னைப் பொறுத்தவரை கோயிலில் குருமார் செய்யும் பித்தலாட்டங்களைவிட அழகிய பெண் தான் சிறந்தவள். கோயில் வருமானமும் செய்கை களும் ஏமாற்றம் நிறைந்தவை. இவை பித்தலாட் டங்கள் என்பது உறுதி. நான் வேண்டுமாயின் அதை நிலைநாட்டத் தயார்." என்று கூறினார்.

''நீங்கள் அதை நிலைநாட்ட வேண்டும். உங்க ளுடைய கூற்றுக்கு மாற்றுச் சொல்வது என் பொறுப்பு'' என்று மோசசு அவரைத் தூண்டினான்.

''சரி'' என்று ஒத்துக்கொண்டு எங்களையெல்லாம் வேடிக்கை பார்க்கும்படி கண்ணசைத்தார். "இந்தப் பொருளைப்பற்றி விவாதம் நடத்த வேண்டுமென்று நீ சொன்னால் நான் அதை ஏற்றுக் கொள்ளத் தயார். அதை எடுத்துக்காட்டுகளின் மூலம் நிலைநாட்ட வேண்டுமா? அல்லது சொல்லாற்றல்மூலம் நிலை நாட்டவேண்டுமா?'' என்று தார்ன்கில் கேட்டார்.

''பகுத்தறிவின்மூலம் வாதிட வேண்டும்'' என்றான் என்மகன்.

''முதன் முதலாக உள்ளதை இல்லை என்று மறுக்கக்கூடாது. இதை நீ ஒத்துக்கொள்ள வில்லை யானால் நான் மேலே செல்ல முடியாது'' என்று தொடங்கினார்.

"ஏன், இதை நான் ஒத்துக்கொள்வேனே. இதையே நான் நன்கு பயன்படுத்தியும் கொள்வேன்'' என்று கூறினான்.

"நானும் அப்படித்தான்" என்று திருப்பிக் கூறினார் தார்ன்கில்.

"ஒரு பகுதி என்பது முழு உருவத்தைவிடச் சிறியது என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும்."

''அதை ஒத்துக்கொள்கிறேன்'' என்றான் மோசசு.

"ஒரு முக்கோணத்தின் இரண்டு கோணங்கள் இரண்டு நேர்கோணங்களுக்குச் சமம் என்பதை நீ மறுக்கமாட்டாயென எண்ணுகிறேன்.''

''இது மிகத் தெளிவான கருத்தாயிற்றே.''

''சரி, முன்னுரையில் கூறியதை ஏற்றுக் கொண்டாய். இத்தோடு இணைந்தவற்றையும் நீ ஒத்துக் கொண்டதாக நான் எடுத்துக் கொள்கிறேன். பரிமாற்றமுள்ள இருமடங்கு விகிதத்தின் மூலம் தொடர்ந்தால் ஐயமற்ற கருத்துமுடிவை வெளிப் படுத்தும். அம் முடிவு மதத்தின் சாரம் இரண்டாந்தரப் பட்டது என்பதை நிலைநாட்டும்.'' என்று விரைவாகக் கூறினார் தார்ன்கில்.

''நிறுத்துங்கள், நிறுத்துங்கள். நான் இதை மறுக்கிறேன். இந்த முரண்பட்ட கொள்கைகளை நான் எளிதில் ஒத்துக்கொள்வேன் என்று நினைத்தீர் களோ?" என்று மறுத்தான் மோசசு.

"ஏன், இதை ஒப்புக்கொள்ள மாட்டாயா? நான் ஒரு சாதாரணக் கேள்வி கேட்கிறேன், பதில் சொல். உறவினர்கள் எல்லோரும் உறவுடையவர் என்ற அரிஸ்டாட்டிலுடைய கொள்கையைச் சரி என்று எண்ணுகின்றாயா?''

'ஐயமில்லாமல்' என்றான் மோசசு.



"அப்படியானால் நான் கூறுவதற்கு நேராகப் பதில் சொல். என்னுடைய முன்னுரையில் கூறப் பட்ட கருத்துக்களை என்ன காரணங்கள் காட்டி நீ மறுக்கின்றாய்? கூறு" என்றார் தார்ன்கில்.

" நான் இதை எதிர்க்கிறேன் " என்றான் மோசசு. " நீங்கள் கூறும் காரணங்களைத் தெளிவாக ஒரு கருத் தாகச் சொன்னால் நான் பதில் கூறுவேன்."

"ஓ உனக்கு விவாதங்களையும் அதை வாதிடும் அறிவையும் நானே கொடுக்க வேண்டுமென்று நீ எதிர்பார்க்கிறாயா? அது முடியாது. அங்குதான் உன்னைப் போன்ற ஒன்றுமறியாதவர்களிடம் எனக்கு வாதிடுவது மிகக் கடினமாகத் தோன்றுகிறது'' என்றார் தார்ன்கில்.

இதைக்கேட்டு எல்லோரும் மோசசைப் பார்த்துச் சிரித்து விட்டனர். அவன் எல்லோருக்கும் இடையில் வாட்டமான முகத்துடன் உட்கார்ந்திருந்தான். அதற்கு மேல் அவன் அந்த நிகழ்ச்சி முடியும்வரை ஒரு சொல் கூடப் பேசவில்லை.

எனக்கு இது ஒன்றும் இன்பம் தரவில்லையாயினும் ஒலிவியாவிற்கு இதற்கு மாறான விளைவை விளைவித்தது. நினைவாற்றலை வைத்துக்கொண்டு எப்பொழுதோ படித்த சில தருக்க நூற் சொற்களைக் கூறிய தார்ன் கிலினுடைய செயல் அவளுக்கு வேடிக்கையாக இருந்தது. அதனால் அவரை ஓர் அறிஞர் என்று எண்ணினாள். இவ்வளவு அறிவுடையவராக விளங்கு வதால்தான் அவருடைய தோற்றமும், அழகிய உடை களும், நிறைந்த சொத்தும் அவருடைய பெருந்தன் மைக் கேற்றவாறு அமைந்துள்ளன என்று எண்ண

லானுள். திரு. தார்ன்கில் உண்மையிலேயே அறி யாமை நிறைந்தவராயிருப்பினும் இந்த வெற்றிக்குப் பின் பொதுவான பொருள்களைப் பற்றிக்கூட மிகத் தெளிவாகக் கவலையின்றி விளக்கி விளக்கிப் பேசினுர். இதைப்போன்ற திறமைகள் ஒரு பெண்ணினுடைய அன்பை எளிதில் கவர்ந்துவிடும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஏனெனில் தன்னைத் தன் தோற்றத்தால் எடைபோட்டு அதையே பிறிதொன்றனுடைய மதிப்பை அளவிடுவதற்குப் பயன்படுத்துவதெப்படி என்பதை அவருக்குக் கல்வி கற்பித்திருக்கின்றது அல்லவா?

தார்ன்கில் புறப்பட்டுச் சென்றவுடன் மறுபடியும் நிலக்கிழாரின் திறமைகளைப் பற்றி வாதிடுவதில் இறங் கினேம். அவர் எப்பொழுதும் தம் பேச்சையும் பார்வையையும் ஒலிவியாவின் பக்கமே செலுத்தியமை யால் அவரை மீண்டும் எங்கள் வீட்டிற்கு விருந்தின ராக வரச்செய்யத் தூண்டிய பொருள் அவளாகத்தான் இருக்கவேண்டுமென்பதில் யாருக்கும் ஐயமேற்பட வில்லை. இந்தச் சமயத்தில் தன் தம்பியும் தங்கையும் அறியாமல் தவருனவைகளை உளறியதற்காக அவள் பெரிதும் வருந்தவில்லை. என்னுடைய மனைவிகூட அன்றைய பெருமையில் பங்குகொள்ள விரும்பினுள். அவள் தன்னுடைய பெண்ணுக்குக் கிடைத்த வெற்றி யைத் தனக்குக் கிடைத்ததாகவே எண்ணி மிக்க மகிழ்ச்சியடையலானுள்.

"இனி நான் உறுதியாக வெற்றியடைவேன். நிலக்கிழார் விருப்பத்தைத் தூண்டி அதற்குத் தக்க வாறு நடக்க வேண்டுமென்று நான்தான் பெண்களுக் குச் சொல்லிக்கொடுத்தேன். எனக்கு எப்பொழுதும்



பேரவா உண்டு. அது சரியானது என்பதை இப் பொழுது நீங்கள் தெரிந்திருப்பீர்கள். ஏனென்ருல் இது எப்படி முடியும் என்று யாருக்குத் தெரியும்" என்று கூறினுள் என் மனைவி.

"ஊம், அது யாருக்குத் தெரியும்" என்று முன கினேன் நான். "என்னைப் பொறுத்தவரை இதெல் லாம் எனக்குப் பிடிக்கவில்லை. சொத்தும் நம்பத்தகாத தன்மையும் உடைய இந்தப் பெரிய மனிதரைவிட ஏழ்மையும் பெருந்தன்மையும் உடைய ஒருவரை நான் இதைவிட மிக மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வேன். நான் ஐயப்படுவதைப் போல் அவரிருந்தால் அவரை எண்ணுதே. மனம்போல் எதையும் எண்ணும் அவருக்கும் என்னுடைய ஒரு பெண்ணும் கிடைக்க மாட்டாள்."

"அப்பா, நீங்கள் இதில் மிகக் கடுமையாக இருக் கிறீர்கள். அவர் என்ன எண்ணுகிருரோ அதற்கு ஆண்டவன் குற்றஞ்சாட்டுவதில்லை. செய்யும் தவறு களுக்குத்தான் குற்றஞ் சாட்டுவார். ஒவ்வொரு மனி தனும் ஆயிரக்கணக்கான மாறுபட்ட எண்ணங்களை வைத்திருக்கின்ருன். அவற்றை அடக்க அவனுக்கு ஆற்றலில்லை. இவரைப் பொறுத்தவரையில் மதத்தைப் பற்றி மனம்போனவாறு வேண்டுமென்றே எண்ணு பவராயிருக்கட்டும். அவருடைய கருத்துகள் தவருயிருப் பினும் சரியான கருத்தை ஒப்புக்கொள்வதற்குக் கீழ்ப் படிதலுள்ளவராய்க் காணப்படுகின்ருர். கோட்டைச் சுவரில்லாத ஊரை ஆளும் ஆளுநர் அவ்வூரினுள் நுழையும் பகைவரைத் தடுக்க முடியாததுபோன்ற நிலையிலுள்ள அவருடைய தவறுகளுக்காக அவரைக் குறை கூறுவதில் பயனில்லை" என்ருன் மோசசு.

"உண்மை, மகனே. ஆனால் ஆளுநரே பகைவரை அழைத்து வந்தால் அவர் குற்றவாளிதானே. இதைப் போன்ற நிலையில்தான் தவறிழைப்பவர்களும் இருக்கிறார்கள். மதத்துக்கு எதிரானவற்றை ஒப்புக்கொள்வதில் தவறில்லை. ஆனால் மதத்தை நிலை நாட்டும் உண்மைகளைப் பாராது குருடராயிருப்பதில்தான் தவறு இருக்கின்றது. நம்முடைய தவறான எண்ணங்கள் தாமே அமைந்தவையாயினும் நாம் மனதார அதைச் செய்திருக்கின்றோம். அல்லது அவை உருவாவதற்கு இடம் தந்தது தவறு. அந்தக் குற்றங்களுக்காகத் தண்டிக்கப்படவும் தவறுகளுக்காக ஒறுக்கப்படவும் வேண்டும்."

என்னுடைய மனைவி பேச்சைச் தொடர்ந்தாள். அவள் வாதத்தில் இறங்கவில்லை. எங்களுடன் பழகுபவர்களில் சிலர் முன்னறிவும் நினைத்தவாறு எண்ணும் இயல்புடையர்களாய் நல்லவர்களாய் வாழ்வதைக் கூறினாள். இதைப்போன்ற இயல்புடைய கணவர்களைப் பெற்று அவர்களை மாற்றும் ஆற்றலுடைய பெண்கள் சிலரையும் எண்ணினாள். தொடர்ந்து "ஒலிவியாவால் என்ன செய்ய முடியும் என்பது யாருக்குத் தெரியும். அவள் ஒவ்வொரு பொருளைப் பற்றியும் நிறையப் பேசுவதற்குத் தெரிந்து வைத்திருக்கின்றாள். எனக்குத் தெரிந்தவரை அவள் மறுத்துப் பேசுவதில் திறமையுடையவள்" என்று கூறினாள்.

"என்ன ? அவளெங்கு மாறுபட்ட கருத்துக்களைப் படித்திருக்கிறாள் ? அவளிடம் அத்தகைய புத்தகங்களை நான் கொடுத்ததாக எனக்கு நினைவில்லையே. நீ அவளுடைய ஆற்றலை அதிகமாக எடைபோடுகிறாய்" என்றேன் நான்.



"உண்மை, அப்பா!" என்றாள் ஒலிவியா. "அவள் தவறாக எடைபோடவில்லை. நான் தவாக்கும், ஸ்குயர் என்ற இருவர்க்குமிடை நடைபெற்ற வாதங்களையும் இராபின்சன் குருசோவிற்கும் அவனுடைய வேலைக்காரனை வெள்ளிக்கிழமைக்கும் இடையில் நடைபெற்ற வாக்கு மாற்றங்களையும் படித்திருக்கின்றேன். இப்பொழுதுகூட டீபோ இயற்றிய 'மதத்தால் ஏற்படும் ஊடாட்டம்' என்ற நூலில் உள்ள வாதத்தைப் படித்து வருகின்றேன்."

"மிக்க சரி" என்று இரைந்தேன் நான். "நீ மிகவும் நல்ல பெண். அவரை மாற்றுவதற்கு நீ மிக்க தகுதி பெற்றிருப்பது எனக்குத் தெரிகிறது. நீ போய் உன் அம்மாவுடன் பழமது செய்வதற்கு உதவி செய்."

---

# 8. களவு தந்த களிப்பு

மறுநாள் காலை மீண்டும் பர்செல் எங்கள் வீட்டிற்கு வந்தார். அவர் அடிக்கடி வருவதால் எனக்கு வெறுப்புண்டாகக் காரணங்கள் சில இருப்பினும் என்னுடைய நட்பையும் வீட்டில் இருக்க இடத்தையும் அவருக்கு அளிக்க மறுக்க முடியவில்லை. அவர் பெற்ற மகிழ்ச்சிக்குக் கைம்மாறாக அதைவிட அதிகமாக உழைத்தார் என்பது உண்மை. வயலிலானாலும் களத்திலாயினும் அவர் எங்களுடன் மிகக் கடுமையாக உழைத்தார். அதில் முதலாகவும் நின்றார். இதல்லாது எங்களுடைய களைப்பைப் போக்குவதற்கு எப்பொழுதும் எதையாவது சொல்லி மகிழவைப்பார். இது எங்கள் வேலையை எளிதாக்கிற்று. தேவையற்றதைச் சில சமயங்களில் பேசினாலும் அறிவுக்குப் பொருத்தமாகப் பேசுவாராதலால் நான் அதை விரும்பினேன். அதைக் கேட்டுச் சிரிப்பேன். அவருக்காக இரக்கப்படுவேன்; என் மகளிடம் அவர் காட்டிய விருப்பத்திலிருந்துதான் அவர்மீது ஒரு வெறுப்பு எனக்கு எழுந்தது. கேலியான முறையில் அவளைத் தம் சிறு துணைவி என்று அழைப்பார். இரண்டு பெண்களுக்கும் ரிப்பன் வாங்கிக் கொண்டு வந்தாலும் அவளுடையதுதான் மிக அழகுடையதாய் இருக்கும். இப்படி அவர் நாளுக்குநாள் நெருங்கிப் பழகலானார். அவருடைய நகைச்சுவை முன்னேறியது. அவருடைய எளிய குணத்தில் அறிவு எப்படிப் புகுந்தது என்பது எனக்குத் தெரியாது.

உணவை உண்டபின் நாங்களனைவரும் ஓய்வெடுப்பதற்காக உட்கார்ந்திருந்தோம். பர்செல் விருந்தில் மகிழ்ச்சியைக் கலந்தளித்தார். எங்களுடைய



மகிழ்ச்சியை அதிகரிக்கச் செய்வதற்கு இரண்டு குயில்கள் பக்கத்திலிருந்து பாடிக்கொண்டிருந்தன. சிறு பறவைகள் எங்கள் கைகளிலிருந்து உணவைக் கொத்தித் தின்றன. அந்த அமைதியான சூழ்நிலையில் ஒவ்வொரு சிறு ஒலியும் எதிரொலியை எழுப்பியது. "இதைப் போல் அமைதியாக இருக்க எனக்கு முடியாது" என்றாள் சோபியா. "கே என்ற கவிஞர் வர்ணித்த இரண்டு காதலர்களைப் பற்றிய நினைவும் அவர்கள் எவ்வாறு ஒருவர் கையில் ஒருவர் சாய்ந்து கொண்டு மரணமடைந்தனர் என்பதும் என் நினைவிலேயே இருக்கின்றன. இந்த வருணனையில் மிகுந்த சோகம் நிறைந்துள்ளது. இதை நூறு முறைகள் படித்தும் ஒவ்வொருமுறை படிக்கும்பொழுதும் புதுப்புது உணர்ச்சிகள் ஏற்படுகின்றன" என்றாள் சோபியா. இதைக் கேட்ட மோசசு "இதிலுள்ள வருணனை ஓவிட் இயற்றிய அசிசு, களதீ என்ற இருவரின் காதலைப் பற்றிய கவிதையில் காணப்படும் வருணனையை விட மிகத் தாழ்வு" என்றான். "நீங்கள் சொல்லுகின்ற இரண்டு கவிஞர்களும் வேண்டாத அடைமொழிகளைப் பாடல்களில் சேர்த்து அவர்களுடைய நாட்டிற்குத் தவறான சுவையை அளித்துள்ளனர்" என்று தம் கருத்தைத் தெரிவித்தார் பர்செல். மேலும் தொடர்ந்து, குறைந்த அறிவுடையவர்கள் அதே தவறுகளை மீண்டும் இழைக்கின்றனர். ஆங்கிலக் கவிதை உரோமின் பிற்காலப் பேரரசில் காணப்பட்டதைப் போல உள்ளது. பெரும் கற்பனைகளும், கதைத் தொடர்பும் இல்லாது வேறொன்றும் இதிலில்லை. வீணான அடைமொழிகள் ஓசையை அதிகமாக்குகிறதே தவிரப் பொருளைப் பற்றிக் கவலைப்படுவதில்லை" என்று கூறினார், என் மனை



பர்செல் பாட்டுப் பாடினர்



வியை நோக்கி "நீங்கள் நினைப்பது என்ன வென்று எனக்குத் தெரியும். நான் இவ்வாறு பிறர்மீது குற்றங் காண்கின்றேனே அவ்வாறு அவர்கள் என்மீது குற்றஞ் சாட்டிப் பழிவாங்குவதற்கு வாய்ப்புக் கொடுக்கவேண்டு மென்றுதானே, உங்களை வருக்கும் ஒரு கதைப் பாடலை அறிமுகப்படுத்தவே நான் இவ்வாறெல்லாம் குறிப்பிட்டேன். இதில் வேறு சில குறைகளிலிருந் தாலும் நான் கூறிய குறைகள் இதிலிருக்கா" என்று கூறிவிட்டுக் கதைப் பாட்டைப் பாடினர்.

* "வாழிய நின் மலரடிகள்! மௌனதவ முனிவ!
மனமிரங்கியருள் புரிந்தோர் வார்த்தை யெனக் கீயிற்
பாழடவி யிதிற் சுழன்று பாதை விடுத் தலையும்
பாவி யொருவனை யளித்த பலனுறுவை பெரிதே

சாரும் வரைகுறியாது தன் னிழலை யளக்குந்
தன்மை யெனநா னடக்கத் தான் வளரு மடவி
ஆரிருளி லினிநடக்க வாவதிலை. உடல
மாறும் வகை வீடுளதே லடையு நெறியருளாய்"

என்ற மொழி கேட்ட முனி யெதிர்விடை யங்கியம்பும்:—
"ஏகாந்தப் பெருங் ககனம்; இதிலுலக ரணையார்;
சென்றுறைய மடமுமிலை; திகழ்வெளி யென்வீடு;
சிந்தையற நொந்தவர்க்குச் சேரவிலை பந்தம்.

அறங் கிடந்த சிந்தையரா யாசையெலாந் துறந்த
அதிவீர ரொழிய வெவ ராயினு மிங் கடையார்.
உறங்க வவர் பணிப்பாயும் பூவணையு முன்னு
ருண்ண வெனிற் பாலமிழ்து மொன்ருக மதியார்

---

* மூலநூலிலுள்ள ஆங்கிலப் பாடலைத் தழுவிச் "சிவகாமி சரிதம்", என்று மனோன்மணியத்தில் ஒரு பகுதியாகத் திரு. பி. சுந்தரம் பிள்ளை எழுதியது.

ஆதலிலென் பாலுறுவ தியாதெனினு மைந்த !
    அன்புடனீ யென் பிறகே யணையி லஃதுனதாம்
வேதனையும் மெய்ச்சலிப்பும் விட்டகல விருளும்
    விடியும் உடன் மன மிருக்கில் வேண்டுமிட மேகாய்"

என்றுரைத்த வினிய மொழி யிரு செவியுங் குளிர
    ஏதோ தன் பழ நினைவு மெழ விருகண் பனித்து
நன்றெனவே தவ வடிவாய் நின்றமகன் வணங்கா
    நன்முனிவன் செல்வழியே நடந்துநனி தொடர்ந்தான்

இந்திர நற்சால வித்தை யெதுவோ வொன் றிழைக்க
    விட்டதிரை யெனத் திசைக ளெட்டுமிருள் விரிய
அந்தரத்தே கண்சிமிட்டிச் சுந்தர தாரகைக
    ளரிய ரகசியந் தமக்குள் ளறைந்து நகைபுரிய;

என்புருகப் பிணைந்த அன்றில் இணைசிறிது பிரிய
    ஏங்கியுயிர் விடுப்பவர்போ லிடையிடையே கூவ;
அன்புநிலை யாரறிவ ரென்பனபோல் மரங்கள்
    அலர்மலர்க்கண் நீரருவி அகமுடைந்து தூவ;

விந்தைநடப் பதுதெரிக்க விளிப்பவரில் வாவல்
    விரைந்தலைய மின்மினியும் விளக்கொடுபின் ஆட;
இந்தவகை அந்தியைமுன் ஏவிஇர வென்னும்
    இறைவியும்வந் திறுத்தனள்மற் றிளைஞருயிர் வாட

பொறியரவின் சுடிகையுறு பொலன்மணியி னொளியும்
    பொலிமதத்தின் கறையடியின் புலிமருப்பி னொளியும்
அறிவரிய சினஉழுவை அழல்விழியி னொளியும்,
    அலதிலையவ் அடவியிடை யயல்காட்டு மொளியே.

பிரிவரிய ஊசிவழி பின்தொடரும் நூல்போல்
    பேரயர்வின் மனமிறந்து பின்தொடரும் மைந்தன்,
அரியபுத ரிடையகற்றி அன்பொடழைத் தேகும்
    அம்முனிவ னடியன்றி அயலொன்றும் அறியான்.

ஒருங்கார நிறைமுளரி உழையொதுக்கி நுழைந்தும்,
    உயர்மலையின் குகைகுதித்தும் ஓங்கார ஒலியே
தருங்கான நதிபலவுந் தாண்டிஅவ ரடைந்தார்
    சார்பிலர்க்குத் தனித்துணையாந் தவமுனிவ னிடமே.



நேயமுட னெவ்வழியும் நேர்ந்தவரைத் தன்நுண்
    திறுவுதலை வளைத்தழைக்கு நெருப்பொன்றும் அன்றி
வாயிலெனப் பூட்டென்ன மதிலென்ன வழங்கும்
    மனையென்னும் பெயர்க்குரிய மரபொன்று மின்றி.

நின்றதனி யிடமிவர்கள் நேர்ந்தவுடன் முனிவன்
    நெருப்பின்னும் எழுப்புதற்கு நிமலவிற கடுக்கி
ஒன்றியமெய்ப் பத்தரில்தன் உளங்கூசி யொருசார்
    ஒதுங்குகின்ற மைந்தனகம் உவப்பஇவை உரைக்கும்:

"இனிநடக்க வழியுமிலை; இனித்துயரு மில்லை.
    இதுவேநம் மிடம்மைந்த! இக்கனலி னருகே
பனிபொழியும் வழிநடந்த பனிப்பகல இருந்து
    பலமூல மிதுபுசிக்கிற் பறக்குமுன திளைப்பே.

தந்நாவி லொருவிரலைத் தாண்டவறி யாமல்
    சாகரமும் மலைபலவுந் தாண்டியலை கின்றார்.
என்னேயிம் மனிதர்மதி!" என நகைத்து முனிவன்
    இனியகந்த முதலனந்த இனம்வகுத்தங் கிருந்தான்.

இருந்தமுனி "வருந்தினவ! ஏதுனது கூச்சம்?
    இருவருமே யொருவரெனி லெவர்பெரியர் சிறியர்?
திருந்தஅன லருகிலினிச் செறிந்துறைதி மைந்த!
    சேர்ந்தார்க்குக் களிப்புதவுஞ் சேரார்க்குப் பனிப்பே."

எனஇரங்கி இரண்டுமுறை இயம்பியுந்தன் னருகே
    யேகாம லெதிரொன்று மிசையாமல் தனியே
மனமிறந்து புறமொதுங்கி மறைந்துவறி திருந்த
    மகன்மலைவு தெளிந்துவெளி வரும்வகைகள் பகர்ந்தான்.

பகர்ந்தநய மொழிசிறிதும் புகுந்ததிலை செவியில்;
    பாதிமுக மதியொருகைப் பதுமமலர் மறைப்பத்
திகழ்ந்தசுவ ரோவியம்போ லிருந்தவனை நோக்கிச்
    சிந்தைதனி நொந்துமுனி சிறிதுகரு திடுவான்.

செந்தழலு மந்தவெல்லை திகழ்ந்தடங்கி யோங்கி
    திசைக்களவி பிடித்தலைக்குஞ் சிறுபூனை யெனவே
விந்தையொடு நடம்புரிந்து வீங்கிருளை வாங்கி
    மீண்டுவர விடுத்தெடுத்து விழுங்கிவிளங் கினதே.

மொழியாதும் புகலாது விழிமாரி பொழிய
முகங்கவிழ வதிந்தகுறி முனிநோக்கி வினவும்:
எழிலாரு மிளமையினில் இடையூரு திகளால்
இல்லமகன் றிவ்வுருவ மெடுத்திவண்வந் தனையோ?

ஏதுனது கவலை? உளத் திருப்பதெனக் கோதாய்
இழந்தனையோ அரும்பொருளை ? இழந்தனரோ நண்பர்
காதல்கொள நீவிழைந்த மாதுபெருஞ் சூதாய்க்
கைவிடுத்துக் கழன்றனளோ? மெய்விடுத்துக் கழறாய்.

ஐயோஇவ் வையகத்தி லமைந்தசுக மனைத்தும்
அழலாலிங் கெழுந்தடங்கு நிழலாக நினையாய்.
கையாரும் பொருளென்னக் கருதிமணல் வகையைக்
காப்பதெலா மிலவுகிளி காத்தலினும் வறிதே.

நண்பருற வினர்கள்நமை நாடியுற வாடல்
நறுநெயுறு குடத்தெறும்பு நண்ணலென எண்ணாய்
பெண்களகக் காதலெலாம் பேசுமுயற் கொம்பே!
பெருங்கபட மிடுகலனே பிறங்குமவ ருடலம்!"

எரியுமுளம் நொந்தடிக ளிசைத்தவசை யுட்கொண்டு
ஏதிலனீள் கனவுவிழித் தெழுந்தவன்போல் விழித்து
விரிவெயிலில் விளக்கொளியும் மின்னொளியிற் கண்ணும்
வெளிப்பட்ட கள்வனும்போல் வெட்கிமுகம் வெளுத்தான்.

இசைத்தவசைச் செயலுணர எண்ணிமுகம் நோக்கி
இருந்தயதி யிக்குறிகண் டிறும்பூதுள் ளெய்தி
விசைத்தியங்கு மெரியெழுப்பி மீண்டுமவன் நோக்க
வேஷரக சியங்களெலாம் வெட்டவெளி யான.

நின்மலவி பூதியுள்ளே பொன்மயமெய் தோன்றி
நீறுபடி நெருப்பெனவே நிலவியொளி விரிக்கும்
உண்மைதிகழ் குருவிழிக்கு ளுட்கூசி யொடுங்கும்
உண்மைபெறு கண்ணினையும் பெண்மையுருத் தெரிக்கும்

கூசுமுக நாணமொடு கோணியெழில் வீச
குழற்பாரஞ் சரிந்துசடைக் கோலமஃ தொழிக்கும்
வீசுலையின் மூக்கெனவே விம்மியவெய் துயிர்ப்பு
வீங்கவெழு கொங்கைபுனை வேடமுழு தழிக்கும்.



இவ்விதந்தன் மெய்விளங்க இருந்தமக ளெழுந்தே
யிருடிபதந் தலைவணங்கி யிம்மொழியங் கியம்பும்.
" தெய்வமொடு நீவசிக்குந் திருக்கோயில் புகுந்த
தீவினையேன் செய்தபிழை செமித்தருள்வை முனியே!

மண்ணுலகிற் காவிரிப்பூ மாநகரிற் செல்வ
வணிககுல திலகமென வாழ்வனொரு மங்கை.
எண்ணரிய குணமுடையள். இவள்வயிற்றி லுதித்தோர்
இருமகளி ரொருபுருட ரென்ன அவர் மூவர்.

ஒப்பரிய இப்புருடர்க் கோர்புதல்வ ருதித்தார்.
ஒருத்திமகள் யான்பாவி; ஒருத்திமுழு மலடி.
செப்பரிய அம்மலடி செல்வமிக வுடையள்;
செகமனைத்து மவள்படைத்த செல்வமென மொழிவர்.

உடல்பிரியா நிழல்போல ஓதியஅப் புதல்வர்
உடன்கூடி விளையாடி யொன்றாக வளர்ந்தேன்.
அடல்பெரியர் அருளுருவர் அலகில்வடி வுடையர்,
அவருடைய திருநாமம் அறைவேனோ அடிகாள் ?"

உரைத்தமொழி கேட்டிருடி யுடல்புளக மூடி
ஊறிவிழி நீர்வதன மொழுகவஃ தொளிக்க
எரிக்கவிற கெடுப்பவன்போ லெழுந்துநடந் திருந்தான்
இளம்பிடியுந் தன்கதையை யெடுத்தனள் முன்தொடுத்தே

" மலடிசிறி தாய்படைத்த மதிப்பரிய செல்வம்
மடமகளென் றெனக்களித்தாள். மயங்கியதின் மகிழ்ந்து
தலைதடுமா றுச்சிறிய தமியளது நிலையும்
தலைவனெனுந் தன்மையையுந் தகைமையையு மறந்தேன்.

குறிப்பாயுள் ளுணர்த்தியும்யான் கொள்ளாது விடுத்தேன்.
குறும்புமதி யாலெனது குடிமுழுதுங் கெடுத்தேன்.
வெறுப்பாக நினைந்தென்மேல் வேதனைப்பட் டவரும்
வெறும்படிறென் உள்ளமென விட்டுவில கினரே.

பொருள்விரும்பிக் குலம்விரும்பிப் பொலம்விரும்பி வந்தோர்
பொய்க்காதல் பேசினதோ புகலிலள வில்லை.
அருளரும்பி யெனைவிரும்பி ஆளுமென ததிபர்
அவரொழிய வேறிலையென் றறிந்துமயர்ந் திருந்தேன்.

ஒருவாரம் ஒருமாதம் ஒருவருட காலம்
ஓயாமல் உன்னியழிந் தேன்உருவங் காணேன்
திருவாருஞ் சேடியர்க்குச் செப்பஅவர் சேரும்
திசைதேயம் எவரறிந்து தெரிப்பரெனச் சிரித்தார்.

ஆயத்தார் கூடியெனை ஆயவுந்தான் ஒட்டார்.
அகல்வேலை யோஎறியும் அகோராத்திரங் கெடுத்து;
தீயைத்தா னேயுமிழுஞ் சிறந்தகலை மதியும்;
திரிந்துலவுங் காலுமுயிர் தின்னுநம னென்ன.

கண்டவரைக் கேட்டவரைக் காசினியில் தேடிக்
கண்டிடச்சென் றேயலைந்த கட்டமெனைத் தென்க ?
உண்டெனத்தம் யூகநெறி உரைப்பவரே அல்லால்
உள்ளபடி கண்டறிந்தோர் ஒருவரையும் காணேன்.

உண்டெனிலோ கண்டிடுவன்; இல்லையெனில் ஒல்லை,
உயிர்விடுத லேநலமென் றுன்னியுளந் தேறி
கண்துயிலும் இல்லிடந்தீ கதுவவெளி யோடும்
கணக்காஇவ் வேடமொடு கரந்துபுறப் பட்டேன்.

தீர்த்தகுலம் மூர்த்திதலம் பார்த்துடலம் சலித்தேன்.
திருக்கறுபற் குருக்கள்மடம் திரிந்துமனம் அலுத்தேன்
வார்த்தை கத்தும் வாதியர்தம் மன்றனைத்தும் வறிய
மறுத்துறங்கும் யோகியர்போய் வாழ்குகையும் பாழே.

மான்மறவாக் கலையினமே! வாழ்பிடிவிட் டகலா
மதம்பெருகு மாகுலமே! வன்பிகமே! சுகமே!
நான்மறவா நாதனையெஞ் ஞான்றுமறி வீரோ?
நவில்விரெனப் பின்தொடர்ந்து நாளனந்தங் கழித்தேன்.

இவ்விடமும் அவ்விடமும் எவ்விடமும் ஓடி
இதுவரையும் தேடியுமென் அதிபரைக்கண் டிலனே.
எவ்விடம்யான் நண்ணவினி? எவ்விடம்யான் உண்ண?
இக்காயம் இனியெனக்கு மிக்கஅரு வருப்பே.

ஐயோவென் உள்ளநிலை அறியாரோ இனியும் ?
ஆசைகொண்டு நானலைந்த தத்தனையும் பொய்யோ?
பொய்யேதான் ஆயிடினும் புனிதரவர் தந்த
போதமலால் வேறெனக்கும் ஓதுமறி வுளதே ?



நல்லர்அரு ளுடையரென நம்பி இதுவரையும்
நானுழைப்ப தறிவரெனில் ஏனெதிர்வந் திலரோ?
இல்லையெனில் என்னளவும் இவ்வுலகம் அனைத்தும்
எந்நலமும் கொல்லவென எடுத்தசுடு காடே.

என்னுடைய உயிர்த்துணைவர் எண்ணரிய அருளில்
ஏதோசிற் சாயையுன திடத்திருத்தல் கண்டு
மன்னுதவ மாமுனிவ! மனத்துயரம் உன்பால்
வகுத்தாறி னேன்சிறிது. மறுசாட்சி யில்லை.

இனியிருந்து பெறும்பயனென் ? இவ்வழலே கதி"யென்று
எரியுமழல் எதிரேநின் றிசைத்தமொழி முழுதும்
முனிசெவியிற் புகுமுனமே மூதுருவம் விளக்கி
முகமலர்ந்தங் கவளெதிரே முந்திமொழி குளறி...

" சிவகாமி யானுனது சிதம்பரனே" என்னச்
செப்புமுனம் இருவருமற் றோருருவம் ஆனார்!
எவர்தாமுன் அணைந்தனரென் றிதுகாறும் அறியோம்
இருவருமொன் றாயினரென் றேயறையும் சுருதி.

பர்செல் பாட்டைப் பாடிக் கொண்டிருந்த பொழுது சோபியா தன் ஒப்புதலைக் கனிவுடன் தெரிவித்தாள். எங்கள் அமைதியை ஒரு துப்பாக்கி வெடித்த ஒலி குலைத்தது. அதைத் தொடர்ந்து புதரிலிருந்து ஒருவர் தான் சுட்டதை எடுப்பதற்காக வெளிப்பட்டார். அவர் அன்று நிலக் கிழாருடன் வந்திருந்த கோயிற் பணியாளர். அவர் இதுவரை எங்களை மகிழ்வித்து வந்த இரண்டு குயில்களுள் ஒன்றைச் சுட்டு வீழ்த்திவிட்டார். இவ்வளவு அருகில் இவ்வளவு பெரிய ஒலிகேட்டவுடன் என்னுடைய பெண்கள் திடுக்குற்றனர். இந்த அச்சத்தில் சோபியா திடுக்குற்று பர்செல்லினுடைய கைகளில் தஞ்சம் புகுந்ததைக் கண்டேன். அவர் எங்களிடம் வந்து எங்களுக்கு இடையூறை விளைவித்ததற்காக மன்னிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

அவ்வளவு அருகில்நாங்கள் இருந்ததுதெரியாது என்று கூறினர். அவர் என்னுடைய இளைய பெண்ணின் அருகில் உட்கார்ந்து அன்று காலையில் வேட்டையாடியதை அவளிடம் கொடுத்தார். அவள் அதை மறுப்பதற்கு எண்ணினாள். ஆனால் அவளுடைய தாயிடமிருந்து வந்த பார்வை அவள் அத்தவற்றைப் புரியவிடாது தடுத்தது. சற்று வெறுப் பிருந்தாலும் அந்த அன்பளிப்பை அவள் ஏற்றுக் கொண்டாள்; நிலக்கிழாரை ஒலிவியா கவர்ந்ததைப் போல அவளுடைய தங்கை அவருடைய கோயிற் குருவைக் கவர்ந்து விட்டதை அறிந்து தணிந்த குரலில் தன் பெருமையை வெளிக்காட்டினாள் என் மனைவி. சோபியாவினுடைய விருப்பனைத்தும் வேறொருவர்மீது என்பது எனக்குத் தெரியுமாதலால் நான் இதில் ஐயப்பட்டேன். அவர் இவ்வளவு தூரம் வந்தது திரு தார்ன்கில் அன்றிரவு எங்கள் வீட்டின் முன்னுள்ள புல்வெளியில் நிலாவினொளியில் இசையும் நடனமும் அளிக்கப் போகிறார் என்பதை எங்களுக்கு அறிவிப்பதற்குத்தான்.

"நான் இந்தச் செய்தியை உங்களுக்கு முதலில் கூறவந்ததற்கு வேறொரு காரணமும் உள்ளது. திருமதி சோபியா என்னுடன் சேர்ந்து நடனமாட வேண்டுமென்பதைக் கேட்டுக் கொள்ளவே வந்தேன்'' என்றார்.

இதற்கு அவருடன் சேர்ந்து நடனமாடுவதில் தனக்கொன்றும் தடையில்லை என்று தெரிவித்தாள். தொடர்ந்து பர்செல்லைச் சுட்டிக்காட்டி "இதோ ஒரு பெருமகள் இருக்கிறார். இவர் நாள் முழுவதும் என்னுடைய உழைப்பில் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார். அதனால் இவர் அந்த வேடிக்கைகளிலும் என்னுடன் பங்குகொள்ள வேண்டும்'' என்று கூறினாள்.



அவளுடைய விருப்பத்திற்குத் தம் நன்றியைத் தெரிவித்துவிட்டுத் தாம் அன்றிரவு ஐந்துகல் தொலைவிலுள்ள வேறோரிடத்தில் அறுவடை விழாவில் கலந்து விருந்துண்ண வருவதாக ஒப்புக் கொண்டுள்ளதாகக் கூறினர் பர்செல். அவருடைய மறுப்பு எனக்குச் சற்று அசாதாரணமாகத் தோன்றியது. அத்துடன் நல்ல எதிர்காலத்தையுடைய ஒருவரைவிட்டுவிட்டு ஏன் தன் சொத்து முழுவதையும் இழந்துவிட்ட ஒருவரை என்னுடைய இளைய பெண் விரும்புகிறாள் என்றும் புரியவில்லை. எங்ஙனம் பெண்களுடைய தரம் தெரிந்து அவர்களுக்குள் வேறுபாடு கண்டு பிடிப்பதில் ஆண்கள் திறனுடையவர்களாயிருக்கிறார்களோ அவ்வாறே பெண்களும் ஆண்களைச் சரியாக எடைபோட்டு விடுகின்றனர். இருவேறு பாலினரும் ஒருவர்மீது ஒருவர் உளவறியும் நிலையில் உள்ளனர். அவர்களிடம் அவ்வாறு உளவறிய வெவ்வேறு திறமைகள் காணப்படுகின்றன.

---

# 9. பெருநகர்ப் பெண்டிர்

திரு. பர்செல் விடைபெற்றுச்சென்றபின் சோபியா கோயிற்பணியாளருடன் நடனமாட ஒப்புக் கொண்டாள். அப்பொழுது எங்கள் சிறு பையன்கள் ஓடிவந்து தார்ன்கில் ஒரு கூட்டத்துடன் வந்திருப்பதாகக் கூறினர்கள். நாங்கள் எங்கள் வீட்டிற்குத் திரும்பி வந்தபொழுது தார்ன்கில் இரு ஆண்களுடனும் இரண்டு பெண்களுடனும் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தோம். அந்த இரண்டு பெண்களும் விலையுயர்ந்த ஆடைகளை அணிந்திருந்தனர். பெரும் புகழும் நாகரிகமும் உடையவர்களென்றும் அவர்கள் நகரிலிருந்து வருகின்றனர் என்றும் எங்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டார்கள். அங்கு வந்திருந்த அனைவருக்கும் உட்காருவதற்கு எங்கள் வீட்டில் நாற்காலிகள் இல்லை. உடனே தார்ன்கில் ஒவ்வோர் ஆணும் ஒவ்வொரு பெண்ணினுடைய மடியில் உட்கார்ந்து கொள்ளலாம் என்று யோசனை கூறினர். என்னுடைய மனைவியின் பார்வையில் இதற்கு மறுப்பு காணப்பட்டதாயினும் நானும் இதை மறுத்தேன். எனவே இரண்டு நாற்காலிகளைப் பக்கத்திலிருந்து கடன் வாங்குவதற்காக மோசசு அனுப்பப்பட்டான். நடனமாடப் பெண்கள் தேவையாயிருந்ததால் தார்ன்கிலுடன் வந்த இருவரும் பெண்களைத் தேடி அழைத்துவரச் சென்றனர். விரைவில் நாற்காலிகளும் உடன்ஆடுவதற்குப் பெண்களும் கிடைத்து விட்டன. அவ்விருவரும் எங்கள் வீட்டினருகிலுருந்த பிளேம்பரோவின் பெண்களை அழைத்து



வந்திருந்தனர். அப்பெண்கள் தங்கள் தலைகளில் சிவப்பு நாடாவை முடித்திருந்தனர். திருமதி பிளேம்பரோக்களுக்கு உயர்ந்த நடனங்களைக் கோயிலில் ஆடிய பழக்கம் இருக்கிறதே தவிர நாட்டுப்புற நடனம் ஒன்றிரண்டு கூட ஆடத் தெரியாது. இந்தச் சூழ்நிலை முதலில் எங்கள் நினைவிற்கு வரவில்லை. அப்பொழுது முதலில் சற்று ஒன்றும் புரியவில்லை. எனினும் சிறிது நேரம் அவர்கள் முன்னுக்குத் தள்ளப்பட்டும் பின்னுக்கு இழுக்கப்பட்டும் நடனமாடி, சிறிது சிறிதாக நன்ருகவும் மகிழ்ச்சியாகவும் நடனமாடலாயினர்.

இரண்டு பிடில் இசைக்கருவிகளும் ஒரு குழலிசையும் ஒரு மத்தளமும் இசையை எழுப்பிக் கொண்டிருந்தன. நிலவு நன்ருகக் காய்ந்து கொண்டிருந்தது. தார்ன்கிலும் என்னுடைய மூத்தபெண்ணும் அங்குக் கூடியிருந்தவர் மகிழும் வகையில் நடனத்தைத் தொடங்கி வைத்தனர். அங்கு நடனம் ஆடுகின்றனர் என்பதைக் கேட்ட அனைவரும் எங்களைக் காண்பதற்குக் குழுமிவிட்டனர். ஒலிவியா நயத்துடனும் களிப்புடனும் நடனமாடினுள். அவள் மனதில் ஏற்பட்ட பெருமையைக் கண்டுபிடித்துவிட்ட என் மனைவி அவள் மிகநன்ருக ஆடினுலும் அடியெடுத்து வைப்பதையெல்லாம் மறந்து விட்டாள் என்று கூறினுள். நகரிலிருந்து வந்த பெண்களும் இதற்குச் சரியாக ஆடவேண்டுமென்று முயற்சி செய்து ஆடியும் தோல்வியே அடைந்தனர். அவர்கள் நீந்தினர்கள், கைகால்களைப் பரப்பினர்கள், துள்ளிக் குதித்தார்கள், என்னசெய்தும் பயனேற்படவில்லை. பார்த்துக் கொண்டிருந்தவர்கள் அதைப் பார்த்துப் பாராட்டினர். ஆனல் திரு. பிளேம்பரோ ஒலிவியாவின் நடனம்தான்

இசைக்குத் தக்கவாறு அமைந்திருந்தது என்று பாராட்டினர்.

ஒரு மணி நேரம் தொடர்ந்து நடனமாடியபின் நகரத்துப் பெண்கள் இருவரும் மேலும் தொடர்ந்து ஆடினல் தங்களுக்குச் சளி பிடித்துக் கொள்ளுமென்று நடனத்தை முடிக்க விரும்பினர். அனைவரும் அதற்கு ஒப்புக்கொண்டு வீட்டிற்குத் திரும்பினோம்.

அங்கே திரு தார்ன்கில் முன்னரே ஏற்பாடுசெய்திருந்த இனிய விருந்து எங்களுக்காகக் காத்துக் கொண்டிருந்தது. இச் சமயம் உரையாடல் மிக் அமைதியாக நடைபெற்றது. அந்த இருபெண்களும் என்னுடைய பெண்களை அமைதியாக இருக்கச் செய்து விட்டனர். உயர்ந்த வாழ்க்கையைப் பற்றியும் செல்வமிக்க நண்பர்களைப் பற்றியுமே அவர்கள் பேசினர்கள். படங்களைப்பற்றியும், சேக்ஸ்பியரைப் பற்றியும், சலதரங்க இசையைப் பற்றியும் பேசினர். பேச்சில் இடையிடை ஓரிருமுறை சிலவற்றைப் பற்றி ஆணையும் இட்டனர். அவ்வாறு ஆணையிடுவதை அவர்கள் உயர்ந்த நாகரிகமாக எண்ணி வந்தனர். ஆனல் ஆணையிடும் வழக்கம் நாகரிக முறையினின்று வழுவிவிட்டது என்பது எனக்குத் தெரியும். அவர்களுடைய உரையாடலிலிருந்து நாம் ஒன்றும் ஊகிக்க முடியாதவண்ணம் அவர்களின் பூவேலைப்பாட்டுடன் நிறைந்த உடை மறைத்துவிட்டது. அவர்களுடைய சிறந்த ஆற்றல்களைக் கண்டு என்னுடைய பெண்கள் பொருமையடைந்தனர். இடையிடை ஆணையிட்டதையும் பிறவற்றையும் கண்டு அவர்களிருவரும் உயர்ந்த குடும்பத்தில் சிறந்த முறையில் வளர்க்கப்பட்டிருந்ததால் இக்குணங்களைப் பெற்றிருந்த



தாக எண்ணினர். அவர்களில் ஒருத்தி, ஒலிவியா இன்னும் சிறிது உலகத்தை அதிகமாகப் பார்த்தால் அவள் மேலும் முன்னேறுவாள் என்று கூறினுள். இன்னொருத்தி குளிர்காலத்தைச் சோபியா இலண்டனில் கழித்தால் அது அவளையே மாற்றிவிடும் என்றாள். அவ்விருவருடைய கூற்றுக்களையும் என் மனைவி ஒப்புக் கொண்டாள். தன்னுடைய பெண்களுக்குக் குளிர்கால மெருகை ஏற்றுவதைவிட வேறொரு மகிழ்ச்சி தரக்கூடிய அவாவும் தனக்குக் கிடையாது என்று கூறினுள். அவர்களுடைய நிலைக்குச் சற்று உயர்ந்த முறையிலேயே அவர்கள் வளர்க்கப் பட்டிருக்கிறார்கள். இன்னும் அவர்களுடைய நடத்தையில் நயத்தை உண்டுபண்ண விரும்பினல் அது இன்னும் வறுமையைத் தருவதோடு நில்லாது அவர்கள் பெறுவதற்குரிமையில்லாத இன்பங்களின் மீதெல்லாம் சுவையை ஏற்படுத்திவிடும் என்று பதில் கூறுவதைத் தவிர என்னல் வேறொன்றும் செய்யமுடியவில்லை.

"நற்பண்புகளைச் சேமித்து வைத்திருக்கும் இவர்கள் பெறுவதற்குத் தகுதியில்லாத இன்பங்கள் எவை?" என்று கேட்டார் தார்ன்கில். "என்னைப் பொறுத்த வரையில் எனக்கு நிறைய சொத்து இருக்கின்றது. காதல், விடுதலை, இன்பம்-இவையே என்னுடைய குறிக்கோள்கள். என்னுடைய செல்வத்தில் பாதியை ஒதுக்கி வைப்பது ஒலிவியாவிற்கு இன்பம் தருவதாயிருந்தால் அது அவளுக்கே இருக்கட்டும். அதற்குப் பதிலாக நான் கேட்கும் உதவி அவள் தனக்குக் கிடைக்கும் செல்வத்தோடு என்னையும் அவள் தன் சொத்தாகச் சேர்த்துக் கொள்ளவேண்டும், என்பதே" என்று தொடர்ந்து கூறினர்.

தாம் திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்ற துடுக்கான எண்ணத்தை மறைப்பதற்காக இவ்வளவு அலங்காரச் சொற்களைப் பயன்படுத்தினர் என்பதை அறியாதிருப்பதற்கு நான் ஒன்றும் இந்த உலகத்திற்குப் புதியவனல்ல. எனக்கு ஏற்பட்ட சினத்தைத் தடுத்துக்கொள்ள முயன்றேன்.

அவரிடம் "உங்கள் தகுதிக்கு இரங்கிவந்து உதவி செய்ய விரும்பும் இக்குடும்பம் உங்களைப் போலவே நன்மதிப்புடன் வளர்க்கப்பட்ட குடும்பம் தான். நீங்கள் அந்த நன்மதிப்புக்கு இடையூறு விளைவித்தால் அதன் பயனாகத் தீய விளைவுகள்தாம் விளையும். நன்மதிப்பு ஒன்றுதான் இப்பொழுது எங்களிடமுள்ள ஒரே ஒரு செல்வம். அந்தக் கடைசிச் செல்வத்தைக் காப்பாற்ற நாங்கள் பெரும் பாடுபட்டு வருகிறோம்" என்று கூறினேன். இவ்வளவு சினத்துடன் இதைப் பேசியதற்கு நான் மிகவும் வருந்தினேன். அந்த இளைஞர் என்னுடைய கைகளைப் பிடித்துக் கொண்டு என்னுடைய உணர்ச்சிகளைப் பாராட்டினார். என்னுடைய ஐயங்களனைத்தையும் நீக்கினர்.

நகரத்துப் பெண்களிருவருக்கும் இதைப் பற்றி ஒன்றும் தெரியாதாகையால் பேசாது உட்கார்ந்திருந்தனர். என்னுடைய பேச்சைக் கேட்டு மிக வருத்தமுற்றனர். அவர்கள் உடனே நற்பண்பைப் பற்றி அறிவு நிறைந்த முறையில் தீவிரமாகப் பேசலாயினர். இதில் என் மனைவியும், கோயிற் பணியாளரும் நானும் கலந்துகொண்டோம். நிலக்கிழாரும் முதலில் தாம் அளவுக்கு மீறிப் பழகியதற்காகவும் பேசியதற்காகவும் வருத்தம் தெரிவித்தார். தன்னடக்கத்தால் ஏற்படும்



இன்பங்களைப் பற்றியும், குற்றத்தால் தீண்டப்படாத மனத்தின் ஒளியைப் பற்றியும் நாங்கள் பேசினோம். சிறுவர்கள் வழக்கத்திற்கு மாறாக அதிக நேரம் விழித்திருந்து இத்தகைய பயன்தரு உரையாடல்களால் அறிவு பெற்றதை யறிந்து நான் மகிழ்ந்தேன். தார்ன்கில் என்னை இறைவணக்கத்தை நடத்துமாறு கேட்டுக் கொண்டார். நான் அவருடைய எண்ணத்தை மகிழ்ச்சியுடன் ஏற்று நிறைவேற்றி வைத்தேன். இந்த அமைதியான முறையில் நாங்கள் அனைவரும் பிரிய எண்ணினோம். நகரத்துப் பெண்களிருவருக்கும் என்னுடைய பெண்களை விட்டுப் பிரிய மனம் வரவில்லை. லண்டனுக்கு ஒரு முறை வருமாறு என்னுடைய பெண்களை அழைத்தனர். நான் இதற்கு என் கண்டிப்பான மறுப்பைத் தெரிவித்து விட்டேன். இதனால் அடுத்த நாள் முழுவதும் என்னுடைய பெண்கள் முகத்தைத் தொங்கப்போட்டுக்கொண்டு நடனமாடினர்.

# 10. வறுமையின் துன்பம்

தன்னடக்கம், எளிமை, மனநிறைவு ஆகியவைகளைப் பற்றி நான் நீண்டநாட்களாக முயற்சி எடுத்துச் செய்து வந்த சொற்பொழிவுகளனைத்தும் பயன்தரவில்லை என்பதை உணரலானேன். எங்களைவிட நிலையில் உயர்ந்தவர்கள் எங்களுக்குக் காட்டி வந்த மதிப்பு என் குடும்பத்திடை வீண்பெருமையை எழுப்பிவிட்டது. அதை நான் உறங்கவைத்திருந்தேன். அது அகற்றப்படுவதற்குப் பதிலாக எழுப்பப்பட்டுவிட்டது. முன்னைப் போலவே வீட்டுச் சன்னல்களில் முகம் கழுவும் தொட்டிகள் பொருத்தப்பட்டன. வீட்டிற்கு வெளியே கதிரவனைத் தோலுக்கு எதிரியாக எண்ணி அஞ்சலாயினர். வீட்டினுள் நெருப்பை உடலின் அழகைக் கெடுக்கும் பொருளாக எண்ணினர். பெண்கள் காலையில் விரைவாக எழுந்திருப்பது அவர்களுடைய கண்களைக் கெடுத்துவிடும் என்று கூறினாள் என் மனைவி. பகலுணவிற்குப் பின் வேலை பார்த்தால் அவர்கள் மூக்குச் சிவந்துவிடும் என்றாள். அவர்கள் ஒரு வேலையும் செய்யாதிருந்தபோது கைகள் வெள்ளையாக இருந்ததுபோல் வேறெப்பொழுதும் இல்லை என்று என்னிடம் கூறி என்னை உணரும்படி செய்தாள். எனவே ஜியார்ஜினுடைய சட்டைகளைத் தைப்பதற்குப் பதிலாகத் தம்முடைய பழைய உடைகளைப் புதுவிதமாக மாற்றியமைப்பதிலும் அவற்றில் பூ வேலைப்பாடுகளைச் செய்வதிலும் கருத்தைச் செலுத்தினர். பழைய நண்பர்களான பிளேம்பரோவின் பெண்களிருவருடனும் தொடர்புகொள்வது 'தங்கள் நிலைக்குத் தாழ்ந்ததாக எண்ணினர். எப்பொழுதும்



உயர்ந்த வாழ்க்கை, நல்ல நிலையிலுள்ளவர்கள், படங்கள், சேக்சுபியர், சலதரங்க இசை ஆகியவற்றைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தனர்.

குறி சொல்லும் குறத்தி வந்து எங்களை இன்னும் மிக உயர்ந்த நிலைக்கு உயர்த்தாமலிருந்திருந்தால் இவற்றையெல்லாம் பொறுத்துக்கொள்ளலாம். குறத்தி வந்தவுடன் என்னிடம் வந்து என் பெண்கள் அவளிடம் குறிகேட்க ஆளுக்கொரு சில்லிங் வேண்டுமென்று கேட்டனர். அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதையே நான் பார்க்க விரும்பியதால் அவர்களுடைய வேண்டுகோளை நிறைவேற்றினேன். ஆளுக்கொரு சில்லிங் கொடுத்தேன். குடும்பத்தின் பெருமையைக் காப்பாற்றுவதற்காகவாவது அவர்கள் வெளியில் செல்லும் பொழுது பணமில்லாமல் செல்வதில்லை. என் மனைவி எப்பொழுதும் அவர்களிடம் ஆளுக்கொரு கினி கொடுத்து அதைப் பைகளிலேயே வைத்திருக்க வேண்டும் என்பாள். அதை ஒருபொழுதும் மாற்றக் கூடாது என்று கூறியிருப்பாள். குறி சொல்பவளுடன் சிறிது நேரம் பேசிவிட்டு வந்தபொழுது அவர்களுக்கு ஏதோ ஒன்று பெரிதாகக் கிடைக்கும் என்று குறிசொல்பவள் கூறியிருப்பாள் என்று என்னுடைய பெண்களின் பார்வையிலிருந்து ஊகித்துக் கொண்டேன்.

"என்ன, நீங்கள் எவ்வளவு வெற்றியடைந்தீர்கள்? என்ன ஒலிவியா, குறிசொல்பவள் ஒரு பென்னி பெறுமளவுக்காவது ஏதாவது நல்லது சொன்னாளா?" என்று அவர்களிடம் கேட்டேன்.

"அப்பா, அவள் சொல்லுவதெல்லாம் தப்பு. அவள் ஏதோ குட்டிச்சாத்தானுடன் தொடர்பு

வைத்துக் கொண்டிருப்பாளென்று எண்ணுகின்றேன். ஏனெனில் இன்னும் பன்னிரண்டு மாதங்களுக்குள் நான் ஒரு பெருங்குடிமகனை மணப்பேன் என்று உறுதியாகச் சொன்னுள்'' என்ருள் ஒலிவியா.

"என்ன, சோபியா? நீ எந்த மாதிரிக் கணவனைப் பெறப் போகிருயாம்?" என்று இளையவளைக் கேட்டேன்.

''என்னுடைய தமக்கை ஒரு பெருங்குடிமகனை மணஞ்செய்தபின்தான் ஒரு செல்வந்தரை மணஞ் செய்து கொள்வேனும்'' என்று மறுமொழி கூறினுள் சோபியா.

''நீங்கள் கொடுத்த இரண்டு சில்லிங்குகளுக்கு இவ்வளவுதானு நீங்கள் அடைவீர்கள்? நீங்கள் முட்டாள்களாயிருக்கிறீர்களே. அதில் பாதி பணம் என்னிடம் கொடுத்திருந்தால் உங்களுக்கு ஓர் இளவரசனும் ஒரு நவாபும் கிடைப்பார்கள் என்று உறுதியளித்திருப்பேனே'' என்றேன் நான்.

அவர்களுடைய அவா மேலும்மேலும் பல நிகழ்ச்சிகளால் வளர்க்கப் பெற்றது. எங்களுடைய விதியின்படி நாங்கள் உயர்ந்த வாழ்க்கை வாழ வேண்டுமென்று எண்ணலானேம். எதிர்காலத்தில் அடையப் போகும் மேல்நிலையை எதிர்பார்த்தோம். நான் இதில் பங்கு கொள்ளவில்லையாயினும் என்னுடைய குடும்பத்தில் என்னைத் தவிர எல்லோரும் இதில் கலந்துகொண்டனர்.

இன்பத்தை அனுபவிக்கும் நேரத்தைவிட 'எதிர் காலத்தில் விளையப்போகும் இன்பத்தை எண்ணிப்



பார்க்கும் நேரம் மிக்க மகிழ்ச்சியளிப்பதை நான் ஆயிர முறை கண்டிருக்கின்றேன். முதலிலுள்ள இன்பம் சூழ்நிலை நமக்கு அமைத்துக் கொடுத்தது. இரண்டாவதில் இன்பத்தை நம் பசிக்கேற்றவாறு சமைத்துக் கொள்கிறேம். எங்களுடைய பொழுதுபோக்கிற்காக நாங்கள் கட்டிய மனக்கோட்டைகளைச் சொல்லி முடியாது. எங்கள் வருவாய் மீண்டும் உயர்வதாக நினைத்தோம். பெருங்குடிமகனர் என்னுடைய பெண் மீது அன்பு செலுத்தியதை ஊர் முழுவதும் உறுதி செய்தது. அவர்களனைவரும் அவ்வாறு கூறியதால் அவளும் அவரை விரும்பினுள்.

இதற்கிடையில் என் மனைவி உலகத்திலேயே நல்ல கனவுகளைக் கண்டாள். அதை ஒன்று விடாமல் கவனத்துடன் ஒவ்வொரு நாள் காலையும் எங்களிடம் கூறுவாள். ஓர் இரவு கனவில் சவப்பெட்டியையும் இரு எலும்புகள் குறுக்கே வைத்திருப்பதையும் கண்டாள். இது திருமணம் நெருங்குவதைக் குறிக்கும். மற்றெரு முறை பெண்களின் பைகளில் செப்பு நாணயங்கள் நிறைந்திருப்பதாகக் கனவு கண்டாள். இது தங்க நாணயங்கள் குவியப் போவதைக் குறிக்கும். பெண்கள் தாங்களும் நற்குறிகளைக் காணலாயினர். மெழுகுவத்தியாலான மோதிரங்களையும், உதடுகளில் முத்தங்கள் விழுவதுபோலவும் நெருப்பிலிருந்து பணப்பை துள்ளிக் குதிப்பது போலவும் காணலாயினர்.

அந்தக் கிழமையின் இறுதியில் நகர்ப்பெண்களிருவரிடமிருந்தும் ஓர் அஞ்சலட்டை வந்தது. அதில் தங்கள் வணக்கத்தைத் தெரிவித்து எங்கள் குடும்பத்

தினரை ஞாயிற்றுக்கிழமையன்று கோயிலில் எதிர்பார்ப்பதாக எழுதியிருந்தார்கள். இதன் விளைவாக, சனிக்கிழமை காலை முழுவதும் என்னுடைய மனைவியும் பெண்களும் கூடிக் கூடிப் பேசினர். இடையிடை என்னையும் உற்றுப்பார்த்துக் கொண்டார்கள். அவர்களுடைய பார்வை மறைவான சதித்திட்டத்தை வெளிப்படுத்தியது. மறுநாள் பகட்டுடன் தோன்றுவதற்கு ஏதோ பயனற்ற திட்டத்தை உருவாக்குகிறார்கள் என்ற ஐயம் மட்டும் எனக்குக் கடுமையாக இருந்தது. மாலையில் வழக்கம்போல் தங்களுக்கு வேண்டியவற்றைச் செய்யத் தொடங்கினர். என்னுடைய மனைவிதான் முற்றுகையைத் தலைமை தாங்கி நடத்தினாள். தேநீரருந்திய பின் என்னுடைய மனைவி பேச்சைத் தொடங்கினாள்:

"நாளைக்குக் கோயிலில் நல்ல துணையிருக்கும்" என்றாள்.

"அதைப் பற்றி நீ கவலைப்படாதே. துணை இருந்தாலும் இல்லாவிட்டாலும் நல்ல சொற்பொழிவு இருக்கும்" என்றேன் நான்.

"நானும் அதைத்தான் எதிர்பார்க்கிறேன். இருந்தாலும் நாம் அங்கு நம்மாலியன்ற அளவு மதிப்பளிக்கக் கூடிய தோற்றத்தில் செல்ல வேண்டும். ஏனென்றால் என்ன நடக்குமென்று யாருக்குத் தெரியும்."

"நீ செய்யும் முன்னேற்பாடுகள் புகழத்தக்கவை. கோயிலில் மதிப்புக்குரிய வகையில் நடத்தலும் தோன்றலுமே என்னைக் கவரக் கூடியவை. நாம்



கடவுட் பற்றும், பணிவும், மகிழ்ச்சியும், அமைதியும் பெற்று விளங்க வேண்டும்."

"அது எனக்குத் தெரியும். நான் கூறுவது என்னவென்றால் நாம் அங்குத் தகுந்த முறையில் செல்ல வேண்டும். தாழ்ந்த வகையில் செல்லக் கூடாது" என்றாள் என் மனைவி.

"நீ சொல்வது சரி, நானும் அதைத்தான் கூற விரும்பினேன். அங்குச் செல்வதற்குத் தகுந்த முறையாவது எவ்வளவு முன்னால் செல்ல முடியுமோ சென்று சொற்பொழிவுக்கு முன்னர் ஆண்டவனை ஆழ்ந்து நினைக்க வேண்டும்."

"நீங்கள் சொல்வதெல்லாம் உண்மை. நான் கூற வந்தது அது வன்று. நாம் பெருந்தன்மையாகச் செல்ல வேண்டுமென்பதே. கோயில் இரண்டுகல் தொலைவிலுள்ளது என்பது உங்களுக்குத் தெரியும். அவர்கள் ஏதோ பந்தயத்தில் கலப்பது போல் இவ்வளது தூரம் நடந்து முகமும் உடலும் சிவந்து வேர்த்து விறுவிறுத்துக் கோயிலுள் சென்று இருக்கையில் அமர்வதை நான் விரும்பவில்லை. என்னுடைய திட்டம் இது — நம்மிடம் இரண்டு உழவுக் குதிரைகள் உள்ளன. ஒன்று ஒன்பதாண்டுகளாக நம் குடும்பத்திலேயே இருந்து வந்திருக்கின்றது. மற்றொன்று ஒரு மாதமாக ஒன்றும் செய்யாமலிருக்கின்றது. அவற்றிற்குக் கொழுப்பும் சோம்பலும் அதிகமாக உள்ளன. ஏன் அவை நம்மைப் போல் ஏதாவது நல்ல காரியத்தைச் செய்யக் கூடாது? மோசசு அவற்றின் முடியைச் சற்றுக் கத்தரித்து விட்டால் அவை ஓரளவு பார்க்கத் தகுதி

யுடையனவாய் அமைந்துவிடும்.'' என்று முடித்தாள் என் மனைவி.

இந்த மாதிரிப் பிராணிகள் மீது பயணம் செய்வதை விட நடந்து செல்வது இருபது மடங்கு பெருந் தன்மையை யளிக்கும் என்று நான் இத் திட்டத்தை எதிர்த்தேன். ஒரு குதிரைக்கு எதிரிலுள்ள சுவர்தான் கண்ணில் படும். மற்றென்றுக்கு வாலில் லாததுதான் ஒரு குறை. அவை கடிவாளத்தை மாட்டிக் கொள்ளாதிருக்க நூறுவிதமான தந்திரங்களைச் செய்யும். அதுவுமின்றி ஒரே ஒரு குதிரைக்குத்தான் சேணம் இருந்தது. நான் கூறிவந்த இத்தடைகளை என் மனைவி மறுத்து விட்டாள். எனவே நான் ஒத்துக் கொள்ள வேண்டியதாயிற்று. மறுநாள் காலை அவர்களனைவரும் பயணத்துக்கு வேண்டிய கருவி களைச் சேர்ப்பதில் முனைந்திருந்தனர். நேரம் அதிக மாகுமென்பது தெரிந்தவுடன் நான் கோயிலுக்கு முதலில் சென்றேன். அவர்கள் விரைவாகத் தொடர்ந்து வருவதாகக் கூறினர்கள். அவர்களுடைய வருகைக்காகச் சொற்பொழிவு மேடையின் மீது ஒரு மணி நேரம் காத்திருந்தேன். நான் எதிர்பார்த்தபடி அவர்கள் வராததால் நான் சொற்பொழிவைத் தொடங் கினேன்.

சொற்பொழிவுக்கிடையில் அவர்கள் வரவில்லையே என்று சற்று மனவருத்தம் இருந்தது. இது சொற் பொழிவு முதலிய அனைத்தும் முடிந்தும் என் குடும்பத் தினர் வராததால் அதிகரித்தது. எனவே குதிரை வரும் வழியில் நடக்கலானேன். குதிரை வரும் வழி சுற்றுப் பாதை. அது ஐந்து கல்தொலைவுள்ளது. நடைபாதை குறுக்குப் பாதை. இரண்டு கல்தான் தொலைவுடையது.



நான் பாதித் தொலை சென்றிருந்தபொழுது ஊர்வலம் மெதுவாகக் கோயிலை நோக்கி ஊர்ந்து வருவதைக் கண் டேன். என்னுடைய பையன், மனைவி சிறுவர்களிருவர் ஆகிய நால்வரும் ஒரு குதிரையிலும் இரண்டு பெண் கள் மற்றொரு குதிரையிலும் ஏறியிருந்தனர். அவர் களுடைய தாமதத்திற்குக் காரணம் கேட்டேன். அவர் களுடைய பார்வையிலிருந்து வரும் வழியில் பல இன்னல்களை யடைந்திருந்தனர் என்பதை மட்டும் உணர்ந்து கொண்டேன். முதலில் குதிரைகள் வீட்டை விட்டுப் புறப்பட மறுத்துவிட்டனவாம். தற்செயலாக அங்குவந்த பர்செல் குறுந்தடியால் குதிரைகளை அடித்துச் சிறிது தூரம் ஓட்டியிருக்கிறூர். அடுத்து என் மனைவி உட்கார்ந்திருந்த சேணத்தின் வார் அறுந்துவிட்டதால் அதைத்தைத்த பின்னர்தான் பயணத்தைத் தொடங்கியிருக்கிறூர்கள்.

அதற்குப் பின் ஒரு குதிரை நின்ற இடத்தி லிருந்து அசையக் கூடாது என்று முடிவு செய்து விட்டதால் அதை எவ்வளவு அடித்தும் கெஞ்சியும் அதை முன்னேறச் செய்ய முடியவில்லை. அடிகளா லேற்பட்ட துயரத்தினின்று குதிரை அப்பொழுதுதான் மீண்டுகொண்டிருந்தது. இந்தச் சூழ்நிலையில்தான் நான் அவர்களைப் பார்த்தேன். அவர்களுக்கேற்பட்ட அவமானத்தில் நான் பங்கு கொள்வதால் எனக் கொன்றும் வருத்தம் ஏற்படவில்லை. ஏனென்றல் இது எதிர்காலத்தில் வெற்றியை விளைவிக்கக்கூடிய பல வாய்ப்புக்களைத் தருமென நம்பினேன். இது என் பெண்களுக்கும் தாழ்மையுணர்ச்சியைக் கற்பிக்குமென எதிர்பார்த்தேன்.

---

# 11. முயற்சிமேல் முயற்சி

அடுத்தநாள் மைக்கல்மசு விழாவிற்கு முன்னாளாதலால் மாலையில் வாணங்களை வெடித்து வேடிக்கைகள் செய்ய அண்டை வீட்டுக்காரரான பிளேம்பரோ அழைத்திருந்தார். குதிரைச் சவாரி ஓரளவு எங்களுடைய வீண்பெருமையைக் குறைத்திருந்ததால் நாங்கள் இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டோம். இல்லையேல் அருவருப்புடன் இதை மறுத்திருப்போம். எனினும் எங்களுடைய மதிப்பை விட்டிறங்கி மகிழ்ச்சி கொண்டாடப் போவதாகத்தான் நினைத்தோம். அண்டை வீட்டுக்காரர் அளித்த விருந்து சிறப்பாக இருந்தது. வாத்து நெருப்பில் வாட்டி வதைக்கப்பட்டிருந்தது. சிறந்த ருசி உணர்வுடைய என் மனைவியும் விருந்தைப் பாராட்டினாள். அவர் கதைகள் சொன்ன விதம் என்னவோ உண்மையில் மிக நன்றாக அமையவில்லை. கதைகள் மிக நீளமாகவும் சுவையில்லாமலும் பெரும்பாலும் அவரைப் பற்றியுமே இருந்தன. அவற்றை நாங்கள் இதற்குமுன் பலமுறை கேட்டுச் சிரித்திருக்கிறோம். இருப்பினும் இன்னொரு முறை சிரிப்பதற்கு நாங்கள் தயங்கவில்லை.

விருந்தில் பர்செல்லும் கலந்து கொண்டார். அவருக்கு ஏதாவது ஒரு வேடிக்கை நடந்துகொண்டேயிருக்கவேண்டுமென்பது அவா. எனவே பையன்களையும் பெண்களையும் கண்கட்டி விளையாடச் செய்தார். என்னுடைய மனைவியும் இதில் கலந்து கொள்ளும்படி தூண்டப்பட்டாள். இதனால் என் மனைவி இன்னும் முதுமை அடையவில்லை என்ற மகிழ்ச்சியை எனக்குத் தந்தது. நானும் பிளேம்பரோவும் ஒவ்வொரு



வேடிக்கையையும் பார்த்துச் சிரித்து மகிழ்ந்தோம். இளைஞர்களாய் இருந்தபோது நாங்கள் காட்டிய திறமையைப் புகழ்ந்து பேசினோம். அடுத்து அவர்கள் கைகளைத் தட்டி விளையாடினார்கள். வினாக்களைக் கேட்டும் கட்டளைகளை இட்டும் விளையாடினர். பிறர் வினாக்களுக்குத் தக்க விடைகளை யளித்தனர். கட்டளைகளைஏற்று நடந்தனர்.

கடைசியாகச் செருப்பு வேட்டை விளையாட்டை ஆடுவதற்கு உட்கார்ந்தனர். இப் பழங்கால விளையாட்டு எல்லோருக்கும் தெரியாதாகையால் அதைச் சற்று விளக்கிக் கூறுகிறேன்: விளையாட்டில் கலந்து கொள்ளும் எல்லோரும், ஒருவரைத் தவிர, வட்டமாக உட்காரவேண்டும். நடுவில் ஒருவர் நின்று கொண்டு வட்டத்தில் உள்ளவர்கள் ஒருவருக்கொருவர் எறியும் செருப்பைப் பிடித்துக்கொள்ள வேண்டும். செருப்பு தறியில் செல்லும் விசையைப் போல் இங்குமங்கும் விரைவாகச் செல்லும் இந்த விளையாட்டில் பெண்கள் ஒன்றும் செய்ய முடியாது திண்டாடுவர். இதில் செருப்பைப் பிடிக்க முடியாது தோற்றவர்களைச் செருப்பின் அடிப்பகுதியால் லேசாக அடிப்பார்கள். இந்த முறையில் என்னுடைய மூத்த பெண் தோற்றுவிட்டதால் அவளைச் செருப்பால் அடித்ததால் எல்லோரும் பெருங் கூச்சலுடன் சிரித்தார்கள். துள்ளிக் குதித்தனர்; தான் தோற்கவில்லை என்று என் பெண் கூச்சலிட்டாள். இவ்வாறு குழப்பத்துக்குமேல் குழப்பமாக இருந்த நேரத்தில் நகரத்துப் பெண்களாகிய திருமதி பிளார்னியும், கரோலினா வில்கெல்மினா அமீலியா கெக்சும், அறையினுள் நுழைந்தனர். இவ்வாறு அவர்கள் வரும்போது அங்கு நடந்த செருப்பு

விளையாட்டினால் எங்களுக்கேற்பட்ட அவமானத்தை விவரிக்க இயலாது. இதைப் போன்ற கீழ்த்தரமான விளையாட்டை ஆடும்பொழுது உயர்ந்த குடியிற் பிறந்த இப் பெண்களால் பார்க்கப்பட்டு அவமானப் படுவதை விடச் சாவது நல்லதாகத் தோன்றியது. பிளேம்பரோ ஆடச்சொன்ன இந்தக் கீழ்த்தர விளையாட்டைப் பின் தொடர்வதைவிட வேறு என்ன இகழ்ச்சி இருக்க முடியும்? நாங்கள் அதிர்ச்சியால் கல்லாகித் தரையிலே வீழ்ந்தவர்கள் போலானோம்.

அவர்களிருவரும் எங்களை வீட்டிற்குச் சென்று தேடிவிட்டு அங்கிருந்து இங்கே வந்து விட்டனர். ஞாயிற்றுக்கிழமை கோயிலுக்கு வர முடியாதவாறு ஏதும் விபத்து நடந்து விட்டதோ என்பதை அறிந்து செல்லவே வந்திருந்தனர். "நாங்கள் குதிரையிலிருந்து விழுந்து விட்டோம்" என்று சுருக்கமாக எங்களனைவர் சார்பிலும் ஒலிவியாவே கூறிவிட்டாள். அதைக் கேட்ட அவர்கள் மிக வருத்தமுற்றனர். ஆனால் யாருக்கும் அடிபடவில்லை என்பதைக் கூறியவுடன் எல்லையற்ற மகிழ்ச்சியுற்றனர். குதிரைப் பயணம் எங்களைக் கொன்றுவிட்டது என்று கூறிய பொழுது கவலையுற்ற னர். ஆனால் அன்று இரவு மிக நன்றாக உறங்கினோம் என்பதைக் கூறியவுடன் மீண்டும் மகிழ்ந்தனர். அவர்களிருவரும் என்னுடைய பெண்களிடம் நன்கு பழகினர். மிக நெருங்கிய தொடர்பை உண்டாக்க விரும்பினர். பிளார்னி ஒலிவியாவை அதிகமாக விரும்பினாள். கரோலினா வில்கெல்மினா அமீலியா கெக்சு (நான் முழுப் பெயரையும் கொடுப்பதை விரும்புகின்றேன்) இளையவளை விரும்பினாள். பிளார்னியும் அமீலியாவும் பேசிக் கொண்டிருந்தனர். என்னுடைய பெண்கள் அவர்களுடைய குடிப் பெருமையை வியந்தவண்ணம் அவர்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தனர். இதைப் படிக்கும் ஒவ்வொருவருக்கும் உயர்ந்த வாழ்க்கை வாழ்பவர் உரையாடல்களையும் அவர்கள் பிரபுக்களைப் பற்றியும், வீரர்களைப் பற்றியும் பேசுவதையும் படிக்க விருப்பமிருக்குமாதலால் அவர்களுடைய உரையாடலில் இறுதிப் பகுதியை மட்டும் தருகிறேன்:



"அதைப்பற்றி எனக்குத் தெரிந்ததெல்லாம் இது தான். இது உண்மையாகவும் இருக்கலாம், உண்மையில்லாமலும் இருக்கலாம்" என்று கூறினாள் அமீலியா. "ஆனால் இதுமட்டும் உறுதி. அங்குக் கூடியிருந்தவரனைவரும் திகைத்து விட்டனர். பிரபுவின் முகத்தில் பல நிறங்கள் மாறிமாறி வந்தன. தலைவி மயக்கமடைந்து விட்டாள். ஆனால் உயர்திரு டாம்கின் தன் வாளை உருவிக்கொண்டு தம்முடைய உடலில் கடைசிச் சொட்டு குருதி இருக்கும்வரை அவள் தன்னுடையவள்தான் என்று கூறினர்" என்று கூறி முடித்தாள்.

"அது சரி" என்றாள் பிளார்னி. "அதைப்பற்றி ஒருவார்த்தைகூட அத் திருவாட்டி என்னிடம் சொல்லவில்லையே. என்னிடமிருந்து ஓர் இரகசியத்தையும் மறைத்து வைக்க மாட்டாளே! எனினும் இதை நீ உண்மையென நம்பலாம். அடுத்தநாள் காலை அந்தக் கோமகன் அவருடைய அறை வேலையாளை மூன்று முறை அழைத்து 'சேர்னிகான், சேர்னிகான், சேர்னிகான், என்னுடைய கால்கட்டு நாடாக்களை எடுத்து வா' என்று கூறினர்."

இதற்கிடையில் பர்செல்லினுடைய அடக்கமற்ற நடத்தையைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். இந்த

உரையாடல் நிகழ்ந்து கொண்டிருந்தபொழுது பர்செல் நெருப்படியைப் பார்க்க முகத்தை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். ஒவ்வொரு தொடர் முடியும் பொழுதும் 'முட்டாள்தனம்' என்று கூவிக் கொண்டிருந்தார். இது எங்களனைவர்க்கும் சற்று வெறுப்பை அளித்தது. உரையாடலிலிருந்த உணர்ச்சியையும் கெடுத்தது.

"மேலும் இதைப்பற்றி அந்தச் சமயத்தில் டாக்டர் பர்டாக் எழுதிய பாடல்களில் குறிப்பிட வில்லையே" என்று அமீலியாவிடம் கேட்டாள் பிளார்னி.

"முட்டாள் தனம்."

"எனக்கு அது வியப்பாயிருக்கின்றது. ஏனெனில் அவர் தம்முடைய மகிழ்ச்சிக்காகவே எழுதுபவராதலால் சில சமயங்களில் சிலவற்றை விட்டுவிடுகிறார். ஆனால் அதை எனக்குச் சற்றுக் காட்ட முடியுமா" என்று கேட்டாள் அமீலியா.

"முட்டாள் தனம்."

"நீ என்ன. நான் அதை எப்பொழுதும் தூக்கிக் கொண்டேவா அலைகின்றேன்? அவைகள் சிறந்தவைகளாக இருப்பினும் எனக்குப் பிடித்தவை எவை என்பது எனக்குத் தெரியும். உண்மையில் டாக்டர் பர்டாக்கினுடைய பாடல்களை நான் போற்றிவந்ததுண்டு. ஆனால் நம்முடைய ஹனோவர் சதுக்கத்துப் பெருமாட்டிக்கு இயற்றித் தருவதைத் தவிரப் பிற பாடல்களெல்லாம் மிகத் தாழ்ந்த பொருளுடையன. அவற்றில் செல்வ வாழ்க்கையைப் பற்றி ஒரு சிறிதும் இல்லை" என்றாள் பிளார்னி.



"முட்டாள் தனம்."

அமீலியா "பெண்களிதழில் வருவனவற்றில் கீழ்த்தர வாழ்க்கையைப் பற்றி ஒன்றுமில்லையே. நீங்கள் சொல்ல வேண்டுவது ஒன்றுமில்லையென்று எண்ணுகின்றேன்" என்றாள்.

"முட்டாள் தனம்."

"ஏனில்லை. என்னுடைய தோழியும் எனக்குப் புத்தகங்களைப் படித்துக் காட்டுபவளுமான பெண், ரோச் என்பவரை மணக்கப் போவதால் என்னைவிட்டுச் சென்று விட்டாள் என்பது உனக்குத் தெரியுமல்லவா? அதனால் எழுதுவதுகூடக் கண்களுக்குக் கடினமாயிருக்கின்றது. சில நாட்களாக வேறொரு தோழியைத் தேடிக் கொண்டிருக்கிறேன். தகுதியான ஆள்தான் எளிதில் கிடைக்க மாட்டேனென்கிறது. மேலும் ஆண்டு ஒன்றுக்கு முப்பது பவுன்தான் உதவிச் சம்பளம் என்பது நல்ல பண்பும் எழுதப் படிக்கத் தெரிந்தும் உள்ள பெண்ணுக்கு மிகக் குறைவு. நகரிலுள்ள பெண்களுக்கு இவையனைத்தும் ஒன்றாயமைவதில்லை" என்று குறைப்பட்டுக் கொண்டாள் பிளார்னி.

இதைக்கேட்ட அமீலியா "இது எனக்கும் பழக்கம் தானே. போன அரையாண்டில் மூன்று பேர் வந்து போய் விட்டனர். ஒருத்தி ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் தையல் வேலை செய்யச் சொன்னதற்கு மறுத்து விட்டுப் போய்விட்டாள். இன்னொருத்தி ஆண்டொன்றுக்கு இருபத்தைந்து கினிகள் சம்பளம் என்பது மிகக் குறைவு என்று போய்விட்டாள். மூன்றாவது பெண் மதகுருவுடன் தொடர்பு கொண்டதால் அனுப்பிவிட்டேன். 'நற்பண்புக்கு எவ்வளவு விலை கொடுத்தாலும் தகும். ஆனால் அது எங்கே கிடைக்கிறது?'" என்றாள்.

"முட்டாள் தனம்."

என்னுடைய மனைவி இந்த உரையாடல் முழுவதையும் மிகக் கவனத்துடன் கேட்டுவந்தாள். அதிலும் குறிப்பாக உரையாடலின் கடைசிப் பகுதியை உன்னிப்புடன் கேட்டாள். ஆண்டொன்றுக்கு முப்பது பவுன்களும் இருபத்தியைந்து கினிகளும் என்பது ஆங்கில நாணயம் ஐம்பத்தியாறு பவுன்களும் ஐந்து சில்லிங்குகளும் ஆகும். அதுவும் குடும்பத்தினரால் எளிதில் அடையும்வகையில் தானே தேடிவருகின்றது. எனவே என்னுடைய மனைவி என் பார்வையிலிருந்து ஒப்புதலை அறிய விரும்பினாள். உண்மையில் இந்த இரண்டு இடங்களும் என்னுடைய இரண்டு பெண்களுக்கும் பொருத்தமாக இருக்கும் என்று நானும் எண்ணினேன். மேலும் உண்மையிலேயே என் பெண்மீது நிலக்கிழார் அன்பு வைத்திருந்தால் அவர் இந்த வழியில் என் பெண் நல்ல வாய்ப்பை அடையச் செய்யவேண்டும். எனினும் இந்த வாய்ப்பை நாங்கள் இழந்து விடக் கூடாது என்பதற்காக என்னுடைய மனைவி எங்கள் குடும்பத்தின் சார்பில் உறுதிகூறத் தொடங்கினாள்; "என்னுடைய எண்ணத்தைக் கேட்டு நீங்கள் மன்னிக்கவேண்டும். இத்தகைய உதவிகளை எதிர் பார்ப்பதற்கு எங்களுக்கு உரிமையில்லை என்பது உண்மையாயினும் என்னுடைய பெண்களை இவ்வுலகில் முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்ற அவா எனக்கு இருப்பது இயற்கை. என்னுடைய இரு பெண்களும் நன்றாகப் படித்திருக்கிறார்கள். திறமையுடையவர்கள். குறைந்தது இந்த ஊரைப் பொறுத்த வரையாவது இவர்களைவிடச் சிறந்தவர்கள் வேறு இல்லை. இவர்களுக்குப் படிக்கத் தெரியும். எழுதத் தெரியும். கணக்குப் போடத் தெரியும். தையல் வேலையும் தெரியும். பல விதமாகத் தைக்கவும் பூ வேலைப்பாடுகள் செய்யவும் மடிப்புகளும் கோணங்களும் வைத்துத் தைக்கவும் தெரியும். பெரியவளுக்குக் காகிதத்தை அழகாக வெட்டத் தெரியும். சிறியவள் சீட்டுக்களை வைத்துக்கொண்டு குறி சொல்லுவாள்" என்று தன் பெண்களைப்பற்றிக் கூறினாள்.



"முட்டாள் தனம்."

இந்த அழகிய சொற்பெருக்கை அவள் ஆற்றிய பின்னர் அந்த இருபெண்களும் ஒருவரை யொருவர் சில விநாடிகள் ஐயத்துடன் நோக்கிக்கொண்டனர். இறுதியாக இச் சிறு பழக்கத்தில் ஏற்பட்ட கருத்துப்படி அந்த இருவரும் இரண்டு வேலைகளுக்கும் பொருத்தமானவர்கள் என்று அமீலியா தெரிவித்தாள். "ஆனால்" என்று இழுத்தாள் அமீலியா. "இதைப் போன்றவற்றில் ஒவ்வொருவருடைய பண்புகளையும் நன்கு ஆய்ந்து பார்க்க வேண்டும். இளைய பெண்களுடைய நற்பண்புகள் மீதோ, அடக்கத்தின் மீதோ விருப்பங்களின் மீதோ நான் ஐயப்படுவதாக நீங்கள் எண்ணக்கூடாது. ஆனால் இதற்கெல்லாம் முறை என்று ஒன்று இருக்கிறதல்லவா? எல்லாவற்றையும் முறைப்படிதானே செய்ய வேண்டும்" என்றாள்.

என்னுடைய மனைவி அவளுடைய ஐயங்களைப் பாராட்டினாள். அவளிடம் ஐயப்படுதல் பொருத்தமானது என்று கூறினாள். ஆனால் நடத்தையைப்பற்றி வீட்டின் சுற்றுப் புறத்தில் இருப்பவர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று கூறினாள். அதற்குப் பிளார்னி இதெல்லாம் தேவையில்லையென்றும், அவ

ளுடைய ஒன்றுவிட்ட உடன்பிறந்தவரான தார்ன்கில் மட்டும் ஆதரவு தந்தால் போதுமென்றும் கூறினுள். எனவே இந்த நிலையில் எங்கள் மனுவை நிறுத்தி வைத்தோம்.

---

## 12. ஏமாற்றத்தின்மேல் ஏமாற்றம்

நாங்கள் வீட்டிற்குத் திரும்பிய பின்னர் அந்த இரவு முழுவதும் எதிர்காலத்தில் நிறைவேற்ற வேண்டிய திட்டங்களை உருவாக்குவதற்குச் செல விட்டோம். இரண்டு பெண்களில் யார் சிறந்த இடத்தைப் பெற்று நல்ல துணையைப் பெறுவதற்குரிய வாய்ப்புக்களை யடைவாள் என்பதை ஊகிப்பதில் தன் ஆற்றலைப் பயன்படுத்தினுள் என் மனைவி. எங்க ளுடைய விருப்பத்திற்குக் குறுக்கே நின்ற ஒரே ஒரு தடை நிலக்கிழாரின் ஆதரவைப் பெறுவதுதான். ஆனுல் அவர் பல சமயங்களில் தம்முடைய நட்பை எங்களுக்குக் காட்டியுள்ளார். அவருடைய நட்பைப் பற்றி இப்பொழுது ஐயப்படத் தேவையில்லை.

''இன்று நாம் சிறந்த செயல் செய்திருக்கிறோம் என்று நான் எண்ணுகின்றேன்'' என்று படுக்கப் போகும் பொழுது என் மனைவி கூறினுள்.

இதற்கு என்ன சொல்வது என்று தெரியாமல் ''மிக நல்ல செயல்'' என்று கூறினேன்.

''என்ன நல்ல செயலா, சிறந்த செயல் என்றல்லவா நான் எண்ணிக்கொண்டிருக்கின்றேன். பெண்கள் நகர வாழ்வின் பயனைச் சுவைப்பார்கள் உலகிலேயே இலண்டன் என்ற ஓரிடத்தில்தான் ஒவ்வொரு வகையான ஆணையும் காணமுடியும். மேலும் நாள்தோறும் விந்தையான நிகழ்ச்சிகள் நடை பெறுகின்றன. உயர்ந்த தரமுடைய பெண்கள் என்னு டைய பெண்களை விரும்பி எடுத்துக்கொள்வது போல உயர்தர ஆண்களும் எடுத்துக்கொள்ள மாட்டார்கள்

என்பது எப்படித் தெரியும். பிளார்னியை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. எவ்வளவு பணிவு உடைய வர்கள். எனினும் அமீலியாவையும் விரும்புகின்றேன். அவர்கள் நகரில் வேலை இருப்பதைப் பற்றிக் கூறிய பொழுது நான் அதை எப்படிப் பிடித்துக்கொண்டேன் பார்த்தீர்களா? நான் என்னுடைய பெண்களுக்கு நல்ல ஏற்பாடு செய்திருக்கிறேன் என்று நீங்கள் எண்ண வில்லையா? கூறுங்கள்.''

''ஆமாம்'' என்று அதைப்பற்றி ஒன்றும் சிந்திக்க முடியாதவனாய்க் கூறினேன். ''அவர்கள் இன்னும் மூன்று மாதங்களில் சிறந்து விளங்க ஆண்டவன் அருளட்டும்'' என்றேன்.

என்னுடைய கருத்தை என் மனைவிக்கு இந்த முறையில்தான் எப்பொழுதும் தெரிவிப்பேன். ஏனெனில் பெண்கள் வெற்றியடைந்துவிட்டால் தூய அவா நிறைவேறியது போலாகும். இல்லை, எதிர் பாராத வகையில் ஏதாவது தீயவை நிகழ்ந்துவிடின் இது வருவதுரைப்பது போலாகும். இந்த உரையாட லெல்லாம் இன்னொரு திட்டத்தைத் தயார் செய்வதற் குத்தான். நான் அத் திட்டத்தைக் கண்டு அஞ்சினேன். அத் திட்டம் வேறெதுவுமில்லை, இதுதான்: இந் நிலையில் நாங்கள் உலகில் இன்னும் சற்று உயர்ந்த வாழ்க்கை வாழவேண்டியிருந்ததால் எங்களிடமிருந்த குதிரைக் குட்டியை விற்று விட்டு அடுத்த சந்தையி லிருந்து ஒருவரை அல்லது இருவரை ஏற்றிச் செல்லக் கூடிய நல்ல குதிரையாக வாங்கிவர வேண்டுமென்பது தான். இது கோயிலுக்கு நல்ல முறையில் போவ தற்கும் வெளியே யார் வீட்டிற்காவது போவதற்கும்



பயன்படும். இத் திட்டத்தை நான் முதலில் வன்மை யாக எதிர்த்தேன். ஆனால் இது வன்மையாகவும் ஆதரிக்கப் பெற்றது. எனவே நான் தளர்ந்து விட்டேன். எதிரி ஊக்கம் பெற்றாள். இறுதியாகக் குதிரைக் குட்டியை விற்பது என்று முடிவாயிற்று.

அடுத்த நாள் சந்தை கூடும் நாளாதலால் நானே சந்தைக்குப் போகலாமென்று எண்ணினேன். ஆனால் எனக்குச் சளி பிடித்திருந்ததால் எந்தக் காரணத்தைக் கொண்டும் வீட்டை விட்டுச் செல்லக்கூடாது என்று என் மனைவி தடுத்து விட்டாள்.

''நீங்கள் போகவேண்டாம். மோசசு அறிவுக் கூர்மை யுடையவன். நல்ல பயனுடைய வகையில் விற்கவும் வாங்கவும் தெரிந்தவன். பேரம் பேசுவதில் தனித் திறமையுடையவன். பேரம் பேசுவதில் பிறரைத் தளர்வடையச் செய்து நல்ல விலையை நிர்ணயிக்கக் கூடியவன்'' என்று தன் மகனைப் பாராட்டிக் கூறினாள்.

எனக்கும் என்னுடைய மகனின் அறிவுக் கூர்மையைப் பற்றி ஓரளவு தெரியுமாதலால் இதைச் செய்வதை அவனிடம் ஒப்படைக்க முன்வந்தேன். மறுநாள் காலை தமக்கைகள் இருவரும் மோசசைச் சந்தைக்கு அனுப்ப வேண்டிய ஏற்பாடுகளில் சுறு சுறுப்பாக ஈடுபட்டிருப்பதைப் பார்த்தேன். அவனுடைய முடியைச் சிறிது கத்தரித்து, இடுப்புப் பட்டையைத் துடைத்து, தொப்பியில் குண்டூசிகளைக் குத்திச் சரி செய்து விட்டனர். அழகு வேலைகள் முடிந்த பின்னர் அவனைக் குதிரைக் குட்டியின்மேல் ஏற்றிவைத்து மனநிறை வடைந்தோம். அவனுக்கு முன் திருப்பி வரும்பொழுது வீட்டிற்கு வேண்டிய பலசரக்கை



மோசக சந்தைக்குப் புறப்படுதல்



வாங்கிக்கொண்டு வருவதற்காக ஒரு சாதிக்காய் மரப் பெட்டியும் ஏற்றப்பட்டது. அவன் மேலணிந்திருந்த பல நிறக் கோட்டு மிகச் சிறியதாய் விட்டது. அது தூர எறிவதற்குத்தான் மிக நல்லது. அவனணிந்திருந்த இடுப்புக் கோட்டாகிய உள்ளணி பச்சையானது. அவனுடைய தலைமுடியைப் பட்டையான கறுப்பு ரிப்பனை வைத்து அவனுடைய தமக்கையர் கட்டி விட்டிருந்தனர். சிறிது தூரம் நாங்கள் அவனைத் தொடர்ந்து சென்று வழியனுப்பி வைத்தோம். அவன் கண்ணை விட்டு மறையும்வரை ''நல்வாய்ப்பு'' ''நல்வாய்ப்பு'' என்று கூவிக்கொண்டே யிருந்தோம்.

அவன் அப்பொழுதுதான் மறைந்திருப்பான். தார்ன்கில்லினுடைய வேலையாள் ஒருவன் வந்து எங்களுக்குக் கிடைக்கப் போகும் நற்பேற்றுக்காகப் பாராட்டினான். அவன் தார்ன்கில் எங்களுடைய பெயர்களைக் குறிப்பிட்டு அதிகமாகப் பாராட்டிக்கொண் டிருப்பதைக் கேட்டதாகச் சொன்னான்.

நற்பேறு தனியாக வருவதில்லை என்று முடிவு செய்து விட்டதுபோலும். அதே குடும்பத்தின் மற்றொரு பணியாள் தொடர்ந்து வந்தான். அவன் கொண்டுவந்த அட்டை மூலம் நகரத்துப் பெண்களிரு வரும் தார்ன்கிலிடமிருந்து எங்களனைவரைப் பற்றியும் மனதுக்குகந்த செய்திகளை அறிந்ததாகவும், பல வகையில் கேட்டு அவர்களிருவரும் முழுமன நிறை வடைந்ததாகவும் அறிந்தோம். இதை அறிந்த என் மனைவி ''பெரிய செல்வாக்குள்ள குடும்பத்தில் நுழைவது மிகக் கடினம் என்பது இப்பொழுது தெரிகின்றது. ஆனால் ஒருவர் ஒருமுறை நுழைந்து

விட்டால், மோசசு கூறுவதுபோல, அதற்குமேல் கவலைப்பட வேண்டாம். பேசாமல் தூங்கப்போகலாம்'' என்றாள். இதை அவள் ஒரு பெரிய வேடிக்கையைக் கூறுவதுபோலக் கூறியதால் என்னுடைய பெண்கள் பெரும் ஒலியுடன் சிரித்தனர். சுருக்கமாக இந்தச் செய்தியைக் கேட்டு அவள் மனநிறைவடைந்து அவளுடைய பையில் கையை விட்டு ஏழு பென்சும் அரை பென்னியும் எடுத்து அந்த வேலையாளுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தாள்.

எங்களைப் பார்க்க வரவேண்டியவர்கள் வரும் நாள் அது. இதற்கு அடுத்து வந்தவர் பர்செல். அவர் சந்தைக்குப் போய்விட்டு வந்திருந்தார். என்னுடைய சிறு பையன்களுக்கு ஒரு பென்னி விலை பெறக்கூடிய ரொட்டியை ஆளுக்கொன்று வாங்கி வந்திருந்தார் அதைத் துண்டு துண்டாகக் கொடுப்பதற்காக என் மனைவி வாங்கி வைத்துக்கொண்டாள். என்னுடைய பெண்களுக்கும் இரண்டு பெட்டிகள் வாங்கிவந்தார். அதில் வாசனைப் பொருள்கள், பொடி, பணம் ஆகிய வைகளைப் போட்டு வைத்துக் கொள்ளலாம். என்னுடைய மனைவிக்கு வழக்கமாகக் கீரியின் தோலினாலாய பணப்பைதான் பிடிக்கும். ஏனென்றால் அது நற்பேற்றைத் தருவது என்று நம்பினாள். இதை இங்குக் கூறுவது தேவையில்லாதது. பர்செல் போன முறை ஒவ்வொரு கூற்றுக்கும் ''முட்டாள்தனம்'' என்று கூறியதால் எங்களுக்குச் சிறிது வருத்தம் இருப்பினும் இன்னும் அவர்மீது இருந்த மதிப்பு போக வில்லை. மேலும் எங்களுடைய மகிழ்ச்சியை அவருக்கு அறிவிக்காமலுமிருக்க முடியவில்லை. அவருடைய அறிவுரையைக் கூறும்படி கேட்டோம். அவர் கூறும் அறிவுரைகளைப் பின்பற்றுவது அரிது. ஆனால் கேட்பதற்கு மட்டும் அனைவரும் தயாராக இருந்தோம். அவர் அந்தப் பெண்களிடமிருந்து வந்த கடிதத்தைப் படித்து விட்டுத் தலையை அசைத்தார். இதைப் போன்றவற்றில் மிகுந்த எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்றார். அவருடைய தன்னம்பிக்கை யின்மை என்னுடைய மனைவிக்குப் பெரிய வருத் தத்தைத் தந்தது.



''உங்களுடைய முடிவு என்னுடைய முடிவுக்கும் என் பெண்களுடைய முடிவுக்கும் மாறாக இருக்கும் என்று நான் எண்ணவில்லை. தேவையான அளவுக்கு மேலேயே எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று கூறுகின்றீர்கள். தம்முடைய அறிவுரைப்படி தானே நடந்து வந்தவர்களிடம்தாம் நாங்கள் அறிவுரை கேட்கிறோம்'' என்று வருத்தத்துடன் கூறினாள் என் மனைவி.

''என்னுடைய நடத்தை எப்படியாவது இருக்கட்டும். அதைப்பற்றி இப்பொழுது கேள்வியில்லை. என்னுடைய அறிவுரையை நானே பயன்படுத்திய தில்லை யென்றாலும் என்னுடைய மனச்சான்றுக்கு ஒப்ப அறிவுரையைப் பயன்படுத்துபவர்க்குத்தான் கூறவேண்டும்'' என்று பர்செல் பதிலளித்தார்.

இந்தப் பதிலுக்குச் சரியான பதில் வந்து நகைச் சுவையாகாது திட்டுதலாக முடிந்து விடும் என்று எனக்குத் தெரிந்ததால் நான் பேச்சை மாற்றிவிட்டேன். சந்தைக்குப் போன மகன் இன்னும் அங்கே என்ன செய்து கொண்டிருக்கிறானோ என்று வியப்படைந்தேன்.

''நம்முடைய மகனைப் பற்றிக் கவலைப்படாதீர்கள்'' என்றாள் என் மனைவி. ''அவனுக்குத் தன்னைத்

பற்றி நன்கு தெரியும். மழைநாளில் கோழி விற்பதைப் போல முட்டாள்தனமாக செயல் செய்வதை நாம் அவனிடமிருந்து பார்க்க முடியாது. அவன் பேரம் பேசி வாங்குவதைப் பார்ப்பவர்கள் அப்படியே ஆச்சரியப்படுவார்கள். அதைப் பற்றி நீங்களெல்லாம் கேட்டுச் சிரிக்கும் வண்ணம் ஒரு கதையைச் சொல்லுகிறேன்.—ஆனால் அதோ மோசசு வருகிறானே. அவன் முதுகில் பெட்டியைச் சுமந்து வருகின்றானே. குதிரையையும் காணவில்லை'' என்று வியப்பாகக் கூறினாள்.

அவள் பேசிக் கொண்டிருந்தபொழுது மோசசு மெதுவாக நடந்து வந்தான். மரப்பெட்டியை வாரினால் தோள்களில் கட்டிக் கால் நடையில் வரும் வணிகனைப் போல வேர்த்து விறுவிறுத்து வந்தான். "வா, மோசசு வா, எங்களுக்குச் சந்தையிலிருந்து என்ன வாங்கிக்கொண்டு வந்திருக்கிறாய்?"

''நான் உங்களுக்கு என்னையேதான் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறேன்" என்று மோசசு கூறினான். மெதுவாகப் பெட்டியை இறக்கி வைத்தான்.

''மோசசு, அது எங்களுக்குத் தெரியும். குதிரை எங்கே?'' என்று கேட்டாள் என் மனைவி.

''நான் அதை மூன்று பவுன் ஐந்து சில்லிங் இரண்டு பென்சுக்கு விற்றுவிட்டேன்.''

''நல்லது செய்தாய். நீ அவ்வளவு விலைக்கு விற்பாய் என்று எனக்குத் தெரியும். நம்மைப் பொறுத்த வரையில் இந்தப் பணம் நல்ல உழைப்பால் பெறுவது ஆகும். சரி, அதை என்னிடம் கொடு'' என்று மகனிடம் கேட்டாள்.



''நான் பணத்தை எடுத்து வரவில்லை. அதை ஒரு பேரத்தில் போட்டுவிட்டேன். அது இதோ இருக்கிறது'' என்று சட்டையிலிருந்து ஒரு பொட்டலத்தை உருவினான்.

''இதோ உள்ளன. ஒரு குரோசு பச்சைக் கண்ணாடிகள். வெள்ளிச் சட்டங்களுடையன. நல்ல தோல் உறைகளும் அனைத்திற்கும் உள்ளன'' என்று காட்டினான்.

''என்ன, ஒரு குரோசு பச்சைக் கண்ணாடிகளா'' என்று அதிர்ச்சியால் கேட்டாள். "குதிரைக் குட்டியை விற்றுவிட்டு ஒன்றுக்கும் பயன் படாத பச்சைக் கண்ணாடிகளையா வாங்கி வந்திருக்கின்றாய்?"

''அம்மா, நீ ஏன் காரணத்தைக் கேட்க மாட்டேன் என்கிறாய். இது ஒரு நல்ல பேரமம்மா. இல்லாவிட்டால் நான் அதை வாங்கிவர மாட்டேன். வெள்ளிச் சட்டங்களை மட்டுமே இதைவிட இரண்டு மடங்கு விலைக்கு விற்று விடலாம்."

''வெள்ளிச் சட்டங்களுக்கு ஒரே ஒரு அத்திப் பழம்தான் கிடைக்கும்'' என்று கூவினாள் என் மனைவி. "வாங்கிய பணத்தில் பாதிப் பணத்துக்குக்கூட விற்காது என்று சத்தியம் செய்வேன்'' என்று ஆத்திரத்துடன் கூவினாள்.

"சட்டங்களை விற்பதைப் பற்றிய வருத்தம் சிறிதுகூட உனக்கு வேண்டாம். அவை ஆறு பென்சுகூட விலை பெறாது. செப்புச் சட்டங்களின் மேல் வெள்ளி முலாம் பூசியிருக்கிறான், அவ்வளவுதான்'' என்றேன் நான்.

011, 3LGH,N



"என்ன, வெள்ளியில்லையா ? சட்டங்கள் வெள்ளி யில்லையா?" என்று மனைவி கேட்டாள்.

"இல்லை, உன்னுடைய வால்கிண்ணத்தைவிட இது ஒன்றும் வெள்ளியில்லை" என்று பதிலளித்தேன்.

"குதிரையை விட்டு விட்டுச் செப்புச் சட்டங்களும் தோல் கூடுகளும் உடைய ஒரு குரோசு பச்சைக் கண்ணாடிகளையா பெற்றிருக்கிறோம்! இந்த முட்டாள் நமக்குச் சுமையாகப் பிறந்து விட்டானே" என்றாள்.

"நீ தவருகப் பேசுகிருய், இவை இப்படியிருக்கும் என்று அவனுக்குத் தெரிந்தே யிருக்காது".

"மேரியன்னையே, இதைப் போய் வாங்கிக் கொண்டு வந்தானே இவனைத் தூக்கில் போடு. என் கையில் கிடைத்தால் அவற்றை நெருப்பில் தூக்கிப் போட்டுவிடுவேன்" என்று கூச்சலிட்டாள்.

"நீ மறுபடியும் தவறு செய்கிருய். அவை செம்பா யிருந்தாலும் நாம் அவற்றை வைத்துக்கொள்வோம். ஒன்றுமில்லாததை விடச் செப்புச் சட்டங்கள் மேல்" என்று கூறி அவளைத் தணிவித்தேன்.

மோசசு சிறிது அவநம்பிக்கையிலிருந்து விடுவிக் கப்பட்டான். இரை தேடிக் கொண்டிருந்த எத்தர் களுக்குத் தான் இரையாக அமைந்து விட்டதை அவன் இப்பொழுது உணர்ந்தான். அவன் ஏமாந்து போன சூழ்நிலையைக் கூறுமாறு கேட்டேன். அவன் குதிரையை விற்றுவிட்டு வேறொன்றை வாங்கத் தேடியிருக்கிறன். அப்பொழுது சாமியாரைப் போல இருந்த மனிதன் ஒருவன் இவனை எதையோ விற்ப தற்கு ஒரு கூடாரத்திற்கு அழைத்துள்ளான்.



N12

"இங்கு நாங்கள் இன்னொரு மனிதனைச் சந்தித் தோம். அவன் நல்ல உடையணிந்திருந்தான். அவன் இந்தப் பொருள்களின்மேல் இருபது பவுன்கள் கடன் வாங்க விரும்புவதாகவும் இல்லையேல் அதில் மூன்றில் ஒரு பங்கு விலைக்கு விற்றுவிட விரும்புவதாகவும் கூறினன். முதலில் என்னை அழைத்துச் சென்றவர் என் நண்பனைப் போல நடித்து இவற்றை வாங்கும் படி தணிந்த குரலில் பேசித் தூண்டினன். இந்த நல்ல வாய்ப்பை இழந்துவிடக் கூடாது என்று சொன்னன். நான் பிளேம்பரோவை அழைத்து வரச் செய்தேன். அவர்களிருவரும் அவரிடமும் என்னிடம் பேசியதைப் போலவே பேசினர். எனவே கடைசியாக நாங்கள் இருவரும் அந்த இரண்டு குரோசையும் வாங்கிக்கொள்ளும்படி செய்துவிட்டனர்" என்று கூறி முடித்தான் மோசசு.

TAMIL NADU ARCHIVES LIBRARY MADRAS
110347

# 13. பொருந்தாத அறிவுரை

நாங்கள் செம்மையான வாழ்க்கையை நடத்தப் பல முயற்சிகள் செய்தோம். ஆனால் ஒவ்வொரு முயற்சியையும் ஏதோ ஓர் எதிர்பாராத குழப்பம் தடுத்துவிடும். ஒவ்வொன்றிலும் என் மனைவியும் மக்களும் ஏமாற்றமடைந்து முயற்சியில் தளர்ந்து காணும்பொழுது நான் அதை வாய்ப்பாகப் பயன் படுத்திக்கொண்டு அவர்களுக்கு நல்லறிவைப் புகட்ட விரும்பினேன்:

"நம்மைவிட நன்றாக வாழ்பவர்களைப் போல நாமும் வாழவேண்டும் என்பதற்காக நாம் செய்யும் ஒவ்வொரு முயற்சியும் எவ்வளவு சிறு பயன் அளிக்கின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள். இதைப் போல ஏழைகளாயிருந்து கொண்டு செல்வர்களைத் தவிர வேறொருவருடனும் பழகக் கூடாது என்று எண்ணுபவர்கள், அவர்கள் வேண்டாம் என்று ஒதுக்குபவர்களால் வெறுக்கப்படுவார்கள். வேண்டும் என்று விரும்பப்படும் செல்வர்களால் தள்ளப்படுவர். ஒத்த உறவு இல்லாத பொருத்தங்களெல்லாம் எப்பொழுதும் தாழ்ந்த நிலையிலுள்ளவர்களுக்குத்தான் இன்னல்களை விளைவிக்கும். செல்வர் இன்பங்களை அனுபவிப்பர். அதன் விளைவாக ஏற்படும் இடையூறுகளை ஏழைகள் தாம் அனுபவிக்க வேண்டும். டிக், நீ இன்று படித்துக் கொண்டிருந்த நீதிக் கதையை இங்குள்ளவர்கள் நலனுக்காகச் சொல்லு பார்ப்போம்" என்று அவனைக் கேட்டேன்.

டிக் கதை சொல்லத் தொடங்கினான்: "ஒரு காலத்தில் ஒரு நெட்டையான அரக்கனும் ஒரு குட்டையான அரக்கனும் இருந்தனர். அவர்கள்



இருவரும் ஒருவரை யொருவர் எந்தவித இன்னலிலும் கைவிடுவதில்லை என்று முடிவு செய்து கொண்டனர். பெருஞ்செயல்கள் செய்வதற்காக இருவரும் புறப்பட்டனர். அவர்கள் முதன்முதலில் இரண்டு அராபியர்களுடன் சண்டையிட்டனர். குட்டையன் மிக்க வீரத்துடன் ஒருவருடன் சண்டையிட்டு அவனை அடித்தான். ஆனால் அது அந்த அரேபியனை ஒன்றும் செய்யவில்லை. அவன் தன் வாளை யுருவிக் குட்டையனுடைய ஒரு கையை வெட்டிவிட்டான். குட்டையன் வலியுடன் பயந்து ஓட ஆரம்பித்தான். இதற்குள் நெட்டையன் குட்டையனுடைய உதவிக்கு வந்து இரண்டு அராபியர்களையும் கொன்றுவிட்டான். குட்டையன் தன் சினத்தால் தன் கையை வெட்டிய அராபியன் செத்த பிறகும் அவன் தலையை வெட்டிப் பழிக்குப் பழி தீர்த்துக் கொண்டான்.

அவர்கள் தொடர்ந்து பயணத்தை மேற்கொண்டனர். அடுத்தமுறை ஒரு பெண்ணைத் தூக்கிக்கொண்டு ஓடிய குதிரைமுகக் கூளியர் மூவருடன் சண்டையிட்டனர். இந்தமுறை குட்டையன் முன்னைப்போல் கடுமையாகத் தாக்காவிடினும் ஒருவனை ஓங்கி ஒருமுறை அடித்தான். ஆனால் திரும்பிவந்த தாக்குதல் குட்டையனுடைய ஒரு கண்ணைப் பறித்துக்கொண்டு போய் விட்டது. நெட்டையன் உதவிக்கு வந்து சண்டை போட்டதில் மூவரும் ஓடிவிட்டனர். இல்லையேல் நெட்டையன் அவர்களைக் கொன்றிருப்பான்.

அவர்கள் இந்த வெற்றிக்காக மகிழ்ந்தனர். அவர்களிடமிருந்து காப்பாற்றப்பட்ட பெண் நெட்டையன் மீது காதல் கொண்டு அவனைத் திருமணம் செய்து

கொண்டாள். அவர்கள் மேலும் தொடர்ந்து சென்றனர். மூன்றாம் முறையாகத் திருடர் கூட்டத்தைச் சந்தித்தனர். முதன் முறையாக இம்முறை நெட்டையன் முதலில் சென்று சண்டையிட்டான். அதற்காகக் குள்ளன் வெகுதூரம் தள்ளி நிற்கவில்லை. சண்டை முற்றி நெடுநேரம் நடந்தது. குட்டையன் இரண்டு முறை சாகப்பார்த்தான். இறுதியாக இந்த இருவர்க்கே வெற்றி கிடைத்தது. ஆனால் குட்டையன் ஒரு காலை இழந்துவிட்டான். எனவே இப்பொழுது குட்டையனுக்கு ஒரு கை, ஒரு கண், ஒரு கால் எல்லாம் போய்விட்டன. ஆனால் நெட்டையனுக்கு ஒரு புண்ணும் ஏற்படவில்லை. நெட்டையன் குட்டையனிடம் கூறினான்: 'அருமை நண்பனே, இதுவரை மிக நன்றாக இருந்தது. இன்னும் ஒரு வெற்றியடைந்துவிடுவோம். நமக்கு எப்பொழுதுமே நிலைக்கக்கூடிய புகழ் கிட்டிவிடும்' என்றான். 'இல்லை' என்று கத்தினான் குள்ளன். 'அதெல்லாம் முடியாது. இனிமேல் என்னால் சண்டைபோட முடியாது. ஒவ்வொரு சண்டையிலும் உனக்குத்தான் வெற்றியும் பொருளும் கிடைக்கின்றன. எனக்கு அடியும் வெட்டுந்தான் கிடைக்கின்றன' என்று கூறி மறுத்துவிட்டான்.''

நான் இந்தக் கதையின் நீதியைக் கூறி விளக்க எண்ணியபொழுது எங்களனைவருடைய கவனமும் என்னுடைய மனைவிக்கும் பர்செல்லுக்கும் இடையில் எழுந்த பூசலில் திரும்பியது. அவர்கள் என்னுடைய பெண்கள் நகருக்குச் செல்வதைப் பற்றி வாதித்துக் கொண்டிருந்தனர். என் மனைவி விடாப்பிடியாக இதனால் விளையும் நன்மைகளைப் பற்றி எடுத்துக் கூறினாள். இதற்கு மாறாக, பர்செல் இதனால் விளையும்



தீமைகளை எடுத்துக் கூறினார். நான் நடுநிலையாக நின்றேன். அவர் இப்பொழுது கூறிய தடைகள் காலையில் கூறியவற்றின் இரண்டாம் பகுதிபோல் அமைந்திருந்தன. இவ்வுரைகளும் காலையில் வரவேற்கப்பட்டது போல் இகழ்ச்சியாகவே வரவேற்கப்பட்டன. பேச்சு முற்றியது. டெபோரா சிறந்த காரணங்களைக் காட்டுவதற்குப் பதிலாக உரக்கப் பேசினாள். இறுதியாகக் கூச்சலிட்டதால் ஏற்பட்ட தோல்வியில் அமைதியானாள். அவளுடைய வாய்ப்பேச்சு இவ்வாறு முடிந்ததைக் கண்டு நாங்கள் அனைவரும் மிக வருத்தப்பட்டோம். ஒவ்வொருவரும் அறிவுரை கூறும்பொழுது சில மறைவான காரணங்களை வைத்துக்கொண்டு கூறுகிறார்கள் என்று சொன்னாள்.

பர்செல் பெரும் மனஅமைதியுடன் ''மறைவான காரணங்கள் என்று நீங்கள் சொன்னீர்களே அது சரி. என்னிடமும் மறைவான காரணங்களிருக்கின்றன. ஆனால் நான் அவற்றைச் சொல்ல விரும்பவில்லை. ஏனென்றால் வெளிப்படையாக நான் கேட்கும் காரணங்களுக்கே நீங்கள் பதில் சொல்ல முடியவில்லையே. நான் இங்கு அடிக்கடி வருவது உங்களுக்கு இடையூறாக உள்ளது என்பது எனக்குத் தெரியும். இப்பொழுது நான் போய் வருகிறேன். இன்னும் ஒரே ஒரு முறை வருவேன். இந்த ஊரை விட்டே போகும்பொழுது வந்து உங்களிடம் விடைபெற்றுச் செல்வேன்,'' என்று கூறிவிட்டுத் தம் தொப்பியை எடுத்துக்கொண்டு புறப்பட்டுவிட்டார். அவருடைய பதற்றத்தைக் குறைத்து அவரைச் செல்லவிடாது தடுப்பதற்காகச் சோபியா எடுத்தமுயற்சிகள் புலனளிக்கவில்லை.

அவர் சென்றபின் சில நிமிடங்களுக்கு நாங்கள் ஒருவரை யொருவர் குழப்பத்துடன் பார்த்துக் கொண்டோம். தான்தான் காரணமென்பது தெரிந்திருந்த என் மனைவி தன்னுடைய வருத்தத்தை மறைப்பதற்காக வாயளவில் சிரித்தாள். நான் அதைக் குறையாகவும் அவளுடைய குற்றமாகவும் எண்ணினேன்.

"என்ன, இப்படித்தான் வீட்டுக்கு வந்தவர்களுடன் நடந்து கொள்வதா? இப்படித்தான் அவர்கள் அன்புக்கு நன்றி செலுத்துவதா? உறுதியாகச் சொல்லுகிறேன். நீ கூறிய சொற்கள் மிகமிகக் கொடியவை. எனக்குப் பெரும் வருத்தத்தை உண்டு பண்ணிவிட்டன. இதுவரை நீ கூறுதவை" என்று சினத்துடன் கூவினேன்.

"அவர் மட்டும் எனக்கு எதற்குக் கோபமூட்டினர்? அவருடைய நினைப்பெல்லாம் எனக்கு நன்ருகத் தெரியும். அவர் என் பெண்களை நகரத்திற்குச் செல்லாது தடுத்துவிட்டால் அவர் இங்கு வந்து அடிக்கடி என்னுடைய சிறிய பெண்ணிடம் பேசி மகிழலாம் என்று நினைக்கிருர். எது வேண்டுமானுலும் நடக்கட்டும். அவள் இவரைப் போலக் கீழ்நிலையில் உள்ளவர்களைவிட வேறு எவரையாவது தேர்ந்து எடுக்கலாம்" என்று என் மனைவி பதிலளித்தாள்.

"அவர் கீழ்நிலையில் வாழ்கிருரா? அவருடைய நற்பண்பை நாம் சில சமயங்களில் தவருக எண்ணுகிறோம். அவர் சில சமயங்களில் சிறந்த பெருமகனுக விளங்குவது எனக்குத் தெரியும். சோபியா, நீ சொல்லு, எப்பொழுதாவது அவர் உன்னிடம் தம் விருப்பத்தைத் தெரிவித்திருக்கிருரா?" என்று கேட்டேன்.



"இல்லை அப்பா. அவருடைய பேச்சு எப்பொழுதும் நல்லறிவும், அடக்கமும் நிறைந்தே விளங்கின. பிறவற்றிலும் அப்படியில்லை. ஏழைபோல் தோற்றமளிக்கும் ஒரு மனிதனின் உண்மையான மதிப்பைக் காணக்கூடிய ஒரு பெண்ணைக்கூட இதுவரை தாம் சந்திக்காததாக அவர் ஒருமுறை என்னிடம் கூறியது நினைவிருக்கிறது."

"பார்த்தாயா சோபியா, நல்வாய்ப்பு இல்லாதவர்கள் இப்படித்தான் இருப்பார்கள். இதைப்போன்ற மனிதர்களை எடைபோட உனக்குத் தெரியுமென எண்ணுகின்றேன். தனக்குத்தானே சிக்கனமாக உள்ள ஒருவனிடமிருந்து இன்பத்தை எதிர்பார்ப்பது பைத்தியக்காரத்தனம். உன்னுடைய அம்மாவும் நானும் உனக்கு நல்ல வழிகளை வகுத்துள்ளோம். அடுத்தகுளிர்ப் பருவத்தில் நீ பெரும்பாலும் நகரிலேயே வாழநேரிடும். அது நீ இன்னும் நல்ல முறையில் உனக்கு வேண்டியவரைத் தேர்ந்தெடுப்பதற்கு வாய்ப்புக்களை அளிக்கும்" என்று கூறினேன்.

இதைக் கேட்டுச் சோபியா என்ன நினைத்தாள் என்பதை என்னுல் நிர்ணயிக்க முடியவில்லை.

## 14 தொடர்ந்த துன்பங்கள்

என்னுடைய பெண்கள் நகரத்திற்குச் செல்லும் பயணம் உறுதி செய்யப்பட்டது. இவர்களிருவரையும் தார்ன்கில் கவனித்துக் கொள்ளுவதாகவும், இவர்களுடைய நடவடிக்கைகளைக் கடிதத்தின் மூலம் அறிவிப்பதாகவும் வாக்குக் கொடுத்தார். இவ்விருவரும் எதிர் பார்த்தவைகளுக்கு இணை செய்யும் வகையில் தோற்றமும் உயர்ந்ததாக இருக்கவேண்டுமென்பது இன்றியமையாததாயிற்று. இதற்குச் செலவு செய்யாமல் முடியாது. எனவே பணத்தைப் பெறுவதற்குரிய எளிய வகைகள் எவை எவை என்பதை நாங்கள் அனைவரும் கூடிப் பேசினோம். சுருக்கமாகச் சொன்னால் எதை எதை மிக எளிதாக விற்றுவிடலாம் என்றே கூடிப் பேசினோம்.

இந்த ஆழ்ந்த யோசனை முடிவுற்றது. எங்களிட மிருந்த ஒரே ஒரு குதிரை அதனுடைய இணை இல்லாததால் உழுவதற்குப் பயன்படாது. ஒரு கண் பார்வையிழந்து விட்டதால் தெருக்களில் பயணம் செய்வதற்கும் பயன்படாது. எனவே இந்தக் குதிரையை அடுத்துக் கூடவிருக்கும் சந்தையில் விற்று விடலாம் என்று முடிவு செய்தோம். மீண்டும் ஏதாவது தவறு நடப்பதைத் தவிர்க்க இம்முறை நானே சந்தைக்குச் செல்வது என்பதும் முடிவாயிற்று. என்னுடைய வாழ்நாளிலேயே நான் முதன்முதல் செய்யப்போகிற வணிகத் தொடர்பாக இது இருப்பினும் நான் இதில் எனக்குப் புகழைத் தேடிக் கொள்வேன் என்பதில் ஐயமில்லை. ஒரு மனிதன் தன்னுடைய திறமையைப்



பற்றித் தானே எண்ணுவதை அவன் தொடர்பு வைத்துள்ள கூட்டத்தினருடைய திறமையிலிருந்து எடை போட்டுவிடலாம். நான் பெரும்பாலும் என்னுடைய குடும்பத்தினரிடையே மட்டும் பழகியிருந்ததால் உலக அறிவைப்பற்றித் தவறான கருத்துக்கள் எதுவும் நான் கொள்ள வில்லை. மறுநாள் காலை நான் வீட்டைவிட்டுப் புறப்பட்டபொழுது வாசலைத் தாண்டிச் சில அடிகள் கடந்த பின்னர் என் மனைவி என்னை மீண்டும் அழைத்து எனக்கு அறிவுரைகள் புகன்று ஏமாறாதிருக்குமாறு கூறினாள்.

நான் சந்தையை யடைந்த பின்னர்க் குதிரைகளை விற்கும் முறைப்படி என்னுடைய குதிரையையும் முன்னும் பின்னும் நடக்கச் செய்து வருபவர்களுக்குக் காட்டினேன். சிறிது நேரம் இதை விலைக்குக் கேட்பவர் யாரும் வரவில்லை. ஒரு வணிகர் வந்தார். குதிரையைச் சுற்றிவந்து நெடுநேரம் பார்த்த பின்னர் அதற்கு ஒரு கண் குருடு என்பதைக் கண்டுபிடித்து ஒன்றும் பேசாது சென்றுவிட்டார். இரண்டாவது வந்தவர் முட்டியில் இருக்கும் வீக்கத்தைக் கண்டு நன்கொடையாகக் கொடுத்தால் கூட அதை வீட்டிற்கு ஓட்டிச் செல்வது கடினம் என்று கூறிவிட்டார். மூன்றாமவர் அதன் கட்டியொன்றைப் பார்த்துவிட்டு ஒரு காசுக்கும் பெறாது என்று கூறிச் சென்றார். நாலாவது ஆள் இக் குதிரைக்கு அழுகிய முட்டைகளை உட்கொண்டதால் ஏற்பட்ட நோய் இருப்பதாகக் கூறினார். ஐந்தாவது பேர்வழி குருடு, கட்டி, வீக்கம் முதலிய உடைய இக்குதிரையை இச் சந்தையில் வைத்து என்ன செய்ய முடியும்? நாய் இறைச்சிக்காக இதை வெட்டி விடுவது தான் இதற்குத் தகுதி என்று கூறிவிட்டார். இதற்குள்

என்னுடைய குதிரையை நானே வெறுக்குமளவுக்கு வந்துவிட்டேன். யாராவது இதைப் பார்ப்பதற்கு நெருங்கினாலும் வெட்கப் பட்டேன். ஒவ்வொருவர் கூறியது முழுவதையும் நான் நம்பாவிட்டாலும் பார்த்துச் சென்றவர்கள் அதிகரிக்க அதிகரிக்க நான் நம்பவேண்டியதாயிற்று.

இந்த அவமானமான சூழ்நிலையில் இருந்த பொழுது என்னுடைய பழைய நண்பர், கோயிற்பணி செய்பவர், என்னிடம் வந்து என் கையைக் குலுக்கினார். அவர் சந்தையில் ஏதோ வாங்குவதற்கு வந்திருக்கிறார். அடுத்திருந்த விடுதியில் சென்று ஏதாவது அருந்துவோம் என்று அழைத்துச் சென்றார். நானும் அவருடைய அழைப்பை ஏற்றுக்கொண்டேன். விடுதியுள் நுழைந்து கடைசியில் இருந்த அறையினுள் நுழைந்தோம்.

அங்கு ஒரேஒரு வயதான மனிதர் மட்டும் உட்கார்ந்திருந்தார். பெரிய புத்தகமொன்றைப் படித்துக் கொண்டிருந்தார். என் வாழ்க்கையிலேயே என் உள்ளத்தைக் கவரக்கூடிய இவர் உருவத்தைப்போலப் பார்த்ததில்லை. நரைத்த முடி அவருடைய உச்சியை மறைத்துக் கொண்டிருந்தது. வலிவுள்ள முதுமை அவருடைய நல்ல உடல் நலமும் அறவாழ்வும் தந்த பயன் போலும். எனினும் அவர் அங்கிருந்தது எங்களுடைய பேச்சைத் தடுக்கவில்லை. எங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட பல திருப்பங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். அப்பொழுது அவ்வறையினுள் நுழைந்த ஓர் இளைஞன்பால் எங்கள் கவனம் திரும்பியது. அவன் அப்பெரியவரிடம் சென்று மிகப் பணிவுடன் மெதுவாக ஏதோ கூறினான்.



அவர் "இதற்கெல்லாம் வருந்தி மன்னிப்புக் கேட்காதே மகனே. நம்முடைய மனித இனத்திற்கு நல்லதைச் செய்ய வேண்டியது நம் கடமையாகும். இதைப் பெற்றுக்கொள். இன்னும் நிறைய இல்லையே என்று வருந்துகின்றேன். ஆனால் உன்னுடைய வருத்தத்தை இந்த ஐந்து பவுன்கள் போக்கிவிடும். நீ எப்பொழுதும் வரவேற்கப்படுவாய்" என்று கூறினார். அந்த இளைஞன் நன்றியைக் காட்டும் வகையில் கண்ணீரைப் பெருக்கினான். இருந்தாலும் அவனுடைய நன்றியுணர்ச்சி என்னுடையதோடு எப்பொழுதும் ஒப்பாகாது. நானாயிருந்தால் அப்பெரிய மனிதரைக் கட்டித் தழுவி என் கைகளால் தூக்கி மகிழ்ந்திருப்பேன். அவருடைய அருள்தன்மை அவ்வளவு என்னை மகிழ்வித்தது.

அப் பெரியவர் படிக்க ஆரம்பித்தார். நாங்கள் எங்களுடைய உரையாடலைத் தொடர்ந்தோம். சிறிது நேரத்திற்குப் பிறகு தமக்கு ஏதோ வேலையிருக்கிறது என்றும் விரைவில் திரும்பி வந்துவிடுவதாகவும், மேலும், டாக்டர் பிரிம்ரோசுடன் எவ்வளவு நேரம் கழிக்க முடியுமோ அவ்வளவு நேரம் கழிக்க விரும்புவதாகவும் கூறி என் நண்பர் விடைபெற்றுக் கொண்டார். அப் பெரியவர் என் பெயர் கூறப்படுவதைக் கேட்டுச் சிறிது நேரம் என்னைக் கூர்ந்து பார்த்தார். என்னுடைய நண்பர் சென்றபின் மிக்க மரியாதையுடன் என்னிடம் வந்து கோயிற் பணியின் பாதுகாப்பாளரும் ஒரேஒரு முறைதான் மணஞ்செய்து கொள்ள வேண்டுமென்று தீவிரமாகப் பேசுபவருமான பிரிம்ரோசு என்பவர்க்கும் எனக்கும் ஏதாவது உறவு உண்டா என்று கேட்டார். என்னுடைய வாழ்க்கை

யிலேயே இதைப் போல் என் உள்ளம் என்றும் மகிழ்ச்சியால் நிறைந்ததில்லை.

"ஐயா, நீங்கள் அந்த இளைஞருக்கு அளித்த கொடையைக் கண்டே நான் வியந்தேன். இப்பொழுது நீங்கள் மிகப் பெரியவராகத் தோன்றுகிறீர்கள். நீங்கள் பெரிதும் புகழ்ந்த டாக்டர் பிரிம்ரோசு உங்கள் முன்தான் நின்று கொண்டிருக்கிறார். இக்காலத்து இரண்டாம் முறைத் திருமணத்தை எதிர்த்து நீண்ட நாட்களாகப் போராடி வெற்றி காணாத நல்வாய்ப்பற்ற மனிதரைத்தான். நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்."

வியப்பால் தாக்குண்ட அவர் "ஐயா, உங்களிடம் மிக நெருங்கிப் பழகியவர்போல் நடந்து விட்டேன். தயவு செய்து நீங்கள் என்னுடைய ஆவலாலெழுந்த கேள்விகளை மன்னிக்க வேண்டும்." "ஐயா, நீங்கள் அதிகமாகப் பழகியவர்போல் நடந்ததால் நான் வெறுப்படையவில்லை. என்னுடைய நட்பை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்" என்று அவருடைய கைகளைப் பற்றிக் கொண்டு கூறினேன். "உங்களுடைய நட்பை மிக்க நன்றியுடன் ஏற்றுக்கொள்கிறேன். நீங்கள் சமயக் கொள்கைகளைத் தவறாது கடைப்பிடிக்கும் அசைக்க முடியாத தூண். மேலும் என்னுடைய கருத்து—", நான் இங்கே குறுக்கிட்டு அவர் கூறவிரும்பியதைக் கூறவிடாது தடுத்தேன். என்னால் அவருடைய புகழுரைகளைத் தாங்கமுடியும். ஏனென்றால் நான் ஒரு நூலாசிரியர். இருப்பினும் என்னுடைய அடக்கம் இதற்குமேல் அனுமதிக்கவில்லை.



முதியவரும் பாதிரியாரும்

நாங்கள் பல பொருள்களைப் பற்றிப் பேசினோம். முதலில் அவர் மிகவும் படித்தவர் என்பதைவிட என் கொள்கைகளில் மிகவும் ஈடுபாடுடையவர் என்று நினைத்தேன். சாதாரண கொள்கைகளைப் பயனற்றவை என்று கருதுபவராக எண்ணினேன். இது எந்த விதத்திலும் நான் அவர்மீது கொண்டிருந்த மதிப்பைக் குறைக்கவில்லை. ஏனெனில் நானும் தனிப்பட்ட முறையில் இவ்வாறு கருதிவரலானேன். பொதுவாக உலகமே குறைகூறும் வகையில் கொள்கைகளைப் பின் பற்றுது மனிதனுடைய எண்ணப் போக்குக்குத் தக்கவாறு நடக்கத் தொடங்கிவிட்டது என்று எண்ண லானேன்.

"ஏன் ஐயா, இந்த உலகம் தோன்றி இப்பொழுது முதுமையையும் அடைந்துவிட்டது. இன்னும் இந்த உலகம் எப்படி ஆக்கப்பெற்றது என்பது எல்லாக் காலத்துத் தத்துவ இயலறிஞர்களையும் திகைக்க வைத்திருக்கின்றது. உலகின் தோற்றத்தைப் பற்றி அவர்கள் எவ்வளவு குழப்பமான கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். சேங்கோனியாதன், மனெதோ, பெரோசசு, ஒசிலசு லுகானசு போன்ற அறிஞர்களனைவரும் வீண் முயற்சி செய்தனர். இறுதியில் கூறிய இரு அறிஞர்களும் உலகிலுள்ள பொருள்களனைத்திற்கும் முதலோ முடிவோ எதுவுமே கிடையாது என்று கூறியுள்ளனர். நெபுசாடன் அரசர் காலத்தில் வாழ்ந்தமனெதோ கூட புத்தகங்கள் என்றும் உலகிற்கு அறிவுறுத்தாது என்று கூறியுள்ளார்.

எனவே அவர் தம் முயற்சியைக் கண்டுபிடிப் பதில்—நான் எடுத்த பொருளைவிட்டு வேறு திசை



யில் சென்றுவிட்டேனென்று எண்ணுகின்றேன். உண்மையிலேயே அவர் செய்தது அதுதான். எனக்குக்கூட அவர் எடுத்துக்கொண்ட பொருளுக்கும் உலகத்தின் தோற்றத்திற்கும் என்ன தொடர்பு என்று புரியவில்லை. ஆனால் அவர் கூறியது அவர் பெரும் அறிஞர் என்பதை மட்டும் தெளிவாக எடுத்துக் காட்டிற்று. இது அவர்மேல் எனக்கிருந்த மதிப்பை இன்னும் அதிகப்படுத்தியது. எனவே அவருடைய முழு அறிவுத் திறனையும் சோதிக்க விரும்பினேன். ஆனால் அதற்கு அவர் இடங்கொடுக்கவில்லை. அவருடைய கூற்றில் நான் ஏதாவது தவற்றைக் கண்டுபிடித்துக் கேள்வி கேட்க எண்ணுகையில் அவர் புன்னகை புரிவார். தலையை மெதுவாக ஆட்டுவார். ஒன்றும் சொல்லமாட்டார். அதனால் இது பதில் சொல்வதற்குத் தகுதியுடையது என்று நினைத்தால் நிறையச் சொல்லுவார் என்று எண்ணினேன்.

இவ்வாறு பழமையைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்த நாங்கள் சந்தைக்கு இருவரும் வந்த காரணங்களைப் பற்றிப் பேசினோம். நான் ஒரு குதிரையை விற்பதற்காக வந்திருப்பதாகக் கூறினேன். அவர் தம்முடைய குடிமகனொருவற்கு ஒரு குதிரையை வாங்க வந்திருந்தார். என்னுடைய குதிரை கொண்டுவரப் பட்டது. உடனே பேரம் பேசி முடித்தோம். இப்பொழுது பணத்தைத் தருவதைத் தவிர வேறொன்றுமில்லை.

எனவே அவருடைய பையிலிருந்து முப்பது பவுன் நோட்டு ஒன்றை உருவினார். சில்லறையைக் கொடுக்கும்படி கூறினார். என்னிடம் சில்லறை இல்லை.

ததால் நான் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் பணியாளை அழைத்தார். அவன் மிக்க பணிவுடன் வந்து நின்றான். "ஆப்ரகாம்! போய்ச் சில்லறை மாற்றிக்கொண்டு வா" என்று நோட்டை அவனிடம் கொடுத்தார். அவன் சில்லறை மாற்றச் சென்றிருந்த பொழுது வெள்ளி மிகவும் அரிதாகக் கிடைப்பதைப் பற்றி ஒரு சொற்பொழிவே ஆற்றிவிட்டார். நான் தங்கம் கிடைக்காததைப் பற்றிக் கூறினேன். ஆப்ரகாம் திரும்பி வந்து சந்தை முழுவதும் சுற்றிவிட்டதாகவும் எங்கும் சில்லறை கிடைக்கவில்லை என்றும் கூறினான். இது எங்களிருவர்க்கும் பெரும் ஏமாற்றத்தை அளித்தது. அந்த முதியவர் சிறிது நேரம் கழித்து எங்களூரில் வாழ்ந்துவந்த சாலமோன் பிளேம்பரோவைத் தெரியுமா என்று கேட்டார். என்னுடைய அடுத்த வீட்டில்தான் அவர் வசிக்கிறார் என்று கூறினேன்.

"அப்படியானால் நாம் பேரம் பேசலாம். நான் ஒரு பண முறியைக் கொடுக்கிறேன். அதைப் பார்த்ததும் அவர் உங்களுக்குப் பணத்தைக் கொடுத்து விடுவார். அந்த ஐந்து கல் சுற்றளவில் அவரைப் போல வேறு பணக்காரர் கிடையாது. நாங்கள் இருவரும் பல ஆண்டுகளாக நெருங்கிப் பழகியுள்ளோம். தாண்டிக் குதிக்கும் பந்தயத்தில் நான் அவரை எப்பொழுதும் தோற்கடித்து விடுவேன்." என்னுடைய பக்கத்து வீட்டுக்காரர்மேல் கொடுக்கப்பட்ட பண முறியும் பணமாகக் கொடுக்கும் தொகையும் எனக்கு ஒன்றுதான். பணமுறியில் கையெழுத்திட்டு என்னிடம் கொடுத்தார். அவர் அந்தப் பணியாளுடனும் குதிரையுடனும் மகிழ்வுடன் சென்றுவிட்டார்.



சிறு இடைவேளைக்குப் பிறகு நடந்தவற்றை எண்ணிப் பார்த்தபொழுது முன்பின்னறியாத ஒருவரிடமிருந்து பணமுறியை வாங்கி விட்டதில் தவறிழைத்து விட்டேன் என்பதை யுணர்ந்தேன். உடனே அவரைத் தொடர்ந்து சென்று பணமுறியை அவரிடம் கொடுத்துவிட்டுக் குதிரையைத் திரும்பப் பெற்றுக் கொள்ள முடிவு செய்தேன். ஆனால் நான் இதை நினைக்கும்பொழுது வெகுநேரமாகி விட்டது. எனவே வீட்டை நோக்கி நடந்தேன். விரைவாக அந்தப் பண முறியைக் காட்டிப் பணத்தை என் பக்கத்து வீட்டுக்காரரிடமிருந்து வாங்கிவிட வேண்டுமென்று நடந்தேன்.

பக்கத்து வீட்டுக்காரர் வாசலில் நின்று புகைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். நான் அப் பண முறியை அவரிடம் கொடுத்தேன். அவர் அதை இரு முறை புரட்டிப்புரட்டிப் பார்த்தார். "பெயரைப் படிக்க முடியும் என்று எண்ணுகிறேன். எபிரேம் சென்கின்சன்" என்று பெயரைக் கூறினேன்.

"ஆமாம். பெயர் தெளிவாகத்தான் எழுதப்பட்டுள்ளது. அந்த மனிதரைக் கூட எனக்குத் தெரியும். —இந்த உலகிலேயே பெரிய அயோக்கியன். இதே கயவன்தான் எங்களிடம் கண்ணாடிச் சட்டங்களை விற்றவன். அவன் நரைத்த முடியுடன், சட்டைப் பைகளுக்கு மடிப்பு இல்லாது பெரிய மனிதனைப்போலத் தோன்றினான் இல்லையா? அவன் கிரேக்க அறிஞர்களைப் பற்றியும் உலகின் தோற்றத்தைப் பற்றியும் நெடுநேரம் பேசினானில்லையா?"

இதற்கு என்னுடைய உறுமலின் மூலம் பதிலைத் தெரிவித்தேன்.

"ஊம். இவ்வுலகிலேயே அவனுக்கு ஒன்றே ஒன்றுதான் தெரியும். அதை எந்த அறிஞரைக் கண்டா லும் பேசித் தீர்த்து விடுகிருன். எனக்கு அந்தக் கயவனைத் தெரியும். இன்னும் பிடிக்கத்தான் முடிய வில்லை" என்று கூறி முடித்தார்.

நான் போதுமான அளவு அவமானமடைந்திருந்தேன். என்னுடைய மனைவியையும் பெண்களையும் எப்படிப் பார்ப்பது என்பதுதான் பெரிய போராட்டமாக இருந்தது. நான் வீட்டிற்குச் செல்லும்பொழுது அச்சப்பட்டதைப் போலப் பள்ளி மாணவன்கூட விடுமுறை பெருது மீண்டும் பள்ளிக்குச் செல்லும் பொழுது தலைமையாசிரியருக்கு அஞ்சியிருக்கமாட்டான். எப்படியும் நான் அவர்களுடைய சினத்தைத் தாங்கிக் கொள்ள முடிவு செய்துவிட்டேன்.

ஆனல் நான் வீட்டை அடைந்த பொழுது அவர்கள் எந்த விதத்திலும் என்னுடன் சண்டையிடத் தயாரில்லை என்பதைக் கண்டேன். என்னுடைய மனைவியும் பெண்களும் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தனர். அன்று அங்கு திரு. தார்ன்கில் வந்து என்னுடைய பெண்கள் நகருக்குச் செல்லும் பயணம் தடைபட்டுவிட்டது என்று தெரிவித்திருக்கிருர். நகரத்துப் பெண்கள் இருவரும் எங்களைப்பற்றி எங்கள் மீது பொருமை கொண்ட யாரோ கூறிய செய்திகளைக் கேட்டுவிட்டு என்னுடைய பெண்களை அழைத்துச் செல்லாது இலண்டனுக்குச் சென்று விட்டனர். தவருன செய்திகளை யார் கூறியது? எதற்காகக் கூறினர் என்று தமக்குத் தெரியாது என்று அவர் கூறினர். அவர்கள் எப்படியிருப்பினும் தம்முடைய



நட்பும் ஆதரவும் எங்களுடைய குடும்பத்திற்கு எப்பொழுதும் உண்டு என்று உறுதி கூறினர். எனவே அவர்களுடைய கவலையில் என்னுடைய ஏமாற்றத்தைப் பெரிதாக அவர்கள் எண்ணவில்லை. எங்களுக்குக் குழப்பத்தை விளைவித்ததெல்லாம் குற்றமற்ற எங்கள் குடும்பத்தைப் பற்றித் தவருன செய்திகளை அறிவித்தவர் யாரென்பதுதான்.

# 15. எல்லாம் அறிந்தவரின் தவறு

அன்று மாலையும் மறுநாள் ஒரு பகுதியும் எங்களுடைய பகைவர் யார் என்பதைக் கண்டுபிடிக்கும் பயனற்ற முயற்சிகளிலேயே ஈடுபடுத்தப் பட்டன. சுற்றுப்புறத்திலிருந்த குடும்பங்களில் ஒன்றாவது எங்களுடைய ஐயத்திலிருந்து விடுபடவில்லை. எங்களுள் ஒவ்வொருவரும் எங்களுக்குத் தெரிந்த காரணங்களை வைத்திருந்தோம். நாங்கள் இத்தகைய குழப்பத்தில் இருக்கையில் வெளியே விளையாடிக் கொண்டிருந்த எங்கள் சிறுவர்களில் ஒருவன், தான் புல்வெளியில் கண்டெடுத்த கடிதக் கூட்டை எடுத்து வந்தான். இது திரு. பர்செல்லுக்குச் சொந்தமானது என்பதை விரைவாகக் கண்டுபிடித்தோம். ஏனெனில் அவர் இதை வைத்திருப்பதைப் பார்த்திருக்கிறோம். அதை ஆராய்ந்து பார்க்கையில் பல பொருள்களைப் பற்றிய குறிப்புகள் அதில் காணப்பட்டன. ஆனால் எங்களுடைய கவனம் முழுவதையும் ஈர்த்தது ஓர் ஒட்டப் பட்ட கடிதம். அதன் மேல் 'தார்ன்கில் மாளிகையிலுள்ள பெண்களுக்கு அனுப்பவேண்டிய கடிதத்தின் நகல்' என்று எழுதப்பட்டிருந்தது. எங்களுக்கு உடனே அவர்தான் எங்களைப் பற்றிய தவறான செய்தியைக் கொடுத்தவர் என்று தோன்றிற்று. அக்கடிதத்தைத் திறந்து பார்க்கலாமா வேண்டாமா என்று சிந்தித்தோம். நான் திறக்க வேண்டாமென்றேன். சோபியா திறக்க வேண்டுமென்றாள். இவ்வுலகிலேயே இதைப் போன்ற தவறான செய்திகளைப் பரப்புபவர் போல அவர் சிறு தவறு கூடச் செய்யமாட்டார் என்று



அவள் உறுதியாக நம்பியதால் அதை உடனே திறந்து படிக்க வேண்டுமென்றாள். குடும்பத்திலிருந்த பிறரும் அவள் கூறியதை வழிமொழிந்தனர். நான் அவர்களுடைய கூட்டு வேண்டுகோட்கிணங்கக் கீழ்வருமாறு படித்தேன் :—

"அம்மையீர்—இதைக் கொண்டுவருபவன் இக்கடிதம் யாரிடமிருந்து வருகின்றதோ அவரைப் பற்றி உங்களுடைய மனநிறைவுக்கேற்ற வகையில் கூறுவான். அவர் அறியாமையின் நண்பர். அதன் தூய்மை கெடாது பாதுகாக்க விரும்புபவர் என்பதையாவது கூறுவான். நீங்கள் நகரத்திற்கு இரு பெண்களை அழைத்துச் செல்வதாக எனக்குத் தெரியவருகிறது. அவர்களுடன் பழகியவன் என்ற முறையில் அவர்களுடைய பண்புகளைப் பற்றி எனக்குச் சிறிதளவு தெரியும். விருப்பு வெறுப்பற்ற வகையில் என் கருத்தைக் கூற விரும்புகின்றேன். உங்களுடைய பொருத்தமற்ற முறையினால் தீய விளைவுகள் ஏற்படும். இழிவானவற்றைப் புகழவோ அல்லது கண்டித்து வெறுக்கவோ என்னுடைய வாழ்க்கையில் வாய்ப்பு ஏற்படவில்லை. என்னைப் பற்றிக் கூற இந்த முறையை நான் மேற்கொண்டிருக்கக் கூடாது. பிறருடைய தவறுகளைக் குறைகூறுவது குற்றமுமாகும். எனவே நண்பரின் அறிவுரையை ஏற்றுக்கொண்டு, அமைதியும் அறியாமையும் இதுவரை வாழ்ந்து வந்த இடத்தில் இழிவையும் தீமையையும் அறிமுகப் படுத்தினால் அதனால் ஏற்படும் விளைவுகளை எண்ணிச் செய்யுங்கள்."

எங்களுடைய ஐயங்களுக்கு ஒரு முடிவு வந்தது. இந்தக் கடிதத்தில் எங்களைப் பற்றியும் "நகரத்துப்

பெண்களைப் பற்றியும் இருவருக்கும் பொருந்தும் வகையில் சில குறிப்புக்கள் காணப்பட்டன. இதில் காணப்பட்ட பழியுரைகள் இந்தக் கடிதம் யாருக்கு எழுதப்பட்டதோ அவர்களுக்கும் பொருந்தும். எங்களுக்கும் பொருந்தும். ஆனால் அந்தப் பொறாமையான எண்ணம் மட்டும் தெளிவாகத் தெரிந்தது. எனவே நாங்கள் அதற்குமேல் ஆராயவில்லை. என்னுடைய மனைவிக்கு இறுதிவரை கேட்குமளவிற்குப் பொறுமை இல்லை.

அடக்கமுடியாத சினத்துடன் இக்கடிதம் எழுதியவரை இகழ்ந்து பேசலானாள். ஒலிவியாவிற்கும் சினம் ஏற்பட்டது. சோபியா அவருடைய இழிவான செயலைக் கண்டு வியப்படைந்தாள். என்னைப் பொறுத்த வரையில் என்னுடைய வாழ்க்கையிலேயே ஏற்பட்டிராத மிக இழிவான நன்றிகெட்ட செயலாகத் தோன்றியது. என்னுடைய இளைய பெண்ணை ஊரிலேயே தங்கவைக்க வேண்டுமென்றும் அவளுடன் அடிக்கடி பழகும் வாய்ப்பைப் பெறவேண்டுமென்றும் அவர் கொண்ட அவாதான் இதற்குக் காரணமே தவிர வேறொன்றுமில்லை என்று முடிவு செய்தேன்.

அவரைப் பழிவாங்கும் திட்டங்களைப்பற்றி நாங்கள் ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்த வேளையில் சிறு பையன் ஓடிவந்து பர்செல் வீட்டை நோக்கி வருவதைத் தொலைவில் பார்த்ததாகக் கூறினான். அண்மையில் ஏற்பட்ட வருத்தமும் அதைப் பழிவாங்குவதற்கு உடனே வரும் வாய்ப்பும் ஆகிய இவை போன்ற மாறுபட்ட உணர்ச்சிகளால் ஏற்பட்ட



நிலையை விவரிப்பதைவிட உணர்வது எளிது. அவருடைய நன்றிகெட்ட செயலுக்காக அவரைக் குறை கூறவேண்டும் என்ற நோக்கமே இருப்பினும் அவர் நன்றாக வருந்தும் வகையில் இடித்துக்கூற வேண்டுமென்று தீர்மானம் செய்தோம். வழக்கம்போல் அவரைச் சிரித்த முகத்துடன் வரவேற்கத் திட்டமிட்டோம்: வழக்கத்துக்கும் சற்று அதிக அன்புடன் முதலில் பேசவேண்டும். அவரைச் சிறிது மகிழ்ச்சியடையச் செய்யவேண்டும். அந்த அமைதியான வேளையில் அவர்மேல் எரிமலைபோல் வெடித்து அவருடைய இழிவுச் செய்கைக்கு அவரையே வருந்தச் செய்யவேண்டும். இந்த முடிவிற்கு வந்த பின்னர், என்னுடைய மனைவி தானே இதைச் செய்து விடுவதாகப் பொறுப்பேற்றாள். இதைப்போன்றவற்றில் அவளுக்குத் திறமை அதிகமாக உண்டு என்று தெரியுமாதலால் அவளிடமே விட்டுவிட்டோம்.

அவர் வீட்டினுள் வந்தார். நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்தார். "வாருங்கள் பர்செல். இன்று நல்லநாள்"

"ஆமாம் டாக்டர், இன்று நல்லநாள்தான். கதிர்களை எரித்து மழை பெறலாம் என்று நினைக்கிறேன்."

"என்ன உங்கள் கொம்பை எடுத்து ஊதப் போகிறீர்களா" என்று கேட்டுவிட்டுப் பலமாகச் சிரித்தாள் என் மனைவி. பிறகு வேடிக்கைக்குக் கூறியதாகக் கூறி மன்னிப்புக் கேட்டாள்.

"இதையே வேறொருவர் கூறியிருந்தால் வேடிக்கையாக எடுத்துக்கொள்ள மாட்டேன். நீங்கள் கூறியதால் மனதார மன்னிக்கிறேன்."

என்னுடைய மனைவி எங்களைப் பார்த்துக் கண்ணசைத்துவிட்டு "நீங்களாவது ஓர் அவுன்சு அளவுக்கு வேடிக்கைச் செய்தியைக் கூறுங்கள்" என்று பர்செல் லிடம் கேட்டாள்.

"என்ன நீங்கள் இன்று காலை ஏதாவது வேடிக்கைப் புத்தகங்களைப் படித்தீர்கள் என்று எண்ணுகின்றேன். வேடிக்கைகளை அவுன்சு அளவிலே கூறச்சொல்வது நல்ல சொற்புரட்டுதான். இருந்தாலும் அதில் ஓரளவு அறிவும் கலந்திருக்கவேண்டுமென்று நான் விரும்புகின்றேன்."

"நீங்கள் அவ்வாறு விரும்புவீர்கள் என்று எனக்குத் தெரியும். ஆண்களில் சிலர் அந்த ஓரளவு அறிவையும் புரிந்துகொள்ள இயலாவிட்டாலும் புரிந்ததுபோல் நடிக்கின்றனர்." "பெண்கள் அறிவு சிறிதும் கலவாத வேடிக்கையைத் தான் விரும்புவார்கள் என்பதைத் தாங்கள் அறிவீர்கள்" என்று சூடாக மறுமொழி கொடுத்தார் பர்செல். இந்த வாதத்தில் என் மனைவி சிறிது பலனைத்தான் பெற்றாள். எனவே எனக்கேயுரிய கடிய முறையில் நான் அவருடன் வாதிட ஆரம்பித்தேன். "வேடிக்கையும் அதைப் புரிந்துகொள்வதும் இணைந்து வராவிடில் அவை பயனற்றவை. அதுதான் ஒருவனுடைய குணத்துக்கு மதிப்பைத் தருவது. எல்லாவற்றையுமறிந்த தத்துவ ஞானியை விட ஒரு பிழையும் செய்யத் தெரியாத எளிய குடியானவன் உயர்ந்தவன். ஏனெனில் அறிவும் வீரமும் இதயமில்லாதவனிடம் இருந்து என்ன பயன்?"

"பெரிய அறிஞர்கள் சிறு குறைகளுடன் இருப்பர் என்ற போப்பினுடைய கொள்கை பழமையானது



தானே. புத்தகங்களைப் புகழும்போது அவற்றில் குறைகளே இல்லையென்பதில்லை. அழகுகள் அதிகமாக உள்ளன என்றுதான் பொருள். அதைப் போலவே மனிதனை எடைபோடும்பொழுது அவனுடைய தவறுகளை விட்டுவிட்டு நல்ல செய்கைகளை மட்டும் எடுத்துக்கொள்ள வேண்டும். அறிஞனுக்கு அடக்கம் தேவையாக இருக்கலாம். அரசியல் வாதிக்குக் கர்வம் நிறைந்திருக்கலாம். இச்சிறு குறைகளுக்காக அவர்களைக் கண்டிக்கலாமா அல்லது நற்செயல்களுக்காகப் பாராட்டலாமா? என்று சிந்திக்க வேண்டும்" என்று கூறினார் பர்செல்.

"நீங்கள் கூறுவது நியாயமானது. அரிய நற்குணங்களும் சிறுசிறு குறைகளும் இருக்கும்பொழுது இது சரி. ஆனால் சிறந்த பண்புகள் நிறைந்துள்ள மனதில் பெரிய குறைகளும் காணப்பட்டால் அதை நாம் வெறுக்கத்தானே வேண்டும்" என்று பதிலிறுத்தேன் நான்.

"இருக்கலாம். நீங்கள் கூறுவதைப்போலப் பெருங் குறைகளும் சிறந்த பண்புகளும் இணைந்த கொடியவர்கள் இருக்கலாம். ஆனால் என்னுடைய வாழ்க்கையில் இதுவரை இவ்வாறு இணைந்ததை ஒரு நிகழ்ச்சியிலும் காணவில்லை. இதற்கு மாறாகப் பரந்த மனமும் சிறந்த அன்பும் கலந்ததைப் பார்த்திருக்கிறேன்.

"நீங்கள் கூறியதெல்லாம் சரி. இருப்பினும் இதயமும் எண்ணமும் வேறுவேறுடைய ஒரு மனிதரை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டுவது எனக்கு எளிது" என்று என்னுடைய கண்களை அவர்மீது நிலையாகப் பதித்தேன். மிகப் பாதுகாப்பாக இருக்கிறோம் என்று

எண்ணிக் கொண்டிருக்கும் அவரைக் கண்டுபிடிக்கும் வாய்ப்பு ஏற்பட்டதற்குப் பெரிதும் மகிழ்ச்சியடைந்தேன். இதோ இந்தக் குறிப்புப் புத்தகம் யாருடையது என்று உங்களுக்குத் தெரியுமா ''?

''ஆம், அது என்னுடைய குறிப்புப் புத்தகந்தான்; அதைக் கண்டுபிடித்தளித்ததற்குப் பெருமகிழ்ச்சியடைகிறேன்.''

'' இந்தக் கடிதத்தைப்பற்றி உங்களுக்குத் தெரியுமா? தயங்க வேண்டாம். முகத்தை நிமிர்ந்து பார்த்துப் பதில் கூறுங்கள். இக்கடிதத்தை உங்களுக்குத் தெரியுமா?''

'' அந்தக் கடிதமா? ஆம். நான்தான் அக் கடிதத்தை எழுதினேன்.''

'' நீங்களெப்படி எழுதலாம்? இவ்வளவு இழிவாக நன்றிகெட்ட முறையில் பெருந்தன்மையில்லாது எப்படிக் கடிதத்தை எழுத எண்ணினீர்கள்?''

'' நீங்களெப்படி இவ்வளவு இழிவாக இக்கடிதத்தைத் திறக்க எண்ணினீர்கள். இதற்காக உங்களையெல்லாம் நான் தூக்கிலிட முடியும் என்று உங்களுக்குத் தெரியாதோ? நான் செய்ய வேண்டியதெல்லாம் அடுத்த வழக்கு மன்றத்திற்குச் சென்று என் குறிப்புப் புத்தகத்திலிருந்த கடிதத்தை நீங்கள் கிழித்துத் திறந்து விட்டீர்கள் என்று சத்தியம் செய்வதுதான். உங்களையெல்லாம் வழக்குமன்றத்தின் வாயிலிலேயே தூக்குப் போட்டுவிடுவார்கள்'' என்று துடுக்கான பார்வையுடன் பதிலளித்தார் பர்செல்.

இந்த எதிர்பாராத துடுக்கான பேச்சு என்னுடைய பொறுமையைக் கட்டுப்படுத்த முடியாத அளவிற்குச் சினத்தை யூட்டிவிட்டது. '' பெருந்தன்மையற்ற கயவனே, போய்விடு, இன்னும் இங்கிருந்து என்னுடைய வீட்டை உன்னுடைய இழிவால் களங்கப் படுத்தாதே. போய்விடு, நான் உன்னை மீண்டும் பார்க்காத வகையில் போய்விடு. உன்னுடைய மனச்சான்று தான் உன்னைத் தண்டிக்கவேண்டும். என் வீட்டை விட்டுப்போய்விடு'' என்று கூறி அவன் மீது குறிப்புப் புத்தகத்தை வீசி எறிந்தேன். அதை அவன் மெல்லிய புன்னகையுடன் எடுத்துக்கொண்டு மெதுவாக வாயிலடைப்பைத் தாளிட்டுவிட்டுச் சென்றான். என்ன செய்தும் அவன் சினமடையாததைக் கண்ட என் மனைவி சினப்பட்டாள். அவனுடைய தீய செய்கைகளுக்காக அவனை வெட்கமடையச் செய்யமுடியவில்லையே என வருந்தினாள். எங்களிடை எழுந்த பெருஞ்சினத்தைத் தணிவிக்கும் பொருட்டு ''தீயவர்கள் வெட்கமில்லா திருப்பதைக் கண்டு நாம் வியப்படையக் கூடாது. அவர்கள் தாம் செய்யும் நல்லதைப் பிறர் கண்டுவிட்டால் வெட்கப்படுவார்கள். தீமையைக் கண்டுவிட்டால் மகிழ்வடைவார்கள்'' என்று கூறினேன்.



குற்றமும் நாணமும் முதலில் பயணத்தைத் தொடங்கும் பொழுது நண்பர்களாயிருந்தார்களாம். பிரிக்கமுடியாத அளவிற்கு ஒன்றாயிருந்தார்களாம் ஆனால் வெகுவிரைவில் அவர்களுடைய நட்பு அவ்விருவர்க்குமே ஒத்துக்கொள்ளாததாகவும் வசதியில்லாததாகவும் காணப்பட்டது. குற்றம் அடிக்கடி நாணத்திற்குப் பல இன்னல்களை அளித்தது. நாணம் குற்றம் தீட்டிவந்த சதித்திட்டங்களைத் தகர்த்தெறிந்தது. நீண்ட நாட்களுக்குப் பின்னர் அவ்விருவரும் என்றென்

றைக்கும் பிரிந்திருப்பது என்று முடிவு செய்து விட்டனர். குற்றம் மிக விரைவாக நடந்து விதியையும் கடந்து செல்லுமளவிற்குக் கொலையாளியைப் போல் ஆய்விட்டது. நாணம் தன்னுடைய இயல்பான அச்சத்தால் பின்னடைந்து பயணத்தின் தொடக்கத்தில் கைவிட்டுவிட்ட நற்குணத்தின் நண்பனாக மீண்டும் அமைந்துவிட்டது. எனவே மனிதன் பல குற்றங்களைச் செய்த பின்னர் நாணம் அவனைக் கைவிட்டுவிட்டு அவனிடமுள்ள சில நற்குணங்களோடு போய் ஒட்டிக் கொள்ளுகிறது.

---

## 16. சூழ்ச்சியும் வீழ்ச்சியும்

திரு பர்செல் வராததால் சோபியா மிகவும் வருந்தினாள். மற்றவர்களோ எங்களுடைய நிலக்கிழாரின் வருகையினாலே அந்த வருத்தத்தை மறந்து இருந்தோம். நிலக்கிழார் இப்பொழுதெல்லாம் அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வந்தார். நெடுநேரமும் தங்கினார். அவர் திட்டமிட்டபடி என்னுடைய பெண்களுக்கு நகரின் கேளிக்கைகளை அனுபவிக்கும் வாய்ப்பைப் பெற்றுத்தர முடியாது ஏமாந்து போயினும் அக்கேளிக்கைகளை வாய்ப்பு ஏற்படும்பொழுதெல்லாம் வீட்டிலேயே நடத்திக் காட்டினார். பெரும்பாலும் அவர் காலையில் வருவார். நானும் என்னுடைய மகனும் வெளியே எங்கள் வேலையைப் பார்க்கப் போனபின் அவர் வீட்டிலேயே என் குடும்பத்தினருடன் தங்கி விடுவார். அவர்களிடம் நகரைப் பற்றி, அதுவும் குறிப்பாக அவர் நன்றாகப் பழகியிருக்கும் பகுதியைப் பற்றி, மிகவும் விரிவாக வருணித்து அவர்கட்கு மகிழ்ச்சியூட்டுவார். நாடக அரங்கில் நடந்த நிகழ்ச்சிகளைப்பற்றிப் பிறர் கூறிய செய்திகளைத் திரும்பத் திரும்பக் கூறுவார். பல நகைச்சுவைதரும் செய்திகளையும் கூறுவார்.

உரையாடல்களுக்கிடையே சில வேளைகளில் என்னுடைய பெண்களுக்கு இசை கற்றுக்கொடுப்பார். சிறுவர் இருவரையும் குத்துச் சண்டையிடச் செய்வார். அதனால் அவர்கள் மிகவும் கெட்டிக் காரர்களாவார்கள் என்று கூறுவார். அவரை மருமகனாக வரவேண்டியவர் என்று ஓரளவு எண்ணியதால் அவ்வெண்ணம் அவருடைய சிறு குறைகள் எங்கள்

கண்களில் தெரியாதவாறு அவற்றைக் குருடாக்கி விட்டன. அவரைப் பொறியில் சிக்கவைப்பதற்கு என்னுடைய மனைவி ஆயிரக்காணக்கான திட்டங் களைத் தீட்டினுள். தன்னுடைய பெண்ணின் ஒவ்வொரு திறமையையும் பெரிதாகக் காட்டினுள். தேநீர் அருந்தும்பொழுது கேக் நன்ருக இருந்தால் அதைச் செய்தது ஒலிவியாதான் என்று கூறுவாள். பழச்சாறு நன்ருக இருந்தால் ஒலிவியாதான் நல்ல பழங்களைப் பார்த்துக் கொய்து வந்ததாகச் சொல்லு வாள். ஊறுகாய் மிக நன்ருக இருக்கிறது என்ருல் அதை ஒலிவியாதான் ஊறப்போட்டாள் என்பாள். சில சமயங்களில் அவர்களிருவரும் பொருத்தமான உயர முடையவர்கள் என்று தார்ன்கிலிடம் கூறி அவர் களுள் யார் உயரம் அதிகம் என்பதைப் பார்ப்பதற்கு இருவரையும் அருகில் நிற்கவைத்துப் பார்ப்பாள். இவளுடைய இத்திட்டங்களைப் பிறர் அறிய முடியாது என்று அவள் எண்ணிக் கொண்டிருந்தாலும் இது எல்லோருக்கும் தெரிந்தது. இவளுடைய செய்கைகள் தார்ன்கிலுக்குப் பிடித்திருந்தன. அவரும் தம்முடைய ஆவலைப் புதியபுதிய செய்கைகள் மூலம் வெளிப்படுத் தினுர். அவை திருமணத்தை நேரடியாகக் குறிக்கா விடினும் அதையடுத்த நிலையிலாவது நின்றன. அவருடைய மௌனத்திற்குக் காரணம், இயல்பான வெட்கமே என்று கருதப்பட்டது. சில வேளைகளில் அவருடைய சித்தப்பாவிற்காகப் பயப்படுகிருரோ என்றும் எண்ணினேம். ஆனுல் அடுத்து நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி எங்களுடைய ஐயத்தைப் போக்கி அவர் இக் குடும்பத்தில் ஒருவராக வரவிரும்புவதை எடுத்துக் காட்டிற்று. என் மனைவி இதை அவரிட்ட ஆணையாகக் கூடக் கருதினுள்.



பிளேம்பரோ வீட்டிற்கு ஒருமுறை என் மனைவியும் பெண்களும் சென்றிருந்தனர். அங்கு அக் குடும்பத் தினர் அண்மையில் வரையச்செய்து மாட்டியிருந்த படங்களைக் கண்டனர். அப் படங்கள் அங்கு வந்திருந்த ஓர் ஓவியரால் வரையப் பெற்றிருந்தது. ஒவ்வொரு வரையும் வரையப் பதினைந்து சில்லிங்குகள் பெற்றிருக் கிருர். இந்தக் குடும்பம் எங்களுடைய குடும்பத்தோடு எப்பொழுதும் போட்டியிடுவது போலிருக்கும். இப் பொழுது அவர்கள் எங்களைவிட முன்னுல் போய் விட்டது போல் தோன்றிற்று. இதைப் பொறுக்க முடியாது எங்களுடைய படங்களையும் வரையச் செய்ய வேண்டும் என்று முடிவு செய்தோம்.

அதற்காக ஓர் ஓவியரையும் பேசி முடித்தோம். எங்களுடைய அடுத்த எண்ணமெல்லாம் அவர்க ளுடைய ஓவியங்களைவிட எங்களுடையது சிறந்து விளங்க என்னென்ன செய்யலாம் என்பதில் ஈடுபட்டது. அந்தக் குடும்பத்தில் ஏழுபேர் இருந் ததால் ஏழு ஆரஞ்சு வண்ணங்களில் வரையச் செய்தி ருந்தனர். இது பழையதாக எங்களுக்குத் தோன்றியது. இதைவிடப் பளிச்சென்று இருக்கும் வகையில் படத்தை வரைய விரும்பினேம் பலமுறை விவாதித்த பின் இறுதியில் எல்லோரையும் ஒரே படத்தில் வரைந்து குடும்பப் படமாக ஆக்க வேண்டுமென்று ஒரு மனதாக முடிவு செய்தோம். இந்த ஓவியத்தை ஒரே சட்டத்தில் மாட்டி விடலாம். இதனுல் இது மலிவாகவும் காணப் பட்டது. எல்லோரும் ஒரே வண்ணத்தில் வரையப் பட்டால் இது மிக நன்ருகவும் இருக்கும். வரலாற்றுப் படமாக வரைய வேண்டுமென்று நாங்கள் விரும்பி யதால் எங்களுக்குப் பொருத்தமான வரலாற்று நிகழ்ச்

சிகளைச் சிந்தித்துப் பார்த்தோம். ஆனால் ஒன்றும் பொருத்தமாக அமையவில்லை. எனவே வரலாற்றில் பட இடங்களில் காணப்பட்ட உருவங்களில் எங்களுக்குப் பொருத்தமான உருவங்களைத் தேர்ந்தெடுத்தோம்.

என் மனைவி வீனசைப் போல வரையப்பட வேண்டுமென விரும்பினாள். அவளுடைய மார்பிலும் தலையிலும் நிறைய வைர அணிகள் இருப்பதுபோல் வரைதல் வேண்டுமென்றாள். சிறுவர் இருவரும் அவளருகில் கியூபிட்களைப்போல் வரையப்பட வேண்டுமென்றாள்.

நான் என்னுடைய உடையிலேயே இடுப்புப் பட்டையுடன் என்னுடைய புத்தகங்களை அவளுக்கு அன்பளிப்பாக அளிப்பதுபோல் எதிரில் நிற்கும் கோலத்தில் வரைய வேண்டுமென்றாள். ஒலிவியா கிரேக்கக் கதைகளில் வரும் அமேசான் என்ற வீரப் பெண்மணிபோல் மலர்கள் குவிந்த கரையின்மீது உட்கார்ந்திருப்பது போலவும் சரிகைமிக்க பச்சையுடையணிந்து கையில் சாட்டையுடன் வரையப்படுதல் வேண்டுமென்றாள். சோபியா ஆடு மேய்ப்பவளைப் போலவும் வரைந்து அவள் முன்னால் ஓவியரால் எத்தனை ஆடுகள் போடமுடியுமோ அவ்வளவு போட வேண்டுமென்று கூறினாள்.

மோசசு வெள்ளை இறகுடைய தொப்பியை அணிந்து கொண்டு விளங்க விரும்பினான். எங்களுடைய விருப்பம் தார்ன்கிலுக்கு மகிழ்வை யளித்தது. அவரும் எங்கள் குடும்பத்தில் ஒருவராக இருக்க விரும்புவதை வற்புறுத்தினார். மாமன்னர் அலெக்சாந்தரைப் போன்ற உருவத்தில் ஒலிவியாவின் காலுக்கருகில் நிற்பதைப் போல வரையப்பட வேண்டுமென்று கூறினார். எங்கள் குடும்பத்துள் ஒருவராக வரவிரும்பும் அவருடைய ஆவலை இது காட்டியது. இதை எங்களால் மறுக்க முடியவில்லை.



எனவே இவ்வளவு கருத்துக்களையும் மனதில் ஏற்றுக்கொண்டு ஓவியம் வரையத் தொடங்கினார் ஓவியர். மிக்க கருத்துடனும் விரைவுடனும் அவர் வரைந்ததால் நான்கு நாட்களுக்குள் ஓவியம் முற்றுப் பெற்றுவிட்டது. அதைக் கண்டு நாங்களனைவரும் மகிழ்ச்சியடைந்தோம். ஓவியம் மிகவும் பெரிதாக இருந்தது. ஓவியர் ஒரு வண்ணத்தையும் விட்டு வைக்கவில்லை. அதற்காக என்னுடைய மனைவி அவரைப் பெரிதும் புகழ்ந்தாள்.

ஓவியம் எங்களுக்கு மனநிறைவை யளிப்பதாயமைந்திருந்தும் படம் முடியும் வரை ஏற்படாத ஓர் அச்சம் படம் முடிந்தவுடன் வந்துவிட்டது. அது மிகவும் பெரிதாயிருந்தமையால் அதை எங்கள் வீட்டினுள் மாட்டுவதற்கு இடம் இல்லை. இவ்வளவு பெரியதும் முக்கியமானதுமான பொருளைப் பற்றி முன்னரே சிந்திக்கவில்லையே என்று வருந்தினோம். உண்மையில் இதைப் பற்றிக் கவனிக்காமலிருந்து விட்டோம். எனவே இந்தப் படம் நாங்கள் எதிர் பார்த்ததுபோல் எங்களுடைய பெருமையைப் பெரிதாக்குவதற்குப் பதிலாக அவமதிக்கும் வகையில் சமையலறைச் சுவர்மேல் சாய்ந்து கொண்டிருந்தது.

அங்கே அதை விரித்துச் சட்டமடித்து விட்டோம். அதனால் கதவுகள்வழி வெளியே எடுத்துச்செல்ல

முடியாத அளவு பெரியதாயிருந்தது. பிறர் கண்டு கேலி செய்யும் வகையிலும் இருந்தது. ஒருவர் இது இராபின்சன் குரூசோவின் நீண்ட படகைப் போல இருக்கிறது என்றார். இது புட்டியுள் உள்ள உருளையைப் போல இருக்கிறது என்று கூறினர். சிலர் இதை எப்படி வெளியே எடுப்பது என்று வியப்படைந்தனர். சிலர் இது எப்படி உள்ளே போயிற்று என்று ஆச்சரியப்பட்டனர்.

இது சிலரைக் கேலி செய்யத் தூண்டினாலும் பலரைப் பொறாமையடையச் செய்தது. நிலக்கிழாரின் உருவம் எங்கள் உருவங்களோடு சேர்ந்து காணப்பட்டதனால் ஏற்பட்ட மதிப்பு எந்தப் பொறாமையுடையர் கண்ணுக்கும் தப்ப முடியாததாய் இருந்தது. எங்களைப் பற்றித் தவறான செய்திகள் பரவலாயின. எங்களுடைய விரோதிகள் என்ன கூறினார்கள் என்பதைக் கூறுவதற்காகச் சிலர் நண்பர்கள் போல் வந்து எங்கள் அமைதியைக் குலைத்தனர். இந்தச் செய்திகளை நாங்கள் திட்டுவதின்மூலம் பதில் சொன்னோம். ஆனால் வதந்தியும் பழிச்சொல்லும் மறுப்புச் சொல்லும்பொழுது பெருகிக் கொண்டே போகும்.

எங்களுடைய பகைவர்களின் பொறாமையைப் பயனற்றதாய்ச் செய்வதற்கு என்ன செய்யலாம் என்று நாங்கள் மறுபடியும் கூடிப் பேசினோம். இறுதியில் சூழ்ச்சி நிறைந்த ஒரு முடிவுக்கு வந்தோம். இது எனக்கு மன நிறைவளிப்பதாய் இல்லை. அந்த முடிவு இதுதான்: இதன் முக்கிய நோக்கம் தார்ன்கில்லினுடைய உண்மையான எண்ணத்தை அறிவது. இதற்கு என்னுடைய மனைவி ஒலிவியாவிற்கு ஒரு நல்ல கணவனைத் தேர்ந்தெடுத்துத் தரும்படி தார்ன்



கில்லைக் கேட்பாள். அவர் இதன்மூலம் ஒரு முடிவுக்கு வரவில்லையென்றால் அவருக்கு எதிராக ஒருவரை உருவாக்கி அவருக்கு அச்சத்தை ஊட்டவேண்டும். ஒலிவியாவும் தார்ன்கில் தன்னை மணந்துகொள்ளவில்லையானால் அவருக்கு எதிராக வருபவரைத் தான் மணந்து கொள்வதாக உறுதியாகச் சொன்னாள். இதன் முடிவு தெரியும்வரை நான் அவளுக்கு ஒப்புதலளிக்கக் கூடாது. இவ்வாறாகத் திட்டம் தீட்டப் பெற்றது. நான் இத்திட்டத்தை வன்மையாகக் கண்டிக்காவிட்டாலும் என்னுடைய முழு ஒப்புதலையும் கொடுக்கவில்லை.

அடுத்த முறை எங்களைத் தார்ன்கில் பார்க்கவந்த பொழுது என்னுடைய பெண்கள் அவரைவிட்டு விலகியே நின்றனர். அவர்களுடைய தாய் தம்முடைய திட்டத்தை நிறைவேற்ற வாய்ப்பளித்தனர். அவர்கள் வேறெங்கும் செல்லவில்லை. அடுத்த அறையில் இருந்து கொண்டு பேச்சு முழுவதையும் கேட்டனர். பிளேம் பரோவின் பெண்களில் ஒருத்தி திரு ஸ்பேங்கர் குடும்பத்தில் ஒருவரைத் திருமணம் செய்து கொள்ளப் போவதைக் கூறிப் பேச்சைத் தொடங்கினாள் என் மனைவி. இதற்குத் தார்ன்கில் தலையை அசைத்தார். நல்ல வாய்ப்புள்ள பெண்களுக்கு எப்பொழுதும் நல்ல கணவர்கள் கிடைப்பது உறுதி என்று குறிப்பிட்டாள். "ஆனால் எதுவுமில்லாத பெண்களை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும். அழகிருந்து என்ன பயன்? அல்லது நல்ல பண்புகளிருந்துதான் என்ன பயன்? தன்னலமிக்க இவ்வுலகில் எவ்வளவு தகுதிகளிருந்தும் என்ன பயன்? பெண் எப்படி என்பதன்று கேள்வி. பெண்ணிடம் பொருள் இருக்கிறதா என்பதுதான் கேள்வி." என்றாள் என் மனைவி.

"அம்மா, நீங்கள் கூறுவதில் உள்ள நியாயமும் புதுமையும் எனக்குத் தெரிகிறது. நான் மட்டும் அரசனானால் இது வேறு வகையில் நடக்கும். அப்பொழுது சொத்தில்லாத பெண்களுக்குத்தான் நல்ல காலம். நம்முடைய இரண்டு பெண்களுக்கும்தான் முதலில் வழி செய்வேன்" என்று பதில் கூறினார் தார்ன்கில்.

"நீங்கள் நயமாகப் பேசுகிறீர்கள். நான் மட்டும் அரசியானால் என்னுடைய மூத்த பெண்ணிற்கு எந்த இடத்தில் பிள்ளை பார்க்கவேண்டுமென்பது எனக்குத் தெரியும். இதைப் பற்றி நீங்கள் தீவிரமாக எண்ண வைத்து விட்டதால் கேட்கிறேன். என்னுடைய பெண்ணுக்கு நல்ல கணவனைத் தேர்ந்தெடுத்துக் கூறுங்கள். அவளுக்கு இப்போது பத்தொன்பது வயதாகிவிட்டது. நன்றாக வளர்ந்திருக்கிறாள்; நன்றாகப் படித்திருக்கிறாள்; திறமையுடையவள்."

"என்னை நீங்கள் தேர்ந்தெடுக்கச் சொல்வதால் விண்ணுலகப் பெண்ணையும் மகிழ்வாக வாழச் செய்யக் கூடிய ஒரு நல்ல கணவனைக் கண்டுபிடித்துக் கூறுகிறேன். அடக்கம், சொத்து, சுவை, வாய்மை இத்தனையு முடையவன்தான் நல்ல கணவன்."

"அதைப் போன்றவரை யாரையாவது உங்களுக்குத் தெரியுமா?" "எனக்கு யாரையும் தெரியாது. அவளுக்குக் கணவனாய் இருக்கக்கூடிய தகுதியுடையவனைக் கண்டுபிடித்தல் அரிது. அவள் ஒரு மனிதனுக்குக் கிடைக்கக்கூடிய செல்வங்களுள் தலையாய செல்வம். அவள் இறைவியின் திருவுரு. என்னுடைய எண்ணப்படி அவள் விண்ணுலக மங்கைதான்."



"என்னுடைய மகளைப்பற்றி வீணாகப் பெருமையாகக் கூறுகிறீர்கள். ஆனால் உங்கள் குடிகளுள் ஒருவர்க்கு அவளை மணஞ்செய்து கொடுக்க எண்ணியுள்ளோம். அவருடைய தாயார் இறந்து நாளாகிவிட்டது. அவருக்கு வீட்டை நடத்த ஆள் தேவை. நான் யாரைக் குறிப்பிடுகிறேன் என்று உங்களுக்குத் தெரிகிறதா? திரு வில்லியம்சைக் குறிப்பிடுகிறேன். நல்ல மனிதர். அவளுக்கு நல்வாழ்வை அளிக்கக் கூடியவர். அவரும் பலமுறை பெண் கேட்டிருக்கிறார். (உண்மையிலேயே இப்படித்தான்). ஆனால் நாங்கள் தேர்ந்தெடுத்திருப்பவரைப் பற்றி உங்களுடைய ஒப்புதலைத் தெரிவிக்க வேண்டும்."

"என்னுடைய ஒப்புதல் எப்படி? இதைப்போன்றதற்கு என்னுடைய ஒப்புதலா? முடியவே முடியாது. அழகு, அறிவு, பண்பு, அனைத்தையும் தியாகம் செய்துவிடுவதா? இந்த அநியாயத்திற்கு என்னுடைய ஒப்புதலை அளிக்கவே முடியாது. நானும் சில காரணங்களை வைத்திருக்கிறேன்."

"நீங்கள் சில காரணங்களை வைத்திருக்கிறீர்களென்றால் அது வேறு. இருந்தாலும் அதைக் கூறுங்கள்; கேட்போம்."

"மன்னித்து விடுங்கள். அவை கண்டுபிடிப்பதற்கு முடியாத அளவு ஆழமாயிருக்கின்றன. அவை இங்கே புதைந்து கிடக்கின்றன. ஆணியடித்து இறுக்கப்பட்டிருக்கின்றன" என்று தம் நெஞ்சின்மீது கையை வைத்துக்கொண்டு கூறினார் தார்ன்கில்.

அவர் சென்றபின் அனைவரும் கூடிப் பேசினோம். இந்த உணர்ச்சி நிறைந்த உரைகளை வைத்து

கொண்டு என்ன செய்வது என்று எங்களால் கூற முடியவில்லை. அளவுகடந்த பற்றைக் காட்டும் நிகழ்ச்சியாக ஒலிவியா கருதினாள். என்றால் அவ்வளவு நம்பிக்கை நிறைந்தவனாக இருக்க முடியவில்லை. அவர்களிடை திருமணத்தைப் பற்றிய எண்ணத்தைவிடக் காதல்தான் நிறைந்து காணப்பட்டது என்பது தெளிவாகத் தெரிந்தது. எனினும் முன்னெச்சரிக்கையாக வில்லியம்சைப் பற்றிய திட்டத்தையும் செயல்முறையில் கொண்டுவருவது என்று முடிவு செய்தோம்.

---

# 17. நீண்டநாள் மயக்கம்

என்னுடைய மகளின் உண்மையான இன்பத்தையே நான் பார்க்க விரும்பியதால் அவர்களுடைய கவனம் திரு வில்லியம்சின்மீது திரும்பியபொழுது எனக்கு மகிழ்ச்சியை யளித்தது. அவர் எளிய வாழ்க்கையை விரும்புபவர். அடக்கமுடையவர். வாய்மை நிறைந்தவர். அவர் நாங்கள் இந்த ஊருக்கு வந்தபோதே எங்களிடம் தொடர்பு வைத்திருந்தார். ஆனால் தொடர்பு இடையில் தடைப்பட்டிருந்தது. அதை மீண்டும் ஏற்படுத்துவதற்குச் சற்றுத் துணிவு முதலில் தேவையாக இருந்தது. இரண்டு நாட்களில் வில்லியம்சும் தார்ன்கிலும் எங்கள் வீட்டில் சந்தித்தனர். சிறிது நேரம் ஒருவரை யொருவர் சினத்துடன் பார்த்துக் கொண்டனர். வில்லியம்சு தார்ன்கில்லினுடையவீட்டில் குடியிருந்தாலும் அவர் வாடகை கொடுக்கவேண்டியது மீதி ஏதுமில்லாததால் தார்ன்கில்லினுடைய சீற்றத்தைச் சிறிதுதான் பொருட்படுத்தினார். ஒலிவியா தன்னுடைய பங்கிற்குத் தார்ன்கில்லுடன் ஊடியது போல நடித்தாள். தன்னுடைய அன்பையெல்லாம் தன் புதுக் காதலன்மீது பொழிவதுபோல் நடித்தாள். இதைக் கண்டு தார்ன்கில் மனக்கசப் படைந்ததுபோல் காணப்பட்டார். மிகக் கவலையுடன் எங்களிடமிருந்து விடைபெற்றுக்கொண்டார். தன்னுடைய அன்பை வெளிப்படையாகக் கூறி இத் தடையை எளிதில் அகற்றுவது அவர் கையிலிருக்க அவர் இவ்வளவு வருத்த மடைந்தது எனக்குப் புதிராகத் தோன்றியது. அவர் எவ்வளவு துன்பம் அடைந்திருந்தாலும் அதற்கு மேல் ஒலிவியா பெருந்துயருற்றதைக் காண முடிந்தது.

இவ்வாறு இரு காதலர்களும் சந்தித்துப் பேசியபின் ஒலிவியா தனிமையில் சென்று வருத்தத்தினுள் மூழ்குவாள்.

இதைப் போன்ற சூழ்நிலையில்தான் நான் ஒரு நாள் மாலையில் அவளைப் பார்த்தேன். அவர்களிருவரும் இருக்கும்பொழுது மகிழ்ச்சியாக இருப்பது போல் நடித்து விட்டுப் பின்னர் தனிமையில் துயருற்றிருந்தாள். நான் அவளை நெருங்கி அவளிடம் “அம்மா, தார்ன்கில்லினுடைய அன்பில் நீ வைத்திருந்த நம்பிக்கையெல்லாம் வெறுங் கனவு என்று இப்பொழுது உனக்குத் தெரிந்து விட்டதல்லவா? இன்னொருவர் இவருக்குப் போட்டியாக வருவதை அவர் அனுமதிக்கிறார். வில்லியம்சு இவரைவிட எந்த வகையிலும் தாழ்ந்தவர். தம்முடைய அன்பை வெளிப்படையாகக் கூறுவதின் மூலம் உன்னைப் பெறலாமென்றும் தார்ன்கிலுக்குத் தெரியும்” என்று கூறினேன்.

“அப்பா, அவர் இவ்வளவு தாமதிப்பதற்குக் காரணங்கள் இருக்கும். அது எனக்குத் தெரியும். அவருடைய பார்வையும் சொற்களும் வெளியிடும் நேர்மை அவர்மீது நான் கொண்டுள்ள மதிப்பை உறுதிப்படுத்துகிறது. இன்னும் சில காலத்தில் நான் அவர்மீது கொண்டுள்ள எண்ணம், நீங்கள் அவரைப் பற்றி எண்ணும் எண்ணத்தை விட நியாயமானது என்பதை அவருடைய தாராள மனப்பான்மையால் உணர்வீர்கள்.”

“ஒலிவியா, அவர் அன்பை வெளிப்படையாகக் கூறுவதை வற்புறுத்துவதற்கு நாம் இதுவரை கடைப்பிடித்து வந்த திட்டங்கள் ஒவ்வொன்றும் உன்



னால்தான் தீட்டப்பட்டன. நான் உன்னை வற்புறுத்திச் செய்ததாக நீ கூடக் கூறமுடியாது. ஆனால் இதற்காக வில்லியம்சை வீணாகத் துன்புறுத்துவதில் நானும் உனக்குக் கருவியாக இருக்க வேண்டுமென்று நீ எதிர்பார்க்கக் கூடாது. தார்ன்கில் தம்முடைய எண்ணத்தை விளக்கிக் கூறுவதற்கு எவ்வளவு காலம் வேண்டுமானாலும் தருவோம். ஆனால் அவ்வளவு காலத்திற்குப் பிறகும் நம்மை அவர் சிறிதும் மதியாது இருந்தால், திரு வில்லியம்சு அவருடைய பொறுமைக்காகவாவது பரிசளிக்கப்பட வேண்டும். நான் இதுவரை என் வாழ்வில் கடைப்பிடித்து வரும் பண்பு இதைக் கேட்கத் தூண்டுகிறது. தந்தை என்ற பாசம் நான் மனிதன் என்பதால் ஏற்படும் தன்மானத்தை இழக்கச்செய்யாது. நீ ஒரு நாளைக் குறிப்பிடு. எவ்வளவு நாள் தள்ளி வைக்கலாமென்று நீ எண்ணுகிறாயோ அவ்வளவு நாள் தள்ளிய நாளையே குறிப்பிடு. இதற்கிடையில் நான் உன்னை வில்லியம்சுக்குக் கொடுக்கப் போகும் செய்தியைத் தார்ன்கில்லுக்குத் தெரிவித்து விடு. அவர் உன்னை உண்மையிலேயே விரும்பினால் அவர் உன்னை இழக்காமலிருக்க ஒரே ஒரு வழிதான் இருக்கிறது என்பதை அவருடைய அறிவு அவருக்கு எடுத்துக்காட்டும்! இத்திட்டம் நியாயமற்றது என்று அவள் எளிதில் தள்ளிவிட முடியாததால் இதற்கு அவள் ஒத்துக்கொண்டாள். தார்ன்கில் தவறிவிட்டால் வில்லியம்சை மணந்துகொள்வதாகச் சொன்ன உறுதியை மீண்டும் தெரிவித்தாள். அடுத்த முறை தார்ன்கில் வீட்டிற்கு வந்திருந்தபொழுது அவருடைய முன்னிலையிலேயே வில்லியம்சுக்கும் ஒலிவியாவிற்கும் நடைபெறப்போகும் திருமணத்தைப் பற்றிக் குறிப்பிட்டோம்.

இவ்வளவு தீவிர நடவடிக்கைகளை எடுத்தது தார்ன்கில்லினுடைய கவலையை இருமடங்காக்கியது. ஆனால் ஒலிவியாவின் கவலை எனக்குச் சற்று வருத் தத்தை யளித்தது. முன்யோசனைக்கும் ஆசைக்கும் ஏற்பட்ட இப் போராட்டத்தில் அவள் மகிழ்ச்சியை விட்டுவிட்டாள். தனிமையான வாய்ப்பை ஒவ்வொரு முறையும் எதிர்பார்த்தாள். அதைக் கண்ணீரிலேயே கழித்தாள். ஒரு கிழமை கடந்தது. ஆனால் தார்ன்கில் அவளுடைய மண உறுதிச் சடங்கைத் தடுக்க எந்த வித முயற்சியும் எடுத்துக்கொள்ளவில்லை. அடுத்த கிழமை அவர் கவனமாக இருப்பதுபோல் தோன் றியது. ஆனால் வெளியில் காட்டிக் கொள்ளவில்லை. மூன்றாவது கிழமையில் அவர் வருவதையே அடியோடு நிறுத்திவிட்டார். இதைக்கண்டு என் மகள் பொறு மையிழந்து காணப்படுவாள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அதற்கு மாறாக அவள் ஆழ்ந்த அமைதியுடன் காணப்பட்டாள். அவள் மனம் மாறிவிட்டது என்று நான் எண்ணினேன். என்னைப் பொறுத்தவரை நான் உண்மையிலேயே மகிழ்ச்சி யடைந்தேன். அமைதியும் தகுதியும் உடைய வாழ்க்கையை என் மகள் அடையப் போவதை யறிந்து மகிழ்ந்தேன். புறப்பகட்டை விட்டு உண்மையான இன்பத்தை விரும்பியேற்ற அவள் முடிவை அடிக்கடி பாராட்டிப் புகழ்ந்தேன்.

மண உறுதி நாளுக்கு நான்கு நாட்கள் முன்னர் இரவு வேளையில் நாங்கள் அனைவரும் நெருப்படியைச் சுற்றி அமர்ந்திருந்தோம். பழைய கதைகளைப் பற்றிப் பேசினோம். எதிர்காலத்திற்கு வேண்டிய திட்டங் களைத் தீட்டினோம். பேசிக்கொண்டும் சிரித்துக் கொண்டுமிருந்த அந்நேரத்தில் மோசசைப் பார்த்து,



"நம்முடைய குடும்பத்தில் அண்மையில் ஒரு திரு மணம் நடைபெறப் போகிறது. அதைப் பற்றி உன் கருத்தென்ன?" என்று கேட்டேன்.

"என்னுடைய கருத்து என்ன அப்பா ? எல்லாம் நன்றாகத்தான் நடைபெறுகின்றன. லிவி அக்காள் வில்லியம்சை மணந்துகொண்டால் அவரிடமிருந்து பழச்சாறு பிழியும் கருவியையும் வடிகட்டும் தொட்டியை யும் காசு கொடுக்காமலே பெற்றுக்கொள்ளலாம்" என்றான் மோசசு.

"அதெல்லாம் கிடைக்கும் மோசசு. அதோடு அவர் இனிமையாகப் பாடி நம்மை மகிழ்விப்பார்" என்றேன் நான்.

"அப்பா, நம் டிக்கிற்குக்கூட அவர் பாட்டுச் சொல் லிக்கொடுத்திருக்கிறார். அவனைப் பாடச் சொல்வோம்."

"டிக் வெளியே லிவி அக்காவோடு போயிருக் கிறான். வில்லியம்சு எனக்கும் இரண்டு பாட்டுச் சொல் லிக்கொடுத்திருக்கிறார். நான் ஒன்றைப் பாடட்டுமா அப்பா" என்று கேட்டான் பில்.

என் மனைவி பாட்டைக் கேட்குமுன் எல்லோரும் சிறிது பழச்சாற்றைப் பருகுவோம் என்று கூறி எல் லோருக்கும் பழச்சாற்றைக் கொடுத்தாள்.

பில் பாட்டைப் பாடினான். அதைக்கேட்டு அனை வரும் மகிழ்ச்சியடைந்தனர். மோசசை ஒரு பாட்டுப் பாடும்படிக் கேட்டோம். இவ்வுலகிலுள்ள மாமன்னரை விட நான் மிக மகிழ்ச்சியடைந்தேன். நானும் என் மனைவியும் முதியவராகி விட்டோம். எங்களுடைய வாழ்க்கையின் இறுதிப் பகுதி இன்பம் நிறைந்தாக

இருக்கும். எம் முன்னோரின் வாழ்வில் ஒரு குறையும் கிடையாது. நாங்களும் குறையற்றவர்களாக பண்பு நிறைந்த பிள்ளைகளை விட்டுச்செல்வோம். எம்முடைய பிள்ளைகள் நாங்கள் வாழும்போது எமக்குப் பெருந்துணையாயிருந்து மகிழ்ச்சியை விளைவிப்பர். இறந்தபின் எங்களுடைய பெருமையை அழியாப் புகழாக மாற்றிவிடுவர்.

"சரி மோசசு, எல்லோருமே சேர்ந்து பாடுவோம். ஒலிவியா எங்கே? அவளுடைய குரல்தான் இக்கூட்டத்திலேயே இனிமையானது." என்று நான் வினவியபொழுது டிக் உள்ளே ஓடி வந்தான்.

"அப்பா, அப்பா, அவள் நம்மைவிட்டுப் போய் விட்டாள். லிவி அக்கா நம்மை விட்டுவிட்டு எப்பொழுதும் பிரிந்திருக்கப் போய்விட்டாள்." என்று டிக் கூறினான்.

"போய் விட்டாளா?"

"ஆமாம். அவள் இரண்டு பேருடன் சோச் வண்டியில் போய்விட்டாள். அவர்களுள ஒருவர் அவளை முத்தமிட்டார். அவளுக்காக இறக்கவும் தயார் என்று அவர் கூறினர். அவள் அழுதுகொண்டு திரும்பிவர எண்ணினாள். ஆனால் அவர் தடுத்துக்கூறி அழைத்துச் சென்று விட்டார். அவள் வண்டியுள் ஏறியவுடன், 'பாவம் அப்பா, இது தெரிந்தால் மிகவும் வருத்தப்படுவார்'? என்று கூறினாள்" என்றான்.

"குழந்தைகளே! போங்கள், வருத்தப்படுங்கள். நாம் இந்தவீட்டில் இனி ஒருமணி நேரம்கூட மகிழ்ச்சியாயிருக்க முடியாது. நம்முடைய உலக இன்பமெல்லாம் முடிந்துவிட்டது."



"அப்பா, உங்களுடைய மனஉறுதி இவ்வளவு தானா?" என்று என் மகன் கேட்டான்.

"மன உறுதியா மகனே? ஆம். நீ என்னுடைய மன உறுதியைக் காண்பாய். என்னுடைய துப்பாக்கிகளைக் கொண்டுவா. நான் அந்த வஞ்சகனைப் பின் தொடர்வேன். அவன் இவ்வுலகில் எங்கிருந்தாலும் பின் தொடர்வேன். இவ்வளவு முதுமையிலும் நான் அவனைப் பிடிக்க முடியுமென்று அவன் தெரிந்து கொள்ள வேண்டும். கொடியவன்."

நான் இதற்குள் என்னுடைய துப்பாக்கிகளை எடுத்து விட்டேன். ஆனால் என் மனைவி என்னுடைய கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

"அன்பரே, உங்களுடைய இந்த முதிய கைகளுக்குத் தகுதியான கருவி பைபில்தான். அதைத் திறந்து படியுங்கள். அவள் நம்மை வேண்டுமென்றே ஏமாற்றி விட்டாள்."

"ஆம் அப்பா" என்று மோசசு தொடர்ந்தான்; "உங்களுடைய சினம் மிகப் பொல்லாததாயிருக்கிறது, நீங்கள் அம்மாவுக்கு ஆறுதலளிப்பதற்குப் பதிலாக வருத்தத்தை அதிகப் படுத்துகிறீர்கள். உங்களுடைய பகைவரைப் பழிப்பது உங்களுடைய பாதிரித் தொழிலுக்கு ஒத்துக்கொள்ளாதது. அவரைக் கொடியவன் என்று நீங்கள் பழித்திருக்கக் கூடாது."

"நான் ஒன்றும் பழிக்க வில்லையே. நானா பழித்தேன்?"

"ஆம் அப்பா, நீங்கள் அவரை இருமுறை பழித்தீர்கள்."

"அப்படியானுல் ஆண்டவன் என்னை மன்னித்து விடட்டும். நம்முடைய பகைவரை ஆசிகூறிப் போற்ற வேண்டுமென்று கூறியுள்ளது மனிதசக்திக்கு அப்பாற்பட்டது. ஆனல் பல ஆண்டுகளாகக் கண்ணீரே வராத இக் கண்களிலிருந்து நீரை வரவழைத்துவிட்ட இந்த இழப்பு சாதாரணமானதல்லவே. என்னுடைய பேச்சிலே குழப்பு மிருக்கலாம். நான் கூறப்போவதை ஆண்டவன் மன்னிக்கட்டும். ஒலிவியா எவ்வளவு நல்லவள், அழகுள்ளவள்! இதுவரை நம் அனைவரையும் மகிழ்விக்கவே அவள் ஒவ்வொரு செயலையும் செய்தாள். அவள் இறந்து விடவில்லை. ஆனுல் ஓடிவிட்டாள். நம் குடிப்பெருமை போய்விட்டது. நான் வேறு உலகங்களில்தான் இன்பத்தைத் தேடவேண்டும். டிக், நீ அவர்கள் போவதைப் பார்த்திருக்கிருய். அவர்கள் அவளைக் கட்டாயப் படுத்தியிருக்கின்றனர். அவள் அவ்வாறு கட்டாயப்படுத்தப் பட்டிருந்தால் அவள் இன்னும் ஒன்றுமறியாத நல்ல பெண்தான்."

"இல்லை அப்பா, அவர் அவளை முத்தமிட்டார். அவளைத் தன்னுடைய அழகுத் தெய்வமென்ருர். அவள் அழுதாள். அவன் தோள்கள்மீது சாய்ந்து கொண்டாள். அவர்கள் வேகமாகச் சென்றுவிட்டனர்."

"அவள் ஒரு நன்றிகெட்ட பிறவி" என்று அழுது கொண்டே கூறினுள் என் மனைவி.

"நம்மை இந்நிலைக்குக் கொண்டுவந்து விட்டாள். நம்மீது உள்ள பற்றை உதறிவிட்டாள். ஒரு காரணமுமில்லாது தன்னுடைய பெற்ரேரை விட்டுப் பிரிந்து விட்டாள். உங்களுடைய நரை முடியைக் கல்லறைக்குக் கொண்டுசெல்லத் துணிந்துவிட்டாள். நானும் உங்களைத் தொடர வேண்டியதுதான்." என்ருள் அவள்.



எங்களுக்கேற்பட்ட முதல் பேரிழப்பின் இரவு இந்த வகையில் பிறரைக் குறை கூறுவதிலேயே கழிந்தது. நான் எப்படியும் எங்களை வஞ்சித்தவரைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று முடிவு செய்தேன். அவர் எங்கிருந்தாலும் அவரைக் கண்டுபிடித்து அவருடைய இழிய செயலைக் கண்டிக்க எண்ணினேன். அடுத்தநாள் காலை உணவின்போது நாங்கள் ஒலிவியா இல்லாததை உணர்ந்தோம். எங்களைவருக்கும் அவள் மகிழ்ச்சியூட்டியதை எண்ணிப் பார்த்தோம்.

என் மனைவி மறுபடியும் தன் வருத்தத்தைக் குறைப்பதற்கு அவளைப் பழிக்கத் தொடங்கினுள். "நம் குடும்பத்தில் பெரும் குறையை உண்டாக்கிவிட்ட அவள் இந்த வீட்டிற்குள் எப்பொழுதும் வரக்கூடாது. அவளை நான் இனி என் மகளென்று கூறமாட்டேன். அவள் யாருடன் ஓடிப்போனுளோ அவருடனேயே வாழட்டும். அவள் நமக்கு அவமானத்தைக் கொண்டு வரலாம். ஆனுல் இனியும் அவள் நம்மை ஏமாற்ற முடியாது."

"நீ இவ்வளவு கடுமையாகப் பேசக்கூடாது. அவளுடைய குற்றத்திற்காக அவளை நீ வெறுப்பதைவிட நான் அதிகமாக வெறுக்கிறேன். ஆனுல் இந்த வீடும் இந்த இதயமும் தன்னுடைய குற்றத்திற்கு வருந்தும் பாவிக்கு என்றும் திறந்தே இருக்கட்டும். அவள் எவ்வளவு விரைவில் திரும்பிவருகிருளோ நான் அவ்வளவு மகிழ்ச்சியுடன் வரவேற்பேன். முதல் முறை எவ்வளவு நல்லவர்களா யிருந்தாலும் தவறி விடுவார்கள். முதல் தவறு அறியாமை நிறைந்த குழந்தை போன்றது. ஆனுல் அதையடுத்துச் செய்யும் தவறுகள் குற்றம்

நிறைந்த குழந்தைகளைப் போன்றது. அந்தக் கீழ்த் தரமானவள் இந்த இதயத்திற்கும் இந்த வீட்டிற்கும் எப்பொழுது வேண்டுமானாலும் வரட்டும். பத்தாயிரம் குறைகளிருந்தாலும் அவள் வரட்டும். அப்பொழுதும் அவள் குரலிசைக்கு ஏற்றவாறு தாளமிடுவேன். தவற்றை அவ்ள் உணர்ந்திருந்தால் அவளை என் மார் போடு அணைத்துக் கொள்வேன். மகனே, என்னுடைய பைபிலையும் தடியையும் எடுத்துக் கொண்டுவா. அவள் எங்கிருந்தாலும் நான் அவளைத் தொடர்ந்து செல் வேன். அவளை அவமானத்திலிருந்து மீட்க முடியா விட்டாலும் கொடுமையை அவள் தொடர்ந்து செய்யாதவாறுவது தடுப்பேன்.''

---

# 18. ஓடுதலும் தேடுதலும்

தன்னுடைய அக்காளை அழைத்துச் சென்றவரு டைய உருவத்தை டிக் வருணிக்க முடியாவிட்டாலும் என்னுடைய முழு ஐயமும் எங்கள் நிலக்கிழார் மேல் தான் விழுந்தது. இதைப் போன்ற சதித்திட்டங்களைச் செய்யும் அவர் பண்பு எல்லோர்க்கும் தெரிந்ததுதான். எனவே தார்ன்கில் மாளிகையை நோக்கி நடந்தேன். முடிந்தால் அவரைக் கண்டித்துவிட்டு என் மகளை அழைத்து வந்து விடலாமென்று எண்ணினேன். ஆனால் அவர் மாளிகையை அடையுமுன் வழியில் கோயிலுக்கு அடிக்கடி வரும் ஒருவரைச் சந்தித்தேன். அவர் என் மகளைப் போல் தோற்றமுடைய ஒரு பெண் ஓர் ஆடவனுடன் கோச் வண்டியில் விரைந்து சென்ற தைப் பார்த்ததாகக் கூறினர். அவர் அந்த ஆடவனை வருணித்த பொழுது எனக்குப் பர்செல்லின் நினைவுதான் வந்தது. எப்படியும் இந்தச் செய்தி எனக்கு மனநிறைவை அளிக்கவில்லை. எனவே நான் தார்ன்கில் மாளிகைக்குச் சென்றேன். பொழுது இன்னும் நன்ருக விடியவில்லை. இருந்தும் அவரை உடனே பார்க்க வேண்டுமென்று அங்கிருந்த பணியா ளிடம் வற்புறுத்தினேன். அவர் வழக்கமான சிரித்த முகத்துடன் வெளிவந்தார். என்னுடைய மகள் ஓடிப்போய் விட்டதை யறிந்து ஆச்சரியப்பட்டார். தனக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியாது என்று கூறினர்.

நான் அவர்மீது கொண்டிருந்த ஐயங்களை அகற்றினேன். அவற்றைப் பர்செல் மீதுதான்

செலுத்தினேன். கடைசியில் அவர் பலமுறை அவளுடன் தனித்து உரையாடியிருக்கிறார். அவர் தான் என் மகளை யழைத்துக்கொண்டு எங்கள் ஊரிலிருந்து முப்பது கல் தொலைவிலுள்ள வெல்சுக்குச் சென்றிருக்க வேண்டும். அங்குதான் அவருடைய நண்பர்கள் நிறைய இருக்கிறார்கள். இந்த நிலைக்கு வந்த பின் நாம் பெரும்பாலும் சரியானதைக் கண்டு பிடிக்காது பிறர் கூறிய வழியேதான் நடப்போம். இந்தச் செய்திகளை யெல்லாம் வேண்டுமென்றே என்னைத் தவருன வழியில் திருப்பி விடுவதற்காகக் கூறியிருக்கமாட்டார்களா என்றே நான் யோசனை செய்யவில்லை. மேலும் என் மகளையும் அவளுடைய காதலனையும் தேடிக் கொண்டு புறப்பட்டேன்.

நான் மிக ஊக்கத்துடன் நடந்து சென்றேன். வழியில் பலரை விசாரித்தேன். ஒரு செய்தியும் கிடைக்கவில்லை. ஊரையடைந்ததும் குதிரை மீதிருந்த ஒரு மனிதனைப் பார்த்தேன். நான் அவனைத் தார்ன்கில் வீட்டில் பார்த்த நினைவு இருந்தது. நான் அவர்களைத் தொடர்ந்து சொல்ல வேண்டுமென்றால் இன்னும் முப்பது கல் தொலைவு செல்ல வேண்டுமென்று கூறினன். அங்குள்ள ஊரில் அதற்கு முந்திய இரவு அவர்களிருவரும் நடனமாடியதைப் பார்த்ததாகக் கூறினன். என்னுடைய மகளின் ஆட்டத்தைக் கண்டு அனைவரும் புகழ்ந்ததாகக் கூறினன். மறுநாள் காலை நான் தொடர்ந்து நடந்தேன். மாலை நான்கு மணிக்கு நான் அவன் குறிப்பிட்ட ஊரையடைந்தேன். அங்கு சற்றுத் தொலைவில் பர்செல்லைப் பார்த்ததுபோல் எனக்குத் தோன்றியது. ஆனல் நான் அவரை நெருங்குமுன் கூட்டத்துள் புகுந்து



எங்கோ சென்றுவிட்டார். அதற்குப் பிறகு அவரைக் காணமுடியவில்லை.

மேலும் அவர்களைத் தொடர்ந்து செல்வதில் பயனில்லை என்பதை உணர்ந்தேன். உடனே வீட்டிற்குத் திரும்பிச் செல்வது என்று முடிவு செய்தேன். ஆனல் என்னுடைய உள்ளத்தில் ஏற்பட்ட போராட்டங்களினலும் கால் நடையினல் ஏற்பட்ட தளர்ச்சியினலும் எனக்குச் சுரம் கண்டது. நான் பாதி வழி வரும் பொழுதே இதன் அறிகுறிகளைக் கண்டேன். இது மற்ருேர் எதிர்பாராத தாக்குதலாக இருந்தது. நான் என் வீட்டிலிருந்து எழுபது கல் தொலைவில் இருந்தேன். வழியிலிருந்து ஒரு தங்கும் விடுதியுள் நுழைந்தேன். என்னுடைய நலக்குறைவு நீங்கும் வரை அங்கேயே தங்கிவிட முடிவு செய்தேன். மூன்று கிழமைகள் அங்கேயே தங்கிய பின்னர் உடல் நலமுற்றேன். விடுதிக்குக் கொடுக்க வேண்டிய தொகைக்கு என்னிடம் பணம் இல்லை. இந்தக் கடைசி நேரத்தில் ஏற்பட்ட கவலையினல் என் உடல் மீண்டும் சுரம் கண்டிருக்கும். ஆனல் ஒரு வழிப்போக்கர் எனக்கு உதவினர்.

அவர் செயின்ட் பால் கோயில் முற்றத்தில் புத்தகம் விற்பவர். அவர் குழந்தைகளுக்காகப் பல சிறு நூல்களை இயற்றியுள்ளார். அவர் தன்னைக் குழந்தைகளின் நண்பன் என்று கூறிக்கொள்வார். உண்மையில் அவர் மனித இனம் முழுவதற்குமே நண்பனுக விளங்கினர். அவர் விடுதிக்குள் வந்தவுடனேயே திரும்பிச் செல்ல விரைந்தார். ஏனெனில் அவர் மிக அவசரமான ஒரு வேலைக்குச் சென்று கொண்டிருந்

தார். திரு தாமசு டிரிப்சு என்பவரின் வரலாற்றை எழுதுவதற்காகக் குறிப்புகளைச் சேகரித்துக்கொண்டிருந்தார். சிவந்த பருக்களையுடைய அவர் முகத்தை நான் உடனே அடையாளம் கண்டுகொண்டேன். அவர் என்னுடைய நூல்கள் சிலவற்றையும் வெளியிட்டிருக்கிருர். அவரிடம் சிறு தொகையைப் பின்னர் தருவதாகக் கூறிக் கடனைப் பெற்றுக் கொண்டேன். விடுதிக்குச் செலுத்த வேண்டியதைச் செலுத்தினேன்.

விடுதியைவிட்டு வெளியே வந்தேன். என் உடல் இன்னும் தளர்வுற்றிருந்தது. நாள் ஒன்றுக்குப் பத்து கல் தொலைவு நடந்து வீட்டையடைய முடிவு செய்தேன். இரண்டு மணி நேரம் நடந்த பின் எனக்கு முன்னல் ஒரு வண்டி போய்க் கொண்டிருந்தது. நான் அதைக் கடந்து செல்ல எண்ணினேன். ஆனல் அதன் அருகில் சென்றபோது அது ஊர் ஊராகச் சுற்றும் நாடகக்குழு ஒன்றின் வண்டியென்பதை யறிந்தேன். அந்த வண்டியில் திரைச் சீலைகளும் நாடக அரங்கிற்கு வேண்டிய பிற பொருள்களும் இருந்தன. அடுத்த ஊரில் நாடகம் நடைபெற விருந்ததால் அதை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

அந்த வண்டியை ஒருவன் ஓட்டினன். அவனுடன் நாடகக் குழுவில் ஒருவர் மட்டும் காவலுக்கு வண்டியிலிருந்தார். நாடகக் குழுவின் மற்ற உறுப்பினரெல்லாம் மறுநாள்தான் வருவதாக அறிந்தேன். 'வழியில் கிடைக்கும் நல்ல துணை குறுக்கு வழியில் செல்வது போல' என்பது பழமொழி. எனவே நான் அந்த நடிகருடன் பேச ஆரம்பித்தேன். என்னிடமும் ஒருகாலத்தில் நடிப்புத் திறனிருந்த தாதலால் நாடகங்களைப் பற்றித் தாராளமாகப் பேசினேன். எனினும் தற்கால மேடையைப் பற்றி எனக்கொன்றும் தெரியாதாகையால் அன்றைய நாடக ஆசிரியர்கள் யார் என்று அவரிடம் கேட்டேன். இவ்வாறு நாடகங்களைப் பற்றியும் ஆசிரியர்களைப் பற்றியும் பேசிக் கொண்டே ஊரையடைந்தோம்.



இதற்குள் நாடக அரங்கிற்குத் தேவையான பொருள்களை ஏற்றிச் சென்ற வண்டி ஊரையடைந்துவிட்டதால் நாங்கள் வருவதை அது எல்லோர்க்கும் தெரியப்படுத்திவிட்டது. எங்களைப் பார்க்கப் பலர் கூடிவிட்டனர். நாடகத்தைப் பார்க்க வருபவர்களைவிட வெளியே வேடிக்கை பார்க்க வருபவர்கள்தாம் அதிகம் என்று என்னுடன் வந்த நடிகர் குறிப்பிட்டார். என்னைச் சுற்றி ஒரு பெருங்கூட்டம் கூடும்வரை இதைப் போன்றவருடன் இருப்பது எனக்குத் தகுதியற்றது என்பதை நான் உணர்ந்தேன். எனவே விரைவாகச் சென்று பக்கத்திலிருந்த விடுதிக்குள் நுழைந்தேன்.

அங்கு என்னை நடுக் கூடத்திற்குச் செல்லும்படி கூறினர். நல்ல உடையணிந்த ஒருவர் என்னைப் பார்த்து நான் உண்மையிலேயே மதகுருவா அல்லது நாடக உடையிலே இருக்கிறேனு என்று கேட்டார். நான் உண்மையைக்கூறி எனக்கும் நாடகக் குழுவுக்கும் ஒருவிதத் தொடர்பும் இல்லையென்று விளக்கியுள்ளேன். இதைக் கேட்ட அவர் என்னையும் என்னுடனிருந்த நடிகரையும் தம்முடன் சிற்றுண்டியருந்த வேண்டினர். அவர் அரசியலைப்பற்றிப் பல

வாறு பேசினர். அவர் குறைந்தது ஒரு பாராளுமன்ற உறுப்பினராகவாவது இருப்பார் என்று எண்ணினேன். விடுதியில் இரவு உணவுக்கு என்ன இருக்கிறது என்று கேட்டார். பின் நானும் நடிகரும் அவர் வீட்டிலேயே உணவருந்த வேண்டுமென்று வற்புறுத்தினர். நாங்கள் முதலில் அதை மறுத்தாலும் பிறகு ஒத்துக்கொண்டோம். இது அவரைப்பற்றி நான் எண்ணியதை வலியுறுத்தியது.

---

## 19. எதிர்பாராத சந்திப்பு

நாங்கள் உண்ணுவதற்காகச் சென்ற வீடு கிராமத்தின் கோடியில் இருந்தது. கோச் வண்டி தயாராக இல்லாததால் நடந்தே சென்று விடலாம் என்று எங்களை விருந்துக்கழைத்தவர் நடத்திச் சென்ருர். ஊரைவிட்டு ஒதுங்கியிருந்த அந்த வீடு அந்தப் பகுதியிலேயே மிக அழகான மாளிகையாக விளங்கியது. எங்களை உட்காரச்சொன்ன அறை மிக அழகாக அலங்கரிக்கப் பட்டிருந்தது. அவர் உணவை ஆக்குவதற்குரிய கட்டளைகளையிட உள்ளே சென்ருர். என்னுடன் வந்த நடிகர் கண்ணையசைத்து ஏதோ கிட்டுதற்கரிய நல்வாய்ப்புத்தான் இங்கு வந்து சேர்ந்திருக்கிருேம் என்று குறிப்பிட்டார். விரைவில் வீட்டுக்காரர் வந்தார். அவர் பின்னல் சுவையான உணவும் வந்தது. மூன்று பெண்களை அவர் அறிமுகப் படுத்தினர். சாப்பிடும் பொழுது அவர் பேசத் தொடங்கினர். பெரும்பாலும் அரசியலைப் பற்றித்தான் பேசினர். அவர் நாட்டு விடுதலை, அவருடைய நிலக்கரிச் சுரங்கங்கள், நாட்டின் பொருள்நிலை ஆகியவற்றைப் பற்றி மிக விரிவாக ஒரு மணிநேரம் பேசினர்.

அவர் பேச்சைக் கேட்பதில் நான் காட்டிய ஊக்கம் பேச்சை மிகமிக நீட்டிவிட்டது. ஆனல் நடிகருக்குப் பொறுமை இல்லை. பல முறை பேச்சைத் தடுக்கப் பார்த்தார். திடீரென்று அந்த வீட்டுக்காரர் "என்ன, இவ்வளவு நேரம் மதகுரு உடையில் உள்ள கிறித்துவரிடமா பேசிக்கொண்டிருந்தேன். கார்ன்வாலிலுள்ள என் நிலக்கரிச் சுரங்கங்கள்மீது ஆணையிட்டுக்

கூறுகிறேன். இவர் இந்த இடத்தைவிட்டு உடனே போய்விட வேண்டும்.'' என்று கூவினர்.

நான் என்னுடைய நடவடிக்கைகளுக்காக உடனே மன்னிப்புக் கேட்டேன்.

''மன்னிப்பா, இதைப் போன்றதற்குப் பத்தாயிரம் முறை மன்னிப்புக் கேட்டாலும் காணுது. வேறெதுவும் மோசமாக நிகழாமலிருக்க நீங்கள் உடனே இந்த வீட்டைவிட்டு வெளியேற வேண்டும்.''

நான் மறுபடியும் மன்னிப்புக் கேட்க எண்ணும் பொழுது வாயிற் கதவு திறக்கும் ஓசை கேட்டது. உடனே எங்களுடனிருந்த இரண்டு பெண்களும் ''அய்யோ, நம்முடைய பெருமகனும் பெருமாட்டியும் வந்துவிட்டனர்'' என்று கூச்சலிட்டனர்.

அப்பொழுதுதான் எங்களுக்கு இதுவரை விருந்தளித்தவர் அந்த வீட்டு வேலையாள் எனத் தெரிந்தது அவனுடைய பெருமகன் வீட்டில் இல்லாததால் வீட்டுக்காரரைப் போலச் சிறிது நேரம் நடித்து மகிழ்ந்திருக்கிருன். அப்பொழுது அந்த அறையினுள் நுழைந்த பெருமகனையும் பெருமாட்டியையுங் கண்டு எனக்குக் குழப்பம்தான் அதிகமாயிற்று. அவர்களும் சிரித்து மகிழ்ச்சியாயிருப்பதைக் கண்டு வியப்படைந்தனர்.

அப் பெருமகன் எங்களைப் பார்த்து ''ஐயா, நானும் என் மனைவியும் உங்களுக்குப் பணிவிடை செய்யக் காத்திருக்கிறோம். ஆனுல் இதைப் போல் திடீர் என்று எதிர்பார்க்கவில்லை. உங்களுடைய எதிர்பாராத வரவு எங்களை எல்லையற்ற மகிழ்ச்சியில் ஆழ்த்திவிட்டது'' என்று கூறினர்.



எங்களுடைய வரவு எப்படி அவர்களுக்கு எதிர்பாராததாய் இருந்ததோ அவ்வாறே அவர்களுடைய வரவும் எங்களுக்கு எதிர்பாராததாய் இருந்தது. என்னுடைய முட்டாள்தனத்தைக் கண்டு நான் வாய் மூடி நின்றேன். ஆனுல் அடுத்து அந்த அறையினுள் வந்த பெருமாட்டியைக் கண்டு வியப்புற்றேன். அவள் என் அன்புக்குரிய அரபெல்லா வில்மோட்டைத் தவிர வேறு யாரும் இல்லை. அவளைத்தான் என் மூத்த மகன் ஜியார்ஜுக்குத் திருமணம் செய்ய எண்ணியிருந்தோம். அது எவ்வாறு தடைபட்டது என்பதை முன்னரே விளக்கியுள்ளேன்.

''ஐயா, உங்களுடைய எதிர்பாராத வரவினுல் எவ்வளவு மகிழ்ச்சியூட்டி விட்டீர்கள் தெரியுமா? டாக்டர் பிரிம்ரோசை விருந்தினராகப் பெற்றிருக்கிறோம் என்பதை என்னுடைய மாமாவும் அத்தையும் அறிந்தால் பெருமகிழ்ச்சிக்குள்ளாவர் என்பது உறுதி.''

என்னுடைய பெயரைக்கேட்டு அந்த முதியவர் இருவரும் அறையினுள்வந்து என்னை மலர்ந்த முகத்துடன் வரவேற்றனர். நான் அங்கு எப்படி வந்தேன் என்பதை அவர்களிடம் கூறியபோது அனைவரும் சிரித்தனர். அந்த வேலையாளை முதலில் வேலையை விட்டு நீக்கிவிட முடிவு செய்தனர். ஆனுல் நான் இடையில் குறுக்கிட்டு அவனை மன்னித்துவிடுமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க விட்டுவிட்டனர்.

அந்த வீட்டிற்குரியவர்களான திரு அர்னுல்டும் அவர் மனைவியும் என்னைச் சில நாட்களுக்கு அங்கேயே தங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். அவர்களுடைய மருமகளும் என்னுடைய மாணவியுமான அரபெல்லாவும் என்னைத் தங்கும்படி வற்புறுத்தினுள்.

நானும் அதற்கு ஒத்துக்கொண்டேன். அன்றிரவு படுப்பதற்கு ஒரு வசதியான அறையைக் கொடுத்தனர். மறுநாள் காலை அரபெல்லா என்னுடன் பூந்தோட்டத்தில் நடந்து வந்தாள். தோட்டத்தின் அழகிய இடங்களைச் சுட்டிக் காட்டினாள். திடீரென்று என் மகன் ஜியார்ஜ் எங்கிருக்கிறான் என்று கேட்டாள்.

"நான் மூன்று ஆண்டுகளாக அவனைச் சந்திக்கவில்லை. அவன் தன்னுடைய நண்பர்களுக்கோ அல்லது எனக்கோ யாருக்கும் கடிதம் எழுதுவதில்லை. அவன் எங்கிருக்கிறான் என்றும் தெரியவில்லை. நான் அவனையும் சந்திக்க முடியாது, பழைய மகிழ்ச்சியையும் அடைய முடியாது. வேக்பீல்டில் கழித்ததைப் போன்ற மகிழ்ச்சியான நாட்களை இனிக் காண்பது அரிது. என்னுடைய குடும்பம் சிறிதுசிறிதாகக் கலைந்துகொண்டே வருகின்றது. வறுமை எங்களுக்குத் தேவையை மட்டும் கொணரவில்லை. இழிவையும் உண்டாக்கியுள்ளது"

நான் இவ்வாறு கூறியதைக் கேட்ட அரபெல்லா கண்ணீர் வடிக்கலானாள். அவள் எங்கள்மீது கொண்டிருந்த பற்றைக் காலம் மாற்றவில்லை என்பதறிந்து மன ஆறுதலடைந்தேன். நாங்கள் ஊரைவிட்டு வந்த பின்னும் அவள் திருமணத்திற்கு ஒத்துக்கொள்ளவில்லை என்பது தெரிந்தது. அவள் தோட்டத்தின் பல நடைபாதைகளையும் வளைவுகளையும் காட்டினாள். ஆனால் ஒவ்வொன்றைக் காட்டும் பொழுதும் என் மகனைப் பற்றி ஒவ்வொரு கேள்வி கேட்டாள். இவ்வாறு காலைப்பொழுதை நாங்கள் செலவிட்டோம்.

நண்பகலுணவு சாப்பிடுவதற்குரிய நேரம் வந்துவிட்டதை உணர்த்த மணி அடித்தது. நாங்கள்



வீட்டினுள் சென்றபொழுது அங்கே நாடகக் குழுவின் மேலாளர் அன்று மாலை நடக்கவிருக்கும் நாடகத்திற்கு நுழைவுச் சீட்டு விற்பதற்காக வந்திருந்தார். அந் நாடகத்தில் ஒரேசியோ பாகத்தில் இதுவரை மேடையேறி நடிக்காத ஒருவர் நடிப்பதாகக் கூறினார். அவரைப் பற்றி அந்த மேலாளர் வானளாவப் புகழ்ந்தார். இவரைப்போல் வேறு யாரும் நடித்துப் பார்த்ததில்லை என்றும் கூறினார்.

"நடிப்பு என்பது ஒரு நாளில் கற்றுக்கொள்ளக் கூடிய கலை அன்று. புதியவர் நடிப்பதற்கெனவே தோன்றியவர். அவருடைய குரலும் தோற்றமும் பண்பும் பாராட்டத்தக்கன. நாங்கள் இந்த ஊருக்கு வரும் வழியில் எதிர்பாராத வகையில் அவரைச் சந்தித்தோம்" என்று சொன்னார்.

இது எங்கள் ஆவலைத் தூண்டியது. பெண்கள் விருப்பத்திற்கிணங்க நானே அவர்களுக்குத் துணையாகச் செல்ல எண்ணினேன். அன்று மாலை நாடகம் பார்க்க வந்தவர்களுள்ளேயே நான்தான் ஓரளவு படித்தவனாகையால் எங்களைப் பெரும் மரியாதையுடன் வரவேற்று முதல் வரிசையில் உட்கார வைத்துவிட்டனர். ஒரேசியோ தோன்றும்வரை நாங்கள் பொறுமையாகவே இருந்தோம். இறுதியாகப் புதிய நடிகர் மேடையில் தோன்றினார். அவன் என் மகன் என்பதையறிந்தவுடன் எனக்கேற்பட்ட உணர்ச்சி பெற்றோர்களுக்குத்தான் புரியும். அவன் மக்களை நோக்கித் திரும்பி நடிக்கத் தொடங்குமுன் என்னையும் அரபெல்லாவையும் கண்டவுடன் பேசாது அசையாமல் நின்றுவிட்டான்.

திரைக்குப் பின்னிருந்த நடிகர்கள் இயற்கையான கூச்சத்தினுல் அவன் நடிக்காமல் நிற்கிருன் என்றெண்ணி அவனை நடிக்கும்படி தூண்டிவிட்டனர். அவன் நடிப்பதற்குப் பதிலாகக் கண்களிலே நீர் பொங்க மேடையை விட்டுச் சென்று விட்டான். இதனுல் ஏற்பட்ட அதிர்ச்சி மாறுமுன் அரபெல்லா முகம் வெளுத்து உடல் நடுங்க வீட்டிற்குச் செல்வோமென்ருள்.

வீட்டையடைந்தபோது நாங்கள் மிக விரைவில் திரும்பிவிட்டதைக் கண்டு அர்னுல்டு வியப்படைந்தார். அவரிடம் அந்தப் புதிய நடிகர் என் மகன் என்று கூறினேன். அவர் கோச் வண்டியை அனுப்பி அவனை அழைத்துவரச் சொன்னுர். அவன் வீட்டிற்கு வந்தபொழுது அர்னுல்டு அவனை அன்புடன் வரவேற்ருர். நான் வழக்கமான அமைதியுடன் வரவேற்றேன். திருமதி அரபெல்லா வரவேற்றதில் மகிழ்ச்சியால் ஏற்பட்ட குழப்பமும் தடுமாற்றமும் காணப்பட்டன.

## 20. ஞானக்கிறுக்கு

இரவு உணவு உண்டபின் திருமதி அர்னுல்டு இரண்டு வேலையாட்களை அனுப்பி என் மகனுடைய சாமான்களை எடுத்துவரலாமா என்று கேட்டார்கள். முதலில் அவன் மறுத்தான். ஆனுல் அவர்கள் மீண்டும் வற்புறுத்தியபொழுது தன்னுடைய சொத்தெல்லாம் ஒரு தடியும் ஒரு பயணப் பையும்தான் என்று அவர்களிடம் தெரிவித்தான்.

"என்ன, நீ எங்களை விட்டுச் செல்லும் பொழுது தான் ஏழையாயிருந்தாய். இன்றும் ஏழையாக வல்லவா திரும்பி வந்திருக்கிருய்? ஆனுல் உலகத்தின் பெரும் பகுதியையாவது பார்த்திருப்பாய் என்று எண்ணுகின்றேன்" என்று என் மகனிடம் கேட்டேன்.

"ஆம் அப்பா, ஆனுல் செல்வத்தின் பின்னுல் செல்லுதல் அதை அடைவதற்குரிய வழி அன்று; அதனுல்தான் கடைசியில் அதன் பின்னுல் தொடர்வதை நிறுத்தி விட்டேன்."

"உங்களுடைய வீரச் செயல்களைக் கேட்டால் இனிமையாக இருக்குமென்று நான் எண்ணுகிறேன். அதன் முதல் பகுதியை அரபெல்லா கூறக் கேட்டிருக்கிறேன். பிற்பகுதியையும் நீங்கள் கூறினுல் பொழுது நன்ருகப் போகும்" என்று திருமதி அர்னுல்டு யோசனை கூறினுர்கள்.

"அம்மா, நான் அச்செயல்களைத் திரும்பக் கூறுவதனுல் ஏற்படும் வீண்பெருமையில் பாதி அளவுகூட நீங்கள் இவற்றைக் கேட்பதனுல் இன்பம் அடைய

மாட்டீர்களென எண்ணுகிறேன். இருந்தாலும் எல்லா வற்றையும் விட நான் உங்களுக்கு ஒரு நிகழ்ச்சியைக் கட்டாயம் கூறுவேன். ஏனென்றால் என்னுடைய செய்திகளில் நான் செய்ததைவிடப் பார்த்தது தான் அதிகமாக இருக்கும். என் வாழ்க்கையில் முதன் முதல் ஏற்பட்ட இழப்பு பெரியது. அது எனக்குப் பெரு வருத்தத்தைத் தந்தாலும் நான் அதிலேயே மூழ்கிவிட வில்லை. என்னை விட வேறு யாருக்கும் இவ்வளவு திறமை இருக்க முடியாது. ஒரு சமயத்தில் சிறு வருவாய் கிடைப்பினும் அடுத்த முறை அதிகமாகக் கிடைக்கு மென்று எதிர் பார்ப்பேன். நான் ஊரை விட்டுப் புறப்பட்டபொழுது நேரே இலண்டனுக்குச் சென்றேன். வழியிலே பறந்து திரிந்த பறவைகளைப் போலக் கவலையில்லாதிருந்தேன். இலண்டனில் ஒவ் வொருவிதத் திறமைக்கும் அதற்குரிய பாராட்டும் வெகுமதியும் கிடைக்கும் என்றெண்ணினேன்.

இலண்டனை யடைந்தவுடன் நம்முடைய நெருங் கிய உறவினர் ஒருவர்க்கு நீங்கள் கொடுத்த ஆதரவுக் கடிதத்தை அவரிடம் சேர்ப்பதை முதல் வேலையாகக் கொண்டேன். அவர் என்னைவிட நல்ல நிலையில் வாழ்ந்து வந்தார். கல்வி நிலையத்தில் வேலையாளாக அமருவதுதான் என் முதல் திட்டம். நான் அதை அவரிடம் கூறினேன். அவர் என் திட்டத்தைக் கேட்டு முகத்தைச் சுளித்தார்.

“அது உனக்குச் சரியான வேலைதான். நானும் ஒரு விடுதியுடன் கூடிய பள்ளியில் வேலையாளாகப் பணியாற்றியிருக்கிறேன். அதைவிடச் சிறைக்காவல் வேலை செய்யலாம். படுக்கையிலிருந்து முதலில்



எழுந்து கடைசியில் படுக்கச் செல்ல வேண்டும். பள்ளித் தலைவர் அடிப்பார். தலைவி முகத்தைக் கண்டு வெறுப்பாள். பையன்கள் துன்புறுத்துவார்கள். முதலில் நீ இந்த வேலைக்குத் தகுதிதானா என்று பார்ப் போம். நான் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்.

‘இந்த வேலைக்கென்று சிறு வயதிலேயே வளர்க் கப் பட்டாயா?’

‘இல்லை.’

‘பையன்கள் தலையை வாரிவிடத் தெரியுமா?’

‘தெரியாது.’

‘உனக்குச் சின்னம்மை வந்திருக்கிறதா?’’

‘இல்லை.’

‘மூன்று பேருடன் ஒரே படுக்கையில் படுக்க முடி யுமா?’

‘முடியாது.’

‘நீ நன்றாகச் சாப்பிடுவாயா?’

‘ஆம்.’

‘‘நீ இப்படி யெல்லாம் இருந்தால் பள்ளிவேலைக்கே ஒத்துவர மாட்டாய். நீ நன்றாகப் படித்திருக்கிறாய். ஊக்கமிருக்கின்றது. நீ ஏன் என்னைப்போல எழுத்தா ளராக மாறக்கூடாது. ஆனால் பெரும் அறிஞர்களெல் லாம் பட்டினி கிடந்திருக்கிறார்கள் என்பதை நீ புத்த கங்களில் படித்திருக்கிறாய். அதைப்பற்றி இப்பொழுது கவலைப்படாதே. இப்பொழுது இதே நகரில் நாற்பது பேர் தங்கள் மந்த மதியைக் கொண்டே இத்தொழிலில் பொருளீட்டிப் பெருஞ் செல்வர்களாய் வாழுவதை

உனக்குக் காட்டுவேன்.'' என்று எனக்கு அவர் அறிவுரை கூறினர்.

"ஏவலாள் தொழிலில் உரிய மதிப்புக் கிடைக்காது என்று தெரிந்தவுடன் நான் அவருடைய திட்டத்தை ஒத்துக் கொண்டேன். நான் ஒரு புதுவிதமான நூலையும் எழுத எண்ணினேன். என்னுடைய முறைகளை உலகம் முழுவதும் எதிர்க்கும் என்று நான் எண்ணினேன். எனவே முதலில் உலகம் முழுவதையும் நான் எதிர்ப்பதற்கு என்னைத் தயார் செய்து கொண்டேன்.''

"அதுசரி மகனே. நீ எதைப்பற்றி எழுதினய்? ஒருதார மணத்தின் முக்கியத்தைப் பற்றி நீ எழுதாமல் விட்டிருக்கமாட்டாய் என்று எண்ணுகின்றேன். நான் குறுக்கிடுகிறேன். நீ மேலே சொல்லு. நீ உன்னுடைய கொள்கைகளை வெளியிட்டாய். படித்த உலகம் உன்னுடைய கொள்கைகளைப் பற்றி என்ன சொல்லிற்று.''

"படித்த உலகம் என்னுடைய கொள்கைகளைப் பற்றி ஒன்றுமே கூறவில்லை. அவர்களில் ஒவ்வொருவரும் தம்மையும் தம் நண்பர்களையும் புகழ்வதிலும் பகைவர்களை இகழ்வதிலும் ஈடுபட்டுள்ளனர். எனக்கு இரண்டும் கிடையாது. அதனல் நான் புறக்கணிக்கப்பட்டேன்.

ஒருநாள் மாலை நான் காபி விடுதியில் காபி அருந்திக் கொண்டிருந்தபொழுது என் எதிரில் ஒருவர் வந்து உட்கார்ந்தார். சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்த பின்னர் அவர் தம் பையிலிருந்து ஒருதாளை எடுத்தார். அவர் ரோம் நகரக் கவிஞர் பிராபர் சியசு என்பவரின் கவிதைகளைப் புதிதாகப் பதிப்பிக்கத் தொடங்கியிருப்பதாகவும் அதன் ஒரு பிரதியை நான் வாங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். பணத்தைக் கொடுத்து ஒப்பந்தத் தாளில் கையெழுத்துப் போடும்படி வேண்டினர். நான் என்னிடம் பணம் இல்லை என்று பதில் கூறினேன். என்னுடைய வருவாயைப் பற்றிக் கேட்டார். என்னுடைய வருவாயும் என்னுடைய பணப்பையைப் போல ஒன்றும் இல்லை என்று கூறினேன்.



உடனே அவர் "உங்களுக்கு இந்த நகரத்தில் பழகத் தெரியவில்லை. நான் உங்களுக்குக் கற்றுக் கொடுக்கிறேன். இந்த ஒப்பந்தங்களைப் பாருங்கள். பன்னிரண்டாண்டுகளாக இதே ஒப்பந்தங்களை வைத்து வாழ்ந்து வருகிறேன். சுற்றிப் பார்ப்பதற்காக யார் வந்தாலும் சரி அல்லது வெளியூர் ஆளாக இருந்தாலும் சரி சிறிது படித்தவர்களும் செல்வர்களுமாயிருந்தால் உடனே அவரிடம் சென்று சந்தாத் தொகையை வாங்கி விடுவேன். முதலில் அவர்கள் மனங்குளிரப் புகழ்வேன். பிறகு ஒப்பந்தத்தை நீட்டுவேன். அவர்கள் உடனே அத் தொகையை எடுத்தவுடன் கொடுத்து விட்டால் நான் அந்நூலை அவர்களுக்கே காணிக்கையாகப் படைத்து விடுகிறேன் என்று கூறி அதற்கு உரிய தொகையைப் பெற்றுக் கொள்வேன். அதைக் கொடுத்து விட்டால் நூலின் முதல் பக்கத்தில் அவர்களுடைய குடும்பத்தின் பெருமைக்குரிய சின்னத்தைப் பொறிப்பதாகக் கூறி அதற்குரிய தொகையையும் பெறுவேன். இவ்வாறு அவர்களுடைய ஆடம்பரத்தையே பயன்படுத்திக்கொண்டு அவர்களையே எள்ளி நகையாடுவேன். இப்பொழுது

என்னை உங்களுக்கு நன்றாகத் தெரியும். நீங்கள் எனக்குச் சிறு உதவி செய்யவேண்டும். இத்தாலியிலிருந்து புகழ்பெற்ற ஒருவர் திரும்பி வந்திருக்கிறார். அவருடைய கூலியாளுக்கு என்னை நன்றாகத் தெரியும். நீங்கள் இவ்வொப்பந்தத்தை அவரிடம் எடுத்துச் சென்று நான் கூறியவாறு எவ்வளவு தொகை பெற முடியுமோ அவ்வளவு பெற்று வாருங்கள். நான் அதில் பாதியை உங்களுக்குக் கொடுத்து விடுகிறேன்.''

''என்ன ஜியார்ஜ் இப்படித்தான் இன்றுள்ள கவிஞர்கள் பிழைக்கிறார்களா? உயர்ந்த திறமையுடைய ஆட்கள் இவ்வாறு பிச்சையெடுத்தா திரிகின்றார்கள்? ரொட்டித் துண்டைப் பெறுவதற்காக இவ்வாறு தங்களை இழிவுபடுத்திக் கொள்கிறார்களா" என்று நான் என் மகனிடம் கேட்டேன்.

"இல்லை அப்பா, உண்மையான கவிஞன் எவனும் இவ்வளவு இழிவான செயலில் இறங்கமாட்டான். ஏனெனில் உண்மையான திறமை எங்கிருந்தாலும் அங்கு கர்வமும் இருக்கும். நான் இப்பொழுது கூறியவர்களைப் போன்றவர்களெல்லாம் பிச்சையெடுப்பதற்கென்றே கவிஞர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள்.''

''இத் தரக்குறைவான செயலில் ஈடுபட என் மனம் இடங்கொடுக்கவில்லை. உணவு பெறும் அளவுக்காவது எழுத வேண்டுமென்று முடிவு செய்து கொண்டேன். ஆனால் வெறும் உழைப்பு மட்டும்தான் வெற்றியை யளிக்கக்கூடிய இத்தொழிலுக்கு நான் தகுதியற்றவனாக விளங்கினேன். நான் எழுதியவை இதழ்களின் நடுவில் எங்கோ வெளியாயின. இதைக்



கவனிப்பார் யாருமில்லை. என்னுடைய நடையின் எளிமையையும் தொடர்களின் கட்டுக்கோப்பையும் படித்து உணர்ந்து கொள்வதற்கு மக்களுக்குப் போதிய நேரமில்லை.''

''எனவே என்னைப் போல் ஏமாற்றமடைந்த எழுத்தாளர்களோடு கூட்டுச் சேர்ந்தேன். அவர்கள் ஒருவரையொருவர் பாராட்டுவார்கள். வெறுப்பார்கள். தங்களுக்குள் வருந்திக் கொள்வர். புகழ்பெற்ற எழுத்தாளர்களுடைய முயற்சிகளில் திறமை அதிகமாகக் காணப்படினும் எங்களுக்கு மன நிறைவளிக்கக்கூடிய வகையில் இன்பம் பயக்கவில்லை. பிறருடைய ஆற்றல் எனக்கு இன்பம் அளிக்கவில்லை. எனக்கு மனநிறைவு ஏற்படும் வகையில் படிக்கவோ எழுதவோ முடியவில்லை. ஏனெனில் பிறருடைய எழுத்து சிறந்ததாயிருப்பின் அதைக் கண்டு பொறாமை எழுந்தது. நான் பணத்துக்காக எழுதியதால் அதிலும் இன்பமில்லை."

''இதைப்போன்ற வழக்கமான கவலைகளுடன் ஒரு நாள் நான் பூங்காவில் உட்கார்ந்திருந்தேன். பல்கலைக் கழகத்தில் என்னுடன் நெருங்கிப் பழகிய ஒருவர் என்னை நோக்கி வந்தார். நாங்கள் ஒருவருக்கொருவர் வணக்கம் செலுத்திக்கொண்டோம். என்னுடைய அழுக்கு உடைகளைக் கண்டு நானே வருந்திக்கொண்டேன். ஆனால், நெட்தார்ன்கில் உண்மையில் நல்ல இயல்புடையவர்.''

"என்ன ஜியார்ஜ்? அவருடைய பெயர் தார்ன்கில் தானே. அப்பொழுது நிச்சயமாக அவர் என்னுடைய நிலக்கிழாராகத்தான் இருக்கவேண்டும்," என்று கூறினேன் நான்.

"தார்ன்கில் உங்கள் பக்கத்தில் இருக்கிருரா ? அவர் எங்கள் குடும்பத்தின் நெடுநாள் நண்பராயிற்றே. விரைவில் இங்கு வருவார் என்று எதிர்பார்க்கிறேன்" என்று திருமதி அர்னுல்டு கூறினுள்.

என்னுடைய மகன் தன் கதையைத் தொடங்கினுன். "என் நண்பரின் முதல் வேலை என்னுடைய உடையை மாற்றிப் புது உடையைக் கொடுத்தார். அவருடன் உணவு உண்டேன். அவருக்காக ஏலத்தில் பங்கு கொள்வதும் படங்களுக்குப் போவதும், கோச் வண்டியில் செல்லுவதும்தாம் என்னுடைய வேலை. இவை தவிர வேறு இருபது வேலைகளும் அக் குடும்பத்தில் எனக்கிருந்தன. எந்தச் சிறு தொழிலாயிருந்தாலும் யாரும் சொல்வதற்கு முன் செய்து விடுவேன். வேலையாட்களுடைய குழந்தைகட்கெல்லாம் நான்தான் கடவுள் தந்தையாக இருப்பேன். பாடச் சொன்னுல் பாடவேண்டும். எப்பொழுதும் மகிழ்ச்சியுடனிருக்கவேண்டும். அடக்கமாகவும் இருக்க வேண்டும்."

"இந்த வேலையில்கூட எனக்குப் போட்டியில்லாமலில்லை. கப்பல் தலைவன் ஒருவன் என்னுடைய நண்பரின் நட்பைப் பங்கு போட்டு நான் செய்யவேண்டிய வேலைகளை அவனே அவருக்குச் செய்து விடுவான். இதற்கிடையில் என் நண்பரும் ஊரை விட்டுப் போக வேண்டியிருந்தது. எனவே அவர் தன் சிற்றப்பாவான திரு. வில்லியம் தார்ன்கில் என்பவருக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

திரு வில்லியம் அரசாங்கத்தில் ஒரு நல்ல பதவியிலிருந்தார். நான் அவரிடம் அறிமுகக் கடிதத்தை எடுத்துச் சென்றேன். அவருடைய பணியாட்கள் என்னை முக மலர்ச்சியுடன் வரவேற்றனர். சிறிது நேரம் கழித்து அங்கு வந்த திரு வில்லியம் அவர்களிடம் என் கடிதத்தைக் கொடுத்தேன்.



அதைப் படித்த அவர் "இந்த ஆதரவுக் கடிதத்தை எழுதிக் கொடுக்கு மளவிற்கு நீ என்னுடைய உறவினனுக்கு உதவி செய்ததாகத் தெரிகிறது. அவனுடைய தீய குணங்களுக்கு நீ உதவி செய்திருக்கிருய். உனக்கு நான் கொடுக்கக் கூடிய வேலை ஒன்றும் என்னிடம் இல்லை. இது உன்னுடைய குற்றத்திற்குச் சரியான தண்டனையாகும்." என்று கூறிச் சென்று விட்டார்.

இது நியாயமானது என்பது எனக்குத் தெரியுமாதலால் நான் இதைப் பொறுத்துக்கொண்டேன். எனினும் என் தாழ்ந்த விண்ணப்பத்தை எழுதி என்னை மன்னித்து வேலை கொடுக்குமாறு கேட்டேன். அந்தக் கடிதத்தை உள்ளே அனுப்புவதே மிகக் கடினமாக இருந்தது. வேலையாளுக்கு என்னிடம் இருக்கும் பணத்தில் பாதி கொடுப்பதாகக் கூறி அவனிடம் அக் கடிதத்தை உள்ளே கொண்டு சேர்த்து விடுமாறு கெஞ்சினேன். நெடுநேரம் ஆகியும் எவரும் வரவில்லை. ஒவ்வொரு முறை காலடி ஓசை கேட்கும்பொழுதும் எழுந்து ஆவலுடன் பார்ப்பேன். இறுதியாக அவரே வந்தார்.

"நீ தான் இந்தக் கடிதத்தை எழுதியவனு?" என்று என்னைக் கேட்டார். நான் பணிவாகத் தலையை ஆட்டினேன். "இதனுல் என்ன தெரிகிறதென்ருல்" அவர் தொடருமுன் ஓர் அட்டையைக் கொண்டுவந்து வேலையாள் கொடுத்தான்.

அவர் உடனே அறையைவிட்டு வெளியே சென்ருர். அதற்குள் ஒருவன் வந்து அவர் வண்டியில் வெளியே போவதாகக் கூறினன். நான் வண்டியை நோக்கி ஓடினேன். அங்கே என்னைப் போல் மூன்று பேர் நின்றுகொண் டிருந்தனர். நானும் அவர்களுடன் சேர்ந்து கொண்டேன்.

நான் பதிலுக்குக் காத்திருக்கலாமா என்று அவரிடம் கேட்டேன். அவர் ஏதோ கூறினர். ஆனல் அது சக்கரங்களின் ஒலியுடன் இரண்டறக் கலந்துவிட்டது."

"இதனல் நான் மிகச் சோர்வடைந்து நடந்து செல்கையில் அமெரிக்காவில் அடிமை வேலை வாங்கித் தரும் திரு. கிரிச்ப் அலுவலகத்தைப் பார்த்தேன். அங்கே சென்றேன். என்னைப்போல் பலர் அங்குக் காத்துக் கொண்டிருந்தனர். இறுதியாக அவரும் வந்தார். என்னிடம் சிரித்துச் சிரித்துப் பேசினர். கடந்த ஒரு மாதத்தில் என்னிடம் அவ்வாறு யாரும் பேசியது கிடையாது. எனக்குச் செயலாளர் பதவி வாங்கித் தருவதாக உறுதி கூறினர். அவர் பொய் சொல்கிருர் என்று தெரிந்தும் அவரிடம் அரை கினி கொடுத்தேன். அது அவருடைய முப்பதாயிரம் பவுன் தொகையோடு சென்று ஒட்டிக் கொண்டது."

"வழியில் கப்பல் தலைவர் ஒருவரைச் சந்தித்தேன். மறுநாள் அவருடைய கப்பல் ஆம்ஸ்டர்டாமிற்குச் செல்வதாகக் கூறினர். அங்கு நான் சென்ருல் அங்குள்ள டச்சு மக்களுக்கு ஆங்கிலம் கற்றுக்கொடுத்துப் பிழைக்கலாம் என்ருர். அதன்படி அவருடைய கப்பலிலேயே அதற்குரிய கட்டணத்தைக் கொடுத்துவிட்டு ஆம்ஸ்டர்டாமை அடைந்தேன். அங்கு நான் முதலில் சந்தித்த ஒருவரிடம் பேசிப் பார்த்தேன். அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. அதே சமயத்தில் அவர்கள் கூறியதும் எனக்கு விளங்கவில்லை. அப்பொழுதுதான் எனக்கு ஆங்கிலத்தை டச்சுக்காரருக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்ருல் முதலில் அவர்கள் எனக்கு டச்சு மொழியைக் கற்றுத்தர வேண்டுமென்பது புரிந்தது. இதை முன்னரே யோசியாமற் போனதற்கு வருந்தினேன்."



"திரும்பி இலண்டனுக்கே சென்றுவிடலாமென்று எண்ணிக் கொண்டிருக்கையில் லூவெயின் என்ற ஊரிலிருந்து திரும்பிய ஐரிசு மாணவர் ஒருவரைச் சந்தித்தேன். அவர் லூவெயின் பல்கலைக் கழகத்திலேயே கிரேக்க மொழி தெரிந்தவர் இருவர்கூட இரார் என்று கூறினர். கிரேக்க மொழி கற்றுக் கொடுக்கலாமென்று அப் பல்கலைக் கழகத்திற்கே சென்றேன். அங்குள்ள முதல்வரையே நேரிற் சென்று பார்த்துவிடலாம் என்று அவரைப் பார்த்தேன். என்னுடைய நோக்கத்தை அவரிடம் கூறினேன். முதலில் அவர் என் திறமையில் ஐயுற்ருர்.

பின்னர் "நான் இதுவரை கிரேக்க மொழி படிக்கவில்லை. நான் அதற்காக வருந்தவுமில்லை. அது இல்லாமலேயே பத்தாயிரம் பிளாரின் ஊதியம்பெறுகிறேன். எனக்குக் கிரேக்கம் தெரியாது. அதனல் எனக்கு அதில் நம்பிக்கையில்லை. எனவே உங்கள் சேவையும் எனக்குத் தேவையில்லை" என்று கூறி வழியனுப்பினர்.

"பிளாண்டர்சு என்ற ஊருக்குச் சென்று என்னுடைய இசைத் திறமையைப் பயன்படுத்தி ஒவ்வொரு குடியானவர் வீட்டு முன்பும் பாட்டுப்பாடினேன். என்

இசையைக் கேட்டுச் சிலர் இரவு உணவும் தங்குவதற்கு இடமும் கொடுத்தனர். சிலர் ஒன்றுமே கொடுத்திலர். இவ்வாறாக இறுதியில் பாரிசு நகரை யடைந்தேன்.

"அங்கு ஓர் இளைஞனைக் கவனித்துக்கொள்ளும் பொறுப்புக் கிடைத்தது. அந்த இளைஞனே தன்னைத் தானே பாதுகாத்துக்கொள்வதில் சிறந்து விளங்கினான். அவன் இருநூறு ஆயிரம் பவுன்களுக்குச் சொந்தமானவன். அவன் எப்பொழுதும் பணத்தை எப்படிச் சேமிப்பது என்றுதான் பார்ப்பான். எந்தப் பொருளை வாங்க எண்ணினாலும் அதை இலண்டனில் விற்றால் எவ்வளவு தொகை அதிகமாகக் கிடைக்கும் என்று கணக்கிட்டுப் பார்ப்பான். காசு கொடுக்காமல் பார்க்கக் கூடியதை யெல்லாம் பார்ப்பான். ஏதாவது காசு கொடுத்துப் பார்க்க வேண்டியது வந்தால் அதில் ஒன்றும் காசு கொடுத்துப் பார்க்குமளவிற்கு ஒன்றும் சிறப்பில்லையென்று கூறிவிடுவான். இவ்வளவுக்கும் இவனுடைய வயது இருபத்தொன்று தான். ஒரு நாள் இலண்டனுக்குப் புறப்பட்டான். கப்பலில் செல்வது தரைமூலம் செல்லும் செலவைவிட அற்பமாக அவனுக்குப் பட்டதால் கப்பலிலேயே புறப்பட்டான். புறப்படுமுன் எனக்குச் சேரவேண்டிய தொகையில் ஒரு சிறு பகுதியை மட்டும் கொடுத்துவிட்டு ஒரே ஒரு வேலைக்காரனை மட்டும் அழைத்துக் கொண்டு புறப்பட்டு விட்டான்.

"நான் வழக்கம் போல் மீண்டும் பாடிப்பாடி உணவையும் தங்கும் இடத்தையும் பெற்று மெதுவாக இலண்டனை வந்து அடைந்தேன். முதலில் உங்களை



வந்து பார்த்துவிட்டு வேறு வேலைக்குச் செல்லலாமென்று எண்ணினேன். ஆனால் வரும் வழியில் பழைய நண்பன் ஒருவனைப் பார்த்ததால் நான் போட்ட திட்டங்கள் மாறிவிட்டன. அவன் இந்த ஊருக்கு இப்பொழுது வந்துள்ள நாடகக் குழுவினருள் ஒருவன். இந்தக் குழுவும் என்னைச் சேர்த்துக்கொள்ளத் தயங்கவில்லை. எனக்குத் தகுதியான பகுதிகளை எண்ணி எண்ணிப் பார்த்தனர். ஒவ்வொரு வேடமாக எனக்குப் பல வேடங்கள் தரப்பட்டன. இறுதியாக ஒரேசியோ வேடத்தில் நடிக்கவேண்டுமென்றனர். நான் அதை நடிக்க முயன்ற பொழுதுதான் நீங்களனைவரும் வந்து தடுத்து விட்டீர்கள்."

# 21. நட்பும் ஒற்றுமையும்

என்னுடைய மகன் தன் வரலாற்றை ஒரே தொடர்ச்சியாகக் கூறிவிடவில்லை. அவன் வந்த அன்று இரவு தொடங்கி முதற் பகுதியைக் கூறினன். மறுநாள் பிற்பகலில் அதன் பிற்பகுதியைக் கூறினன். அவன் முடிப்பதற்கும் தார்ன்கில் வந்த வண்டி வாசலில் தோன்றுவதற்கும் பொருத்தமாயிருந்தது. என்னை முதல் நாள் விருந்தளித்து ஏமாற்றிய வேலை யாள் எனக்கு நெருங்கிய நண்பனுகிவிட்டான். தார்ன்கில் அரபெல்லாவை மணந்து கொள்ளப் பல முயற்சிகள் இதுவரை செய்து விட்டார். திரு. அர்னுல்டும் அவர் மனைவியும் இந்தப் பொருத்தத் திற்கு ஒப்புதல் தந்து விட்டனர் என்று என்னிடம் மெதுவாகக் கூறினன். தார்ன்கில் வீட்டுள் நுழைந்த வுடன் என்னையும் என் மகளையும் பார்த்துவிட்டுத் திரும்பிச் செல்ல எண்ணினர். ஆனல் நானும் ஜியார்ஜூம் வணக்கம் தெரிவித்தவுடன் அவர் வணக்கம் செலுத்திவிட்டு உள்ளே வந்தார். சிறிது நேரத்தில் அவர் வந்தது அங்கு நிலவிவந்த மகிழ்ச் சியையே அதிகப்படுத்தியது.

தேநீர் அருந்திய பின் என்னை ஒரு பக்கமாக அழைத்துச் சென்று என் மகளைப்பற்றிக் கேட்டார். நான் தேடிச்சென்று கண்டு பிடிக்க முடியவில்லைஎன்று தெரிவித்தேன். அதைக்கேட்டு அவர் வியப்படைந் தார். நான் வந்த பிறகு வீட்டிற்கு அடிக்கடி சென்று என்னுடைய குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறியதாக வும் அவர்கள் அனைவரும் அவர் புறப்படும்பொழுது



கூட நலமாக இருப்பதாகவும் கூறினர். என் மகள் காணமற்போனதை என் மகனிடமோ அல்லது அர பெல்லாவினிடமோ கூறினேன என்று கேட்டார். நான் அவர்களிடம் இன்னும் கூறவில்லை என்று சொல்லிய பொழுது என்னுடைய முன்னறிவையும் எச்சரிக்கையையும் பாராட்டி எந்த வகையிலும் அதை மறைவாகவே வைத்துக் கொள்ளும்படி சொன்னர்.

“ஏனெனில் ஒருவரைப் பற்றிய இகழ்வான செய் தியைப் பலரறியக் கூறி என்ன பயன்? மேலும் நாமெல்லாம் நினைக்குமளவிற்கு லிவி அவ்வளவு தவறு புரிந்திருக்கமாட்டாள்.”

இதற்கிடையில் ஒரு வேலைக்காரன் வந்து நாட்டுப் புற நடனங்களைப் பார்க்க அழைத்ததால் எங்களுடைய பேச்சுத் தடைப்பட்டது. என்னுடைய கவலைகளைப் போக்குவதில் அவர் காட்டிய ஊக்கம் எனக்கு மகிழ்ச் சியை அளித்தது. அவர் அரபெல்லாவுடன் பழகி யதைத் தவருக எடுக்க வேண்டுமென்று எண்ணினல் தவருகவே இருக்கும். அரபெல்லா இதனல் மகிழ்ச்சி யடைந்ததாகத் தெரியவில்லை. ஏதோ அவளுடைய அத்தையின் விருப்பத்திற்காகப் பொறுத்திருப்பது போல் தோன்றியது.

என் மகன்மீது அவள் தன் அன்புப் பார்வை யைப் பலமுறை செலுத்தியுள்ளதை நான் பார்த்திருக் கின்றேன். இது எனக்கு மன நிறைவையளித்தது. இதைத் தார்ன்கில் தம்முடைய செல்வத்தாலோ அல்லது முயற்சியாலோ தடுக்க முடியவில்லை. அவரு டைய மன அமைதி எனக்குப் பெரும் வியப்பை யளித் தது. நாங்களும் திரு. அர்னுலுடைய வற்புறுத்து

தலுக்கு இணங்கி ஒரு கிழமை தங்கிவிட்டோம். ஆனால் ஒவ்வொருநாளும் அரபெல்லா என் மகன்மீது எவ்வளவு அன்பு செலுத்தினளோ அந்த அளவு தார்ன்கில் அவன்மேல் கொண்டிருந்த நட்பும் பெருகியது.

முன்னரெல்லாம் அவர் பல முறை என் குடும்பத்திற்கு உதவி செய்வதாக வாக்குறுதிகள் அளித்துள்ளார். ஆனல் இம்முறை அவருடைய தாராள மனப்பான்மை வாக்குறுதியோடு நின்றுவிடவில்லை. காலையில் நான் ஊருக்குப் புறப்படலாமென எண்ணியிருந்தேன். அப்பொழுது மலர்ந்த முகத்துடன் என்னை நோக்கி வந்தார். தம்முடைய நண்பன் ஜியார்ஜுக்கு ஒரு சிறு உதவி செய்வதாகக் கூறினர். மேற்கு இந்தியத் தீவுகளுக்கு அடுத்ததாகச் செல்லவிருக்கும் படையில் என் மகனையும் சேர்ப்பதற்கு ஆணை பெற்று வந்திருந்தார். இதற்காக நூறு பவுன்கள் கொடுப்பதாக வாக்குறுதி தந்திருக்கிறேன் என்றும் கூறினர்.

"இந்தச் சிறு உதவி செய்ததற்காக எனக்கு வேறு ஒரு வெகுமதியும் தேவையில்லை. என் நண்பனுக்கு உதவி செய்த அந்த மகிழ்ச்சியே போதும். நூறு பவுன்கள் இப்பொழுது கொடுக்க வேண்டும். இப்பொழுது உங்களிடம் அந்தப் பணம் இல்லையானல் நான் அதைக் கொடுக்கிறேன். நீங்கள் எனக்கு மெதுவாகத் திருப்பிக்கொடுத்து விடுங்கள்."

இந்த உதவிதான் எங்களுக்கும் தேவையாக இருந்தது. நான் உடனே பணத்திற்காக ஒரு பத்திரத்தை எழுதினேன். என்னுடைய நன்றியையும் அதில் தெரிவித்து அப்பத்திரத்தை அவரிடம் கொடுத்து விட்டேன்.



ஜியார்ஜ் அடுத்த நாள் படையில் சேருவதற்குப் புறப்படுவதாயிருந்தான். அடுத்தநாள் காலை எங்களுடைய போர்வீரன் புறப்படுவதற்குத் தயாராக இருந்தான். அவன் ஒருவன் தான் பிரிவதற்காக வருத்தப்படாதவன்போல் தோன்றினன். எதிர் காலத்தில் அவன் அடையப் போகும் இன்னல்களோ இடையூறுகளோ, அல்லது அவன் விட்டுப் பிரியும் நண்பர்கள் காதலியின் எண்ணமோ அவனுடைய ஊக்கத்தைச் சற்றுக் குறைத்திருந்தன. எல்லோரிடமும் விடைபெற்ற பின் என்னிடம் வந்தான்.

"மகனே! நீ இப்பொழுது நாட்டிற்காகப் போரிடப் போகின்றாய். உன்னுடைய தாத்தா தன் அரசனுக்காக எவ்வாறு போரிட்டார் என்பதை நினைவில் வைத்துக்கொள். அவரைப்போலவே வீரமாகப் போரிடு. அங்கே நீ இறந்து விட்டால் உன்னை விரும்பும் நாங்கள் உன்னருகிலிருந்து அழாமலிருக்கலாம். ஆனல் ஆண்டவனுடைய கண்ணீர் வீரனுடைய தலையை நனைக்கும், அது போதும்" என்று கூறி வழியனுப்பினேன்.

மறுநாள் காலை இவ்வளவு நீண்ட நாட்கள் தங்க வைத்து விருந்தளித்த அந்த நல்ல குடும்பத்திடமிருந்து விடைபெற்றுக் கொண்டேன். தார்ன்கில் கடைசியாகச் செய்த பெரும் உதவிக்குப் பல நன்றியுரைகளைக் கூறினேன். அவர்களை மகிழ்ச்சியாக விட்டுவிட்டு நான் வீட்டை நோக்கிப் புறப்பட்டேன். இன்னும் என் மகளைக் கண்டு பிடிக்கவில்லையே என்ற வருத்தம் இருந்தது. அவளை மன்னிக்குமாறு ஆண்டவனிடம் வேண்டிக் கொண்டேன்.

என்னுடைய உடலில் இன்னும் சோர்வு இருந்த தால் ஒரு குதிரையை வைத்துக்கொண்டு ஊருக்கு இருபது கல் தொலைவுவரை வந்துவிட்டேன். மிக விரைவில் என் அன்புக்குரியவர்களைப் பார்க்கப்போகும் மகிழ்ச்சியில் நான் ஆறுதலடைந்தேன். இரவு நெருங்கிவிட்டதால் வழியில் இருந்த சத்திரத்தில் தங்கினேன். என்னுடன் மது அருந்த வீட்டுக் காரரை அழைத்தேன். நாங்கள் அடுப்படியில் உட் கார்ந்துகொண்டு பேசிக்கொண்டிருந்தோம், பல பேச்சுக்களிடை தார்ன்கில்லைப் பற்றிய பேச்சும் வந்தது. அவரையும் அவருடைய சிற்றப்பா வில்லி யம் தார்ன்கில்லையும் அனைவரும் வெறுத்ததாகக் கூறினர். நல்ல இடத்துப் பெண்களை யெல்லாம் வீட் டிற்கு அழைத்துச் சென்று இரண்டு மூன்று கிழமைக் குப் பின் அவர்களை வீட்டைவிட்டு வெளியே துரத்தி விடுவார் தார்ன்கில். நாங்கள் பேசிக்கொண்டிருந்த பொழுது வீட்டுக்காரரின் மனைவி வந்து தன் கணவன் மதுவை அருந்திக்கொண்டு வீணாகப் பொழுது போக்கு வதைப் பார்த்து,

" திரு சைமன்சு, நான் இனியும் பொறுக்க முடி யாது. முக்காற் பங்கு வேலையை நானே செய்கிறேன். மீதிக் காற் பங்கு யாரும் செய்யாமல் அப்படியே இருக் கின்றது. நீங்கள் ஒன்றும் செய்வதில்லை. எப்பொழுது பார்த்தாலும் யாருடனாவது மது அருந்திக் கொண்டே இருக்கிறீர்கள். எனக்கு உடல் நலமில்லை. ஒரு கரண்டி கஞ்சி குடித்தால் போதும். ஆனால் ஒருசொட்டுக் குடிப் பதற்குக்கூட நேரமில்லை" என்று முழங்கினாள்.

நான் என் கையிலிருந்த மதுவை ஒரு கிண்ணத்தில் ஊற்றிக் கொடுத்தேன். அதை வாங்கிக் குடித்தாள்.



"இந்த மதுவின் விலைக்காக நான் சொல்லவில்லை, வீட்டு வேலையைப் பாருங்கள். இங்கே வந்து தங்கு வதற்காக வந்த பெண் மேலே தங்கியிருக்கிறாள். அவள் பணிந்து பணிந்து நடப்பதைப் பார்த்தால் அவளிடம் ஏதும் பணமிருக்கும் என்று என்னால் நம்பமுடியவில்லை. அவள் மிக மெதுவாகப் பணத்தைக் கொடுக்கலா மென்று எண்ணுகிறாள் போலும். அதை அவளுக்கு நினைவூட்ட வேண்டும்."

"எதற்கு நினைவூட்ட வேண்டும்?" என்று கேட் டார் வீட்டுக்காரர் "மெதுவாக இருக்கிறாள் என்றால் நிச்சயமாகக் கொடுப்பாள் என்று பொருள்."

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. அவளும் பதினான்கு நாட்களாக இங்குத் தங்கியிருக்கிறாள். ஆனால் ஒரு காசு கூடக் கொடுக்கவில்லை."

"நம்மிடம் மொத்தமாகக் கொடுப்பாள் என்று நினைக்கிறேன்."

"மொத்தமாகவா? எந்த வழியிலும் வாங்கி விட லாம் என்று எனக்குத் தெரியும். இருந்தாலும் இந்த இரவே அவளை மூட்டை முடிச்சோடு வெளியேஅனுப்பி விடவேண்டும்."

"யோசித்துப் பார். அவளைப் பார்த்தால் நல்ல பெண்ணாகத் தோன்றுகிறாள். அவளுக்குரிய மதிப்பை நாம் கொடுக்க வேண்டும்."

"நல்லவளாவது, கெட்டவளாவது. நான் போய் அவளைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளப் போகி றேன்," என்று கூறிக்கொண்டே அவள் குறுகலான படிக்கட்டில் வேகமாக ஏறினாள்.



ஒலிவியாவை விடுதியின் சொந்தக்காரி இழுத்து வருதல்



திடீரென்று வீட்டுக்காரியின் சத்தம் கேட்டது. அவள் திட்டினாள்; கூச்சலிட்டாள்; அதன் மூலம் வந்து தங்கியவள் பணம் கொடுக்கவில்லை என்பதையுணர்ந்து கொண்டேன்.

"இப்பொழுதே வெளியே போய்விடு. கையில் ஒரு காசுகூட இல்லாமல் இப்படி வந்து தங்கிவிட்டாயே. வா, வெளியிலே வா."

"அம்மா, என் மீது இரக்கம் காட்டுங்கள். ஓர் இரவு பொறுத்துக் கொள்ளுங்கள். விரைவில் இறந்து விடுவேன்."

அந்தக் குரல் என்னுடைய ஒலிவியாவின் குரலைப் போலக் கேட்டது. அவளைக் காப்பாற்றுவதற்காக மேலே ஓடினேன். அதற்குள் வீட்டுக்காரி அவள் தலையைப் பிடித்துப் பரபர வென்று இழுத்து வந்தாள். நான் அவளைத்தடுத்து என் கையில் தாங்கி அணைத்துக் கொண்டேன்.

"மகளே வா, உன்னுடைய அன்புத் தந்தையின் நெஞ்சிலே உன் முகத்தை வைத்துக்கொள். அழாதே. கொடியவர்கள் உன்னை விட்டுவிட்டாலும் நான் கை விடமாட்டேன். உன்னிடம் பத்தாயிரம் குறையிருந்தாலும் உன் தந்தை பொறுத்து மன்னித்து விடுவார்."

"அப்பா, அப்பா, நான் இவ்வளவிற்குத் தகுதியுடையவளில்லை. உங்களால் என்னை மன்னிக்க முடியாது. உங்களால் முடியாது என்று எனக்குத் தெரியும்."

"ஆம் மகளே, நான் உன்னை முழுமனதுடன் மன்னிக்கிறேன். உன் தவற்றுக்கு நீ வருந்தினால் அதுவே போதும். நாம் இன்னும் மகிழ்ச்சியு

இருக்கலாம். இன்னும் பல மகிழ்ச்சியான நாட்களை நாம் பார்க்கலாம்.''

''முடியாதப்பா, முடியாது. இனி என்னுடைய வாழ்க்கை முழுவதும் வெளியில் இகழ்ச்சியாகவும் வீட்டில் அவமானமாகவும் கழியும். ஏனப்பா நீங்கள் தளர்ந்து காணப்படுகின்றீர்களே. என்னால்தானே உங்களுக்கு இவ்வளவு வருத்தம்.''

இதற்குள் வீட்டுக்காரி வந்து எங்களுக்கு இதை விட வேறு நல்ல அறை வேண்டுமா என்று கேட்டாள். நான் வேண்டுமென்றேன். நாங்கள் மனம்விட்டுப் பேசுவதற்கு வசதியான அறையைக் காட்டினாள். வேறு பலவற்றைப் பற்றிப் பேசியபின் இதைப்போன்ற இழி வான நிலைக்கு அவளைக் கொண்டுவந்த நிகழ்ச்சியைப் பற்றி அவளிடம் கேட்காமலிருக்க முடியவில்லை. ''அந்தக் கொடியவனைச் சந்தித்த நாள் முதல் என்னி டம் பலமுறை இத்திட்டத்தைக் கூறியிருக்கிறான்'' என்று தொடங்கினாள்.

''உண்மையிலேயே கொடியவன்தான். ஆனால் நல்ல அறிவும் பெருந்தன்மையும் கூடிய பர்செல்லி டம் இவ்வளவு இழிவான எண்ணம் எழுந்ததும், அதை என்னுடைய குடும்பத்திலேயே காட்டிவிட்டார் என்பதும் எனக்குச் சிறிதளவு வியப்பைக்கூடத் தருகின்றது'' என்று நான் கூறினேன்.

என்னுடைய மகள் உடனே ''அப்பா, நீங்கள் தவறான எண்ணத்தில் இருக்கிறீர்கள். பர்செல் என்னை ஏமாற்ற என்றும் முயன்றதில்லை. அதற்குப் பதிலாக தார்ன்கிலினுடைய பொய்த் தோற்றத்தைக் கண்டு ஏமாந்து விடாமல் தடுப்பதற்கு ஒவ்வொரு முறையும் உதவியுள்ளார். அவர் தார்ன்கில்லைப் பற்றிக் கூறியதை விட அவன் கொடியவன் என்பதை நான் இப்பொழுது உணர்ந்து கொண்டேன்'' என்று கூறினாள்.



''தார்ன்கில்லா, அப்படியும் இருக்குமா'' என்று நான் குறுக்கிட்டேன்.

''ஆம் அப்பா, தார்ன்கில்தான் என்னைக் கெடுத்து விட்டார். இரண்டு பெண்களை அழைத்து வந்து சீமாட்டிகள் என்று கூறினாரே அவர்கள் இருவரும் நெறிதவறியவர்கள். படிப்பு, செல்வம் எதுவும் கிடை யாது. எங்கள் இருவரையும் இலண்டனுக்கு அழைத்துச் சென்று கெடுக்க எண்ணியுள்ளனர். பர்செல்லின் கடிதம் குறுக்கிடாவிட்டால் அவர்களுடைய சூழ்ச்சி நிறைவேறியிருக்கும் என்பது உங்களுக்கு நினைவிருக் கும். அந்தக் கடிதத்தில் அந்த இரண்டு பெண்களைப் பற்றிக் குறிப்பிட்டிருந்ததை எங்கள் இருவரையும் ஒப் பிட்டுப் படித்துவிட்டு வருத்தப்பட்டோம். அவர்க ளுடைய நோக்கங்களை அறிந்து அவற்றைத் தோற் கடிக்கக் கூடிய அளவு ஆற்றலும் திறமையும் அவரிடம் எப்படி வந்தது என்று புரியவில்லை. ஆனால் அவர் எப்பொழுதும் நம்முடைய நெருங்கிய நண்பராகவே இருந்திருக்கிறார்.''

''நீ கூறுவது வியப்பா யிருக்கின்றதே. தார்ன்கில் எவ்வளவு இழிவானவர் என்பதில் இப்பொழுதுதான் எனக்கு முதன் முதலாக ஐயம் ஏற்படுகின்றது. அவர் இதில் வெற்றிபெறலாம். ஏனெனில் அவர் பணக் காரர். நாம் ஏழை. படிப்பும் பண்பும் உடைய உன்னை அவர் ஏமாற்றியிருக்கிறார் என்றால் அவர் எவ்வளவு உன்னை மயக்கியிருப்பார். அதைக் கூறு.''

"அவருக்கு முழு வெற்றிதான். என்னுடைய அவாவெல்லாம் அவரை மகிழ்விக்க வேண்டுமென்பதே. என்னைப் பற்றிக் கவலைப்படவில்லை. மதகுரு மிக மறைவாக நடத்தி வைத்த எங்கள் திருமணச் சடங்குகூட ஒருவகையிலும் அவரைக் கட்டுப்படுத்தாது என்பது எனக்குத் தெரியும். அவருடைய தன் மதிப்பை நம்புவதைத் தவிர எனக்கு வேறெவ்வித நம்பிக்கையும் இல்லை."

"என்ன, ஒரு மதகுருவின்கீழ் நீங்கள் மணம் புரிந்து கொண்டீர்களா?"

"ஆம் அப்பா, நாங்கள் மணஞ்செய்து கொண்டோம். ஆனால் அவருடைய உண்மையான பெயரைக் கூறுவதில்லை என்று உறுதி செய்து கொண்டோம்."

"அதனால் என்ன. நீ என்னிடம் மீண்டும் வரலாம். முன்னைவிட இப்பொழுது ஆயிரம் மடங்கு அதிகமாக வரவேற்கப் பெறுவாய். ஏனெனில் நீ இப்பொழுது அவருடைய மனைவி. மனிதனுடைய எல்லாச் சட்டங்களும் சேர்ந்தால்கூட இந்தத் தூய உறவின் வலுவைக் குறைக்க முடியாது."

"அப்பா, உங்களுக்கு அவருடைய கொடுமைகளைப் பற்றிச் சிறிதுதான் தெரியும். அவர் அதே குருவால் இதற்கு முன்னர் ஆறு, ஏழு மனைவிகளுடன் திருமணஞ் செய்யப் பட்டிருக்கிறார். அவர்களனைவரும் என்னைப்போல் ஏமாற்றப்பட்டுக் கைவிடப்பட்டனர்."

"அவர் அப்படியா செய்திருக்கிறார். அப்படியானால் முதலில் அந்த மதகுருவைத் தூக்கிலிடவேண்டும். பிறகு அவரிடம் செல்ல வேண்டும்."



"அப்பா, இதை மறைவாக வைத்திருப்பேன் என்று கூறிவிட்டு இப்படிச் செய்தல் சரியா?"

"மகளே, நீ அவ்வாறு உறுதிவாக்குக் கொடுத்திருந்தால் நான் அதை மீற முயலமாட்டேன். உன்னையும் மீறச் சொல்லமாட்டேன். அவரைப் பற்றிக் கூறுவது பொதுமக்களுக்கு நன்மையளிப்பதாய் இருப்பினும் கூறவேண்டாம். நீ மேலே சொல்."

"அடுத்த நாள் காலையிலேயே அவருடைய உண்மையிலிருந்து நான் எவ்வளவு பயன் எதிர்பார்க்கலாம் என்பதைக் கண்டுபிடித்துவிட்டேன். அதே காலையில் இரண்டு பெண்களுக்கு என்னை அறிமுகப் படுத்திவைத்தார். அவர்களும் என்னைப்போல் அவரால் ஏமாற்றப்பட்டவர்கள். நான் அவரை மிக அன்புடன் விரும்பினேன். அந்த மகிழ்ச்சியில் நான் செய்த இழிவான செய்கையையும் மறந்துவிட்டேன். இந்த எண்ணத்துடன் நான் ஆடினேன். பாடினேன்; பேசினேன்; இருந்தாலும் மகிழ்ச்சியில்லை. ஒவ்வொரு நாளும் துக்கம் அதிகரித்துக் கொண்டே சென்றது. இறுதியாக அவருக்குத் தெரிந்த ஒருவர்க்கு என்னைக் கொடுத்து விடுவதாகப் பேசினார். இந்த நன்றிகெட்ட பேச்சைக் கேட்டு எனக்கேற்பட்ட வருத்தம் கூறிமுடியாது. எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும் என்றெண்ணினேன். நான் அவரை விட்டுப் பிரிந்துசெல்ல விரும்பினேன்."

"நான் புறப்படும்பொழுது என்னிடம் ஒரு பணப்பையைக் கொடுத்தார். அதைச் சினத்துடன் அவர்மீது வீசியெறிந்து விட்டு வெளியே ஓடிவந்தேன். ஆனால் வெளியில் வந்த பொழுதுதான் போவதற்கு ஓர்

இடமோ அல்லது அண்டுவதற்கு நண்பரோ இல்லை யென உணர்ந்தேன். அந்த நேரத்தில் அங்கு ஒரு கோச் வண்டி வந்தது. அதில் ஏறி அந்தக் கொடிய வரை விட்டு எவ்வளவு தொலைவு செல்ல முடியுமோ அவ்வளவு தொலைவு போக விரும்பினேன். அங்கிருந்து நேரே இங்கே வந்தேன். தங்கினேன்; வந்ததிலிருந்து என்னுடைய கவலையும் இந்த அம்மையாரின் இரக்க மின்மையும் தான் எனக்குப் பெரும் துணையாக நிற்கின் றன. என்னுடைய தாயுடனும் தங்கையுடனும் இன்ப மாகக் கழித்த நேரங்களை எண்ணும் போதெல்லாம் துன்பம் ஏற்படுகின்றது. அவர்களுடைய வருத்தம் பெரிது. ஆனால் என்னுடைய கவலையோ அதைவிடப் பெரியது. ஏனெனில் என்னுடைய கவலையில் குற்றமும் இழிவும் கலந்துள்ளன.''

"பொறுமையாக இரு, அம்மா. எப்படியும் நல்ல காலம் வருமென எண்ணுகின்றேன். இன்றிரவு சிறிது ஓய்வு எடுத்துக்கொள். நாளை நான் உன்னை உன் தாயிடமும் தங்கையிடமும் அழைத்துச் செல்வேன். அவர்கள் உன்னை மகிழ்வுடன் வரவேற்பர். உன் தாய்க்குப் பெரும் வருத்தம்தான். ஆனால் இன்னும் அவள் உன்னை விரும்புகிறாள். இதை அவள் மறந்து விடுவாள்.''

## 22. அன்பின் தன்மை

அடுத்த நாள் காலையில் என் மகளை அழைத்துக் கொண்டு வீட்டை நோக்கிப் புறப்பட்டேன். வழியில் அவளுடைய துக்கத்தையும் அச்சத்தையும் தணிப் பதற்கு எவ்வளவோ முயன்றேன். என்னுடைய அன் பில் என்றும் மாறுதல் காணமுடியாது என்று உறுதி கூறினேன். நான் வாழும்வரை என்னை நம்பி என் னுடனேயே வாழலாமென்று கூறினேன். உலகத்தின் பழிப்பிலிருந்து நான் அவளைக் காப்பாற்றுவேன். இதைப்போல் துன்புறுபவர்களுக்குப் புத்தகங்கள் தாம் இனிமையான நண்பர்கள். ஏனெனில் அவை என்றும் கண்டித்துப் பேசா. வாழ்க்கையை இன்பம் நிறைந்த தாக அவைகளால் ஆக்க முடியாவிட்டாலும் அதை எவ் வாறு கொண்டு நடத்துவது என்பதுவது கற்றுக் கொடுக்கும் என்று எடுத்துச் சொன்னேன்.

நாங்கள் வாடகைக்கு அமர்த்தியிருந்த குதி ரையை அன்று இரவு எங்கள் ஊரிலிருந்து ஐந்து கல் தொலைவிலுள்ள சத்திரத்தில் விட்டுவிட வேண்டும். மேலும் என்னுடைய மகளை வரவேற்பதற்குக் குடும்பத் தினரைச் சமாதானம் செய்து வரவேற்கும் நிலைக்கு அவர்களைக் கொண்டுவர வேண்டும். அதனால் அன்று இரவு அவளை அந்தச் சத்திரத்தில் தங்கவைத்துவிட்டு நான் மட்டும் முதலில் வீட்டிற்குச் செல்ல முடிவு செய் தேன். மறுநாள் காலையில் சோபியாவை உடன் கூட்டி வந்து ஒலிவியாவை வீட்டிற்கு அழைத்துச் செல்லலா மென்று திட்டம் போட்டேன்.

நாங்கள் மேலே குறிப்பிட்ட இடத்தை அடையு முன் நன்றாக இருட்டிவிட்டது. இருந்தாலும் அவள்

தங்குவதற்கு வசதியான ஓர் அறையை ஏற்பாடுசெய்த பின், அவளுக்கு வேண்டிய உணவைத் தயாரித்துக் கொடுக்கும்படி வேலைக்காரியிடம் சொல்லிவிட்டு என் மகளிடம் விடைபெற்று நான் வீட்டை நோக்கி நடந்தேன்.

என்னுடைய அமைதியான வீட்டை நெருங்க நெருங்க என் மனத்திலே புதிய இன்ப உணர்ச்சிகள் எழலாயின. கூட்டை விட்டுத் தூரத்தப்பட்ட பறவை அதைச் சுற்றிச் சுற்றி வருவது போல என் உள்ளமும் அன்பும் விரைந்து சென்று வீட்டின் நெருப்படியை மகிழ்ச்சியுடன் சுற்றலாயிற்று. நான் சொல்ல வேண்டிய மகிழ்ச்சியான செய்திகளை எண்ணிப் பார்த்தேன். எனக்குக் கிடைக்கப் போகும் வரவேற்பை மகிழ்ச்சியுடன் எதிர்பார்த்தேன். என் மனைவி அன்புடன் கட்டித் தழுவுவதை யுணர்ந்தேன். என்னுடைய சிறுவர்களின் மகிழ்ச்சியாரவாரத்தைக் கண்டு நகைத்தேன்.

நான் விரைவாக நடந்தும் மெதுவாக நடப்பது போல் தோன்றியது. இரவு விரைவாகக் குறைந்து கொண்டே வந்தது. பகலில் உழைத்தவர்கள் அனைவரும் ஓய்வெடுக்கச் சென்றுவிட்டனர். ஒவ்வொரு குடிசையிலும் இருந்த விளக்கும் அணைக்கப் பட்டு விட்டது. சுவர்க் கோழியின் ஒலியைத் தவிர வேறொரு ஒலியும் கேட்கவில்லை. தூரத்தில் எங்கோ ஒரு நாய் குலைத்துக் கொண்டிருந்தது. இன்பம் நிறைந்த என் வீட்டை நான் நெருங்கிக் கொண்டிருந்தேன். வீட்டிற்கு ஒருபர்லாங்கு தொலைவு இருக்கும்பொழுது என்னுடைய வேட்டை நாய் என்னை வரவேற்க ஓடி வந்தது.



என் வீட்டையடைந்து கதவைத் தட்டும் பொழுது நள்ளிரவு நெருங்கிக் கொண்டிருந்தது. எல்லாம் நிலையாகவும் அமைதியாகவும் இருந்தன. சொல்ல முடியாத அளவு மகிழ்ச்சியால் என் உள்ளம் விரிவடைந்தது. ஆனால் திடீரென்று வீட்டின் பின் பக்கம் நெருப்புப் பற்றி எரிவதைக் கண்டேன். ஒவ்வொரு வாயிலிலும் பெருந்தீ மூண்டது. நான் பெருங் கூச்சலிட்டு மயக்க மடைந்து நடைபாதையிலேயே விழுந்து விட்டேன். இக் குரலைக் கேட்டு இது வரை உறக்கம் வராத என் மகன் அச்சமடைந்திருக்கிறான். நெருப்பு எரிவதைக் கண்டு என் மனைவியையும் மகளையும் எழுப்பியிருக்கிறான். எல்லோரும் வெளியே ஓடி வந்து பெருங்கவலையுடன் என் மயக்கத்தைத் தெளிவிக்க முயன்றிருக்கின்றனர். இதற்குள் நெருப்பு கூரை முழுவதும் பற்றிவிட்டது.

ஒவ்வொரு பகுதியாகக் கீழே விழ ஆரம்பித்தது. மூவரும் அமைதியான துயரத்துடன் பார்த்துக் கொண்டு நின்றனர். அவர்கள் அதைக் கண்டு வேடிக்கை பார்ப்பது போல் தோன்றியது. நான் அவர்களைப் பார்த்து விட்டு என்னைச் சுற்றி இரண்டு சிறுவர்களுக்காகப் பார்த்தேன். ஆனால் அவர்களைக் காணவில்லை.

'அய்யோ என்னுடைய சிறுவர்கள் எங்கே?' என்று கூச்சலிட்டேன்.

"அவர்கள் தீயிலே வெந்து போகிறார்கள். நானும் அவர்களுடன் இறக்கப் போகிறேன்" என்று இரைந்தாள் என் மனைவி.

இந்தச் சமயத்தில் தீயெரிவதைக் கண்டு எழுந்த என் சிறுவர்கள் கூச்சலிடுவதைக் கேட்ட நான் தீயி

னுள் பாய்ந்தேன். என்னை யாராலும் தடுக்க முடிய வில்லை. "எங்கே, சிறுவர்கள் எங்கே?" என்று கூச்ச லிட்டுக் கொண்டே நெருப்பினுள் நுழைந்து அவர்கள் படுத்திருந்த அறையின் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தேன்.

"நாங்கள் இங்கே இருக்கிறோம், அப்பா" என்று அவர்கள் கூவினர்.

நெருப்பு அப்பொழுதுதான் அவர்களுடைய படுக்கையில் பற்றிக் கொண்டிருந்தது. அவர்களிரு வரையும் கைகளில் தூக்கிக் கொண்டு நெருப்பினுள் பாய்ந்து எவ்வளவு விரைவாகச் செல்ல முடியுமோ அவ்வளவு சென்றேன். நான் அப்பொழுதுதான் வீட்டை விட்டு வெளியே சென்றிருப்பேன். வீட்டின் கூரை முழுவதும் எரிந்து விழுந்து விட்டது.

"இப்பொழுது வேண்டுமானால் நெருப்பு எரி யட்டும். என்னுடைய உடைமைகள் அழியட்டும், நான் என்னுடைய செல்வங்களைக் காப்பாற்றி விட் டேன். இதோ என் செல்வங்களிருக்கின்றன. நாம் இனி மகிழ்ச்சியாக வாழலாம்." சிறுவர்களை நாங்கள் ஆயிர முறை முத்தமிட்டிருப்போம். அவர்கள் எங்கள் கழுத்தைக் கட்டிக் கொண்டு மகிழ்வடைந்தனர். அவர் களுடைய அன்னை சில நேரம் அழுதாள். சில நேரம் சிரித்தாள்.

நான் தீயெரிவதை அமைதியாக நின்று பார்த்துக் கொண்டிருந்தேன். சிறிது நேரத்திற்குப் பிறகு என்னுடைய கையில் தோள்பட்டை வரை நெருப் பினால் புண் ஏற்பட்டிருப்பதைப் பார்த்தேன். ஆகை யால் என்னுடைய சக்தியால் என் மகனுக்கு உதவி



நெருப்பினின்று குழந்தைகளைப் பாதிரியார் மீட்டல்

செய்ய முடியவில்லே. தீ பக்கத்திலிருந்த தானியத்தின் மீது பற்ருது தடுக்கவும் முடியவில்லே. இதற்குள் பக்கத்திலிருந்தவர்களெல்லாம் விழித்துக் கொண்டு எங்களுக்கு உதவி செய்ய ஓடி வந்தனர். ஆனல் அவர்களால் செய்ய முடிந்ததெல்லாம் எங்களேப் போல் பார்த்துக் கொண்டு நிற்பதுதான்.

என்னுடைய பொருள்கள் அனைத்தும் எரிந்து விட்டன. அவற்றில் நான் என் பெண்களுக்காகச் சேர்த்து வைத்திருந்த பாங்குச் சீட்டுகளும் முழுவதும் எரிந்து விட்டன. சமையல் அறையில் இருந்த சில தாள்கள் அடங்கிய ஒரு பெட்டியும் மற்றும் இரண்டு மூன்று சிறு சாமான்களும் என்னுடைய மகன் முதலிலேயே கொண்டு வந்து விட்டதால் காப்பாற்றப் பட்டன. எங்களுடைய வருத்தத்தை எவ்வளவு தங்களால் குறைக்க முடியுமோ அந்த அளவு சுற்றத் தார் எங்களுக்கு உதவி செய்தனர். அவர்கள் உடை களைக் கொண்டு வந்தனர். தங்குவதற்கு ஒரு வீட்டைக் கொடுத்தனர். சமைப்பதற்குச் சில பாத்திரங்களே அளித்தனர். அதனல் பொழுது விடியும் பொழுது நாங்கள் தங்குவதற்கு ஓர் இடம் கிடைத்துவிட்டது. பிளேம்பரோவும் அவருடைய குழந்தைகளும் எங்களுக்குத் தேவையான ஒவ்வொரு பொருளேயும் கொண்டு வந்து கொடுத்து உதவினர். அவர்களால் இயன்ற ஆறுதலே அளித்தனர்.

என் குடும்பத்தினரின் அச்சம் தணிந்தபின் நான் அதிகநாள் தங்கிவிட்டதற்குக் காரணம் என்ன என் பதையறிய அவர்களிடை ஆவல் எழுந்தது. காணமற் போனவளே அவர்கள் வரவேற்பதற்கு வேண்டிய



ஏற்பாடுகளேச்செய்யத் தொடங்கினேன். அண்மையில் பேரிழப்பு ஏற்படவில்லேயானல் எனக்கு இந்த வேலே கடினமாக இருந்திருக்கும். தீ விபத்தினல் ஏற்பட்ட இழப்பு என் மனைவியின் செருக்கைக் குறைத்து விட் டது. என் கையில் ஏற்பட்ட புண்ணினல் உண் டான வலி அதிகமாய் விட்டதால் என் மகளே நானே நேரில் சென்று அழைத்து வரமுடியவில்லே. என் மகனேயும் மகளேயும் அனுப்பினேன். அவர்கள் ஒலிவி யாவை, அழைத்துக் கொண்டு விரைவில் திரும்பினர்.

அவளிடம் தன் தாயை முகத்திற்கு முகம் பார்க்க ஆற்றல் இல்லே. நான் எவ்வளவு கூறியும் இரு வரையும் மீண்டும் சேர்க்க முடியவில்லே. ஏனெனில் பெண்மையின் தவற்றுக்கு ஆண்களேவிடப் பெண்கள் தான் அதிகம் வருந்துவர்.

" அம்மா! பெரிய இடங்களில் வாழ்ந்தவர்களுக்கு இந்த இடம் மிக ஏழ்மை நிறைந்த இடம். பெருஞ் செல்வர்களுடன் மட்டும் பழகுகின்றவர்களுக்கு என்னுடைய மகள் சோபியாவும் நானும் சிறிதளவு வரவேற்புத்தான் தரமுடியும். உன்னுடைய தந்தையும் நானும் பின்னல் மிகவும் வருத்தப்பட்டோம். ஆனல் ஆண்டவன் உன்னே மன்னிப்பாரென எதிர்பார்க் கிறேன்." என்ருள் என் மனைவி.

இத்தகைய வரவேற்பைக் கண்ட அவள் வெளுத்துப் போய் நடுங்கிக் கொண்டு நின்ருள். அவளால் அழவும் முடியவில்லே. மறுத்துக் கூறவும் முடியவில்லே. ஆனல் அவள் படும்துயரைப் பார்த்துக் கொண்டு என்னல் அமைதியாக இருக்க முடியவில்லே. அதனல் சற்றுக் கண்டிப்புக் கலந்த

குரலிலேயே பேச ஆரம்பித்தேன். அவ்வாறு பேசி ஞல் எப்பொழுதும் அதற்குப் பணிந்து நடப்பர்.

"நான் கூறுவதைக் கேளுங்கள். நான் இப் பொழுது உங்களிடம் ஏமாற்றம் அடைந்த ஒருத்தியைத் திருப்பியழைத்து வந்திருக்கிறேன். அவள் தன் கடமையை ஆற்றத் திரும்பிவந்தது நம்முடைய அன்பு மீண்டும் கிடைக்க வேண்டுமென்றுதான். நாமனைவரும் மனமொத்து இணைந்து வாழ்ந்தால் இன்னும் மன நிறைவுடன் வாழமுடியும். ஆண்டவன்கூட, மனந் திருந்திய பான்மையைப் பார்க்க விரும்புவார். மனம் மாருது தவருன வழியிலேயே செல்லும் தொண்ணூற் ருென்பது ஆட்களைவிடத் திருந்திய ஒருவனை அதிகமாக விரும்புவார். நூற்றுக்கணக்கான நல்ல செயல்களைச் செய்வதைவிட அழிவுப் பாதையில் வேகமாகச் செல்லுகின்றவனை நாம் தடுத்து நிறுத்துவது பெருஞ் செயலாகும்" என்று அறிவுரை கூறினேன்.

## ௨௩. துன்பமே தருங் குற்றம்

நாங்கள் தற்பொழுது வாழ்ந்துவந்த வீட்டை எவ்வளவு வசதியுள்ளதாக ஆக்கிக் கொள்ள முடியுமோ அவ்வளவு செய்வதில் எங்கள் கவனம் திருப்பப்பட வேண்டியதாயிற்று. விரைவில் நாங்கள் முன்னர் அனுபவித்து வந்த அமைதியை மீண்டும் துய்ப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. கையில் காயம் ஏற்பட்டுவிட்டதால் வழக்கம்போல் என் மகன் செய்யும் வேலைகளில் அவனுக்கு உதவி செய்ய முடியவில்லை. தீயினின்றும் காப்பாற்றப்பட்ட சில புத்தகங்கள் இருந்தன. அவற்றை நான் படித்துக் காட்டுவேன். குறிப்பாக அவர்களுடைய கற்பனையைத் தூண்டிவிட்டு உள்ளத்திற்கு மகிழ்வளிக்கக்கூடிய நூல்களையே படித்துக் காட்டுவேன்.

சுற்றத்தில் வாழ்ந்த நல்லவர்கள் ஒவ்வொரு நாளும் வந்து ஒரு குறிப்பிட்ட வேளையில் என்னுடைய பழைய வீட்டை மீண்டும் புதுப்பிக்க உதவினர். திரு. வில்லியம்சு அவர்களும் அடிக்கடி வருவார். தன்னுடைய நட்பை அன்புடன் செலுத்தினுர். அவர் என் மகளிடம் பேச விரும்பினுர். ஆனுல் அவள் எதிர் காலத்திலும் அவர் வந்து கேட்கவிடாதவாறு தடுத்து விட்டாள். அவளுடைய வருத்தம் தொடர்வதாகத்தான் காணப்பட்டது. என்னுடைய சிறு குடும்பத்தில் அவள் ஒருத்திதான் ஒரு கிழமையாகியும் கவலையை விடவில்லை. தன்னைத் தான் மதித்துக் கொள்ளவும் பிறருக்கு உதவி மகிழ்வடையவும் அவள் மறந்துவிட்டாள். அவளுடைய மனதில் கவலை உறுதியாகப் பற்றிக் கொண்டது. அவளுடைய அழகு உடல்நலத்துடன் குறைந்துவிட்டது. அவள் அதைப்பற்றிப் புறக்கணித்தால் அது மேலும்

மறையலாயிற்று. அவள் தங்கைமீது பிறர்கூறிய ஒவ்வோர் அன்புச் சொல்லும் அவளுடைய மனத்தைத் தாக்குவதாயிருந்தது. அதைக் கேட்டுக் கண்ணீர் வடித்தாள். அவளுடைய பழைய குற்றம் அவள் எண்ணி எண்ணி வருந்தியதால் போய் விட்டாலும் பொறாமையையும் பொச்சரிப்பையும் அவள் உள்ளத்தில் விட்டுச் சென்றது.

அவளுடைய கவலையைக் குறைப்பதற்கு ஆயிரம் வழிகளில் முயன்றேன். அவளுடைய கவலையில் என் கை வலியைக்கூட மறந்து விட்டேன். வரலாற்றிலிருந்து பல சுவையான நிகழ்ச்சிகளை என் நினைவில் இருந்தவாறு கூறினேன். "நம்முடைய மகிழ்ச்சி அதை நம்மிடம் கொண்டுவருகிற ஒருவரின் ஆற்றலில் தான் உள்ளது. அதை ஆயிரக்கணக்கான வழிகளில் கொண்டுவந்து நாம் எதிர்பார்த்ததற்கு மாறாக நடப்பிப்பர். இதைக் காட்டும் வரலாற்று நிகழ்ச்சியொன்றைக் கூறுகிறேன் கேள்."

"மெடில்டா என்ற வீரப் பெண்மணி நல்லகுடியில் பிறந்தஇளைஞனை ஒருநியோபாலிடன் வீரனைமணந்து கொண்டாள். பதினைந்து வயதிலேயே ஒரு குழந்தைக்குத் தாயுமாகி விதவையாகவும் ஆய்விட்டாள். ஒருநாள் திறந்த சன்னல் அருகில் நின்று கொண்டு தன் அன்பு மகனைக் கொஞ்சிக்கொண்டிருந்தாள். அந்தச் சன்னல் பக்கமாகக் கீழே வால்டர்னு நதி ஓடிக்கொண்டிருந்தது. அவள் கையிலே இருந்த குழந்தை திடீரென்று துள்ளி அவள் கைகளினின்றும் நழுவிக் கீழே ஓடிக்கொண்டிருந்த ஆற்றில் விழுந்து ஒரு நொடிப் பொழுதில் ஆற்று வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டது.



அவள் திடீரென்று வியப்பினால் சிலையாக நின்று விட்டாள். உடனே குழந்தையைக் காப்பாற்றுவதற்காகத் தானும் ஆற்றில் குதித்தாள். ஆனால் குழந்தையைக் காப்பாற்றுவது இயலாததாகிப் பெரும் இன்னலுடன் தான் தப்புவதே பெரிதாகி மெதுவாக எதிர்க்கரையில் ஏறினாள்.

அந்த இடத்தை அப்பொழுது பிரஞ்சு வீரர்கள் கொள்ளையடித்துக்கொண்டிருந்தனர். அவர்கள் மெடில்டாவைக் கைது செய்தனர். அந்த வீரர்களுள் தலைவன் ஒருவன் மெடில்டாவைத் தன்னருகில் வைத்துக் கொண்டு அவளை நலமாகத் தன்னுடைய சொந்த ஊர்க்கு அழைத்துச் சென்றான். அவளுடைய அழகு அவனுடைய கண்களை முதலில் கவர்ந்தது. விரைவாக அவளுடைய தகுதி அவன் உள்ளத்தைக் கவர்ந்தது.

அவர்கள் இருவரும் திருமணஞ் செய்துகொண்டனர். அவன் பல உயர்ந்த பதவிகளை விரைவில் அடைந்தான். அவர்கள் நீண்ட நாட்கள் ஒன்றாக இருந்து மகிழ்ச்சியடைந்தனர். ஆனால் ஒரு போர்வீரனுடைய நிலை எப்பொழுதும் ஒரேநிலையில் இருக்காது. பல ஆண்டுகளுக்குப் பிறகு அவனுடைய படைகள் தோற்கடிக்கப்பட்டுவிட்டன. அதனால் அவன் அந்த ஊரிலேயே மறைவிடத்தில் வாழ வேண்டியதாயிற்று.

இங்கும் இந்நகரை எதிரிகள் முற்றுகையிட்டனர். இறுதியில் அவர்கள் நகரைக் கைப்பற்றிக்கொண்டனர். அப்பொழுது பிரஞ்சு, இத்தாலிய வீரர்கள் ஒருவர்க்கொருவர் செய்த கொடுமைகளைச் சில வரலாற்றாசிரியர்கள் தாம் தெளிவாகக் கூறியுள்ளனர். வெற்றி வீரர்கள், பிரஞ்சுக் கைதிகள் அனைவரையும் கொன்றுவிடுவது

என்று முடிவு செய்தனர். அதுவும் குறிப்பாக மெடில் டாவின் கணவனை முதலில் கொல்ல வேண்டுமென்றனர். ஏனெனில் அவன்தான் அவர்களுடைய முற்றுகையைத் தடுக்கப் பெரும் பாடுபட்டவன். அவர்கள் எண்ணம் முடிவில் அனைவராலும் ஒப்புக்கொள்ளப் பட்டது.

கைது செய்யப்பட்ட வீரர் கொண்டுவந்து நிறுத்தப்பட்டார். அவரைக் கொல்ல எதிரிகள் படையில் ஒருவன் தன் வாளை உருவிக்கொண்டு வந்து நின்றான். அனைவரும் அமைதியாகப் பார்த்துக் கொண்டு நின்றனர். படைத் தலைவனே நடுவராகப் பணியாற்றியதால் அவருடைய ஆணைக்காகக் காத்துக்கொண்டு நின்றனர். இந்த வேளையில் மெடில்டா இறுதி முறையாகக் கணவனிடமிருந்து விடைபெற்றுக் கொள்ளக் கணவனை நோக்கி வந்தாள். அவளுடைய நிலையையும் விதியின் கொடுமையையும் எண்ணித் தன்னை முன் வால்டர்னு நதியிலிருந்து இளமையிலேயே சாகாதவாறு காப்பாற்றியதையும் பலவற்றையும் கூறி விடைபெற நின்றாள்.

படைத்தலைவனான இளைஞன் அவளுடைய அழகைக் கண்டு வியந்தான். அவளுடைய வருத்தத்திற்காக இரங்கினான். அவளுடைய பழைய நிகழ்ச்சிகளைக் கேட்டு வருந்தினான். அவன் அவளுடைய மகன் என்பதை யுணர்ந்தான். ஏனெனில் அவன் அதே நதியிலிருந்து காப்பாற்றப்பட்டதைத் தன்னை வளர்த்தவர் கூறக் கேட்டிருக்கிறான். உடனே அவளை அம்மா என்று கூறித் தழுவிக்கொண்டான். அவளுடைய கால்களில் விழுந்தான். அவர்களனைவரையும் விடுதலை செய்தான். அவர்களனைவரும் கூடி மகிழ்ந்தனர்.''



இந்த வகையில் நான் என்னுடைய மகளை மகிழ்விக்க முயற்சி செய்தேன். அவள் பல சிந்தனைகளுக்கிடையே இதையும் கேட்டாள். அவள் அடைந்த துன்பங்களுக்கே அவளால் இரக்கப்பட முடியவில்லை. இதைப் போன்ற கதைகளைப்பற்றி அவள் கவலைப்படவில்லை. எதுவும் அவளை ஆற்ற முடியவில்லை. எல்லோரும் கூடியிருக்கும் பொழுது புறக்கணிக்கப் படுவோமோ என்று அஞ்சினாள். தனிமையில் கவலையைத்தான் கண்டாள்.

தார்ன்கில் அரபெல்லாவை மணந்துகொள்ளப் போகிறார் என்ற செய்தி எங்களுக்குக் கிட்டியவுடன் அவள் இதே நிலையைத்தான் அடைந்தாள். தார்ன்கில் அரபெல்லாவைப் பற்றி வாய்ப்பு ஏற்படும் பொழுதெல்லாம் அவளுடைய தோற்றத்தைப் பற்றியும் சொத்தைப் பற்றியும் இகழ்ச்சியாகப் பேசினால்கூட அவள்மீது உண்மையிலேயே அன்பு கொண்டிருக்கிறார் என்பது எனக்குத் தெரியும். இச்செய்தி ஒலிவியாவின் கவலையை அதிகரித்தது. இந்த வெளிப்படையான பற்றுக்குத் தீங்கு செய்யும் செய்கையைத் தாங்கிக் கொள்ளும் ஆற்றல் அவளிடம் இல்லை. நான் இதைப் பற்றி இன்னும் முழு விவரங்களையும் அறிந்து முடிந்தால் தார்ன்கில்லினுடைய எண்ணம் நிறைவேறாதபடி செய்ய வேண்டுமென்று முடிவு செய்தேன்.

இதற்காக என் மகனைத் திரு. வில்மோட் அவர்களிடம் அனுப்பி எங்களுக்குக் கிடைத்துள்ள செய்தி எவ்வளவு உண்மை என்பதை அறிய விரும்பினேன். அதேபோல் அரபெல்லாவுக்கும் ஒரு கடிதத்தை, அனுப்பி அதில் தார்ன்கில் என்குடும்பத்திற்கு இழைத்

துள்ள தீங்குகளைக் குறிப்பிட்டு விளக்கமாக எழுத எண்ணினேன். நான் கூறியபடி என் மகன் சென்றான்.

மூன்று நாட்களில் திரும்பிவந்து நாங்கள் கேட்ட செய்தி உண்மைதான் என்று கூறினான். தார்ன்கில்லும் அரபெல்லாவும் ஊர்களைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டு விட்டதால் அவளிடம் கடிதத்தைக் கொடுக்க முடியாது திரும்பிவிட்டான். அதற்கு முந்திய ஞாயிறன்று அரபெல்லா ஆறு பெண்களுடனும் தார்ன்கில் ஆறு ஆண்களுடனும் கோயிலில் தோன்றினரென்றும் இன்னும் சில நாட்களில் அவர்களுடைய திருமணம் நடக்கப் போவதாகவும் கூறினான். மணஉறுதிச் சடங்கு நடக்கப் போவதால் அந்த ஊர் முழுவதுமே மகிழ்ச்சியாக இருப்பதாகவும் அவர்களிருவரும் எப்பொழுதும் ஒன்றாகவே பெரிய கோச் வண்டியில் செல்வதாகவும் இதைப்போல அழகிய வண்டியை அந்த ஊரே பார்த்துப் பல ஆண்டுகள் கழிந்துவிட்டன என்றும் தெரிவித்தான்.

இரண்டு குடும்பத்தினருடைய நண்பர்களும் அங்கு நிறைந்திருக்கின்றனர். குறிப்பாகத் தார்ன்கில்லினுடைய சிற்றப்பா வில்லியம் தார்ன்கில் அங்கிருப்பதைப் பார்த்ததாகவும் அவர் சிறந்த பண்புடையவராகத் தோன்றுவதாகவும் சொன்னான். கேளிக்கைகளும் விருந்துகளும் தவிர அங்குவேறொன்றும் நடக்கவில்லை. ஊரே பெண்ணின் அழகைப் புகழ்ந்து பேசுகின்றது. மணமகனின் தோற்றத்தைக் கண்டு பாராட்டுகின்றது. அவர்களிருவரும் ஒருவரையொருவர் மிகவும் விரும்புகின்றனர். இந்த உலகிலேயே தார்ன்கில்லைப் போல நல்ல வாய்ப்புடைய மனிதன் வேறு யாரும்



இருக்கமுடியாது என்று தான் எண்ணுவதாகவும் கூறினான்.

“ஏன் முடிந்தால் அவரே இருக்கட்டும். ஆனால் மகனே இந்த வைக்கோற் படுக்கையையும் பயனில்லாத கூரையையும் பார். சுவர்கள் மேடும் பள்ளமாகவும் தரை ஈரக் கசிவாகவும் இருக்கின்றன. என்னுடைய உடலோ தீயினால் வாடிவிட்டது. குழந்தைகள் என்னைச் சுற்றி ரொட்டிக்காக அழுகின்றார்கள். நீ இதையெல்லாம் பார்க்க வீட்டிற்குத் திரும்பிவந்திருக்கிறாய். இங்கே கூட நீ ஒரு மனிதனைப் பார்க்கிறாய். இந்த உலகிலேயே என்னைப் போலத் தீயவாய்ப்புடைய மனிதன் வேறு யாரையும் எத்தனை உலகங்களுக்குச் சென்றாலும் பார்க்க முடியாது. எல்லோரும் வாழ்க்கையை ஒரு பாதையென்றும் அவர்களை அதில் நடந்து செல்லும் வழிப்போக்கர்கள் என்றும் எண்ண வேண்டும் என்று கற்றுக்கொடுக்கிறார்கள். இந்த உவமையை இன்னும் சற்று விளக்கலாம். நல்லவர்கள் வீட்டை நோக்கிப் பயணம் செய்பவர்களைப் போல மகிழ்ச்சியாகவும் கிளர்ச்சியாகவும் இருக்கிறார்கள். கெட்டவர்கள் நரகத்திற்குப் பயணம் செய்பவர்களைப் போலத் துன்புறுகின்றார்கள்.”

இந்தப் புதிய துன்பம் நான் என் மகள்மேல் கொண்டிருந்த இரக்கத்தை அதிகப் படுத்தி நான் மேலே ஒன்றும் செய்ய முடியாதபடி தடுத்து விட்டது. என் மகளை அவளுடைய தாயையே கவனிக்கச் சொன்னேன். சில நாட்களுக்குப்பின் அவள் தேறினாள். அதிலிருந்து அவள் மிக அமைதியாகக் காணப்பட்டாள். அவள் ஒரு புது முடிவிற்கு வந்து விட்டாள், போலும் என்று நான் எண்ணினேன். ஆனால் அவ

ளுடைய தோற்றம் என்னை ஏமாற்றியது. அவளுடைய அமைதிக்குக் காரணம் அதிகமாகக் கவலைப்பட்டு அவன் உடல் தளர்ந்து விட்டதேயாகும். ஊரார் மீண்டும் அனுப்பிய உணவுப் பொருள்கள் என்னைத் தவிர மற்றவர்களுக்கு மகிழ்ச்சியை யளித்தது. நானும் அவர்களைக் கண்டு மகிழ்வடைந்தேன்.

---

## 24. புதிய இழப்புகள்

மறுநாள் பொழுது விடியும்பொழுது கதிரவன் எழுந்தது மிக நன்ருக இருந்தது. அதன் வெப்பம் உடலுக்கு இன்பம் தருவதாயிருந்ததால் நாங்கள் அனைவரும் காலையுணவைப் பூக்கள் நிறைந்த சரிவில் இருந்து உண்ணலாமென முடிவு செய்தோம். அங்கு உட்கார்ந்திருந்தபொழுது நான் இளைய மகளைப் பாடச் சொன்னேன். அவளுடைய குரலுக்கு மரங்களின் அசைவால் ஏற்பட்ட ஒலி தாளமாக அமைந்திருந்தது. இந்த இடத்தில் தான் முதன்முதலில் ஒலிவியா தன்னைக் கெடுத்தவரை சந்தித்தாள். ஒவ்வொரு பொருளும் அவளுடைய துக்கத்தை நினைவிற்குக் கொண்டுவந்தது. ஆனல் இன்பம்தரக் கூடிய பொருள்கள் அனைத்தும் துன்பத்தையே தூண்டிவிட்டு அவளுடைய உள்ளத்தை அரித்துத் தின்றன. அவளுடைய தாய்கூட இந்தச் சூழ்நிலையில் சிறிது துன்பத்தையடைந்தாள்; அழுதாள். தன்னுடைய மகளை முன்னைப் போலவே அன்புடன் விரும்பினுள்.

"ஒலிவியா, உன் அப்பாவிற்குப் பிடித்தமான அந்தப் பாட்டைப் பாடம்மா. உன் தங்கை சோபியா முதலில் நீம் விருப்பத்தை நிறைவேற்றி விட்டாள். நீயும் பாடம்மா. உன் அப்பாவிற்கு இன்பமாக இருக்கும்.'' ஒலிவியா தாயின் வேண்டுகோட்கிணங்க ஒரு பாட்டைப் பாடினுள்.

அவள் அந்தப் பாட்டின் இறுதியடியைப் பாடிக் கொண்டிருந்த பொழுது அவள் தொண்டையிலே துக்கம் அடைத்ததால் மிகவும் மெதுவாகப் பாடினுள்.

அது மிக இனிமையாக இருந்தது. தார்ன்கில்லி னுடைய வண்டி தொலைவில் தோன்றியது எங்களை வருக்கும் அதிர்ச்சியைக் கொடுத்தது. குறிப்பாக மூத்த மகளுடைய வருத்தத்தை அது அதிகப்படுத்தியது. அவளை வஞ்சித்தவனைப் பார்க்காமல் தவிர்க்க விரும்பிய தால் தன்னுடைய தங்கையை அழைத்துக்கொண்டு வீட்டிற்குச் சென்றுவிட்டாள். சில விநாடிகளில் அவர் வண்டியிலிருந்து இறங்கி நாங்கள் உட்கார்ந்திருந்த இடத்தை நோக்கி வந்தார். வழக்கமான முறையில் என் உடல் நலத்தைப் பற்றி உசாவினர்.

" ஐயா, உம்முடைய துடுக்கான பேச்சு உம் இழி வான பண்பின் செயலைக் கூட்டித்தான் காண்பிக்கின் றது. இதைப் போல் நீங்கள் துடுக்காக என்னிடம் வருவதற்கு முன் ஒரு காலமாய் இருந்தால் நான் உம்மைத் தண்டித்திருப்பேன். ஆனல் இப்பொழுது நீங்கள் அஞ்சவேண்டியதில்லை. என்னுடைய வயது என் சினத்தைத் தணித்துவிட்டது. என்னுடைய வேலையும் அதை அடக்கிவைத்திருக்கின்றது."

" இதையெல்லாம் கேட்டால் எனக்கு வியப்பாக இருக்கின்றது. நீங்கள் கூறுவதொன்றும் எனக்கு விளங்கவில்லை. உங்களுடைய மகள் என்னுடன் இன்பச்செலவிற்கு வந்ததில் ஏதும் பெரிய குற்றமிருப் பதாக நீங்கள் நினைக்கவில்லை என்று எண்ணுகிறேன்."

" போம். நீர் ஒரு கொடியவர். மிகமிகக் கொடி யவர்; பொய்யர். இதைப் போன்ற இழிவையெல்லாம் தாங்காத குடும்பத்தில் நான் தோன்றியிருக்கிறேன். உம்முடைய ஒரு வேளை இன்பத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஓர் உயிரை வாழ்வு முழுவதும்



பாதிரியார் தார்ன்கில் மீது சினங்கொள்ளல்

இழிந்த வாழ்க்கை வாழும்படி செய்துவிட்டீர். பெருமையைத் தவிர வேறெதுவுமறியாத ஒரு நல்ல குடும்பத்தைக் களங்கப்படுத்தி விட்டீர்.

"அவளாவது, நீங்களாவது துன்பப்படவேண்டுமென்று இருந்தால் நான் அதற்கு உதவ முடியாது. இன்னும் நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கலாம். நீங்கள் என்னைப் பற்றி என்ன எண்ணிக் கொண்டிருந்தாலும் நான் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கு உதவி செய்வேன். இன்னும் சிறிது காலத்தில் நாம் அவளை வேறொருவர்க்கு மணஞ் செய்து கொடுத்து விடலாம். இன்னும் என்ன? அவள் வேண்டுமானால் அவளுடைய காதலனை மறந்து விடட்டும், ஆனால் நான் என்றும் அவளுக்குக் கொடுக்க வேண்டிய மதிப்பைக் கொடுத்துக் கொண்டே இருப்பேன்."

இவ்வாறு அவர் கூறிய திட்டத்தைக் கேட்டு என் உணர்ச்சிகள் கொதித்தெழுந்தன. பெரிய பெரிய இடையூறுகள் ஏற்படும் பொழுதெல்லாம் உள்ளம் அமைதியாக இருந்தால்கூட ஏதோ ஒரு சமயத்தில் ஏற்படும் ஒரு சிறு தீய செயல் பெருஞ் சினத்தை மூட்டிவிடும். "என் கண் முன்னாலிருந்து போய்விடுங்கள். அல்லது இருந்து கொண்டே என்னை இழிவு படுத்துங்கள். என்னுடைய வீரமகன் மட்டும் வீட்டிலிருந்தால் இதைக் கேட்டுக் கொண்டு பேசாது இருக்க மாட்டான். ஆனால் எனக்கோ வயதாகி விட்டது. முடியாமலும் போய் விட்டது. ஒரு வழியிலும் பயனில்லை."

"நான் எண்ணியதைவிட நீங்கள் கடுமையாகப் பேசிக் கொண்டே இருக்கிறீர்கள். என்னுடைய



நட்பின் மூலம் என்ன எதிர்பார்க்கலாம் என்பதை இது வரை காட்டி வந்தேன். என்னுடைய சினத்தால் விளையும் தீமைகளை நான் கூறுவது தகாது. நீங்கள் இறுதியாக எழுதிக் கொடுத்த பத்திரத்தை என் வழக்கறிஞரிடம் கொடுத்து விட்டேன். அவர் அச்சுறுத்திக் கொண்டேயிருக்கிறார். அந்தப் பணத்தை நானே கொடுப்பதைவிட வேறு நேர்மையான வழி ஒன்றும் எனக்குத் தெரியவில்லை. என்னுடைய திருமணத்திற்கு முன்னால் சில செலவுகள் செய்ய வேண்டியிருக்கின்றன. அதோடு இதையும் சேர்த்துச் செய்து விடுவேன். அடுத்து என்னுடைய மேற்பார்வையாளர் வாடகை கொடுக்காததினால் வீட்டை விட்டு வெளியேற்ற வேண்டு மென்று கூறிக் கொண்டேயிருக்கிறார். அவருக்கு அவர் கடமையைச் செய்யத் தெரியும். அதைப் போன்றவற்றில் நான் என்றும் தலையிடுவதில்லை. இன்னும் நான் உங்களுக்கு உதவி செய்ய விரும்புகின்றேன். அண்மையில் எனக்கும் திருமதி அரபெல்லாவிற்கும் நடைபெறப் போகும் திருமணத்திற்கு நீங்களும் உங்கள் மகளும் வந்து என்னுடன் இருக்க வேண்டுமென்று விரும்புகின்றேன். அரபெல்லா கூட இதை வேண்டினாள். அவளுடைய வேண்டுதலை நீங்கள் மறுக்க மாட்டீர்களென எண்ணுகின்றேன்."

"தார்ன்கில், நான் கூறுவதைக் கேளுங்கள். இதுதான் முதன் முறை, இதுவே கடைசி முறை. என்னுடைய பெண்ணைத் தவிர நீங்கள் வேறு எந்தப் பெண்ணை மணந்தாலும் நான் ஒத்துக் கொள்ள மாட்டேன். உங்களுடைய நட்பு என்னை அரியாசனத்தில் அமரச் செய்தாலும் சரி; அல்லது உங்

களுடைய சினம் என்னைச் சுடுகாட்டில் புதைத்தாலும் சரி, நான் இரண்டையுமே வெறுக்கிறேன். நீங்கள் என்னை ஒரு முறை வருந்தத்தக்க கொடிய முறையில் என்னை ஏமாற்றி விட்டீர்கள். நான் உங்களுடைய பெருந்தன்மையை முழு மனத்துடன் நம்பினேன். ஆனால் நீங்கள் இழிவாக நடந்து கொண்டீர்கள். எனவே இனியும் நீங்கள் என்னிடம் நட்பை எதிர்பார்க்காதீர்கள். போய் உங்களுக்கு நல்வாய்ப்பு அளித்துள்ள செல்வம், அழகு, நலம், இன்பம் ஆகியவற்றை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். எவ்வளவு தாழ்வாக நான் இருந்தாலும் என் உள்ளம் அதன் மதிப்பைக் காப்பாற்றிக் கொள்ளும். நான் உங்களை மன்னித்து விட்டேன். உங்களை நான் என்றும் வெறுக்க மாட்டேன்.''

''அப்படியானால் அதையே நீங்கள் நம்பிக் கொண்டிருங்கள். நீங்கள் இவ்வாறு அவமதித்து நடத்தியதற்குரிய விளைவுகளை விரைவில் உணருவீர்கள். வெறுப்பதற்குத் தகுதியான பொருள் நீங்களா நானா என்று நாம் வெகு விரைவில் பார்ப்போம்.'' இதைக் கூறிவிட்டு அவர் விரைந்து சென்று விட்டார்.

இதுவரை என்னுடனிருந்து இந்த உரையாடல் முழுவதையும் கேட்டுக் கொண்டிருந்த என் மனைவியும் மகனும் மிகவும் அச்சம் கொண்டனர். அவர் போய் விட்டார் என்பதை அறிந்து கொண்ட என் பெண்களும் வீட்டை விட்டு வெளியே வந்தனர். அவர்களிடம் இந்த உரையாடலின் முடிவைக் கூறிய பொழுது அவர்களும் மற்றவர்களைவிட அதிகமாக அச்சம்



கொண்டனர். ஆனால் என்னைப் பொறுத்த வரையில் அவர் மேலும் தொடர்ந்து விளைவிக்கப் போகும் துன்பத்தைப்பற்றிக் கவலைப்படவில்லை. அவர் ஏற்கெனவே தாக்கிவிட்டார். போரிலே ஒரு கருவியைத் தூக்கி எறிந்து விட்டால்கூட அக்கருவியின் ஒரு முனை எதிரியைத் தாக்கக் கூடியதாயிருப்பதைப் போல அவருடைய புதிய முயற்சியைத் தாக்க நான் என்னை ஆயத்தப்படுத்திக் கொண்டேன்.

அவர் வெறும் பேச்சுக்காக அச்சுறுத்தவில்லை என்பதை நாங்கள் விரைவில் கண்டு கொண்டோம்: ஏனெனில் அடுத்த நாள் காலையிலேயே அவருடைய மேற்பார்வையாளர் வந்து அந்த ஆண்டிற்குச் செலுத்த வேண்டிய வாடகையைக் கேட்டார். எனக்குப் பல இடையூறுகள் தொடர்ந்து ஏற்பட்டிருந்ததால் நான் உடனே கொடுக்க முடியவில்லை. நான் கொடுக்காததன் விளைவாக அன்று மாலை என் ஆட்டுமந்தையை ஓட்டிச்சென்று மறுநாள் அதைப் பாதி விலைக்கு விற்றுவிட்டனர். எனவே என் மனைவியும் மக்களும் அவர் கூறுவதற்கு இணங்கிப் போகுமாறு வற்புறுத்தினர். இதைப்போன்ற அழிவை அடைவதை விட அது மேல் என்றனர். அவர் முன்னைப் போல அடிக்கடி வருவதைத் தடுக்காது இருக்குமாறு கேட்டுக்கொண்டனர். நான் அடையப்போகும் பேரழிவுகளைத் தங்கள் பேச்சுத்திறத்தால் எடுத்துக் கூறினர். சிறையிலுள்ள கொடுமைகளைப் பற்றி எடுத்துக் கூறினர். தீயினால் ஏற்பட்ட புண்ணினால் என் உடல் நலிந்திருப்பதைக் காட்டினார்கள். நான் எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை.

"நீங்கள் ஏன் இவ்வாறு என்னைத் தவறான வழியில் செல்லுமாறு தூண்டுகிறீர்கள்? அவரை மன்னித்து விடும்படி என்னுடைய கடமை எனக்குக் கற்றுக்கொடுக்கிறது. ஆனால் என் மனச்சான்று அதற்கு ஒப்புதலளிக்க மறுக்கின்றது. என் மனம் வெறுக்கின்ற ஒன்றை உலகத்திற்காகப் புகழச்சொல்கிறீர்களா? சிறை செல்வதைத் தவிர்ப்பதற்காக நம்மை வஞ்சித்தவரை உட்கார்ந்து புகழ்ந்துகொண்டிருக்கச் சொல்கிறீர்களா? முடியவே முடியாது. நம்மை இந்த வீட்டைவிட்டுத் துரத்திவிட்டால் கூட எது சரியோ அதைத் தான் நாம் மேற்கொள்ள வேண்டும். நம்மை எங்கே வீசி எறிந்தாலும் நாம் இதைவிட அழகான இடத்தைத் தேடிக்கொள்ளுவோம். அப்பொழுது நம்மைச் சுற்றி நாம் மகிழ்ச்சியாகப் பார்த்துக்கொள்ள முடியும்."

இவ்வாறு அன்று மாலைப் பொழுதைக் கழித்தோம். இரவில் பனி அதிக அளவில் பெய்திருந்ததால் மறுநாள் விடியற்காலையில் அந்தப் பனியை விலக்கி வீட்டிற்கு முன் வழியை யமைபபதில் என் மகன் ஈடுபட்டிருந்தான். அவன் இதைச் சிறிதுநேரம் செய்த பின் அவன் விரைவாக உள்ளே ஓடிவந்தான். அவன் முகம் வெளுத்திருந்தது. புதிதாக இருவர், நீதித் துறை அலுவலர்கள், வீட்டை நோக்கி வந்து கொண்டிருப்பதாக அறிவித்தான்.

அவன் கூறி முடிக்குமுன் அவர்கள் உள்ளே வந்தார்கள். நான் படுத்திருந்த படுக்கையை நெருங்கி வந்தனர். முன்னதாகவே அவர்களுடைய வேலையையும் எதற்காக வந்திருக்கிறார்கள் என்பதையும் கூறிய



பின்னர் என்னைக் கைது செய்தனர். பதினொரு கல் தொலைவிலுள்ள ஊரின் சிறைச்சாலைக்கு அவர்களுடன் புறப்படுவதற்கு ஆயத்தமாக இருக்குமாறு கட்டளையிட்டனர்.

"நண்பர்களே! நீங்கள் இந்தக்கடுமையான பனிக்காலத்தில் என்னைக் கைது செய்ய வந்திருக்கிறீர்கள். அதுவும் இந்த நேரம் மிகத் துயர் மிக்கது. என்னுடைய ஒருகை நெருப்பினால் சுடப்பட்டதனால் புண்ணாகஉள்ளது. இதனால் எனக்குக் காய்ச்சல் கூடச் சிறிதளவு ஏற்பட்டுள்ளது. என்னை மூடிக்கொள்வதற்குத் துணிகள் தேவை. இந்தக் கொட்டும் பனியில் நடக்க முடியாத அளவிற்கு என் உடல் தளர்ந்திருக்கின்றது. வயதும் ஆகிவிட்டது. கட்டாயம் வரத்தான் வேண்டுமென்றால் நான் வருகிறேன்."

நான் உடனே என் மனைவியையும் மக்களையும் பார்த்து ஏதோ மீதியுள்ள பொருள்களை எடுத்துக்கொண்டு அந்த இடத்தை விட்டு உடனே புறப்படுவதற்கு ஆயத்தமாக இருக்கும்படி கூறினேன். ஒலிவியாவைத் தாங்கிக் கொள்ளும்படி மோசசிடம் கூறினேன். சிறுவர்களைத் தாங்கி அழைத்து வருமாறு மனைவியிடம் கூறினேன். சோபியாவைப் புறப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் விரைந்து செய்யச் சொன்னேன். ஒரு மணி நேரத்தில் நாங்கள் புறப்படுவதற்கு ஆயத்தமாக இருந்தோம்.

## 25. தாழ்விலும் வாழ்வு

அந்த அமைதியான சூழ்நிலையை விட்டுப் புறப்பட்டு மெதுவாக நடக்க ஆரம்பித்தோம். மூத்த மகள் சிறு காய்ச்சலினால் தளர்ந்து காணப்பட்டாள். சில நாட்களுக்கு முன்னரே தோன்றிய காய்ச்சல் அவள் உடல் நிலையின் அடிப்படையையே தளரச்செய்திருந்தது. வந்திருந்த அலுவலர் இருவருள் ஒருவரிடம் குதிரையிருந்ததால் அவளைக் குதிரையின்மீது ஏற்றிச் செல்ல ஒப்புக்கொண்டார்.

மோசசு ஒரு சிறுவனைக் கையைப்பிடித்து அழைத்துச் சென்றான். மற்றொருவனை மனைவி அழைத்து வந்தாள். நான் இளைய மகள்மீது சாய்ந்து கொண்டு மெதுவாக நடந்து சென்றேன். நான் படும் இன்னலைக் கண்டு அவள் கண்ணீர் வடித்துக்கொண்டே வந்தாள்.

நாங்கள் கடைசியாக வாழ்ந்த வீட்டை விட்டு இரண்டு கல் தொலைவு நடந்து வந்திருப்போம். அப்பொழுது ஐம்பது அறுபது பேர் கொண்ட ஒரு கூட்டம் கூச்சலிட்டுக்கொண்டு எங்கள் பின்னால் ஓடிவருவதைப் பார்த்தோம். அவர்களனைவரும் கோயிலுக்கு அடிக்கடி வந்து என்னுடைய பேச்சைக் கேட்கும் என் வட்டார மக்கள். அவர்கள் அஞ்சத்தக்க வகையில் பழித்துக் கொண்டு நீதிமன்ற அலுவலர் இருவரையும் பிடித்துக் கொண்டனர். தங்களுடைய உடலிலே ஒரு சொட்டுக் குருதி இருக்கும் வரை தங்களுடைய குருவைச் சிறைக் கழைத்துச்செல்ல அனுமதிக்க மாட்டோம் என்று அவர்கள் கூச்சலிட்டனர்.



நான் உடனே இடையிட்டுப் பிரிக்கவில்லையானால் இதன் விளைவு மிகக் கொடியதாக இருந்திருக்கும். சற்றுக் கடினப்பட்டே அந்த அலுவலர் இருவரையும் சினமிக்க அக்கூட்டத்தினரின் கைகளிலிருந்து காப்பாற்றினேன். நான் கூட்டத்தினரால் காப்பாற்றப்பட்டதை அறிந்த சிறுவர்கள் மகிழ்ச்சியால் துள்ளிக்குதித்தனர். அவர்களுக்குத் தம் மகிழ்ச்சியை அடக்கி வைக்க முடியவில்லை. ஆனால் என்னைக் காப்பாற்றுவதாக எண்ணிக் கொண்டு எனக்கு உதவி செய்ய வந்த மக்களைப் பார்த்து நான் கூறியதைக் கேட்டு அவர்கள் ஏமாந்து போயினர்.

" நண்பர்களே, இவ்வாறு தான் நீங்கள் என்னை விரும்புகிறீர்களா? நான் கோயில் மேடையிலிருந்து கூறிய அறிவுரைகளையெல்லாம் இப்படித் தான் கடைப்பிடிக்கிறீர்களா? நீதிக்கு எதிராகப் போராடி உங்களையும் என்னையும் அழித்துவிட முயல்கிறீர்களா? உங்களைத் தலைமைதாங்கி அழைத்து வந்தது யார்? இவ்வாறு உங்களைக் கெடுத்து விட்ட மனிதனைக் காட்டுங்கள். அவன் வாழ்வது எவ்வளவு உண்மையோ அவ்வளவு நான் அவனைக் கண்டிப்பதும் உண்மை. அருமை நண்பர்களே! நீங்கள் கடவுளுக்கும், நாட்டிற்கும், எனக்கும் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்வதற்காகத் திரும்பிப் போங்கள். உங்களை இன்னும் ஒரு முறை நல்ல வசதியுடன் வந்து பார்ப்பேன். உங்கள் வாழ்வு வளம் பெற வழி செய்வேன்."

இதைக் கேட்ட அவர்கள் அனைவரும் தம் செயலுக்காக வருந்தினர். ஒவ்வொருவராகக் கண்ணீரை விட்டு உருகிக் கொண்டே என்னிடம் வந்து வழியனுப்பிச் சென்றனர். நானும் ஒவ்வொருவரையும் அன்புடன் கை

குலுக்கி அவர்களிடம் விடைபெறும் பொழுது ஆசிகூறி வாழ்த்திவிட்டு வேறேதும் தடையேற்படுமுன் புறப் பட்டு விட்டேன். இருட்டுவதற்குச் சில மணி நேரங் களுக்கு முன் நாங்கள் சிறையிருக்கும் ஊரை அடைந் தோம். அக்கிராமத்தில் சில சிறு வீடுகள் தான் இருந் தன. தன்னுடைய பழம் பெருமை யனைத்தையும் இழந்து நின்றது அவ்வூர். அதை நினைவூட்டக்கூடிய அறிகுறிகள் சிறையைத் தவிர வேறொன்றும் அங்கு இல்லை.

நாங்கள் ஊருக்குள் நுழைந்ததும் முதலில் ஒரு சத் திரத்தில் தங்கினோம். அங்கு உடனே கிடைக்கக் கூடிய உணவுப் பொருள்களை உண்டு சற்று இளைப்பாறினோம். என்னுடைய குடும்பத்துடன் வழக்கமான மகிழ்ச்சி யோடு அன்றிரவு உணவை முடித்துக் கொண்டேன். அன்றிரவு அவர்கள் வசதியாகத் தங்கக்கூடிய ஓர் இடத்தைப் பார்த்து அவர்களை இருக்கச் செய்துவிட்டு நான் காவலர் மனைக்குச் சென்றேன்.

போர்க் காலத்தில் கட்டிய கட்டிடம் அது. அதில் ஒரு பெரிய கூடம் இருந்தது. அதைச் சுற்றி இரும்புக் கம்பிகள் இருந்தன. கீழே கற்கள் பரப்பப்பட்டிருந்தன. அக்கூடத்தில் கடன் திருப்பிக்கொடுக்க முடியாதவர் களும் பிற குற்றவாளிகளும் பகல் நேரத்தைக் கழித்தனர். ஒவ்வொரு கைதிக்கும் தனித்தனியே அறை உண்டு. இரவில் அதில்தான் போட்டுப் பூட்டிவைத்து விடுவார் கள்.

நான் சிறைக் கூடத்துள் நுழைந்தவுடன் பரிவுரை களும் துன்பப்படும் பலர் குரல்களும் கேட்குமென்று எதிர்பார்த்தேன். ஆனால் அதற்கு மாறாக இருந்தது



நான் அங்குக் கண்டது. கைதிகளனைவரும் ஒரேவகை யான செயலில்தான் ஈடுபட்டிருந்தனர். தங்களுடைய வருத்த மனத்தையும் மறப்பதற்காகக் கேளிக்கைகளி லும் கூச்சலிடுவதிலும் ஈடுபட்டிருந்தனர்.

அங்குள்ள வழக்கத்தைக் கூறியவுடன் கேட்டுவியப் புற்றேன். அதாவது சிறைக்குள் வரும் ஒவ்வொரு வரும் வந்தவுடன் சிற்றுண்டிப் பொருள்களை வாங்கி அங்குள்ள ஒவ்வொரு கைதிக்கும் வழங்கவேண்டுமாம். அதன்படி உடனே அவர்களுடைய விருப்பத்திற் கிணங்க உணவுப் பொருள்களை வாங்குவதற்குப் பணத்தைக் கொடுத்தேன். என்னிடமிருந்த பணமும் சிறிது சிறிதாகக் கரைய ஆரம்பித்தது. நான் கொடுத்த பணத்தை உடனே மது வாங்கி வருமாறு அனுப்பி விட்டனர். அது வந்தவுடன் சிறை முழுவதும் ஒரே கூச்சலும் சிரிப்பும் நிறைந்து விட்டன.

“கொடிய குற்றங்கள் செய்த மனிதர்கள் இவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கலாமா? நான் வருத்தப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டுமா? நானும் அவர்களைப் போலத்தான் சிறைவைக்கப்பட்டுள்ளேன். அதனால் அவர்களைவிட அதிகமாக மகிழ்ச்சி கொள்ளுவதற்கு என்னிடம் பல காரணங்களுள்ளன.”

இந்த எண்ணங்களுடன் நான் மிக்க மகிழ்ச்சியாக இருக்க முயன்றேன். ஆனால் இதுவரை மகிழ்ச்சியை நாமே முயற்சியால் உண்டாக்கியதில்லை. அவ்வாறு உண்டாக்கி விட்டாலும் அந்த மகிழ்ச்சியே துன்பம் தருவதாய் இருக்கும். எனவே சிறையின் ஒரு மூலையில் மிகுந்த கவலையுடன் உட்கார்ந்து கொண்டிருந்தேன். சிறையிலிருந்த இன்னொருவர் வந்து என்னருகில்

உட்கார்ந்துகொண்டு பேசத் தொடங்கினார். யாராவது ஒருவர் பேச வேண்டுமென்று ஆவலுடன் வந்தால் அவரை ஏமாற்றக்கூடாது என்று என் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய விதியாக வைத்திருந்தேன்.

அவர் நன்றாகப் பேசினால் நான் அவருடைய அறிவுரைகளின் மூலம் பயன்பெற முடியும். அவர் தவறாகப் பேசினால் என்னுடைய பேச்சு அவருக்கு உதவி செய்யும். அவரைப் பார்த்தால் படித்த மனிதரைப் போல் இருந்தது. புத்தகங்களின் மூலமல்லாது தாமாகவே பயின்று உலகத்தைப் பற்றிப் பொதுவாக நன்றாகத் தெரிந்திருந்தார். அதிலும் குறிப்பாகத் தவறான செய்கைகளைச் செய்யும் மனித இனத்தை நன்றாக அறிந்திருந்தார். நான் படுப்பதற்கு வசதியான படுக்கையை எடுத்து வந்துள்ளேனா என்று கேட்டார்.

" இங்கே நீங்கள் படுப்பதற்கு வைக்கோலைத் தவிர வேறொன்றும் கொடுக்கமாட்டார்கள். அதிலும் உங்கள் அறை மிகப்பெரியது. குளிரும் அதிகமாக இருக்கும். உங்களைப் பார்த்தால் பெரிய மனிதரைப் போல் காணப்படுகிறீர்கள். நானும் என் வாழ்க்கையில் அவ்வாறு ஒருசில நாட்கள் இருந்திருக்கிறேன். என்னுடைய படுக்கை விரிப்புக்கள் சிலவற்றை உங்களுக்குத் தருகின்றேன்."

நான் அவருக்கு நன்றி செலுத்தினேன். தீமைகள் பல நிறைந்த இச்சிறையில் இத்தகைய மனிதப்பண்பைக் கண்டு வியந்தேன். நான் ஓர் அறிஞன் என்பதைக் காட்டிக் கொள்வதற்காக, " துன்பப் படும்போது துணையாய் இருப்பதனால் உண்டாகும் நன்மையைப் பற்றிக் கிரேக்கப் பேரறிஞர் 'நீ எனக்குத் தோழனாயிருந்தால் இவ்வுலகத்தையே உனக்கு எடுத்துக்கொள்' என்று



கூறியுள்ளார். உண்மையிலேயே தனிமையை மட்டுமே தருவதாயிருந்தால் உலகம் எதற்குப் பயன்பட்டிருக்கும்?" என்று அவரிடம் கூறினேன்.

" நீங்கள் உலகத்தைப் பற்றியா கூறுகின்றீர்கள்? உலகம் தோன்றி வளர்ந்து முதுமையினால் தளர்ச்சியடைந்து விட்டது. ஆனால் இவ்வுலகின் பிறப்பு, உலகம் உண்டான முறை ஒவ்வொரு காலத்திலும் வாழ்ந்த தத்துவப் பேரறிஞர்களைத் திணற வைத்திருக்கின்றது. உலகத்தின் தோற்றத்தைப் பற்றி அவர்கள் எவ்வளவு குழப்பமான கருத்துக்களைத் துளையிட்டு ஆராய்ந்திருக்கின்றனர். சேங் கோனியா தோன், மெனதோ, பெரோசசு, ஒசெலசு, லுகானசு போன்ற அறிஞர்கள் பலரும் வீணாக முயன்றிருக்கின்றனர்."

" இவ்வளவு பெரிய அறிவுரைகளை இடையிட்டு நிறுத்துவதற்காக என்னை மன்னியுங்கள். ஆனால் இதற்கு முன்னரே இவையனைத்தையும் நான் கேட்டிருக்கிறேன். உங்களை முன் ஒரு முறை சந்தையில் சந்தித்திருக்கிறேன் என்று எண்ணுகின்றேன். உங்களுடைய பெயர்கூட எபிரேம் ஜென்கின்சன் தானே?" இதைக் கேட்டு அவர் பெருமூச்செறிந்தார். "டாக்டர் பிரிம்ரோசைப் பற்றி நன்றாக நினைத்துப் பாருங்கள். அவரிடமிருந்து நீங்கள் ஒரு குதிரை வாங்கினீர்களல்லவா?"

அவருக்கு உடனே நினைவு வந்துவிட்டது. அந்த அறையிலே இருந்த இருளும் இரவு நெருங்கிக் கொண்டிருப்பதால் ஏற்பட்ட இருளும் என்னுடைய உருவத்தை இதுவரை நன்றாகப் பார்க்க முடியாது செய்திருக்கின்றன. " ஆம் ஐயா! உங்களை நன்றாக நினைவிருக்கின்றது. நான் ஒரு குதிரை வாங்கினேன்.

ஆனால் அதற்குரிய தொகையைக் கொடுக்க மறந்து விட்டேன். அடுத்த வழக்கு உசாவில் உங்களுடைய அடுத்த வீட்டுக்காரரான பிளேம்பரோதான் சாட்சியாக வருகிறார். நான் தவறான வழியில் பணம் சேர்ப்பவன் என்று அவர் ஆணையிட்டே கூறுவார் என்பது உறுதி. நான் உங்களை ஏமாற்றியதற்காக வருந்துகிறேன். அவ்வாறு பிறரை ஏமாற்றியதற்கும் வருந்துகின்றேன். ஏனென்றால் என்னுடைய ஏமாற்றுச் செய்கை எந்த நிலைக்குக் கொண்டுவந்து விட்டது பாருங்கள்" என்று கூறித் தன் கை விலங்கைக் காட்டினார்.

"கைம்மாறு ஒன்றும் எதிர்பார்க்க முடியாத நிலையில் நீங்கள் எனக்கு உதவ முன் வந்ததில் காணப் பட்ட அன்புக்கு நான் உறுதியாக நன்றி செலுத்து வேன். பிளேம்பரோ சாட்சி கூறுவதில் இருக்கும் சினத்தை எவ்வாறேனும் தணிக்க முயலுவேன். அதற்கு என் மகனை அவரிடம் அனுப்புகிறேன். என்னு டைய வேண்டுகோளுக்கு அவர் கட்டாயம் இணங்குவார் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை. உங்களுக்கு நானே சாட்சியாகச் செல்கின்றேன். அதைப் பற்றி உங்க ளுக்கு ஒரு கவலையும் வேண்டாம்."

"மிக்க நன்றி. இரவு படுப்பதற்குப் பாதிக்குமேல் விரிப்புக்களை நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள். இச் சிறையில் நான் உங்களுக்கு உற்ற நண்பனாக இருந்து உங்களைப் பாதுகாப்பேன். இங்கு என்னுடைய சொல்லுக்குச் சற்று மதிப்பு உண்டு."

அவருடைய உதவிக்கு நன்றி செலுத்தினேன். அவருடைய பண்பில் ஏற்பட்ட மாறுதலைக் கண்டு நான் மிக வியப்படைந்தேன். அவர் மிக இளைஞராக



வும் காணப்பட்டார். நான் முன்னர் அவரைச் சந்திக் கும் பொழுது அறுபது வயதுக் கிழவரைப் போல் காணப்பட்டார்.

"உங்களுக்கு உலகைப்பற்றி நன்றாகத் தெரியும். நான் அம்முறை பொய் முடியை அணிந்திருந்தேன். இருபது முதல் எழுபதுவரை எந்த வயதினனைப் போலவும் வேடந்தரித்துக்கொள்ளும் கலை எனக்கு நன்றாகத் தெரியும். ஏமாற்றுக்காரனாக வாழ நான் கற்றுக் கொள்வதற்குச் செலவிட்ட முயற்சியில் அரைப் பகுதியை ஒரு வணிக முறையைக் கற்பதற்கு நான் செலவிட்டிருந்தேனானால் இதற்குள் நான் ஒரு பெரிய செல்வராக ஆகியிருப்பேன். நான் கொடியவனாக இருந்தாலும் உங்களுக்கு உற்ற நண்ப னாக இருந்து உங்களுக்குச் செய்ய முடிந்த உதவிக ளனைத்தையும் செய்வேன்."

சிறைக் காவலர்கள் வந்து விட்டதால் நாங்கள் மேலும் தொடர்ந்து பேச முடியாது தடுக்கப்பட்டோம். கைதிகளின் பெயர்களை வரிசையாகக் கூப்பிட்டு அவர் களைத் தனித்தனி அறையில் இரவில் பூட்டி வைப்பதற் காக வந்தனர். ஒருவன் என்னுடைய படுக்கைக்குரிய வைக்கோலை எடுத்துக்கொண்டு இருண்ட குறுகிய பாதையின் மூலம் என்னையழைத்துச் சென்றான். கூடத்திலிருப்பது போல் தரை நன்றாகப் பூசப்பட்ட ஓரறையினுள் என்னை அனுப்பினான். அதன் ஒரு மூலையில் எனக்கு அந்த நண்பர் கொடுத்த படுக்கை விரிப்புக்களை விரித்தேன். வழக்கமாகச் செய்யும் இறை வழி பாட்டை முடித்தவுடன் நான் படுத்தேன். விடியும் வரை நல்ல அமைதியாக உறங்கினேன்.

## 26. சிறையில் சீர்திருத்தம்

மறுநாள் காலை என் குடும்பத்தினர் வந்து என்னை எழுப்பினர். அவர்கள் என் படுக்கையருகில் கண்ணீருடன் உட்கார்ந்திருந்தனர். எங்களைச் சுற்றியிருந்த இருள் அவர்களுக்கு அச்சத்தை யூட்டியிருக்கிறது. அவர்கள் வருந்துவதைக் கண்டு நான் மெதுவாகத் திட்டினேன். நான் இங்குத் தூங்கியதைப் போல அமைதியாக இதுவரை தூங்கியதில்லை என்று கூறினேன். பின்னர் அவர்களிடைக் காணப்படாத என் மூத்த மகளைப் பற்றிக் கேட்டேன். முன்நாள் நெடுந் தொலைவு பயணம் செய்ததால் ஏற்பட்ட களைப்பும் சோர்வும் அவளுடைய காய்ச்சலை அதிகரித்திருந்தது.

என் குடும்பம் தங்குவதற்கு வசதியான அறை ஒன்றுவது அல்லது இரண்டாவது சிறைக்கு அருகிலேயே உள்ள சத்திரத்தில் பார்த்து வருமாறு என் மகனை அனுப்பினேன். வெளியில் சென்று திரும்பிய அவன் ஒரே ஓர் அறைதான் கிடைத்தது என்றான். குறைந்த வாடகையில் அதை அமர்த்தியிருந்தான். அதில் என் மனைவியும் பெண்களும்தான் தங்க முடியும்.

இந்நிலையைக் கண்ட சிறைக் காவலர் மோசசையும் சிறுவர் இருவரையும் என்னுடனேயே சிறையில் தங்குவதற்கு அனுமதித்தார். எனக்கு இது மிக வசதியாகத் தோன்றியது. எனினும் நுழைவதற்கே அச்சமாக இருக்கும் இந்த இடத்தில் சிறுவர்கள் படுத்து உறங்குவதற்கு விரும்புவார்களா என்று ஐயப்பட்டதால், அவர்களைக் கேட்டேன்.



"இங்கே உள்ள படுக்கையில் படுக்க விரும்புகிறீர்களா? இருள் நிறைந்து காணப்படும் இந்த அறையில் படுப்பதற்கு அஞ்சமாட்டீர்களென எண்ணுகின்றேன்."

"இல்லை அப்பா. நீங்கள் இருக்கும் எந்த இடத்திலும் நான் படுத்துக்கொள்வேன்" என்று டிக் பதிலிறுத்தான்.

"அப்பா இருக்கும் ஒவ்வொரு இடத்தையும் சிறந்தது என நான் விரும்புவேன்" என்று நான்கு வயது நிரம்பியிருந்த பில் கூறினன்.

இதற்குப் பிறகு குடும்பத்தில் ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய வேலையை வகுத்துக் கொடுத்தேன். சோபியாவிடம் உடல் நலம் நலிந்து காணப்படும் அவளுடைய அக்காவைக் கவனிக்கும் பொறுப்பு விடப்பட்டது. என் மனைவி என்னைக் கவனித்துக்கொள்ள வேண்டும். சிறுவர் இருவரும் என் அருகில் இருந்து நூல்களைப் படிக்க வேண்டும்.

"மகனே! உன்னுடைய பொறுப்பு—உன்னுடைய கைகளின் உழைப்பால் பெறும் ஊதியத்தைக் கொண்டுதான் நாம் அனைவரும் வாழவேண்டும். உன்னுடைய ஒருநாள் கூலி நாம் உண்பதற்கும் உறைவதற்கும் ஓரளவு போதுமானதாகவே இருக்கும். உனக்கு இப்பொழுது பதினறு வயதாகின்றது. நல்ல வலுவுடையவனய் இருக்கின்றாய். அது நல்ல பயன் தரக்கூடிய விளைவுகளை உண்டு பண்ணுவதற்கே கொடுக்கப்பட்டுள்ளது. உன்னுடைய பெற்றோர்களையும் குடும்பத்தினரையும் அது பற்றுக்குறையினின்றும் காப்பாற்றவேண்டும். நானே வேலைக்கு இன்று மாலையே

முயற்சி செய்து பார். ஒவ்வொரு நாள் இரவிலும் நீ உன் உழைப்பால் பெறும் ஊதியத்தைக் கொண்டு வந்து எங்களைக் காப்பாற்று.''

இவ்வாறு அவரவர்க்குரிய கடமையைக் குறிப்பிட்டுவிட்டு நான் சிறையின் பொதுக்கூடத்திற்குச் சென்றேன். அங்கே நிறைந்த காற்றையும் இடத்தையும் பெற்று மகிழலாம். ஆனால் என்னால் அங்கு நெடுநேரம் இருக்க முடியவில்லை. ஒவ்வொரு திக்கிலிருந்தும் என்னை நோக்கி வந்த பழிச்சொற்களும், அருவருப்பும், மிருகத் தன்மையான செயல்களும் என்னை என் தனி அறைக்கே மீண்டும் செல்லும் படி செய்து விட்டன. இவ்வாறு கொடுமைகளால் அறிவு மயங்கி நிற்கும் அவர்களுடைய நிலையை எண்ணிஎண்ணி வருந்தினேன். அவர்கள் தங்களையே ஆண்டவனின் பகைவர்களாக மாற்றிக் கொண்டிருப்பதைப் பார்த்து வருந்தினேன்.

அவர்களுடைய அறியாமை என்னுடைய இரக்க உணர்ச்சியைத் தூண்டி விட்டது. என்னுடைய தனிப்பட்ட கவலைகளை மறக்கச் செய்தது. அவர்களைச் சீர்திருத்த வேண்டிய கடமை எனக்கென்று விடப்பட்டதாகத் தோன்றியது. எனவே மறுமுறையும் அங்குத் திரும்பிச் செல்வதென முடிவு செய்தேன். அவர்கள் எவ்வளவுதான் என்னை வெறுத்தாலும், அவர்களுக்கு அறிவுரை கூற விரும்பினேன். என்னுடைய விடாமுயற்சியில் அவர்களை அடக்கி வெற்றி கொள்வதென முடிவு செய்தேன். ஆகவே மீண்டும் அவர்களிடைச் சென்றேன். ஜென்கின்சனிடம் என்னுடைய திட்டத்தை அறிவித்தேன். அதைக் கேட்டு



அவர் மனத்துள் சிரித்தார். இருந்தாலும் அதை எல்லோரிடமும் தெரிவித்தார். என்னுடைய திட்டம் மகிழ்ச்சியுடன் வரவேற்கப்பட்டது.

நானும் சமய உரையின் ஒரு பகுதியை உரக்க அவர்களுக்குப் படித்துக் காட்டினேன். நடுக்க மற்ற குரலில் பேசியதைக் கேட்டு அவர்களும் மிக்க மகிழ்ச்சியடைந்ததைப் பார்த்தேன். அருவருக்கத்தக்க ஓசைகளும், கேலி செய்யும் முனகல்களும், கண்ணசைவுகளும், இருமல்களும் மாறிமாறிச் சிரிப்பொலியை எழுப்பின. எனினும் நான் வழக்கமான முறையில் அமைதியாகத் தொடர்ந்து படித்தேன். அது எப்படியும் சிலரையாவது திருத்தும். ஆனால் ஒருவரையும் வெறுப்படையச் செய்யாது.

படித்த பிறகு அவர்களுக்கு அறிவுரைகளைக் கூறத் தொடங்கினேன். அதில் அவர்களைக் கண்டிப்பதை விட அவர்களுக்கு மகிழ்ச்சியையே முதலில் ஊட்ட வேண்டுமென்று விரும்பினேன். அவர்கள் நல்ல வாழ்க்கை வாழவேண்டுமென்ற ஒரே எண்ணமே என்னுடைய சொற்பொழிவை ஆற்றுமாறு தூண்டியதாக முதலில் குறிப்பிட்டேன். நானும் அவர்களுடன் இருக்கும் ஒரு கைதி என்றேன். இவ்வாறு சொற்பொழிவாற்றுவதால் எனக்கொன்றும் கிடைக்கப் போவதில்லை என்பதைத் தெளிவாக்கினேன். அவர்கள் இவ்வாறு தூய்மையற்று இருப்பதனால் பெறுவதொன்றில்லையாயினும் எவ்வளவோ பொருள்களை இழந்து விடுவர் என்பதை எடுத்துக் காட்டினேன்.

நான் அறிவுரைகளைக் கூறி முடித்தவுடன் என்னுடைய கூட்டத்தினரின் பாராட்டுதல்களைப் பெற்

றேன். அவர்களிற் சிலர் வந்து என் கைகளைக் குலுக்கிப் பாராட்டி நான் ஒரு பெருந்தன்மையுடைய மனிதன் என்று உறுதியாகக் கூறி என்னுடைய நட்பை மேலும் தொடர்ந்து அளிக்க வேண்டுமென்று விரும்பினர். எனவே அடுத்த நாளும் இவ்வாறு சொற்பொழிவு ஆற்றுவேன் என்று உறுதி கூறினேன். மேலும் அவ்விடத்தில் சீர்திருத்தம் கொண்டு வர முடியும் என்ற நம்பிக்கையும் என்னுள் ஏற்பட்டது. எனக்கு இந்த மன நிறைவு ஏற்பட்டவுடன் என் அறைக்குத் திரும்பிச் சென்றேன்.

மனைவி உணவாக்கி வைத்திருந்தாள். ஜென்கின்சனும் எங்களுடன் சாப்பிட வருவதாகக் கூறினார். அவர் இன்னும் என் குடும்பத்தினரைப் பார்க்கவில்லை. ஏனெனில் அவர்கள் என் அறைக்கு வரும்பொழுது பொதுச் சிறைக்கூடத்தின் வழி வாராது மற்றொரு குறுகியபாதையின் வழி வந்து விடுவார். ஜென்கின்சன் முதலில் என் இளைய மகளின் அழகைக் கண்டு வியந்தார். அதுவும் அவள் ஏதாவது சிந்தனையில் ஈடுபட்டிருந்தால் இன்னும் அழகாகக் காணப்படுவாள். என்னுடைய சிறுவர்களையும் கண்டு களித்தார்.

“டாக்டர், இச்சிறுவர்கள் மிக அழகாக இருக்கின்றார்கள். இவர்கள் இதைப் போன்ற இடத்தில் நம்முடன் வாழ்வதற்குத் தகுதியானவர்கள்.”

“ஏன் ஜென்கின்சன்? என்னுடைய சிறுவர்கள் ஒழுக்கத்தில் சிறந்தவர்கள். அவர்கள் அதில் சிறந்து விளங்குவதால் பிறவற்றைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை.”

“அதைச் சொல்லவில்லை, டாக்டர். உங்கள் குடும்பத்தினரை அருகிலேயே வைத்திருந்தால் உங்களுக்குப் பெரும் ஆறுதலாயிருக்குமே என்று கூறினேன்.”

“ஆறுதல். ஆமாம் உண்மையிலேயே ஆறுதல் தான். என்றால் இவர்கள் இல்லாமல் இவ்வுலகில் வாழ முடியாது. இவர்கள் இருட்குகையைக் கூட ஓர் அரண்மனையாக மாற்றிவிடுவர். ஆனால் என் மகிழ்ச்சிக்கு இடையூறாக இருப்பது ஒன்றுண்டு. அது தான் அவர்களுக்கு நான் இடையூறு செய்வது.”

“அப்படிப் பார்த்தால் நானும் ஒரு வகையில் குற்றமுள்ளவனாகக் காணப்படுகின்றேன். ஏனெனில் இங்குள்ள ஒருவருக்கு நான் இடையூறு செய்துள்ளேன். அவர் என்னை மன்னித்துவிட வேண்டும்” என்று மோசசைப் பார்த்துக் கொண்டே கூறினார்.

என்னுடைய மகனுக்கு உடனே அவருடைய குரலும் தோற்றமும் நினைவுக்கு வந்தன. இதற்கு முன் அவரை மாற்றுருவில் பார்த்திருப்பினும் புரிந்து கொண்டு அவருடைய கைகளைக் குலுக்கிப் புன்னகையின் மூலம் தன் மன்னிப்பைத் தெரிவித்து விட்டான். “என்னுடைய முகத்தைக்கண்டு எப்படி நான் ஏமாற்றுவதற்குத் தகுதியானவன் என்று கண்டு பிடித்தீர்கள்?” என்று மோசசு அவரிடம் கேட்டான்.

“நான் உன்னுடைய முகத்தைக் கண்டு ஏமாற்றவில்லை. வெள்ளைக் காலுறைகளையும் தலையில் கட்டியிருந்த கறுப்பு நாடாவையும் கண்டுதான் நான் ஏமாற்றத்துணிந்தேன். அவை என்னைக் கவர்ந்தன. ஆனால் உன்னைப்பற்றித் தாழ்வாகப் பேசுவதில் பயனில்லை. என்னுடைய காலத்தில் நான் உன்னைவிட அறிவிற் சிறந்த மனிதர்களை யெல்லாம் ஏமாற்றி

யுள்ளேன். இருந்தும் என்னுடைய திறமைகளுக்கும் மேல் இறுதியில் என்னையே ஏமாற்றி என்னிடமிருந்த பொருள்களைப் பலர் கவர்ந்து விட்டனர்.

"உங்கள் வாழ்க்கையை நீங்கள் கூறினால் சுவையாக இருக்குமென எண்ணுகிறேன். கூறும்படி என் மகன் வற்புறுத்தினான்."

"அதெல்லாம் ஒன்றுமில்லை. இவ்வுலகிலே வஞ்சனை மிக்க மனிதன்தான் மிகக் கொடியவன்' என்று பழக்கத்திலிருந்து கூறுவேன். நான் குழந்தைப் பருவத்திலிருந்தே சூழ்ச்சி நிறைந்தவனாகப் பிறரால் கருதப்பட்டேன். ஏழு வயதினனாய் இருக்கும் பொழுது பெண்கள் என்னை நல்லவன் என்று கூறினர். பதினான்கு வயதில் எனக்கு உலகம் தெரிந்துவிட்டது. என் தொப்பியைப் புதுவகையில் அணிந்து கொண்டேன். பெண்களை விரும்பலானேன். இருபது வயதில் நான் உண்மையிலேயே பெருந்தன்மையுடைய மனிதனாக இருந்தும் ஒவ்வொருவரும் என்னை வஞ்சனை மிக்கவனாகவே எண்ணிவந்தனர். ஒருவருக்கும் என்மீது நம்பிக்கை கிடையாது. ஆகையால் நான் என்னைக் காப்பாற்றிக்கொள்வதற்கு என் அறிவைக் கூர்மையாக்கிக் கொண்டேன்.

அதிலிருந்து என்னுடைய மூளையில் பிறரை ஏமாற்றும் திட்டங்களே நிறைந்திருந்தன. நான் செய்யும் தவறுகளைக் கண்டுபிடித்து விடுவார்களோ என்ற அச்சத்தினால் உள்ளம் எப்பொழுதும் படபடத்துக் கொண்டே இருக்கும். அடிக்கடி உங்கள் அடுத்த வீட்டுக்காரரான பிளேம்பரோவைக் கண்டு எள்ளி நகையாடுவேன். எப்படியாவது ஒரு வழியில் அவரை



ஆண்டுக்கொரு முறை ஏமாற்றிவிடுவேன். இருந்தும் அந்த நல்ல மனிதர் தளர்வேதும் இன்றி முன்னேறிப் பணக்காரராக ஆகிவிட்டார். நான்தான் இன்னும் வஞ்சனையுடனே வாழ்ந்து ஏழையாகவே இருக்கின்றேன். மனதில் நல்லவனாக வாழவில்லையே என்ற ஏக்கம் இருக்கின்றது. அது இருக்கட்டும். உங்களைப்பற்றிக் கூறுங்கள். உங்களை இங்குக் கொண்டுவந்தது எது? நான் சிறையிலிருந்து தப்பிச்செல்ல முடியாவிட்டாலும் என்னுடைய நண்பர்களையாவது சிக்கலிலிருந்து விடுபட முயற்சி செய்வேன்." என்றார் ஜென்கின்சன்.

அவர் அவ்வாறு கேட்டவுடன் அவர் வேண்டுகோட்கிணங்கி நான் இந்த நிலைக்குக் கொண்டுவந்த எதிர்பாராத தீய நிகழ்ச்சிகளையும் தவறுகளையும் வரிசையாக ஒவ்வொன்றாகக் கூறினேன். இதில் ஆழ்ந்து சிக்கிவிட்டதால் என்னால் இதிலிருந்து விடுபட முடியவில்லை என்றும் கூறினேன்.

என்னுடைய கதையைக் கேட்டவுடன் சில விநாடிகள் ஏதோ சிந்தித்துவிட்டுத் தம் நெற்றியைத் தட்டிக் கொண்டார். அவருக்கு ஏதோ உருவான எண்ணம் ஒன்று தோன்றியிருக்க வேண்டும். அவரால் என்ன செய்ய முடியுமென்பதை முயன்று பார்ப்பதாகக் கூறிவிட்டு எங்களிடமிருந்து விடைபெற்றார்.

# 27. திட்டமும் பணியும்

மறுநாள் பொழுது விடிந்த பொழுது என்னுடைய மனைவியிடமும் மக்களிடமும் கைதிகளைச் சீர்திருத்து வதற்காக நான் போட்டிருந்த திட்டத்தை விரித்துக் கூறினேன். அதை அவர்களில் யாரும் ஒத்துக் கொள்ளவில்லை. அது இயலாதது என்றும் தகுதி யற்றது என்றும் கூறினர். அவர்களைச் சீர்திருத்தும் முயற்சியில் எனக்கு ஒரு சிறு வெற்றிகூடக் கிடைக் காது என்று கூறினர். என்னுடைய தொழிலுக்குப் புகழ்ச்சி தேடித்தருவதற்குப் பதிலாக இகழ்ச்சியையே தேடித்தருமென்றனர்.

எனினும் நான் மேற்கொள்ள விரும்பிய பணியைக் கைவிட எனக்கு மனம் வரவில்லை. எனவே அவர் களிடம் என்னுடைய அவாவை மீண்டும் எடுத்து ரைத்தேன். இவர்களனைவரும் வாழ்க்கையில் எவ் வளவுதான் வழுவியவர்களானாலும் இன்னும் மனிதர் களாகத்தான் இருக்கின்றார்கள். நல்ல அறிவுரை மறுக்கப்பட்டாலும் அதைக் கூறுகின்றவருடைய உள் ளத்திற்காவது அது மகிழ்ச்சியைத் தரும். நான் அவர் களுக்குக் கூறும் அறிவுரை அவர்களைத் திருத்தாவிட் டாலும் என்னை மட்டுமாவது திருத்தும் என்பது உறுதி. இக் குற்றவாளிகள் அனைவரும் அரசிளங்குமரர்களாக மட்டும் இருந்தால் இவர்களுக்கு அறிவுரை புகட்ட ஆயிரக்கணக்கான மதகுருக்கள் வருவார்கள். ஆனால் என்னைப் பொறுத்த வரை அரியாசனத்தில் அமர்ந் துள்ளவரின் உள்ளமும் இருட்டறையில் இருக்கின்ற ஒருவரின் உள்ளமும் ஒன்றுதான். என்றால் அவர்களை



உறுதியாகத் திருத்தமுடியுமானால் திருத்துவேன். எப்படியிருப்பினும் அவர்கள் என்னை முழுதும் வெறுக்க மாட்டார்கள். பாவக்குழியில் சிக்கித் தவிக்கின்ற அவர் களில் ஒருவரையாவது அதனினின்று காப்பாற்ற முடியும். அதுவே பெரும் வெற்றியாகும். மனித உள்ளத்தைவிடச் சிறந்த வைரம் இந்த மண்மீது வேறென்ன இருக்கின்றது ?''

இவ்வாறு என் மனைவியிடமும் மக்களிடமும் கூறி விட்டு நான் இருந்த தனியறையை விட்டுக் குற்றவாளி கள் அனைவரும் கூடியுள்ள பொதுக்கூடத்தை நோக்கி நடந்தேன். அங்கே என்னுடைய வருகைக்காக மகிழ்ச்சியுடன் அவர்கள் காத்திருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் என்னை எந்த விதத்தில் ஏமாற்றுவது என்று திட்டமிட்டுக் கொண்டிருந்தனர்.

நான் தொடங்குவதற்கு ஆயத்தமாக இருந்த பொழுது ஒருவர் என் தலையிலணிந்திருந்த தொப்பியில் வால்போல் தொங்கிக்கொண்டிருந்த கயிற்றைப் பிடித்து இழுத்தார். பின்னர்த் தவறுதலாகக் கைபட்டு விட்டது என்று மன்னிப்புக் கேட்டார்.

இரண்டாவதாக ஒருவர் எனக்குச் சற்றுத் தொலை விலிருந்து கொண்டு துப்பினார். பற்களை இறுக்கமாக வைத்துக் கொண்டு யாருமறியாது துப்பக்கூடிய திறமை அவருக்கு மட்டும்தான் உண்டு. அவர் துப்பிய எச்சில் மழைத் துளி போல என் புத்தகத்தில் சிதறி விழுந்தது.

மூன்றுமவர் என்னுடைய பேச்சின் இடையிலேயே 'ஆமென்' என்று தணிந்த குரலிற் கூறுவார். அதைக் கேட்டு அனைவரும் சிரிப்பர். நான்காவது ஆள் மெது

வாக என் சட்டைப் பைகளிலிருந்து மூக்குக் கண்ணாடியை எடுத்து விட்டார்.

ஆனால் இவை யெல்லாவற்றையும்விட மற்றொருவர் செய்த வேடிக்கை எல்லோருக்கும் பெருமகிழ்ச்சியை உண்டு பண்ணியது. எனக்கு முன்னாலிருந்த மேசையில் நான் என்னுடைய புத்தகங்களை எவ்வாறு பரப்பி வைக்கிறேன் என்று பார்த்துக் கொண்டே இருந்த ஒருவர் நானறியாதபடி என்னுடைய புத்தகங்களில் ஒன்றை மெதுவாக எடுத்துவிட்டுத் தாம் வைத்திருந்த கீழ்த்தரமான படங்கள் நிறைந்த வேடிக்கைப் புத்தகமொன்றை அந்த இடத்தில் வைத்துவிட்டார்.

இவ்வாறு சில குறும்புக்காரர்கள் வேண்டுமென்றே செய்த சில விளையாட்டுக்களை நான் ஒரு சிறிதும் பொருட்படுத்தவில்லை. என்னுடைய பணியைத் தொடர்ந்து செய்தேன். மிகத் திறமையுடனும் செய்தேன். என்னுடைய முயற்சியைக் கண்டு எள்ளி நகையாடினவர்கள் ஒரு முறை அல்லது இருமுறைதான் சிரித்தனர். ஆனால் நான் கூறிய நல்லுரைகளை மிக்க உன்னிப்புடன் கேட்டனர். அவை அவர்களுடைய உள்ளங்களில் நிலையாகப் பதிந்தன. என்னுடைய எண்ணமும் வெற்றியடைந்தது. ஆறு நாட்களுக்கு உள்ளாகவே சிலர் தங்களுடைய தவற்றுக்காக வருந்தினர். அதிக உன்னிப்புடன் என்னுடைய உரையைக் கேட்கலாயினர்.

அப்பொழுதுதான் என்னுடைய விடாமுயற்சியையும் கடமையையும் நானே புகழ்ந்து கொண்டேன். நல்லொழுக்கமனைத்தையும் கைவிட்டுவிட்ட அக் குற்றவாளிகளுக்கு அறிவுரை கூறுவதில் மகிழ்ச்சி கொண்



டேன். அவர்கள் வாழும் சூழ்நிலையை இன்னும் சிறிது உயர்த்தி வசதியாக வாழவைக்க எண்ணினேன். ஆகையால் அவர்கள் இம்மையில் சிறப்பாக வாழ என்ன வழி வகுக்கலாம் என்று சிந்திக்கலானேன். இதுவரை அவர்கள் பசி, பணம், குழப்பத்தை விளைவித்தல், பின் அதற்காக வருந்துதல் ஆகிய இவற்றின் சிந்தனையிலேயே காலத்தைக் கழித்து வந்தனர். ஒருவருடன் ஒருவர் சண்டையிட்டுக் கொள்வதே அவர்களுடைய ஒரே வேலையாக இதுவரை இருந்தது. சீட்டாட்டம் விளையாடுவதிலும் பொழுதைக் கழித்தனர். புகைக் குழாயில் அடைக்கும் கட்டையையும் இடையிடையில் செய்து வந்தனர்.

இந்தக் கடைசி வேலையிலிருந்தே அவர்களுக்கு ஒரு நல்ல வேலையைத் தேடினேன். கட்டையிலிருந்து புகையிலை விற்போர், காலணி செய்வோர் ஆகியோர்க்குப் பயன்படக்கூடிய முளைகளைச் செய்து அவற்றை விற்க எண்ணினேன். அதற்குத் தேவையான மரத்தை எங்களிடமிருந்த பணத்தைக் கொண்டு வாங்கிவரச் செய்தேன். அதைச் செதுக்கி முளைகளாகச் செய்த பின்னர் அவற்றை வெளியில் கொண்டு விற்றுவர ஏற்பாடு செய்தேன். எனவே இந்த வகையில் ஒவ்வொருவருக்கும் நாள்தோறும் ஏதோ சிறு தொகை கிடைத்து வந்தது. சிறு தொகையாக இருப்பினும் அவர்களை வசதியாக வாழவைக்கப் போதுமானதாக அது இருந்தது.

நான் இத்துடன் நின்றுவிடவில்லை. ஒழுக்கம் தவறியவர்கள் தண்டம் செலுத்த வேண்டுமென்று கட்டளை விதித்தேன். அதிகத் திறமையாக வேலை செய்

தவர்களுக்குப் பணத்தை அன்பளிப்பாகக் கொடுத்தேன் இவ்வாறாக இரண்டு கிழமைகளுக்குள் அவர்களனை வரையும் நல்ல சமுதாயத்தின் உறுப்பினர்களாக ஆக்கினேன். அதற்குச் சட்டங்களை இயற்றுபவனாக என்னை எண்ணிக் கொள்வதில் தனி இன்பம் கண்டேன். மூர்க்கத்தன்மையை இயல்பாக உடைய அவர்களை நட்பும் பணிவும் மிக்க மனிதர்களாக மாற்றியதில் பெரு மகிழ்ச்சி கொண்டேன்.

அரசு தன் ஆற்றலால் இயற்றும் சட்டங்களை நிறைவேற்றும் போது கடுமையாய் இருப்பதற்குப் பயன்படுத்தக் கூடாது. மக்களுடைய சீர்த்திருத்தத்திற்காகவே அவற்றைப் பயன்படுத்த வேண்டும். குற்றங்களை நாட்டினின்று நீக்குவதற்குத் தண்டனைகளைப் பெருக்கிக்கொண்டே போகக்கூடாது. தண்டிப்பதைக் குறைத்து மக்கள் தாம் செய்த தவறுகளுக்கு எண்ணி வருந்தும் நிலையை உண்டாக்க வேண்டும்.

இப்போதுள்ள சிறைகள் மனிதர்களைக் குற்றவாளிகளாக ஆக்கி அவர்கள் செய்த ஏதோ ஒரு குற்றத்திற்காகச் சிறையிலடைத்து அவர்கள் உயிருடன் மீண்டும் வெளியே சென்றால் ஆயிரக் கணக்கான குற்றங்களைச் செய்வதற்கு ஆயத்தம் செய்து அனுப்புகின்றன. இவற்றிற்குப் பதிலாகக் கழிவிரக்கமும் தனிமையும் உடைய சிறைகளாயமைத்து உண்மையிலேயே அவர்கள் குற்றவாளிகளாயிருந்தால் தாம் செய்த தவற்றுக்கு வருந்தும் சூழ்நிலையை உண்டாக்கித்தர வேண்டும். அல்லது ஒன்றுமறியாதவர்களாய்த் தவற்றுதலால் தண்டிக்கப்பட்டவர்கள் நற்பண்புகள் பலவற்றைச் சிந்திப்பதற்கு வாய்ப்புத் தரவேண்டும். தண்டனைகளைப் பெருக்கிக்கொண்டே போகாது இந்த முறையில் செல்லுவதுதான் ஒரு நாட்டைத் திருத்துவதற்கு நல்ல வழியாகும்.



குற்றங்களைத் தண்டிப்பதற்குப் புதியபுதிய சட்டங்களை உருவாக்குவதைவிட, புரட்சி உண்டாகி வெடித்துவிடும்வரை சமுதாயத்தின் கடிவாளங்களை இறுக்கிப் பிடிப்பதைவிட, குற்றவாளிகளை நல்லவர்களாக்கிப் பயன்படுத்தாது வெட்டியெறிவதைவிட, பழிக்காகக் கொடுமைப்படுத்துவதைவிட, அரசு தன் ஆற்றலைக் குற்றங்களைக் குறைப்பதில் ஈடுபடுத்தி, சட்டங்களை மக்களை ஒடுக்குவதற்காகப் பயன்படுத்தாது பாதுகாக்கும் கருவியாகப் பயன்படுத்தவேண்டும்.

## 28. அறிவினாலாய பயன்

நான் சிறைக்கு வந்து இதற்குள் இரண்டு கிழமைகள் கடந்து விட்டன. ஆனால் நான் சிறையினுள் வந்ததிலிருந்து ஒலிவியா என்னை வந்து பார்க்கவில்லை. எனக்கு அவளைப் பார்க்க வேண்டுமென்ற அவா மிக்கெழுந்தது. என்னுடைய அவாவை என் மனைவியிடம் தெரியப்படுத்தினேன். அடுத்த நாள் காலை என்னுடைய அன்பு மகள் தன் தங்கையின் கைகளில் சாய்ந்து கொண்டு மெதுவாக நான் இருந்த அறையினுள் நுழைந்தாள். அவளுடைய தோற்றத்தில் ஏற்பட்டிருந்த மாறுபாட்டைக் கண்டு வியப்பால் திடுக்குற்றேன். அவளுடைய தோற்றத்தில் இதுவரை பொங்கிவழிந்து காணப்பட்ட பொலிவு இப்பொழுது எங்கோ பறந்து சென்று விட்டது. சாவின் கரங்கள் அவளுடைய அங்கங்கள் ஒவ்வொன்றையும் தீண்டி விட்டதைப் போலிருந்தது எனக்கு அச்சத்தை விளைத்தது. அவளுடைய தலை சாய்ந்து தொங்கிக் கொண்டிருந்தது. நெற்றி விறைப்பாக இருந்தது. கன்னங்களில் வெளிர்மை நிறைந்திருந்தது.

“உன்னைப் பார்ப்பதற்கு மிகமகிழ்ச்சியாக இருக்கிறது, மகளே! ஆனால் ஏன் இந்த வெறுப்பு? நீ எனக்குப் பெருமதிப்பளிக்கிறாயல்லவா? பின் ஏன் நான் என்னுடைய பெரும் பேறாக எண்ணிக் கொண்டிருக்கும் உன் உயிரை விட்டுவிடுகிறாய்? மகிழ்ச்சியாக இரு அம்மா. இன்னும் நமக்கு நல்ல இன்பமான பல நாட்கள் காத்துள்ளன.”



“உங்களுக்கு எப்பொழுதுமே நல்ல நாட்கள் உண்டு. அப்பா, நீங்கள் உறுதியாகக் கூறும் அந்த இன்பத்தில் பங்கு கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைக்காதே என்ற ஏக்கம்தான் என் வருத்தத்தைப் பெரிதாக்குகிறது. இனி இவ்வுலகில் எனக்கு இன்பமே இருக்காதோ என்று ஒரே அச்சமாக இருக்கின்றது. துன்பம் மட்டுமே நிறைந்திருக்கின்ற ஏதாவது ஓர் இடத்திற்குச் சென்று வாழவேண்டுமென்பதே என் அவா. நீங்கள் எப்படியாவது தார்ன்கில்லுக்குப் பணிந்து போய்விடுங்கள், அப்பா. அது ஒருவேளை அவரை நெகிழச் செய்து உங்கள்மீது இரக்கப்படத் தூண்டும். அது எனக்குச் சாகும் பொழுதாவது ஓரளவு அமைதியைத் தரும்.”

“முடியாதம்மா முடியாது. என் மகளுக்காக வாதாடுவதை நான் என்றும் விட்டுவிட முடியாது. உலகம் வேண்டுமானால் உன்னுடைய தவறுக்காக உன்னை வெறுப்போடு பார்க்கட்டும். ஆனால் நான் உன்னுடைய தவற்றைக் குற்றமென்று கொள்ள மாட்டேன். எதையும் எளிதில் நம்பியதால் ஏற்பட்ட ஏமாற்றத்தின் சின்னமாகவே கொள்வேன். இந்த இடத்தில் வாழ்வதற்கு எனக்கொன்றும் துன்பமாக இல்லை. பார்ப்பதற்குத் துயர் நிறைந்தது போல் காணப்பட்டாலும் எனக்கு மகிழ்ச்சியையே அளிக்கிறது. நீ மட்டும் மனந்தளர்ந்து உயிரை விடாது இருந்தாயானால் அதுவே போதும். அவர் வேறு ஒரு பெண்ணை மணந்து கொள்ள நான் உறுதியாக ஒப்புதலை அளிக்க மாட்டேன்.”

என்னுடைய மகள் சென்ற பின் இதுவரை எங்களுடனிருந்த மற்றொரு சிறைக்கைதி நான் செய்வது

தவறு என்று தடுத்து விளக்கிக் கூறினர். நான் பணிந்து சென்றால் உடனே விடுதலை கிடைக்கும் என்பது உறுதியாக இருக்கும்பொழுது நான் அதற்குத் தடை சொல்லக் கூடாது என்று சொன்னார். ஒரு பெண்ணின் மன அமைதிக்காக என்னுடைய குடும்பத்தில் உள்ள மற்றவர்கள் அனைவரும் தங்களுடைய மகிழ்ச்சியையும் வசதியையும் இழக்கக் கூடாது என்று குறிப்பிட்டார். மேலும் "அவள் ஒருத்திதான் உங்களுக்கு வருத்தத்தை விளைவிப்பவள். அடுத்து நீங்கள் இப்பொழுது செய்வதைப்போல ஒருவன் அவன் மனைவியுடன் கூடிவாழ்வதைத் தடுக்க முயல்வது நேர்மையானதன்று. அவர்களுடைய பொருத்தத்திற்கு நீங்கள் ஒப்புதல் அளிக்காவிட்டால் அது ஒன்றும் அவர்களுக்கு இடையூறு விளைவிக்காது". என்று கூறி முடித்தார்.

"ஐயா, எங்களை இவ்வாறு துன்புறுத்துபவருடன் நீங்கள் பழகியதில்லை. நான் தாழ்ந்து சென்றால் அது எனக்கு ஒருமணி நேரத்திற்குக்கூட விடுதலையை வாங்கித்தராது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். இதே அறையில் சென்ற ஆண்டு அவரிடம் கடன் வாங்கிய ஒருவர் அதைத் திருப்பிக் கொடுக்க முடியாது உயிரை விட்டிருக்கிறார் என்று நான் கேள்விப்பட்டேன். என்னுடைய தாழ்வும் நான் அளிக்கக் கூடிய ஒப்புதலும் என்னை இந்த இடத்திலிருந்து அவருடைய அழகிய மாளிகைக்கு அழைத்துச் சென்றால் கூட நான் தாழ்ந்து போகமாட்டேன். ஒப்புதலும் அளிக்க மாட்டேன். ஏனெனில் நான் அவ்வாறு செய்தால் தீமைக்கு நானே ஒப்புதலளித்ததைப் போலாகும் என்று ஏதோ என் உள்ளத்தில் கூறிக் கொண்டிருக்கிறது. என்னுடைய மகள் உயிருடன் வாழும் பொழுது அவர் செய்து கொள்ளும் எந்தத் திருமணமும் என்னுடைய கண்களுக்குச் சட்டப்படி செய்து கொண்ட திருமணமாகாது. நான் சிறை வாழ்வினின்றும் தப்புவதற்காக என் பெண்ணைச் சவக் குழிக்கு அனுப்பக் கூடிய ஓர் ஒப்பந்தத்தில் நான் கையெழுத்திட்டால் என்னைவிடக் கொடிய தந்தை இவ்வுலகில் வேறு யாரும் இருக்கமாட்டார்கள். என்மேல் விழக்கூடிய ஓர் அடியினின்றும் தப்புவதற்காக என் மகளின் இதயத்தில் ஆயிரம் அடிகள் விழும்படி செய்யலாமா?"



என்னுடைய கூற்றில் இருந்த நடுநிலைமையை அவர் ஒப்புக் கொண்டார். ஆனல் நான் நீண்ட நாள் சிறையில் இருக்குமளவிற்கு என் மகளின் வாழ்க்கை ஏற்கெனவே பெருமளவு வீணாகிவிட்டது என்பதைக் குறிப்பிடாது அவரால் இருக்க முடியவில்லை.

"எப்படியாயினும் உங்களுக்கு அவரிடம்தான் பணிய மனமில்லை. அவருடைய சிற்றப்பாவுக்காவது உங்களுடைய நிலையை எடுத்துக்கூறி ஒரு கடிதம் எழுதுங்களேன். அதில் ஒன்றும் உங்களுக்குத் தடையில்லையென எண்ணுகின்றேன். இந்த நாட்டிலேயே நேர்மைக்கும் நல்லதுக்கும் முதல் இடம் கொடுப்பதில் அவர் தலைசிறந்தவராயிற்றே. அவருடைய திருமகனின் தீய நடவடிக்கைகளையெல்லாம் விளக்கமாக எழுதி இன்றைய அஞ்சலிலேயே அனுப்பி விடுங்கள். மூன்று நாட்களுக்குள் உங்களுக்கு விடை வந்துவிடுமென்பது உறுதி" என்று என்னிடம் உரைத்தார் என் சிறை நண்பர்.

இந்த நல்ல வழியைக் கூறியதற்காக அவருக்கு நன்றி செலுத்திவிட்டு உடனே அவரைப்பற்றி எழுதத் தொடங்கினேன். ஆனால் தாள் இல்லை. அன்று காலையில் கையிலிருந்த பணம் முழுவதையும் சாமான் வாங்கக் கொடுத்து விட்டேன். என்னுடைய நண்பரே தாளையும் கொடுத்து எழுதச் சொன்னார்.

அடுத்த மூன்று நாட்களிலும் என்னுடைய கடிதத்திற்கு எத்தகைய வரவேற்பு கிடைக்குமோ என்ற கவலையே எனக்கு அதிகமாக இருந்தது. இதற்கிடையில் ஒவ்வொரு மணிநேரமும் என் மகளின் உடல் நலக்குறைவு அதிகரித்துவரும் செய்தி தொடர்ந்து வந்துகொண்டிருந்தது. சிறையிலேயே இருப்பதைவிட ஏதாவது ஒரு விதத்தில் பணிந்து சென்று விடுதலையடைவது மேலென்று வற்புறுத்தினாள் என் மனைவி.

மூன்று நாட்களாயின. நான்காவது நாளும் விடிந்தது. ஆனால் என்னுடைய கடிதத்திற்கு மட்டும் பதில் வரவில்லை. நெருங்கிய உறவினரைப் பற்றி யாரோ முன்பின் அறியாத ஒருவர் சாட்டும் குற்றங்கள் எடுபடும் என்று நான் எண்ணவில்லை. எனவே என்னுடைய பழைய முயற்சிகள் வீணாயதைப் போல் இதுவும் வீணாகிவிட்டது. என் உள்ளம் மட்டும் உடன்படவில்லை. சிறை வாழ்வும் அதில் நிறைந்திருந்த தீய காற்றும் என்னுடைய உடல்நிலையில் மாறுதலை விளைவித்தன. தீப் புண்ணால் என் கை அதிக வலியெடுக்கலாயிற்று. என்னுடைய சிறுவர்கள் மட்டும் என் அருகிலிருந்து எதையாவது எனக்காகப் படித்துக்கொண்டிருந்தனர். வைக்கோற் படுக்கையின்மீது நான் படுத்தே இருந்தேன். தள்ளாத நிலையில் நான்



கூறுவதைக் கேட்டு என் சிறுவர்கள் அழுதனர். ஒலிவியாவின் உடல்நிலை என்னுடைய நலத்தைவிட மிக வேகமாகக் குன்றி வந்தது. அவளைப் பற்றி வந்த ஒவ்வொரு செய்தியும் என்னுடைய வருத்தத்தை அதிகரித்துத் துன்புறுத்தியது.

சர் வில்லியம் தார்ன்கில்லுக்குக் கடிதம் எழுதிய பின் ஐந்தாம் நாட்காலை ஒலிவியா பேச்சற்றுக் கிடக்கிறாள் என்ற செய்தி என்னைத் திடுக்கிடச் செய்தது. அப்பொழுதுதான் சிறை வாழ்வு எனக்கு மிக்க துன்பத்தை விளைவித்தது. என்னுடைய மகளின் தலையணையருகேயிருந்து அவளுக்கு ஆறுதல் கூறவும் அவளைத் தேற்றவும் அவளுடைய இறுதி ஆசைகளைக் கேட்கவும் அவளுடைய உயிர் செல்லும் வழிக்கு நல்வழி காட்டவும் என்னுடைய ஆன்மா தன்னுடைய சிறையினின்றும் தப்பியோடியது. அவள் மெல்லமெல்ல உயிர் விட்டுக்கொண்டிருந்தாள் என்ற செய்தியெட்டியது. இருந்தும் அவள் பக்கத்திலேயிருந்து அழும் உரிமைகூட என்னிடமிருந்து பறிக்கப்பட்டிருந்தது.

சிறிது நேரம் கழித்துக் கடைசிச் செய்தியுடன் சிறை நண்பரொருவர் வந்தார். என்னைப் பொறுமையாக இருக்கும்படி கேட்டுக்கொண்டபின் அவள் இறந்து விட்டாள் என்ற செய்தியைக் கூறினார். மறுநாட் காலை அவர் என்னுடைய சிறுவர் இருவரையும் என்னிடம் அழைத்துவந்தார். அவர்கள்தாம் இப்பொழுது எனக்குத் துணை. அவர்களும் என்னைத் தேற்றுவதற்கு எத்தனையோ முயற்சிகளைக் கையாண்டனர். எனக்காக அவர்கள் படித்தனர். என்னை அழாதிருக்கும்படி வேண்டினர். தள்ளாத வயதில் அழக்கூடாது என்றனர்.

"ஏன் அப்பா, அக்காள் இப்பொழுது வானுலக மங்கையாகத்தானே இருப்பாள்? பின் ஏன் நீ அதற்கு வருத்தப்படுகிறாய்?" என்று அழுதுகொண்டே பெரியவன் கேட்டான். "என் அப்பா மட்டும் என்னுடன் வருவதாக இருந்தால் நானும் இந்தக் கொடிய இடத்தை விட்டுவிட்டு வானுலகத்திற்குச் செல்ல வேண்டும் என்று எனக்கு ஆசையாக இருக்கிறது" என்று மேலும் கூறினான்.

"ஆமாம். அக்காள் இருக்கும் வானுலகம் இதைவிட மிக அழகாக இருக்கும். அங்கே நல்லவர்களைத் தவிர வேறு யாருமே இருக்கமாட்டார்கள். இங்கேயிருப்பவர்கள் அனைவரும் கெட்டவர்கள்" என்றான் சிறியவன்.

இச்சிறுவர்களின் மழலைப் பேச்சில் திரு ஜென்கின்சன் குறுக்கிட்டார். என்னுடைய மகள் இறந்து விட்டாள். ஆனால் குடும்பத்திலுள்ள பிறரைப் பற்றி நான் கட்டாயம் எண்ணிப்பார்க்க வேண்டும். அவர்களுக்காகவாவது நல்ல சூழ்நிலையும் தூய காற்றும் இல்லாது, குன்றிப்போகும் என் உயிரைக் காக்க வேண்டுமென்றார். என்னைச் சார்ந்துள்ள பிறரைக் காப்பாற்றுவதற்காவது என்னுடைய தற்பெருமையை விட்டுக்கொடுக்க வேண்டிய சூழ்நிலையேற்பட்டுள்ளதையுணர்த்தினார். எனவே என்னுடைய நிலக்கிழாருடன் எவ்வாறாவது உடன்படிக்கை செய்து கொள்வது என்ற முடிவுக்கு வந்தேன்.

அவரிடம் "இப்பொழுது என்னிடம் தற்பெருமை ஏதும் இல்லை. என்னுடைய நிலக்கிழாரைப் பழிப்பதற்கும் ஒன்றும் இல்லை. அவர் என்னுடைய செல்வங்களுள் தலை சிறந்த செல்வத்தைப் பறித்து விட்டார். என் உள்ளத்தில் பெரும் வலியை யுண்டாக்கி விட்டார். இருந்தாலும் அது என்னைப் பழிவாங்கத் தூண்டாது. நான் அவருடைய திருமணத்திற்கு ஒப்புதலையளிக்கிறேன். இவ்வாறு நான் பணிந்து செல்வது அவருக்கு மகிழ்ச்சியை அளிக்குமானால், இதுவரை அவருக்கு நான் ஏதாவது இடையூறு விளைவித்திருந்தேனானால் அதற்காகவும் நான் வருந்துவதை அவர் உணரட்டும்" என்று கூறினேன்.



ஜென்கின்சன் எழுதுகோலையும் மையையும் கொண்டு நான் கூறியவாறே எழுதினார். நான் அதனடியில் கையெழுத்திட்டேன். மோசசு திரு. தார்ன்கில்லுக்கு இக்கடிதத்தை யெடுத்துக்கொண்டு அவர் இருந்த ஊருக்குச் சென்றான். அவன் நிலக்கிழாரைப் பார்ப்பதில் சில தடங்கல்கள் ஏற்பட்டதைப் பின்னர் கூறினான். ஏனெனில் பணியாட்கள் இவனை ஐயுற்றதால் வீட்டினுள் அனுமதிக்கவில்லை. ஆனால் தற்செயலாய்த் திருமண வேலையாக வெளியே புறப்பட்ட நிலக்கிழாரை என் மகன் பார்த்திருக்கிறான். இன்னும் திருமணத்திற்கு மூன்று நாட்கள்தாம் இருந்தன. மிகப் பணிவுடன் அவரை நெருங்கி அவரிடம் கடிதத்தைக் கொடுத்தானாம். அதைப் படித்த அவர் தாழ்ந்து போகும் நேரமெல்லாம் கடந்துவிட்டது என்றும் இப்பொழுது அது தேவையற்றது என்றும் சொன்னாராம். இனியும் அவருக்கு எழுதவேண்டிய கடிதங்களையெல்லாம் அவருடைய வழக்கறிஞருக்கே யெழுதினால் போதும்; அவருக்கு எழுதக்கூடாது என்றாராம்.

"பார்த்தீர்களா, என்னை அடக்குபவரின் எண்ணத்தைப் பாருங்கள். நாம் பணிய ஆரம்பித்தால்

அவர் மிகக் கடுமையாகி விடுவார். அவர் என்னை எப்படி வேண்டுமென்ருலும் படுத்தட்டும்; என்னை அடக்குவதற்கு அவர் எவ்வளவு தளைகள் போட்டிருந் தாலும் அவற்றையும் மீறி நான் மிக விரைவில் விடுதலை யடையப்போகிறேன். நெருங்க நெருங்க வெளிச்ச மாயிருக்கும் வீட்டை நோக்கி நான் போய்க்கொண் டிருக்கிறேன். இது எனக்கு இன்பத்தைத் தருகின்றது. ஆதரவற்ற அனுதைகளாக நான் என் குடும்பத்தினரை விட்டுச் சென்ருலும் அவர்களை யாரும் அடியோடு கை விட்டுவிட மாட்டார்கள். அவர்களுடைய தந்தைக்காக அவர்களுக்கு நண்பர்கள் ஏதாவது உதவி செய்வார்கள். அவர்களுடைய ஆண்டவனுக்காகத் தாராள மன முடைய சிலர் அவர்களை ஆதரிப்பார்கள்."

நான் இவ்வாறு நண்பரிடம் பேசிக்கொண்டிருந்த பொழுது இரண்டு நாட்களாக என்னைப் பார்க்க வராத என் மனைவி மிகக் கவலையுடனும் அச்சத்துடனும் உள்ளே வந்தாள். அவள் பேச முயன்ருள். ஆனுல் முடியவில்லை. "ஏன் இவ்வாறிருக்கிருய்? உன்னுடைய கவலைகளால் என்னுடைய துன்பத்தை மேலும் பெரு க்ச் செய்கிருய். வீட்டுக்காரரின் கொடிய மனத்தை நம் பணிவு மாற்ற முடியாமற் போனுலென்ன? இவ்வளவு மோசமான இடத்தில் என்னைச் சாகும்படி விட்டு விட்டாலென்ன? செல்வக் குழந்தையொன்றை நாம் இழந்துவிட்டாலும் நான் இறந்து விட்டால்கூட மற்றக் குழந்தைகளைக் காப்பதில் நீ அமைதி காண்பாய்.

"ஆம், உண்மையிலேயே நாம் ஒரு குழந்தையை இழந்துவிட்டோம். முரடர்கள் நம் அருமைச் சோபி யாவை நம்மிடமிருந்து பிரித்து விட்டார்கள்." என்ருள்.



"என்ன, சோபியாவை முரடர்கள் தூக்கிக் கொண்டு போய் விட்டார்களா? இருக்கவே இருக் காது" என்று என் நண்பர் வேகமாகக் கூறினுர்.

நிலைத்த பார்வையிலே கண்ணீர் சிந்துவதின் மூலம்தான் பதில்கூற அவளால் முடிந்தது. ஆனுல் அவளுடன் வந்த மற்ருெரு கைதியின் மனைவிதான் இதைப்பற்றி விரிவாகக் கூறினுள். என்னுடைய மனைவி, மகள் ஆகிய இருவருடன் தானும் ஒரு நெடுஞ் சாலையில் சென்றுகொண்டிருந்ததாக அவள் கூறினுள். அந் நெடுவழியில் அச்சிற்றூரைத் தாண்டிச் சென்ற பொழுது கோச் வண்டியில் வேகமாக வந்த இருவர் அவர்களை நெருங்கித் திடீரென்று வண்டியை நிறுத்தி ஞர்களாம். அதிலிருந்து நல்ல உடையணிந்த ஒருவர், அவர் தார்ன்கில் அல்லர், வெளியே இறங்கி என்னு டைய மகளின் இடுப்பைக் கைகளால் சுற்றிக்கொண்டு முரட்டுத் தனமாகத் தூக்கி வண்டியில் ஏற்றிக்கொண்ட பின் வேகமாகப் போய் விட்டதாம் வண்டி. அதனுல் ஒரு நொடியில் வண்டி கண்ணுக்கு மறைந்து விட்டதாம்.

"என்னுடைய துன்பங்கள் பெருகிக் கொண்டே போகின்றன. இன்னும் துன்பம் ஏற்பட்டால் அது துன்புறுத்துவதற்கு இடமில்லாதவாறு துன்பங்கள் பெருகிவிட்டன. என்ன! ஒருவரையும் விடவில்லையா! என்னையும் யாரும் விட்டுவிட வேண்டாம்! என் உயி ருக்கு உயிராய் இருந்த மகளையே கொண்டுபோய் விட்டார்களே கொடியவர்கள். வானுலக மங்கை போன்ற அறிவும் அழகும் நிறைந்தவளாயிற்றே அவள். என்னுடைய மனைவியைக் கைவிட்டுவிடாது காப் பாற்றுங்கள். கொடியவர்களே, என்னை யாரும் விட்டு

விடாதீர்கள். என்னையும் கொடுமைப்படுத்துங்கள்'' என்று கூவினேன்.

''ஐயோ'' என்று என் மனைவி அலறினாள். ''என்னைவிட உங்களுக்குத்தான் இப்பொழுது ஆதரவு தேவை. நம்முடைய துன்பங்கள் பெரியவைதாம். ஆனால் நான் இதையும் தாங்கிக்கொள்வேன். இதற்கு மேலும் தாங்கிக்கொள்வேன். ஆனால் நீங்கள் மட்டும் நலமாக இருந்தால் எனக்குப் போதும். அவர்கள் என்னுடைய குழந்தைகளை எடுத்துக் கொள்ளட்டும். இந்த உலகத்தையே என்னிடமிருந்து பறித்துக் கொள்ளட்டும். ஆனால் உங்களை மட்டும் என்னிடமே விட்டுவிடட்டும்'' என்று கதறினாள்.

இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு எங்களுடன் இருந்த என் மகன் எங்களுடைய வருத்தத்தைக் குறைக்க முயன்றான். நல்ல காலம் விரைவில் வரும் என்று உறுதியாகக் கூறினான்.

''மகனே, உலகைப் பார். இதில் நான் அனுபவிக்க வேண்டிய இன்பம் இன்னுமா இருக்கின்றது. நம்மைத் தேற்றும் ஒவ்வொரு வழியும் அடைக்கப் பட்டிருக்கிறதே. நம்முடைய நல்ல காலம் சவக்குழிக்கு அப்பால்தான் இருக்கிறது'' என்றேன் நான்.

''அப்பா, உங்களுக்கு மகிழ்ச்சியை விளைவிக்கக் கூடியது இன்னும் இருக்கிறது. ஏனென்றால் எனக்கு அண்ணன் ஜியார்ஜிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது''

''அவன் எப்படியிருக்கிறான்'' என்று நான் குறுக்கிட்டேன். ''நம்முடைய வறுமை அவனுக்குத் தெரியுமா? அவனாவது நம் குடும்பம் படுகின்ற



இன்னல்களுக்கு விலக்காக இருக்கிறானே, அதுவே போதும்.''

''ஆம் அப்பா, அவன் நலமாக, மகிழ்ச்சியாக, இன்பமாக வாழ்கின்றான். அவனுடைய கடிதம் நற் செய்தியைத் தவிர வேறொன்றையும் குறிப்பிடவில்லை. அவனுடைய படைத்தலைவனுக்கு அவன் மிக வேண்டியவனாம். அவர் அவனை மிக விரைவில் ஒரு துணைத் தலைவனாக ஆக்கிவிடுவதாகக் கூறியிருக்கிறாராம்.''

''நீ சொல்வதெல்லாம் உண்மைதானா?'' என்று கேட்டாள் என் மனைவி. ''உண்மையிலேயே என் மகனுக்குத் தீங்கொன்றும் நேரவில்லையே.''

''ஒன்றுமில்லையம்மா, நீ வேண்டுமென்றால் படித்துப் பாரேன். இக்கடிதம் உனக்கு எல்லையற்ற மகிழ்ச்சியைத் தரும். உனக்கு இப்பொழுது ஏதாவதொன்று ஆறுதலைத் தருமென்றால் அது இக்கடிதம்தான்.''

''உண்மையிலே இது அவனிடமிருந்து வந்த கடிதம்தானா. உனக்கு நிச்சயமாகத் தெரியுமா? உண்மையிலேயே அவன் மகிழ்ச்சியாக இருக்கிறானா?''

''ஆம் அம்மா. இது அவனிடமிருந்து வந்த கடிதம்தான். ஒருநாள் அவன் நம் குடும்பத்திற்குப் பெருமுதவியாக இருப்பான்.''

''அப்படியா? ஆண்டவனுக்கு மிக்க நன்றி. என்னுடைய கடைசிக் கடிதம் அவனுக்குக் கிடைக்கவில்லை. அது நல்லதாகப் போயிற்று. மற்ற இடங்களிலெல்லாம் நம்மைக் கைவிட்டுவிட்ட ஆண்டவன் இங்கு நமக்குக் கைகொடுத்து உதவியிருக்கிறான். நான் அவனுக்கு எழுதிய கடைசிக் கடிதத்தை மிக்க சினத்துடன் எழுதி

யிருந்தேன். அவனுக்கு மனிதனுக்கு இருக்கவேண்டிய இதயம் இருந்தால் உடனே பழிக்குப்பழி வாங்கி அவனுடைய தந்தைக்கும் தங்கைக்கும் நல்லவழி செய்ய வேண்டும் என்று எழுதினேன். ஆனால் எல்லாவற்றையும் செலுத்துகின்ற ஆண்டவன் இதைக் காப்பாற்றி விட்டான். எனக்கு இப்பொழுதுதான் அமைதி ஏற்பட்டது.''

''பெண்ணே, நீ மிகவும் தவறாக நடந்து விட்டாய். இதே வேறு நேரமாயிருந்தால் உன்னை மிகக் கடுமையாகத் தண்டித்திருப்பேன். உன்னையும் உன் மகனையும் அஃது அழித்துவிடும். எவ்வளவு பெரிய பிளவினின்றும் தப்பித்து விட்டாய்.

நம்மைவிட ஆண்டவன்தான் இப்பொழுது நமக்குப் பெருமுதவி செய்துள்ளான். நான் இறந்து விட்டாலும் என் மகனாவது என்னுடைய பிள்ளைகளுக்குத் தந்தையாக இருந்து பாதுகாக்கட்டுமென்று தான் அவனைக் காப்பாற்றியிருக்கிறான். அவன் இவ்வளவு மகிழ்ச்சியாயிருக்கும் பொழுது ஆண்டவன் நம் குடும்பத்தினரிடமிருந்தே இன்பத்தைப் பறித்து விட்டான் என்று எவ்வளவு நெறிதவறிக் கூறி விட்டேன். அவனுடைய தாய் விதவையாகி விட்டால் அவனையும் தங்கைமாரையும் தம்பிமாரையும் காப்பாற்ற அவனை ஆண்டவன் விட்டு வைத்திருக்கிறான். ஆனால் அவனுக்குத் தங்கைகள் எங்கேயிருக்கின்றார்கள்? இப்பொழுது அவனுக்கு ஒரு தங்கையும் இல்லை. அவர்களெல்லாம் போய் விட்டார்கள். என்னிடமிருந்து பிறர் திருடிக்கொண்டு விட்டார்கள். நானே ஒன்றும் செய்ய முடியாத நிலையில் இருக்கிறேன்.''



''அப்பா'' என்று இடையே குறுக்கிட்டான் என் மகன்.

''அவனுடைய கடிதத்தைப் படிக்க விடுங்கள். அதைப்படித்தால் உங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கும்.''

''நானும் அவனைப் படிக்கும்படி சொன்னேன். அக் கடிதம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

''அன்புடைய அப்பா,

என்னைச் சுற்றியுள்ள இன்பமான சூழ்நிலைகளிலிருந்து என்னுடைய கற்பனையை இழுத்து இதைவிட மகிழ்வளிக்கக் கூடிய பொருள்களில் செலுத்த விரும்புகிறேன் — அந்தஇடம் நம்வீட்டின் நெருப்படிதான். நீங்கள் படிக்கும் இக்கடிதத்தின் ஒவ்வொரு வரியையும் மிக உன்னிப்பாகக் கேட்கும் தங்கை தம்பிகளை எண்ணிப் பார்க்கிறேன். பேரவாவும் இன்னலும் இன்னதென்றறியாத அவர்களுடைய முகங்கள் மகிழ்வால் ஒளிவிடுவதைக் காண்கின்றேன். நீங்கள் வீட்டில் எவ்வளவுதான் மகிழ்ச்சியோடு இருந்தாலும் நான் இங்கு நலமாகவும் ஒவ்வொரு வகையிலும் மகிழ்வாகவும் இருப்பதை நீங்கள் அறிந்தால் அது உங்களுடைய மகிழ்ச்சியை மேலும் அதிகப்படுத்து மென்பது உறுதி.

எங்களுடைய படை இங்கேயே இருக்கட்டும் என்று எதிர் உத்தரவு வந்துள்ளது. என்னுடைய நட்பைப் பெரிதும் உடைய என் படைத் தலைவர் என்னை எங்குச் சென்றாலும்

அழைத்துச் செல்கின்றார். நான் ஒரு முறை சென்ற விடத்திற்கு மறுமுறையும் செல்லும் பொழுது மிக்க மதிப்புடன் வரவேற்கின்றனர். நேற்று இரவு திருமதி—யுடன் நடனமாடினேன். என்னால் மட்டும் மறக்க முடியுமானால், உங்களுக்குத் தெரியும் யாரையென்று, அது எனக்குப் பெரும் வெற்றியாகும். ஆனால் என்னையே மறந்துவிட்ட நண்பர்களைப் பற்றி மட்டும் நான் நினைத்துக் கொண்டேயிருக்க வேண்டும் என்பது என்னுடைய விதி. இதில் முதலில் உங்களைக் குறிப்பிட வேண்டியிருப்பதற்கு அஞ்சுகிறேன். ஏனெனில் நெடுநாட்களாக வீட்டிலிருந்து கடிதம் வரும் என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். ஆனால் ஒரு பயனுமில்லை. ஒலிவியாவும் சோபியாவும் கடிதம் போடுவதாக உறுதியாகக் கூறினார்கள். ஆனால் அவர்கள் என்னை மறந்து விட்டார்கள் போலும். அவர்களிருவரும் கைதேர்ந்த குட்டிகள் என்று சொல்லுங்கள். அவர்கள் மேல் நான் இப்பொழுது கடுஞ் சினத்துடன்இருப்பதாகக் கூறுங்கள் — இருந்தாலும் நான் எவ்வளவுதான் அதிகமாகக் கூற விரும்பினாலும் உள்ளம் அன்பு மழைதான் பொழிகின்றது. எனவே நான் அவர்களை மிகவும் விரும்புவதாகக் கூறுங்கள். எப்பொழுதும் உங்களை மறவாத

"உங்கள் கடமை மிக்க மகன்."

"நம்முடைய எல்லாக் கவலைகளுள்ளும் நம் குடும்பத்தில் ஒருவராவது இத்தகைய இன்னல்களுக்கு



விலக்காயிருப்பதை யெண்ணி எவ்வாறு நன்றி செலுத்துவது என்று புரியவில்லை. ஆண்டவன் அவனுக்குத் துணையாக இருந்து மகிழ்வாகவே இருக்கச் செய்து அவனுடைய தாயையும் இந்த இரு சிறுவர்களையும் காப்பாற்றச் செய்யட்டும். தேவைகளை யுணராதவாறு அறியாமையையே சிறுவர்கள் பெற்று விளங்கட்டும்.''

நான் இதைக் கூறி முடிக்குமுன் கீழே இருந்த முன்கூடத்திலிருந்து குழப்பத்தின் ஓசை கேட்டது. ஆனால் அது மிக விரைவில் அடங்கிவிட்டது. என்னுடைய பகுதியை நோக்கிவரும் பாதையில் விலங்குச் சங்கலிகளின் ஓசை கேட்டது. குருதிக் கறையும் உடலெங்கும் காயங்களுமுடைய ஒரு மனிதனை விலங்கிட்டுத் தாங்கிக் கொண்டு வந்தனர் சிறைக் காவலாளிகள். அத்துயர் நிறைந்த மனிதன் என்னை நெருங்கி வந்த பொழுது பெரும் இரத்தத்தோடு அவனைப் பார்த்தேன். அவன் என் மகன் என்பதை யறிந்தபொழுது பெரும் அச்ச முற்றேன்.

"ஜியார்ஜ், ஜியார்ஜ். உன்னையா நான் இவ்வாறு பார்க்கிறேன். உடலெங்கும் காயம், கைகளில் விலங்கு! இதுதான் நீ பெறும் மகிழ்ச்சியா? இந்த நிலையிலா நீ என்னை வந்து அடைகிறாய்? ஐயோ இக் கொடிய காட்சி என்னுடைய இதயத்தைப் பிளந்து என்னை இப்பொழுதே கொன்றுவிடும் போலிருக்கிறதே'' என்று நான் கதறினேன்.

"அப்பா, உங்களுடைய மன உறுதி எங்கே போயிற்று?" என்று அஞ்சாத குரலில் கேட்டான் என் மகன். "நான் துன்பம் அனுபவிக்க வேண்டும்.



காவலர் ஜியார்ஜை அழைத்துவரல்



என்னுடைய வாழ்க்கை பறிபோய்விட்டது. வேண்டுமானால் அவர்களே அதை எடுத்துக் கொள்ளட்டும்.”

சிறிது அமைதியாக இருந்து என் உணர்ச்சிகளை அடக்க முயற்சி செய்தேன். ஆனால் இதே நிலையில் இறந்து விடுவதே நல்லது என்று எண்ணினேன்.

“மகனே, உன்னை இந்நிலையில் பார்ப்பதற்கு என் உள்ளம் வருந்துகின்றது. என்னால் அதைத் தடுக்க முடியவில்லை. உன்னை இந்நிலையில் காண்பதை விடப் பாதுகாப்பாக நீ வாழவேண்டும் என்றுதான் நான் எண்ணுகிறேன். விலங்கு-காயம்; இதைவிட இளமையிலேயே இறந்து போவது மகிழ்ச்சிதரக் கூடியதாகும். இவ்வாறு என்னுடைய சிறுவர்கள் எல்லோரும் இளவயதிலேயே வாழ்க்கையினின்று வழுக்கி விழுகின்ற வேளையில் நான் இவ்வளவு இழிவான சூழ்நிலையிலும் இன்னும் வாழ்ந்துகொண்டிருக்கின்றேன். இவ்வாறு என்னைப் படுத்துகின்ற தீவினைகள் அனைத்தும் என்னுடைய மக்களை வதைக்கும் கொலைகாரனையும் வதைக்கட்டும். அவனும் என்னைப் போல் வாழ்ந்து—”

“நிறுத்துங்கள் அப்பா” என்று குறுக்கிட்டான் என் மகன். “இல்லையேல் நான் உங்களுக்காக வெட்கப் படவேண்டும். எப்படி நீங்கள் உங்களுடைய வயதை மறந்து விட்டீர்கள்! உங்களுடைய தொழிலை மறந்து விட்டீர்கள்! ஆண்டவன் இடவேண்டிய கட்டளைகளை நீங்கள் இட விரும்புகிறீர்களே. இவ்வாறு நீங்கள் பழிப்புரைகளைக் கூறினால் அவைகள் உங்கள் மீதே இறங்கி உங்களை யழித்து விடுமே. அவை வேண்டாம். இப்பொழுது நான் விரைவில் அடையப்போகும்

மரணத்திற்காக என்னைத் தகுதியுடையவனாக்குவதில் உங்கள் கவனத்தைச் செலுத்துங்கள்."

"மகனே, நீ சாகக்கூடாது. மரண தண்டனை பெறுமளவிற்கு நீ எக்குற்றத்தையும் செய்யவில்லையென்பது உறுதி. முன்னோர்கள் அவனைக் கண்டு வெட்கப்படுமளவிற்கு என் ஜியார்ஜ் எந்தப் பழியையும் செய்திருக்கமாட்டான்."

"அப்பா, நான் செய்தது மன்னிக்க முடியாத தொன்று. வீட்டிலிருந்து அம்மாவின் கடிதம் எனக்கு வந்தவுடன் நம்முடைய பெரு மதிப்பைக் குலைத்து விட்ட கொடியவனைத் தண்டிப்பது என்ற முடிவுக்கு வந்தேன். எனவே உடனே என்னை வந்து பார்க்குமாறு அவனுக்கு ஆணையிட்டேன். அதற்கு அவன் நேரில் வராது என்னைப் பிடித்து வருமாறு தன் வீட்டு வேலைக்காரர் நால்வரை யனுப்பினான். முதலில் வந்து என்னைத் தாக்கியவனை நான் காயப்படுத்தினேன். ஆனால் மற்ற மூவரும் என்னைக் கட்டியிழுத்துச் சென்றனர். எனக்கு நேராகச் சட்டத்தை ஏவிவிட அந்தக் கோழை முடிவு செய்தான். அவனுடைய சான்றுகள் மறுக்க முடியாதவை. முதலில் நான்தான் அவனைப் பூசலுக்கழைத்தேன். அதனால் சட்டத்தை நானே முதலில் எதிர்த்து விட்டதால் மன்னிப்பு பெறுவதற்கு வழியில்லாது போயிற்று. நீங்கள் அடிக்கடி என்னை மன உறுதியோடு இருக்கும்படி கூறுவீர்கள். அதையே நான் இப்பொழுது உங்களிடம் கூற விரும்புகின்றேன்."

"நீ அதைக் காணலாம் மகனே! இப்பொழுது நான் இவ்வுலக நிலையைவிட, இது தரக்கூடிய இன்



பங்களை அனுபவிக்கும் நிலையைவிட உயர்ந்து விட்டேன். இந்த நேரத்திலிருந்து இவ்வுலகோடு என் உள்ளத்தைப் பிணைத்திருந்த கட்டுகளை உடைத்தெறியப் போகிறேன். நம்மிருவரையும் அழியாவுலகில் இடம் பெறுதற்குரிய வகையில் ஆயத்தம் செய்யப்போகிறேன். ஆம், என் மகனே! நான் உனக்கு நல்வழியைக் காட்டுவேன். என்னுடைய ஆன்மா உன்னுடையதற்கு வழிகாட்டி உயர்த்திச்செல்லும். நாம் இருவரும் ஒன்றாகப் பறந்து செல்வோம். உனக்கு இவ்வுலகில் மன்னிப்பு கிடைக்காது என்பதை நான் இப்பொழுது உணர்கிறேன். நாம் இருவரும் இன்னும் சிறிது நாட்களில் போய் விடையளிக்கப்போகிறோமே அந்த வழக்கு மன்றத்தில் நீ மன்னிப்பைப் பெறுவதற்கு நான் அறிவுரை கூற முடியும். ஆனால் நாம் கூறும் அறிவுரைகளில் ஈகையில்லாதிருக்க வேண்டாம். நம்முடன் சிறையிலுள்ள பிறரும் இவற்றைக் கேட்கட்டும். இதில் பங்கு கொள்ளட்டும். சிறைக்காவலரே, அவர்களை இங்கேவர விடுங்கள். நான் அவர்களை முன்னேற்ற முயல்வேன்."

இவ்வாறு கூறிக்கொண்டு என்னுடைய வைக்கோற் படுக்கையினின்றும் எழ முயன்றேன். ஆனால் உடலில் உரமில்லாததால் சுவர்மீது சாய்ந்து உட்காரத்தான் முடிந்தது. சிறையிலிருந்த அனைவரும் நான் கூறியவாறு என் அறிவுரைகளைக் கேட்கக் கூடினார்கள். என்னுடைய மகனும் அவனுடைய தாயும் என்னை இரு பக்கமும் தாங்கிக் கொண்டார்கள். அங்கு எல்லோரும் வந்து விட்டதைப் பார்த்தவுடன் நான் கீழ் வரும் அறிவுரையைக் கூறத் தொடங்கினேன்.

# 29. மறுமையில் இன்பம்

"நண்பர்களே, அருமைக் குழந்தைகளே, என்னுடன் சிறையில் வாடும் அன்பர்களே. இவ்வுலகில் நன்மையும் தீமையும் பரவிக்கிடப்பதைப் பார்க்கும் பொழுது மனிதன் மகிழ்ச்சியடையக் கூடியவை எவ்வளவோ உள்ளன. ஆனால் அதைவிடத் துன்புறுத்துபவை அதிகமாக உள்ளன. இந்த உலக முழுவதிலும் நாம் தேடிப்பார்த்தால்கூட அதிகமாக விரும்புவதற்கு ஒன்றுமே இல்லை என்று எண்ணக்கூடிய முழு இன்பத்தை அனுபவிக்கும் ஒரு மனிதனைப் பார்க்க முடியாது. ஆனால் அதிகமாக விரும்பாதது எதுவுமில்லை என்பதைத் தற்கொலையின் மூலம் காட்டுகின்ற ஆயிரக் கணக்கானவரை நாம் நாள்தோறும் காண்கிறோம். எனவே இவ்வாழ்க்கையில் நாம் எல்லாப் பயன்களையும் அடைய முடியாது. ஆனால் நாம் எல்லாத் துன்பங்களையுமடைய முடியும் என்பது தெரிகின்றது.

"ஏன் மனிதன் இவ்வாறு துன்புற வேண்டும்? இதில் ஆண்டவன் நம் பேரவாவைப் போக்குவதற்கு உரிய எண்ணங்களைக் கொடுத்துள்ளார். இந்தச் சூழ்நிலையில் மனிதன் தத்துவத்தின் உதவியை நாடியுள்ளான். ஆனால் தத்துவம் அவனுக்குப் போதிய அளவு ஆறுதலைத் தராது என்றறிந்த ஆண்டவன் சமயம் என்னும் உதவியை அவனுக்கு அளித்துள்ளான். தத்துவம் கூறுகின்ற ஆறுதலுரைகள் வியக்கும் வண்ணமிருக்கும். ஆனால் பெரும்பாலும் தவறாக இருக்கும். வாழ்க்கை என்பது வசதிகள் நிறைந்தது. ஆனால் அதை அனுபவிக்கத் தெரியவேண்டும் என்று கூறு



கின்றது. தவிர்க்க முடியாதவாறு துன்பங்களை யனுபவிக்க நேரிட்டால், வாழ்க்கை குறுகியது, அத் துன்பங்கள் விரைவில் முடிந்துவிடும் என்று கூறுகின்றது. இந்த உரைகள் ஒன்றுக்கொன்று மாறுபடுகின்றன. ஏனெனில் வாழ்க்கையென்பது வசதியான இடமானால் அது குறுகியிருப்பது கருமிச்செயலாகும். ஆனால் நீளமானது என்று கூறினால் துன்பங்களும் நீண்டு கொண்டேயிருக்கும் என்று பொருள். எனவே தத்துவம் குறைபாடுடையது. ஆனால் சமயம் இதைவிட உயர்ந்த ஆறுதலைத் தருகின்றது.

"மனிதன் இங்கே ஏன் வருகின்றானெனில் உள்ளத்தைப் பண்படுத்திக்கொண்டு வேறு இடத்திற்குச் செல்ல ஆயத்தம் செய்யவே வருகின்றான் என்று சமயம் கூறுகின்றது. உயர்ந்த உள்ளத்தையுடைய மனிதன் உடலைவிட்டுச் செல்லும்பொழுது இங்கே வானுலக இன்பத்தையே பெற்றதாகக் காணுவான். ஆனால் கொடிய குணங்களால் காயமும் கறையும்பட்ட மனிதன் அவனுடைய உடலை அச்சத்துடன் அகன்று ஆண்டவனுடைய தண்டனையை எதிர்நோக்கிச் செல்கின்றான். வாழ்க்கையில் ஒவ்வொரு சூழலிலும் உண்மையான வசதியை நாடவேண்டும் என்று சமயம் கூறுகின்றது. ஏற்கெனவே இன்பத்தையனுபவித்துக் கொண்டிருந்தால் அவ்வின்பத்தை முடியாத தொன்றாகப் பார்த்துக்கொள்ளவேண்டும். அல்லது துன்பமுற்றுக் கொண்டிருப்பின் அமைதியைத் தரும் ஓர் இடம் இருக்கிறது என்று ஆற்றிக்கொள்ளவேண்டும். ஆக நல்லவன் இன்பத்தைத் தொடர்ந்து அடைவதற்கும் கொடியவன் துன்பத்தினின்றும் விடுதலை பெறுவதற்கும் சமயம் உதவுகின்றது.

"ஆண்டவன் எப்பொழுதும் கொடியவர்களைக் கைவிட்டு விடுவதில்லை. நல்லவர்களுக்கு அருள்வதைப் போலவே தீயவர்களுக்கும் கருணை காட்டுவான். நல்லவர் இன்பத்தையே அடைகின்றனர். தீயவர் அடைந்து வந்த துன்பங்களைவிட்டு இன்பத்தைப் புதிதாக அடைகின்றனர். நல்லவர்களை விடத் தீயவர்களே இவ்வகையில் இரண்டு பயன்களைப் பெறுகின்றனர்.

எனவே ஆண்டவன் தீயவர்களுக்கு இவ்வுலக வாழ்க்கையின்பத்தை விட இரு பெரும் பயன்களை அளித்துள்ளான். மரணத்தினால் பெரும் பயனே ஏற்படுகின்றது. இது வரை அனுபவித்து வந்ததற்கு மாறாக மேலுலகில் அவன் இன்பத்தை அடைவதால் அவ்வின்பம் இரு மடங்கு பெரிதாகத் தோன்றுகிறது. இதுவரை நான் கூறியவற்றால் தத்துவம் செய்ய முடியாத ஒன்றைச் சமயம் செய்துகாட்டுகிறது என்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். இன்பமுற்றவர்களையும் துன்பமுற்றவர்களையும் ஆண்டவன் ஒரே முறையில்தான் நடத்துகிறார் என்பதை இது காட்டுகின்றது. எல்லா மனிதர்களும் அடையும் இன்பமும் ஒரே அளவில்தான் உள்ளது. பணக்காரனுக்கும் ஏழைக்கும் ஒரேவித இன்பத்தை மறு உலகில் சமயம் அளிக்கின்றது. அவ்விருவரும் அதை அடையும் வண்ணம் எதிர்பார்க்கும் நிலையை இருவருக்கும் சமமாக அளிக்கின்றது.

"இவைதான் தீயவர்கள் பெறக்கூடிய மன ஆறுதல்கள். இவை இவர்களுக்கே உரியவையாதலின் இவர்கள் பிற மக்களினின்றும் உயர்ந்து காணப்படுகின்றனர். ஆனால் பிறவற்றில் அவர்களை விடத் தாழ்வாக இருக்கிறார்கள். ஏழைகளின் துன்பங்களை அறிந்தவர்கள் அவர்களுடைய வாழ்க்கையைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். வாழ்க்கையில் பல தேவைகளையுடைய மனிதர்கள் ஏழைகளல்லர். அத்தேவைகளை அடையவேண்டுமென்று எண்ணுபவர்கள்தாம் ஏழைகள். அவர்கள்தாம் துன்புறுவார்கள்.



நாமும் இப்பொழுது அவ்வாறுதாம் துன்புறுகிறோம். அத்தேவைகளை நாம் அடக்கிக் கொண்டு இருப்பதுதான் துன்பத்தைத் தருகின்றது. மரணம் என்பது எளியது. அதை யார் வேண்டுமானாலும் பெற்று விடலாம். ஆனால் இடைவிடாது துன்புறுவது என்பது மிகக் கொடியது. இதை ஒரு மனிதனும் பொறுத்துக் கொள்ள மாட்டான்.

நமக்கு மேலுலகில் இன்பம் கிட்டும் என்ற உறுதிமொழி மிகவும் சிறப்பாக நிறைவேறும். ஏனெனில் இவ்வுலக வாழ்க்கையில் தனியாக இருந்தால் உண்மையில் நாம் பெரிதும் துன்புறுபவராக இருப்போம். இந்த இருளடைந்த சுவர்களைப் பார்க்கும் பொழுது, இவை நம்மை அடைத்து வைத்திருப்பதோடு நம்மை அச்சுறுத்தவும் செய்கின்றன. இங்கே வரும் ஒளி இந்த இடத்தின் கொடுமையைத்தான் அதிகப் படுத்துகின்றது. இந்த நலிந்த பார்வைகளைப் பார்க்கும் போது, இவற்றின் ஒலியைக் கேட்கும் பொழுது—

ஆ, இவற்றிற்கெல்லாம் நாம் என்ன கைம்மாறு செய்ய முடியும்! காற்றைப் போல உரிமை

யுடன் பரந்த வெளியில் செல்ல — ஆண்டவன் பொழியும் அருள் வெயிலின் ஒளிக்கற்றையில் காய — அவனைப் பற்றிய பாடல்களைக் கனிவுடன் பாட, அச் சுறுத்துவதற்கோ அவமதிப்பதற்கோ ஒரு தலைவன் இல்லாது, ஆண்டவன் மட்டுமே நம் கண்களில் நிறைந்திருக்க .... இவைகளைப் பற்றி யெல்லாம் எண்ணும் பொழுது மரணம் நற்செய்திகளைத் தாங்கி வரும் தூதனைத் தோன்றுகின்றது.

இவைகளைப் பற்றி எண்ணும் பொழுது அவன் உயிரைப் பறிக்க எய்யும் அம்பே ஊன்றுகோலா கின்றது. இவைகளைப் பற்றி யெண்ணும் பொழுது வாழ்க்கையில் இவை போன்று பயன் தரக்கூடிய பொருள் யாதுளது? இவைகளையெண்ணும் பொழுது உலகில் வெறுக்கக்கூடாத பொருள் என்ன இருக் கின்றது? அரசர்கள் நல்லநிலையில் இருந்தால் கூட இவற்றிற்காக ஏங்க வேண்டும்; ஆனால் பெருந் தன்மையுடைய நாம் அதன் மீது ஆவல் கொண்டால் போதும்.

இவை நமக்குக் கிட்டுமா? நாம் இவற்றிற் காக முயற்சி செய்தால் உறுதியாக நமக்குக் கிட்டும். நாம் இவற்றிற்காக முயலவேண்டும். அவ்வளவுதான். அவை உறுதியாக நம்முடையனவாகி விடும். நம் முடைய கடந்த கால வாழ்க்கையைத் திருப்பிப் பார்த்தால் அது மிகக் குறுகியதாகத் தோன்றும். நம்முடைய எதிர்கால வாழ்க்கையை எண்ணிப்பார்த் தால் அது எப்படித் தோன்றினாலும் சரி, அது மிகக் குறைவாகத்தான் இருக்கும். நாம் பெரியவர் களாக ஆக ஆக ஒரு நாள் என்பது மிகக் குறைவாகத்



தோன்றும். எனவே நாம் இப்பொழுது ஓய்வு எடுத்துக் கொள்ளுவோம். ஏனெனில் வாழ்க்கைப் பயணத்தின் முடிவை விரைவில் அடைந்து விடு வோம். ஆண்டவன் நமக்களித்த பெருஞ்சுமையை இறக்கி விடுவோம். மரணம் துன்புற்றவர்களின் ஒரே நண்பனாக இருந்தாலும் களைத்துப் போன வழிப் போக்கனைக் கேலிசெய்கின்றது. இருந்தாலும் நம் உழைப்பை நிறுத்தும் நேரம் உறுதியாக மிக விரைவில் வந்துவிடும்.''

---

## 30. நல்லவற்றிற்கு அறிகுறி

என்னுடைய அறிவுரையை நான் முடித்த பின் அவையோர் தத்த மிடத்திற்குச் சென்றனர். சிறைக் காவலர் அவருடைய கடமையைச் செய்ய வந்தார். என்னுடைய மகனை இதைவிடப் பாதுகாப்பான அறையில் இருக்கச் செய்யவேண்டுமென்று அவர் பணிவுடன் கூறி அவனை அழைத்துச் சென்றார். ஒவ்வொரு நாள் காலையும் என்னைப் பார்ப்பதற்கு அனுமதி தருவதாகக் கூறினர். அவர்காட்டிய இரக்கத் திற்காக நன்றி செலுத்தினேன். என் மகனின் கை களைப் பற்றி அவன் முன் இருக்கும் கடமையை நினைவூட்டி விடை கொடுத்தேன்.

நான் மீண்டும் படுத்துக்கொண்டேன். என் சிறுவர் இருவரும் என் பக்கத்தில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது திரு ஜென்கின்சன் வந்து என் மகளைப் பற்றிய செய்தி கிடைத்திருப்ப தாகக் கூறினர். இரண்டுமணி நேரத்திற்கு முன் அருகி லுள்ள சிற்றூரில் ஒரு விடுதியில் அவளை ஒருவர் பார்த்ததாகக் கூறினராம். அவளுடன் ஒரு பெரியவர் இருந்தாராம். அவர்கள் இருவரும் நகரை நோக்கி வருபவர்களைப் போலக் காணப்பட்டார்களாம்.

அவர் இதைச் சொல்லி முடிக்கு முன் சிறைக் காவலர் விரைவும் மகிழ்ச்சியும் நிறைந்த பார்வையுடன் வந்து என் மகள் கிடைத்து விட்டாள் என்று அறி வித்தார். அடுத்த சில நொடிகளுக்குள் என் மகன் மோசசு ஓடிவந்தான். அவனுடைய தமக்கை சோபியா



பழைய நண்பர் திரு. பர்செலுடன் கீழே வந்துள்ள தாகவும் அவர்கள் மேலே வருவதாகவும் சொன்னான்.

அவன் இதைக் கூறி முடிக்குமுன் கண்களிலே மகிழ்ச்சி துளிர்க்க என் அருமை மகள் ஓடிவந்து மிக்க அன்புடன் என்னைத் தழுவிக்கொண்டாள். என் மனைவியின் கண்ணீரும் அமைதியும் அவள் அடைந் திருந்த எல்லையற்ற உவகையை வெளிப்படுத்தின. "அப்பா, நான் மீண்டு வருவதற்குத் துணையாக இருந்த பெரிய மனிதர் இவர்தாம். என்னுடைய மகிழ்ச்சி திரும்பி வந்ததற்கும் என்னைப் பாதுகாத்த தற்கும் இவர்க்கு நான் பெரிதும் கடமைப்பட்டுள் ளேன்" என்று கூறினள் என் மகள். ஆனல் அவளை விட மிக்க இன்பமடைந்த பர்செல் அவளைத் தழுவிக் கொண்டதால் அவள் மேலும் சொல்ல வந்தது தடைப்பட்டது.

"பர்செல், நீங்கள் இப்பொழுது எங்களை மிகவும் மோசமான இடத்தில் பார்க்கிறீர்கள். நீங்கள் முன்னே எங்களைப் பார்த்த நிலைக்கு இந்நிலை முற்றிலும் மாறு பட்டுள்ளது. நீங்கள் எப்பொழுதும் எங்களுடைய நண்பராய்த்தாம் இருக்கிறீர்கள். நாங்கள் உங்களுக் கிழைத்த தவறுகளை நெடு நாட்களுக்கு முன்னரேயே உணர்ந்துவிட்டோம். அந் நன்றியற்ற செயலுக்காக மிகவும் வேதனைப்பட்டோம். அப்போது உங்களை இழிவாக நடத்தியதிலிருந்து உங்கள் முகத்தில் விழிக் கவே வெட்கப்பட்டோம். நட்பு என்னும் போர்வையில் கொடியவன் ஒருவன் எங்களை ஏமாற்றி விட்டதால் நாங்கள் உங்களைப் பழித்தோம். ஆனல் அதை மறந்து நீங்கள் எங்களை மன்னிப்பீர்கள் என்று எதிர் பார்க்கிறோம்."

இதைக்கேட்ட பர்செல் "நான் உங்கள்மீது எந்த வகையிலும் சினங்கொள்ளாத போது நான் உங்களை மன்னிக்கவேண்டும் என்பது முடியாததொன்று. அப்பொழுது நீங்கள் கொண்டிருந்த மயக்கத்தை நான் கண்டேன். ஆனால் உங்களைத் தடுத்து நிறுத்துவதென்பது என் ஆற்றலுக்கும் அப்பாற்பட்டதாகத் தோன்றியதால் உங்கள் மீது இரக்கப்படத்தான் என்னால் முடிந்தது" என்றார்.

"உங்களுடைய உள்ளம் மிகச் சிறந்தது" என்று நான் ஊகித்து வந்தேன். அது உண்மை என்பதை நான் இன்று காண்கிறேன்" என்று அவரிடம் கூறினேன். உடனே என் மகளை நோக்கி, "அம்மா! நீ எவ்வாறு விடுவிக்கப்பட்டாய்? அல்லது உன்னைத் தூக்கிச் சென்ற முரடர்கள் யாரென்று கூறு" என்று கேட்டேன்.

"அப்பா, என்னைத் தூக்கிச்சென்ற கொடியவன் யாரென்று இன்னும் எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால், நானும் அம்மாவும் நடந்து சென்று கொண்டிருந்த பொழுது அவன் எங்கள் பின்னாலிருந்து வந்து என்னை வண்டியில் ஏற்றிவிட்டான். உடனே குதிரைகளையும் வேகமாகச் செலுத்திவிட்டான். யாரையும் உதவிக்குக்கூட அழைக்க முடியவில்லை. வழியில் நான் பலரைப் பார்த்து உதவியளிக்குமாறு கூவினேன். ஆனால் ஒருவரும் என்னைக் கவனிக்கவில்லை. இதற்கிடையில் என்னைத் தூக்கிச்சென்ற முரடன் நான் கூச்சலிடுவதைத் தடுக்கப் பல வகைகளில் முயன்றான். சில சமயம் என்னைப் புகழ்ந்தான். சில சமயம் என்னைத் திட்டினான். நான் கூச்சலிடா



திருந்தால் ஒருவித இடையூறும் செய்யமாட்டேன் என்று உறுதி கூறினான். நான் உடனே வண்டிமேல் போட்டிருந்த கித்தானைக் கிழித்தேன்.

அதன் வழியே எட்டிப் பார்த்தபொழுது நம்முடைய நண்பர் பர்செல் அவருடைய வழக்கமான நடையில் கையில் தடியொன்றை வைத்துக்கொண்டு வேகமாக வருவதைக் கவனித்தேன். அவர் வண்டியை நெருங்கியபொழுது அவரைப் பெயரிட்டுக்கூவி உதவியளிக்குமாறு வேண்டினேன். நான் பலமுறை அவ்வாறு வேண்டினேன். அதனால் அவர் வண்டியை நிறுத்துமாறு வண்டியோட்டிக்கு உரக்கக் கூவினார். ஆனால் வண்டியோட்டி அது காதில் விழுந்ததாகக் காட்டிக்கொள்ளவில்லை. ஆனால் முன்னைவிட வண்டியை வேகமாக ஓட்டலானான். எனவே அவர் எங்களைப் பிடிக்க முடியாது என்று எண்ணிக்கொண்டிருந்த பொழுது பர்செல் வேகமாகக் குதிரைகள் பக்கம் ஓடி வண்டியோட்டியை ஓர் அடி கொடுத்துத் தரையில் தள்ளிவிட்டார்.

அவன் விழுந்தவுடன் குதிரைகள் தாமே நின்றுவிட்டன. என்னருகில் இருந்த முரடன் உடனே வாளை உருவிக்கொண்டு கீழே குதித்து பர்செல்லை ஓடிவிடுமாறு அதட்டினான். ஆனால் அவர் அவனுடைய வாளைத் துண்டு துண்டாக உடைத்தெறிந்து விட்டார். அவனைத் துரத்திக்கொண்டே கால் மைல் ஓடினார். ஆனால் அந்த முரடன் தப்பியோடி விட்டான்.

நான் வண்டியை விட்டு இறங்கிப் பர்செல்லுக்கு உதவிசெய்ய எண்ணினேன். அதற்குள் அவர் வெற்றியோடு என்னை நோக்கி வந்தார். வண்டியோட்டி

மெதுவாகத் தரையிலிருந்து எழுந்து தப்ப முயன்றான் ஆனால் பர்செல் அவனை மிரட்டி மீண்டும் நாருக்குள் கொண்டு விடுமாறு சட்டளையிட்டார். அவனுக்கு ஏற் பட்டிருந்த புண், என்னைப் பொறுத்தவரையிலுமாவது மிகவும் பெரியதாகக் காணப்பட்டது. இருந்தாலும் இதைத் தவிர்க்க முடியாது என்பதை அவன் உணர்ந்த தால் வண்டியோட்ட ஒப்புக்கொண்டான்.

வண்டியை ஓட்டிவரும் பொழுதே அவனுக்குள்ள வலியை அடிக்கடி கூறினன். இது பர்செல்லின் பொறுமையைக் கிளறிவிட்டது. ஆனல் நான் அவ ரைத் தணிவித்து வேறு ஒருவனை அடுத்துவந்த சத்திரத் தில் பார்த்து அமர்த்திக்கொண்டு அவனைப் போகச் சொல்லி விட்டேன்'' என்று நடந்ததைக் கூறினள்.

''அருமைச் செல்வியே, அவளை மீட்டுத்தந்த வீரரே! இருவரும் வருக. உங்கள் வரவு நல்வரவாகுக. எங்களுடைய மகிழ்ச்சி சிதைந்திருந்தாலும் எங்கள் உள்ளங்கள் உங்களை மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றன. அன்பரே! நீங்கள் என்னுடைய மகளை மீட்டுத் தந்துள் ளீர்கள். அதற்குக் கைம்மாருக அவளையே நீங்கள் எண்ணுவீர்களாயின் அவள் உங்களுடைய உடை மையே. என்னுடைய குடும்பத்தைப் போன்ற ஏழைக் குடும்பத்தில் நீங்கள் உங்கள் நிலையினின்றும் இறங்கி உறவுவைத்துக்கொள்ள முடியுமானல் அவளை மணந்து கொள்ளுங்கள். அவளுடைய ஒப்புதலைப் பெறுங்கள். அவளுடைய அன்பை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். என்னுடைய ஒப்புதலை நான் அளிக்கிறேன். உங்களுக்கு எளிதிற் கிடைத்தற் கரிய பெருஞ்செல்வத்தைக் கொடுக்கிறேன் என்பதைத்



கூறிக்கொள்ள விரும்புகின்றேன். அவள் அழகிற்குப் பெயர் பெற்றவள். ஆனல் நான் அதைக் குறிப்பிட வில்லை. அகத்திலே சிறந்து விளங்கும் அறிவுச் செல் வத்தைதான் நான் குறிப்பிடுகிறேன்.''

''என்னுடைய சூழ்நிலைகளும் அவளை மணஞ் செய்தால் அவளைத் தக்கவாறு வாழவைக்கும் திறமை யில்லாது இருப்பதும் உங்களுக்குத் தெரியுமென எண்ணுகிறேன்.'' என்றார் பர்செல்.

''நான் அளிப்பதை ஏற்றுக் கொள்ளத் தாங்கள் மறுக்கிறீர்கள். சரி. நான் வற்புறுத்தவில்லை. ஆனல் அவளை யடையக்கூடிய தகுதி உங்களைத்தவிர வேறு யாருக்கும் கிடையாது என்பதை நானறிவேன். அவளை என்னிடமிருந்து பெறவிரும்பும் ஆயிரக்கணக்காகப் பணத்தைக் கொடுக்கக் கூடியவர்கள் பலர் இருப்பினும் நான் நேர்மையும் வீரமுமுடைய பர்செல்லைத்தான் தேர்ந்தெடுப்பேன்.''

இவையனைத்திற்கும் அவர் காட்டிய அமைதி அவருடைய மறுப்பைத்தான் வெளிப்படுத்தியது. ஒரு பதிலும் கூறவில்லை. அடுத்த விடுதியிலிருந்து ஏதேனும் உணவு கிடைக்குமா என்று கேட்டார். கிடைக்கும் என்றவுடன் குறைந்த காலத்தில் எவ்வளவு சிறந்த உணவு தயாரிக்க முடியுமோ அதைக் கொண்டு வருமாறு கட்டளையிட்டார். பன்னிரண்டு பாட்டில்கள் மதுவைக் கொண்டுவரச் சொன்னர். பரிமாறுபவன் உணவையெடுத்துக் கொண்டு வந்தான். சிறைக் காவலர் மேசையொன்றைக் கொண்டு வந்து கொடுத்தார்.

இதுவரை என் மகள் தன் அண்ணனுக்கு ஏற்பட்டுள்ள துன்பத்தை அறியாதிருந்தாள். எங்களுக்கும் மகிழ்ச்சியாக இருக்கும் அவளிடம் இதைக் கூறி அவளுடைய இன்பத்தைக் குலைக்க விருப்பமில்லை. நானும் மகிழ்ச்சியாக இருக்க முயன்றும் முடியவில்லை. என் மகன் படும் துன்பம் என் முயற்சிகளைத் தகர்த்து விட்டது. எனவே கடைசியில் அவனுக்கேற்பட்டுள்ள இன்னல்களை எடுத்துரைத்தேன். அவனும் இந்த விருந்தில் கலந்து சிறிதளவு இன்பமாவது அடைய வேண்டுமென்று வேண்டினேன். ஜென்கின்சனும் இதில் கலந்துகொள்ள அனுமதிக்க வேண்டுமென்று சிறைக்காவலரிடம் கூறினேன். அவரும் மகிழ்ச்சியுடன் அவ்விருவரும் கலந்துகொள்ள அனுமதி தந்தார்.

விரைவில் என் மகன் வருவது அவன் விலங்குச் சங்கிலிகளின் ஓசை மூலம் தெரிந்தது. என் மகள் தன் அண்ணனைப் பார்க்க ஓடினாள். இதற்கிடையில் என்னுடைய மகனின் பெயர் ஜியார்ஜா என்று பர்செல் கேட்டார். ஆமாம் என்று விடையளித்தேன். பிறகு மறுபடியும் அமைதியாக இருந்தார். அந்த அறைக்குள் என் மகன் நுழைந்தவுடன் அவன் பர்செல்லை வியப்பும் மதிப்பும் கலந்த பார்வையுடன் பார்ப்பதைக் கண்டேன்.

"வா மகனே. நாம் எவ்வளவுதான் கீழே விழுந்து விட்டாலும் துன்பத்திலிருந்து சிறிது ஓய்வுபெற ஆண்டவன் நமக்கு வழிகாட்டியுள்ளார். உன்னுடைய தங்கை கிடைத்து விட்டாள். அவளை மீட்டுத் தந்தவர் இதோ இருக்கிறார். இன்னும் எனக்கொரு மகள்



உயிரோடு இருப்பதற்கு நான் இந்த வீரமனிதருக்குப் பெரிதும் கடமைப் பட்டுள்ளேன். நட்புக் கரங்களை நீட்டிக் கைகுலுக்கு. நாம் நன்றி செலுத்துதற்கு மிகவும் உரியவர்."

நான் கூறுமனைத்தையும் கேட்காது மிக்க அடக்கத்துடன் தொலைவிலேயே நின்று கொண்டிருப்பதைப் பார்த்தேன். "அண்ணா, என்னைக் காப்பாற்றியவருக்கு நன்றி செலுத்தாது ஏன் இன்னும் நின்று கொண்டிருக்கிறாய். வீரர்கள் ஒருவரையொருவர் எப்பொழுதும் விரும்புவார்களே" என்று என் மகள் கேட்டாள்.

அவன் இன்னும் அதே இடத்தில் வியப்புடன் அமைதியாக நின்றுகொண்டிருந்தான். இறுதியாக பர்செல் அவனை முன்னமே அறிந்தவர்போல் காணப் பட்டார். அவனும் தன்னைத் தெரிந்து கொண்டதை யுணர்ந்தார். மிக்க பெருமிதத்துடன் என் மகனை அருகில் வரச்சொன்னார். அவர் இப்பொழுது காணப் பட்ட பெருமிதத்துடன் இதற்கு முன் எப்பொழுதும் காணப்படவில்லை. அவனைப் பார்த்து "மறுபடியும் அதே குற்றம்"—அவர் அதைக் கூறி முடிக்குமுன் சிறை வேலையாள் ஒருவன் வந்து யாரோ ஒரு பெரிய மனிதர் எங்களிடையே இருந்த பர்செல்லைப் பார்க்க வந்திருப்பதாகக் கூறினான்.

அவர் பெரிய இரதம் போன்ற வண்டியில் வந்திருப்பதாகவும் அவருடன் பல வேலைக்காரர்களும் கூடவே வந்திருப்பதாகவும் தெரிவித்தான். அவர் பர்செல்லுக்குத் தன் தாழ்மையான வணக்கத்தைத் தெரிவித்து எப்பொழுது அவரைப் பார்க்க முடியும் என்பதை அறிய விரும்புவதாகவும் கூறினான்.

"எனக்கு இப்பொழுது நேரமில்லை. அவனை அங்கேயே இருக்கச் சொல்" என்று கட்டளையிட்டார் பர்செல்.

மறுபடியும் என் மகனைப் பார்த்து "மீண்டும் அதே குற்றத்தைச் செய்து குற்றவாளியாக நிற்கிறீர். நான் முன்னமே இதைக் கண்டித்தேன். இப்பொழுது சட்டம் இதற்கு நியாயமான தண்டனைகளை விதிக்கப் போகிறது. உமக்கு உம்முடைய உயிரின்மேல் பற்றுக் குறைந்துவிட்டால் அது இன்னொருவனுடைய உயிரைப் பறிப்பதற்கு உமக்கு உரிமையளிக்கிறது என்று நீர் நினைக்கிறீர். ஆனால் பயனற்ற ஓர் உயிரைக் கொல்லும் சண்டைக்காரனுக்கும் மிக்க பாதுகாப்புடன் நடக்கும் கொலைகாரனுக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது? சூதாடுபவன் தன்னுடைய பொருளை விளையாட்டில் இழந்து விடலாம். அதனால் பொருளை இழந்துவிட்டானே என்று அவனைச் சூதாடியதற்காகத் தண்டிக்காமலிருக்க முடியுமா?' என்று கேட்டார்.

"ஐயா நீங்கள் யாராயிருந்தாலும் சரி, அன்பு கூர்ந்து ஒன்றுமறியாத அவனுக்காக இரக்கப்படுங்கள். ஏனெனில் அவன் இதுவரை என்ன செய்திருந்தாலும் அது தாய் சொல்லைத் தட்டாது இருக்க வேண்டுமென்பதற்காகச் செய்ததுதான். அவள் பழிவாங்க வேண்டுமென்பதற்காகத் தானிடவேண்டிய சண்டைக்கு அவனைப் பயன்படுத்திக் கொண்டாள். அவள் எழுதிய கடிதம் இதோ இருக்கிறது பாருங்கள். இதனால் அவளுடைய அறியாமையை நீங்கள் அறிந்து அவனுடைய குற்றத்தைப் பொறுப்பீர்கள்" என்று கூறி அவரிடம் கடிதத்தைக் கொடுத்தேன்.



அவர் கடிதத்தை வாங்கி விரைவாகப் படித்து முடித்தார். "இது சரியான மன்னிப்பு என்று சொல்ல முடியாது. இருந்தாலும் இதுதான் அவரைக் குற்றம் செய்யத் தூண்டியது என்பது புலப்படுவதால் நான் அவரை மன்னிக்கிறேன்." என்று கூறி என் மகனுடைய கைகளைப் பிடித்து "என்னை இங்கே பார்க்க ஆச்சரியப்படுகிறீர் போலிருக்கிறது? நான் சில சமயங்களில் இதைப்போன்ற சிறைகள் சிலவற்றைப் பார்க்கச் சென்றிருக்கிறேன். நல்ல மனிதர் ஒருவர்க்கு நியாயம் வழங்கச் செய்யவேண்டும் என்பதற்காகத்தான் நான் இங்கு வந்துள்ளேன். அவரை நான் மிகவும் போற்றுகின்றேன்.

"உம்முடைய தந்தை செய்யும் நற்செயல்களனைத்தையும் நான் நெடுநாட்களாக மறைவிலிருந்து பார்த்து வருகின்றேன். அவருடைய வீட்டில் வீண்புகழுரையில்லாத நல்ல மதிப்பைப் பெற்று மகிழ்ந்திருக்கிறேன். அரச அவையில் கூடப் பெறமுடியாத மதிப்பையும் மகிழ்ச்சியையும் அவருடைய எளிய வீட்டில் பெற்றிருக்கிறேன். நான் இங்கே வந்திருப்பதின் உட்கருத்தை உணர்ந்த என் அண்ணன் மகனும் இங்கு வந்துள்ளான். ஒன்றையும் ஆய்ந்து பாராது அவனைத் தண்டிப்பது அவனுக்கும் உங்களுக்கும் தவறிழைப்பதாக இருக்கும். இதுவரை யாரும் சர் வில்லியம் தார்ன்கில் அநியாயமாகத் தீர்ப்புக் கூறினாரென்று கூறியதே கிடையாது என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்."

யர்ருக்கும் தீங்கிழைக்காதவர் மகிழ்வையே யூட்டிவந்தவர், இதுவரை நாங்கள் பழகியவர், பெரும்

புகழ் பெற்ற சர் வில்லியம் தார்ன்கில்லைத் தவிர வேறு யாருமில்லை என்பதை அறிந்து நாங்கள் வியந்தோம். ஏழைபோல் தோன்றிய பர்செல் உண்மையிலேயே பெரும் பணக்காரர். ஆட்சிமன்ற உறுப்பினர்கள் கவனமாகக் கேட்டுப் பாராட்டும் வண்ணம் பேச்சு வன்மை படைத்தவர். கருத்து மாறுபட்டோரும் கேட்டு இணங்கும்வண்ணம் பேசுகின்ற ஆற்றல் படைத்தவர். நாட்டுக்குழைக்கும் நண்பர். அரசருக்குக் கீழ்ப்படிந்த நல்லவர்.

இவ்வளவையும் எண்ணியவுடன் என் மனைவி அவரிடம் முன்பு சற்றுத் தரக் குறைவாக நடந்து கொண்டதை எண்ணி வெட்கப்பட்டாள். இதுவரை தன்னுடையவர் என்று அவரை எண்ணிக்கொண்டிருந்த சோபியா இப்பொழுது தனக்கும் அவருக்கும் இடையிலே பெரும் பள்ளத்தாக்குப் போன்ற பிளவு இருப்பதை யுணர்ந்து தன் கண்களினின்றும் வழியும் நீரையும் மறைக்க முடியாது தவித்தாள்.

"ஐயா, நான் உங்களிடமிருந்து மன்னிப்பை எவ்வாறு பெறமுடியும்? கடைசி முறையாக நீங்கள் என் வீட்டிற்கு வந்திருந்தபொழுது நான் உங்களை இழிவாகப் பேசினேன். எவ்வளவு தூரம் உங்களை எள்ளி நகையாடினேன். இவற்றை நீங்கள் ஒரு பொழுதும் மன்னிக்க மாட்டீர்களென எண்ணுகிறேன்" என்று என் மனைவி வருத்தத்துடன் கூறினாள்.

இதைக் கேட்ட அவர் சிரித்துக்கொண்டே "நீங்கள் கிண்டலாகக் கேள்விகள் கேட்டதற்கு நானும் பதில் கூறிவிட்டேனே. நான் கூறிய பதில்கள் உங்களுடைய கேள்விகளைப்போல நன்றாக இருந்தனவா



இல்லையா என்பதை நம்முடன் அப்பொழுது இருந்தவர்களையே கேட்டுத் தெரிந்து கொள்ளலாமே. உண்மையைக் கூறப்போனால் என்னுடைய சினமெல்லாம் இப்பொழுது சோபியாவைத் தூக்கிச் சென்று பயமுறுத்தியவன் மேலேயே இருக்கிறது. நான் அவனை நன்றாகக் கூடப் பார்க்கவில்லை. பார்த்திருந்தால் செய்தி இதழிலாவது விளம்பரம் செய்து பார்க்கலாம். சோபியா, உனக்காவது அவனைப் பற்றிக் கூறமுடியுமா? அவனை மறுபடியும் பார்த்தால் கண்டு பிடித்து விடுவாயா?" என்று கேட்டார்.

அதற்குச் சோபியா "என்னால் உறுதியாகச் சொல்ல முடியாது. இருந்தாலும் அவனுடைய கண் புருவம் ஒன்றின்மேல் பெரிய அடையாளம் ஒன்று இருந்தது என் நினைவுக்கு வருகிறது"—

"அவனுடைய தலைமயிர் சிவப்பாகக் காணப்பட்டதல்லவா" என்று அப்பொழுது அங்கிருந்த ஜென்கின்சன் சோபியாவைக் கேட்டார்.

"ஆம். அப்படித்தான் நினைக்கிறேன்" என்றாள் அவள்.

"ஐயா, அவனுடைய கால்களின் நீளத்தை நீங்கள் பார்த்தீர்களா?" என்று வில்லியத்திடம் கேட்டார்.

"நான் அவற்றின் நீளத்தை நன்றாகப் பார்க்கவில்லை. ஆனால் அவை மிக விரைவாகச் செல்லும் ஆற்றலுடையவை. ஏனென்றால் அவன் மிக வேகமாகத் தப்பியோடி விட்டான். அதைப்போல, இந்த நாட்டிலேயே ஒரு சிலரால்தான் ஓடமுடியும்."

"ஐயா, அவனை எனக்குத் தெரியும். நிச்சயமாக அவனேதான். இங்கிலாந்தின் சிறந்த ஓட்டக்காரன். அவன் நியூகாசிலைச் சார்ந்த பின்வொயரைக் கூட வென்றுவிட்டான். அவனுடைய பெயர் டிமோதி பாக்ஸ்டர். அவனை எனக்கு மிக நன்ருகத் தெரியும். இப்பொழுது அவன் எங்கு ஒழிந்திருப்பான் என்றும் எனக்குத் தெரியும். நீங்கள் சிறைக்காவலரிடம் கட்டளையிட்டு இரண்டு ஆட்களை மட்டும் என்னுடன் அனுப்பினுல் இன்னும் ஒருமணி நேரத்துக்குள் அவனை எப்படியாவது உங்கள் முன் கொண்டுவந்து நிறுத்துகிறேன்," என்று ஜென்கின்சன் கூறினுர்.

சிறைக் காவலர் அழைத்துவரப் பட்டார். அவரிடம் 'என்னைத் தெரியுமா' என்று வில்லியம் கேட்டார்.

"ஆம், ஐயா. சர் வில்லியம் தார்ன்கில்லை எனக்கு நன்ருகத் தெரியும். அவரைப் பற்றி ஏதாவது அறிந்த ஒவ்வொருவரும் அவரைப் பற்றி மேலும் மேலும் அறிய ஆசைப்படுவார்கள்" என்று காவலர் பணிவுடன் கூறினுர்.

"சரி; இப்பொழுது இந்த மனிதர் வெளியே செல்ல அனுமதிக்க வேண்டும். இவருடன் உம்முடைய வேலைக்காரர் இருவரையும் அனுப்பவேண்டும். இவர்கள் மூவரும் என் ஏவல்மேற் செல்லுகிருர்கள். இவர்களுக்கு நான் பொறுப்பு."

"உங்கள் வாக்கே போதும்" என்ருர் அக் காவலர். "இன்னும் ஒரு விஞடியில் நீங்கள் இவர்களை எங்கு வேண்டுமாஞலும் அனுப்பிவையுங்கள்."



காவலர் இணங்கியதைத் தொடர்ந்து டிமோதி பாக்ஸ்டரைத் தேடுவதற்கு ஜென்கின்சன் அனுப்பி வைக்கப்பெற்ருர். அப்பொழுது அங்கு வந்த பில் வில்லியம் மீது ஏறி அவர் கழுத்தைக் கட்டிக்கொண்டு அவரை முத்தமிடச் சென்ருன். அவனுடைய தாய் அதைத் தடுக்க முயன்ருள். ஆனுல் அந்த நல்ல மனிதர் அவளைத் தடுக்க விடவில்லை. அவனை எடுத்து மடியில் வைத்துக்கொண்டு,

"என்ன பில், உன்னுடைய பழைய நண்பனை பர்செல்லை இன்னும் உனக்கு நினைவிருக்கிறதா? டிக் எங்கே? இதோ : நான் உன்னையும் மறந்து விடவில்லை." என்று கூறிக்கொண்டே அவர்களிருவருக்கும் இஞ்சிரொட்டியைக் கொடுத்தார். அவர்களிருவரும் காலைக்கு நல்ல உணவு கிடைத்துவிட்டது என்று மகிழ்ந்து அதை உண்ணலாயினர்.

நாங்கள் அனைவரும் உண்ணுவதற்கு அமர்ந்தோம். உணவு ஆறிப்போய்க் குளிர்ச்சியாக இருந்தது. ஆனுல் அதற்குமுன் என் கை வலியைக் கண்ட வில்லியம் தனக்கு ஓரளவு மருத்துவம் தெரியும் என்று கூறி ஏதோ சில மருந்துகளைத் துண்டுக் காகிதத்தில் எழுதி அவைகளை வாங்கிவரச் செய்தார். என்னுடைய கைக்குக் கட்டுப் போட்டபின் வலியினின்றும் எனக்குப் பெரும் விடுதலை கிடைத்தது.

நாங்கள் உணவு உண்டபொழுது சிறைக் காவலரே அருகிலிருந்து எங்களுக்கு வேண்டியவற்றை எடுத்துக் கொடுத்தார். அவர் எங்கள் விருந்தினராய் இருந்த வில்லியம் அவர்களுக்கு எவ்வளவு சிறப்பைச் செய்ய முடியுமோ அவ்வளவு சிறப்பையும் செய்ய

முயன்ருர். ஆனல் நாங்கள் நன்ருக உணவு உண்டு முடிக்குமுன் அவருடைய அண்ணன் மகனிடமிருந்து அவரை உடனே பார்த்துத் தான் எந்த வகையிலும் குற்றவாளி அல்லன் என்பதை எடுத்துக்கூற அனுமதிக்கவேண்டும் என்ற வேண்டுகோள் வந்தது. அவ்வேண்டுகோளுக்கு இணங்கி தார்ன்கில்லே உள்ளே வரவிடும்படி கூறினர்.

---

## 31. பொறுமை தந்த செல்வம்

திரு. தார்ன்கில் சிரித்துக்கொண்டே உள்ளே நுழைந்து தம்முடைய சிறிய தந்தையைத் தழுவச் சென்ருர். இதை வேண்டா வெறுப்போடு தடுத்தார் வில்லியம்.

“இந்த ஏமாற்றெல்லாம் தேவையில்லே. என்னுடைய அன்பைப் பெறுவதற்குள்ள ஒரேவழி நேர்மை என்னும் வழிதான். ஆனல் நான் இங்குக் காண்பதெல்லாம் தீய செயல்களும் கொடிய செய்கைகளுமாய் உள்ளன. இந்த நல்ல மனிதர் ஏன் இவ்வளவு கடுமையாகத் தண்டிக்கப்படுகிருர். இவர் உன்னுடைய பழைய நண்பரென்பதும் எனக்குத் தெரியும். இருந்தும் இந்தநிலே எவ்வாறு ஏற்பட்டது. அவர் காட்டிய நல்லுறவிற்குப் பதிலாக அவருடைய மகள் தகாத முறையில் கற்பழிக்கப்பட்டிருக்கிருள். இந்த அவமானத்தைப் பொறுக்காது வெகுண்டெழுந்ததற்காக அவரையே சிறையில் தள்ளிவிட்டாயா? வீரமுள்ள ஆண்மகனேப் போல நேரில் சண்டையிட அஞ்சி அவருடைய மகனேக்கூட”—

அவர்கூறி முடிக்குமுன் தார்ன்கில் குறுக்கிட்டார். “சண்டையிடுவதை விலக்கிவிட வேண்டுமென்று பலமுறை மீண்டும் மீண்டும் அறிவுரை பகர்ந்த என் சிற்றப்பாவே இவற்றைப் பெருங்குற்றமாக்கித் தடுக்கவும் முடியும் போலும்” என்ருர்.

“உன்னுடைய குற்றச்சாட்டு நியாயமுடையதுதான். இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தமட்டில் நீ மிக்க அறிவாற்றலுடன் நடந்து கொண்டுள்ளாய். உன்னு

டைய தந்தைகூட இவ்வாறு செய்திருக்கமாட்டார். என்னுடைய அண்ணன் புகழையே பெரிதாக எண்ணியவர். ஓர் ஆண்மகன் சண்டையிட வா என்று அழைத்தால் கோழைத்தனமாக ஆட்களை அனுப்பி அடிக்காது தாமே சண்டையிட ஒத்துக் கொள்வார். ஆனால் நீ—ஆம், இந்த நிகழ்ச்சியில் மட்டும் சரியாக நடந்துகொண்டுள்ளாய். அதற்காக நான் உன்னைப் பாராட்டுகின்றேன்" என்றார் வில்லியம்.

"என்னுடைய பிற செயல்களும் பழிப்பதற்குரியன அல்ல என நான் எண்ணுகிறேன். கேளிக்கைகள் நடக்கும் பொது இடங்கள் பலவற்றிற்கு நான் இவருடைய மகளை அழைத்துச் சென்றேன் என்பது உண்மை. அதனால் நான் இவருடைய மகளைக் கெடுத்து விட்டதாக யாரோ சில புரட்டர்கள் வீண் வதந்தியைக் கிளப்பி விட்டிருக்கிறார்கள். இவரும் நம்பிவிட்டார். இவருடைய ஐயத்தை அகற்றுவதற்காக நானே இவருடைய வீட்டுக்கு நேரில் சென்றிருந்தேன். இவர் என்னைப் பழிச்சொற்களைக் கூறி மரியாதையற்ற முறையில் வரவேற்றார். இவை தவிர, அவர் இங்கே இருப்பதற்குரிய காரணத்தை என்னுடைய வழக்கறிஞரையும் ஏவலரையும் கேட்டால் கூறுவார்கள். ஏனெனில் இப் பொறுப்புகளைக் கவனிக்க அவர்களைத்தான் நியமித்துள்ளேன். அவர் கடனுக்குடன்பட்டு அக்கடனைக் கொடுக்க மனமில்லாதோ அல்லது கடனைக் கொடுக்க முடியாதோ இருந்தால் அத்தொகையைப் பெறுவதற்கு இவ்வழிகளைக் கையாளுவது அவர்கள் கடமையாகும். சட்டத்திற்குட்பட்ட வழிகளைத் தொடர்வதில் கொடுமையோ அல்லது நேர்மையின்மையோ இருப்பதாக எனக்குத் தெரியவில்லை" என்று முடித்தார் தார்ன்கில்.



"இவையனைத்தும் நீ கூறியவாறே நடந்திருப்பின் உன்னுடைய குற்றங்களில் மன்னிக்க முடியாததொன்றும் இல்லை. இந்த மனிதரிடம் நீ மிகவும் தாராளமான முறையில் நடந்துகொண்டால்கூட உன்னுடைய ஏவலர்கள் இழைத்துள்ள கொடுமையில் உனக்கும் பங்கு உண்டு" என்று தார்ன்கில்லிடம் வில்லியம் கூறினார்.

"நான் கூறியவற்றில் அவர் ஒன்றைக்கூட மறுக்க முடியாதே. நான் கூறுவது அனைத்தும் உண்மை என்று சான்று கூறுவதற்கு என்னுடைய வேலைக்காரர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள்" என்று தார்ன்கில் கூறினார்.

நான் ஏதாவது கூறுகிறேனா என்று என்னை எல்லோரும் பார்த்தார்கள். உண்மையிலேயே அவருடைய கூற்றில் ஒன்றைக்கூட மறுக்க முடியாத நிலையில் நான் இருந்ததால் நான் அமைதியாக இருந்தேன்.

என்னுடைய அமைதியைக் கண்ட அவர் மேலே தொடர்ந்தார்; "எனவே நான் எவ்வகையிலும் குற்றமிழைத்தவன் அல்லன் என்று காட்டிவிட்டேன். இவருடைய பிற குற்றங்களையும் மன்னித்துவிட வேண்டுமென்று நீங்கள் கூறினால் நான் உங்களுக்காக மன்னித்துவிடத் தயார். இருந்தாலும் உங்களுடைய மனதில் எனக்கு இருக்கும் மதிப்பைக் குறைக்கப் பாடுபட்டுவரும் இவருடைய முயற்சிகள் கட்டுக்கடங்காத சினத்தை எனக்கு உண்டுபண்ணியுள்ளன.

அதுவும் இவருடைய மகன் என்னுடைய உயிரையே எடுத்துவிட வேண்டுமென்று தீவிரமாக முயற்சி செய்து கொண்டிருந்தபொழுது இவர் இவ்வாறு முயன்

றுள்ளார். இவருடைய மகன் செய்துள்ள குற்றம் பெருங் குற்றம். எனவேதான் சட்டப்படி அவனுக்குக் கிடைக்கவேண்டிய தண்டனை கிடைக்கட்டும் என்று விட்டுவிட முடிவு செய்துள்ளேன். அவன் என்னைச் சண்டைக்கு வரும்படி எழுதியிருந்த கடிதம் இதோ இருக்கிறது. இதை நிறுவுவதற்கு இரண்டு சாட்சிகளும் உள்ளன. என்னுடைய வேலைக்காரர்களில் ஒருவன் அதிகக் காயம் பட்டுள்ளான். என்னுடைய சிற்றப்பா தாமே வந்து இதைத் தடுக்க முயன்றால்கூட, ஆனால் அவர் தடுக்கமாட்டார் என்று எனக்குத் தெரியும், அவன் செய்த குற்றத்திற்கு நியாயம் வழங்கப்பட வேண்டும். தண்டனையை அவன் அனுபவிக்க வேண்டும்.''

''கொடிய அரக்கனே, நீதான் இதற்கு முன்னேயே பழி தீர்த்துக்கொண்டாயே. இன்னும் என் மகன் வேறு உன் கொடுமைக்குட்பட வேண்டுமா? சர் வில்லியம் எங்களைக் காப்பாற்றுவார் என்று எதிர்பார்க்கிறேன். என்னுடைய மகன் ஒரு தீங்கு மறியாத குழந்தையைப் போன்றவன். அவன் ஒருபோதும் யாருக்கும் தீங்கிழைத்திருக்கமாட்டான்'' என்றாள் என் மனைவி.

''அம்மா, அவரைக் காப்பாற்ற வேண்டுமென்ற ஆசை உங்களைவிட எனக்கு அதிகமாக இருக்கிறது. ஆனால் அவர் செய்துள்ள குற்றம் மிகத் தெளிவாகத் தெரிகின்றதே. என்னுடைய அண்ணன் மகன் நினைத்தால்''—

வில்லியம் கூறிமுடிக்குமுன் ஜென்கின்சனும் சிறைப்பணியாட்கள் இருவரும் திரும்பிவரும் ஓசை



கேட்கவே எங்கள் பார்வை அவர்கள் பக்கம் சென்றது. அவர்கள் நெடிய மனிதன் ஒருவனைத் தள்ளிக் கொண்டே வந்து சேர்ந்தார்கள். அவனுடைய தோற்றம் சோபியா வர்ணித்த முரடனுடைய தோற்றத்திற்குப் பொருத்தமாயிருந்தது. அவன் நல்ல உடை உடுத்திருந்தான்.

''இதோ இருக்கிறான் அவன். தூக்கிலிடுவதற்கு ஆள் வேண்டுமென்றால் அதற்குச் சரியான ஆள் இவன்'' என்று ஜென்கின்சன் கூறி அவனைக் கொண்டுவந்து நிறுத்தினார்.

அவனையும் ஜென்கின்சனையும் பார்த்தவுடனேயே தார்ன்கில் அச்சத்தால் உடல் சுருங்கிவிட்டது. அவருடைய முகம் வெளுத்து விட்டது. குற்றமுள்ள நெஞ்சம் அவரை வாட்டலாயிற்று. அவர் அந்த இடத்தை விட்டு மெதுவாக நகரப் பார்த்தார். ஆனால் அவருடைய எண்ணத்தைத் தெரிந்துகொண்ட ஜென்கின்சன் அவரை நிறுத்தியிராவிட்டால் அவர் தப்பியிருப்பார்.

''என்ன ஐயா, உங்களுடைய பழைய நண்பர்களான ஜென்கின்சனையும், பாக்ஸ்டரையும் பார்ப்பதற்கு வெட்கமாயிருக்கிறதா? இப்படித்தான் பெரிய மனிதர்கள் எல்லோரும் தங்களுடைய பழைய நண்பர்களை மறந்து விடுவார்கள். ஆனால் நாங்கள் மட்டும் உங்களை மறக்கமாட்டோம் என்று உறுதியாகக் கூறுகிறேன்'' என்றார் ஜென்கின்சன்.

மேலும் வில்லியத்தை நோக்கி ''இதோ நிற்கிறானே இந்த பாக்ஸ்டர், இவன் எல்லா உண்மையையும் ஒத்துக்கொண்டான். இவன்தான் உங்களிடம்

பெரிய காயம் பட்டு இருப்பதாகத் தார்ன்கில்லினுல் கூறப்பட்டவன். தார்ன்கில்தான் இவனை இவ்வாறெல்லாம் செய்யச் சொன்னுராம். இவன் இப்பொழுது அணிந்திருக்கிருனே இந்த உடைகளையெல்லாம் அவர் தாம் கொடுத்தாராம். நல்ல மனிதன் போலத் தோன்றுவதற்காக இவற்றைக் கொடுத்து ஒரு வண்டியையும் கொடுத்திருக்கிருர். அவர்கள் போட்டுக் கொண்ட திட்டப்படி இவன் சோபியாவைத் தூக்கிச் சென்று பாதுகாப்பான ஓர் இடத்தில் வைத்து அவளை மிரட்டவேண்டும். அந்த நேரத்தில் அந்த இடத்திற்குத் தற்செயலாக வருகிறவரைப் போலத் தார்ன்கில் வந்து அவளைக் காப்பாற்றவேண்டும். அவர்களிருவரும் சிறிது நேரம் சண்டைபோட்ட பின்னர் இவன் ஓடி விட வேண்டும். இதனுல் சோபியா தார்ன்கில்லைப் பற்றி மிக நல்லெண்ணம் கொள்ளுவாள். தன்னைக் காப்பாற்றியவர் என்று அவர்மீது மிக்க அன்பு செலுத்துவாள். இதுதான் அவர்களுடைய திட்டம்'' என்று கூறிமுடித்தார் ஜென்கின்சன்.

பாக்ஸ்டர் அணிந்திருந்த கோட்டைத் தார்ன்கில் இதற்கு முன் அணிந்திருப்பதை வில்லியம் பார்த்திருப்பது அவருக்கு நினைவு வந்தது. மற்றவற்றை அவனே பல சான்றுகாட்டி அவர் கொடுத்ததுதான் என்ருன். மேலும் தார்ன்கில் அக்கா தங்கை இருவரையுமே விரும்புவதாக அடிக்கடி தம்மிடம் கூறியுள்ளதாகவும் கூறினுன்.

''இந்த நச்சுப் பாம்பையா நான் என் மார்பில் போட்டு வளர்த்தேன். எல்லோருக்கும் பொதுவாக நியாயத்தை வழங்குபவனென்றல்லவா எண்ணிக் கொண்டிருந்தேன். இப்பொழுது அவன் தனக்கே தீர்ப்புக் கூறவேண்டிய நிலையிலுள்ளானே. சிறைக் காவலனே! அவனைத் தப்ப விடாதீர்கள். அவனை நிறுத்துவதற்குச் சரியான சாட்சிகள் வேண்டுமே'' என்று வில்லியம் கூறினுர்.



இந்த இரு கொடியவர்களையும் சாட்சிகளாக விசாரிக்காது விட்டுவிட வேண்டுமென்றும் தம்முடைய வேலைக்காரர்களை வேண்டுமானுல் விசாரித்துப் பார்க்கலாமென்றும் தார்ன்கில் சொன்னுர். ''உன்னுடைய வேலைக்காரர்களா'' என்று வியப்புடன் கேட்டார் வில்லியம். ''இனியும் அவர்களை உன்னுடைய வேலைக்காரர்கள் என்று கூருதே. சரி, அவர்களையே கேட்டுப் பார்ப்போமே. முதலில் அவனுடைய வீட்டு வேலைக்காரன் வரட்டும்'' என்ருர்.

வீட்டு வேலை செய்யும் வேலைக்காரன் வந்தபொழுது அவன் தார்ன்கில்லைப் பார்த்தான். அவருடைய பார்வையிலிருந்து அவர் தம் ஆற்றலனைத்தையும் இழந்து காணப்பட்டார்.

''நீ எப்பொழுதாவது உன்னுடைய தலைவரும் அதோ நிற்கிருனே அவனும் ஒன்ருக இருப்பதைப் பார்த்திருக்கிருயா? சொல்'' என்று கேட்டார் வில்லியம்.

''ஐயா, நான் ஆயிரமுறை பார்த்திருக்கிறேன். அவன்தான் எப்பொழுதும் இவருக்கு வேண்டிய பெண்களை அழைத்து வருபவன்.''

''என்ன? என் எதிரிலேயே இதைக் கூறுகிருயா?'' என்று அதட்டினுர் தார்ன்கில்.

''ஆம். யார் எதிரிலும் இதைத்தான் சொல்லுவேன். உண்மையைக் கூறினுல் நான் உங்களை ஒரு

பொழுதும் விரும்பவில்லை. இப்பொழுது என் உள்ளத்தில் உள்ளதில் ஒரு சிறிது கூறுவதால் என்ன வந்தாலும் எனக்குக் கவலையில்லை."

"என்னைப் பற்றி உனக்கு என்ன தெரியும், அதை அவர்களிடம் கூறு" என்றார் ஜென்கின்சன்.

"உங்களைப்பற்றி நிறையத் தெரியும் என்று கூற முடியாது. ஆனால் ஒருநாள் இரவு அந்தப் பாதிரியாரின் மகளை நம் வீட்டிற்குக் கொண்டு வந்தவர்களுள் நீங்கள் ஒருவர்" என்று கூறினான் வேலைக்காரன்.

"உன்னுடைய அறியாமையைக் காட்டிக்கொள்ள ஒரு நல்ல சாட்சியைக் கொண்டு வந்துள்ளாய்; இதைப் போன்ற கொடியவர்களுக்குத் துணையாயிருப்பதால் நீங்கள் மனித இனத்துக்கே கறையை உண்டாக்கி விடுகிறீர்கள்" என்று ஜென்கின்சனை நோக்கிக் கூறினார் வில்லியம்.

அடுத்து வேலைக்காரனிடம் "இவன்தான் அந்தப் பெரிய மனிதருடைய பெண்ணைத் தூக்கி வந்தானா?" என்று கேட்டார்.

"இல்லை ஐயா, அவர் அவளைக் கொண்டு வரவில்லை. அந்த வேலையை என் தலைவரே ஏற்றுக் கொண்டார். ஆனால் அவர்களிருவரையும் மணஞ் செய்து வைத்ததைப் போல் நடித்த ஒரு மதகுருவை அவர்தாம் அழைத்து வந்தார்."

"ஆம். அது உண்மை. நான் அதை மறுக்க முடியாது. அதுதான் எனக்கு ஒதுக்கப்பட்டிருந்த வேலை. நான் அதை ஒத்துக்கொள்கிறேன்" என்றார் ஜென்கின்சன்.



"ஆண்டவனே, அவனுடைய ஒவ்வொரு கொடுமையும் வெளிப்படும் பொழுது எவ்வளவு திகைப்பாக இருக்கிறது. அவனுடைய குற்றங்கள் அனைத்தும் வெளியாகி விட்டன. கொடுமை, கோழைமை, பழி ஆகியவற்றைக் கொண்டே அவன் தன்னாட்சி செய்திருக்கின்றான். சிறைக்காவலனே, இவனை உடனே கைது செய்து வைத்துக்கொள். இதன் விளைவாக என்ன வந்தாலும் நான் பொறுப்பு. இதைப்பற்றி எளிய முறையில் இந்த ஊர் நடுவரிடம் நான் கூறிவிடுகிறேன். இது சரி; இவனால் துன்புற்ற அப்பெண்ணைக் காணோமே! இவன் என்ன மயக்கு மொழிகளையும் செய்கைகளையும் கையாண்டு அவளை ஏமாற்றி விட்டான் என்று தெரிந்துகொள்ள எனக்குப் பல நாட்களாக விருப்பம் இருக்கின்றது. அவளை உடனே உள்ளே வரச்சொல்லுங்கள். எங்கே அவள்?" என்று கேட்டார் வில்லியம்.

"ஐயா, உங்களுடைய கேள்வி என் இதயத்தைப் பிளக்கிறது. ஒரு காலத்தில் அவளால் நான் எவ்வளவோ மகிழ்ச்சியடைந்திருக்கிறேன். ஆனால் அவளுடைய துன்பங்கள்"—யாரோ நடந்து வரும் ஓசை கேட்டதால் என் பேச்சு தடைப்பட்டது.

வந்தவள் வேறு யாரும் இல்லை. திருமதி. அரபெல்லா வில்மோட்தான். அவளுக்கும் தார்ன்கில்லுக்கும் மறுநாள் திருமணம் நடைபெறவிருந்தது. அவளுக்கு வில்லியம், தார்ன்கில் இருவரையும் ஒருசேரப் பார்த்ததனால் ஏற்பட்ட வியப்பைப் போன்றது வேறெதுவும் கிடையாது. ஏனென்றால் அவள் அங்குத் தற்செயலாகத்தான் வந்திருந்தாள்.

அவளும் அவளுடைய தந்தையும் அவளுடைய அத்தை இருக்கும் ஊருக்குச் செல்வதற்காக அவ்வூரின் வழியே சென்றிருக்கிறார்கள். வழியில் சிறிது ஓய்வெடுத்துக் கொள்வதற்காக ஊரின் மறுகோடியிலிருக்கும் உணவு விடுதியொன்றில் தங்கியிருக்கிறார்கள். அங்கே சன்னல் மூலம் தெருவை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அரபெல்லா தெருவில் என்னுடைய சிறுவன் ஒருவன் விளையாடிக்கொண்டிருப்பதைப் பார்த்திருக்கிறாள். உடனே அவனை அழைத்துவரும்படி ஒரு வேலையாளை அனுப்பியிருக்கிறாள். அவனிடமிருந்து எங்களுக்கேற்பட்டுள்ள துன்பங்களைக் கேட்டு அறிந்திருக்கிறாள்.

ஆனால் இவ்வளவு துன்பங்களுக்கும் காரணம் தார்ன்கில்தான் என்பது அவளுக்குத் தெரியாது. சிறைக்கு வந்து எங்களைப் பார்ப்பது அவ்வளவு பொருத்தமன்று என்று அவளுடைய தந்தை கூறித் தடுத்துள்ளார். ஆனால் அவள் என்னுடைய சிறுவனை அழைத்துக்கொண்டு அவனுடன் இவ்விடத்திற்கு எதிர்பாராத வகையில் வந்து சேர்ந்துவிட்டாள்.

இவ்வாறு தற்செயலாகச் சந்தித்ததால் இச்சந்திப்பைப் பற்றி ஒன்றும் எண்ணுதிருக்க முடியவில்லை. இத்தகைய நிகழ்ச்சிகள் ஒவ்வொரு நாளும் நிகழ்ந்தால் கூட மிகவும் அரிதாகச் சில சமயங்களில்தான் நமக்குப் பெரு வியப்பை அளிக்கின்றன. நம்முடைய வாழ்க்கையில் ஏற்படும் மகிழ்ச்சிக்கும் வசதிக்கும் காரணமான இத்தகைய நிகழ்ச்சிகளுக்கு நாம் எவ்வளவு கடமைப்பட்டுள்ளோம். நாம் உடுத்தும் உடைக்கும் உண்ணும் உணவுக்கும் எத்தனை நிகழ்ச்சிகள் ஒன்றுசேர வேண்டியிருக்கின்றன. உழவன் உழவேண்டும். மழை பொழிய வேண்டும். உணவுப் பொருளை ஏற்றிச்செல்லும் மரக்கலத்தைச் செலுத்தக் காற்றுவேண்டும். எல்லோரும் வேண்டிய அளவு பெறவேண்டும்.



நாங்களனைவரும் சிறிது நேரம் அமைதியாக இருந்தோம். வியப்பும் ஆவலும் நிறைந்த பார்வையினுல் மிக்க அழகுடன் விளங்கிய அப்பெண்ணை என்னுடைய மாணவி என்றுதான் குறிப்பிட விரும்புகிறேன்.

தார்ன்கில்லை நோக்கி ''நீங்கள் இந்த இடத்திற்கு என்னை விட்டுவிட்டு வந்ததற்கும் நம்மிருவருக்கும் மிகவும் வேண்டிய இக்குடும்பம் படும் துன்பங்களை என்னிடம் கூருததற்கும் நான் மிகவும் வருந்துகிறேன். இவர்களுடைய துன்பங்களைப் போக்குவதற்கு நீங்கள் இங்கே வந்திருப்பதைப் பார்க்கும்பொழுது எனக்கு உங்கள்மேல் ஏற்பட்ட வருத்தம் மறைந்துவிட்டது. நான் எப்பொழுதும் போற்றிப் புகழ்கின்ற என் ஆசிரியர் படும் இன்னல்களைப் போக்க நீங்கள் எவ்வளவு பாடுபடுகிறீர்களோ அவ்வளவு நானும் செய்வேன். அதனல் உங்களுக்கு ஏற்படும் மகிழ்ச்சியைப் போல எனக்கும் ஏற்படும். ஆனல் நீங்களும் உங்களுடைய சிற்றப்பாவைப்போல நல்ல செயல்களை மறைவககவே செய்வதில் தனி இன்பம் காணுகிறீர்கள் போலும்" என்று கூறி முடித்தாள். அவள் இவ்வாறெல்லாம் பேசியது தார்ன்கில் அங்கு வந்திருப்பது எங்களை அழுத்திவிடவேயன்றிக் கைதூக்கிவிட அன்று என்று அவளுக்குத் தெரியாததனல்தான்.

"நல்லதைச் செய்வதாவது, இன்பம் காண்பதாவது'' என்று குறுக்கிட்டார் வில்லியம். ''இல்லை

அம்மா, அவனுடைய இன்பங்கள் அவனைப் போலவே இழிவானவை. மனித இனத்தை அவமதித்த ஒரு கொடியவனை நீ அவனுடைய உருவத்தில் காணலாம். இப்பெரியவரின் பெண்ணைக் காதலித்துக் கைவிட்ட கொடியவன். அதோடு நில்லாது அவளுடைய தங்கையையும் கெடுக்கத் திட்டம் தீட்டியிருக்கிறான். அதற்கும் மேலாக அவளுடைய தந்தையைச் சிறையில் தள்ளிவிட்டான். அவளுக்குத் தீங்கிழைத்தவனைத் தண்டிக்க வீரத்தோடு புறப்பட்ட அவளுடைய அண்ணனையும் விலங்கு பூட்டிச் சிறையிலடைத்து விட்டான். அம்மா, இத்தகைய கொடியவனுக்கு வாழ்க்கைப் படுவதினின்றும் தப்பித்த உனக்கு என்னுடைய பாராட்டுக்கள்.''

இதைக் கேட்டுத் திகைத்த அரபெல்லா ''ஐயோ, நான் எவ்வளவு ஏமாந்து விட்டேன். இப்பெரியவருடைய மூத்த மகனை படைத்தலைவர் புதிதாக மணந்த தம் மனைவியுடன் அமெரிக்காவுக்குச் சென்றிருப்பதாக உறுதியாக என்னிடம் கூறினாரே தார்ன்கில்.

''அம்மா! அவர் உன்னிடம் சொன்னதெல்லாம் பொய். என்னுடைய மகன், ஜியார்ஜ், இந்த நாட்டை விட்டு வெளியே போகவே இல்லை. அவனுக்குத் திருமணமே நடக்கவில்லை. நீ அவனைக் கைவிட்டு விட்டால்கூட அவன் வேறு ஒருவரையும் விரும்பாது உன்னையே எப்பொழுதும் விரும்புகிறான். உனக்காக அவன் மண முடியாதவனாகவே சாகத் தயார் என்று அவன் கூறக்கேட்டுள்ளேன்'' என்று கூறினாள் என் மனைவி. தன் மகனுடைய அன்பின் ஆழத்தை அவளுக்கெடுத்துரைத்தாள். அவனுக்கும் தார்ன்கில்லுக்கும்



சண்டை ஏற்பட்ட காரணத்தை மெதுவாக விளக்கினாள். தார்ன்கில்லினுடைய வஞ்சனை நிறைந்த செயல்களை எடுத்துச் சொன்னாள். மொத்தத்தில் அவரைப்பற்றி மிகவும் மட்டமான எண்ணத்தை உருவாக்கி விட்டாள்.

''நான் அழிவுப்பாதையின் விளிம்புக்கு எவ்வளவு அருகில் போய் விட்டேன். ஆனால் அதனின்றும் நான் தப்பிவிட்டதற்குப் பெருமகிழ்வு அடைகிறேன். இவர் ஆயிரக் கணக்காகப் பொய்களை என்னிடம் கூறியிருக்கிறாரே. நான் பெருமையாக மதித்துவந்த ஒருவர்க்கு நான் அளித்திருந்த உறுதி இனிக் கட்டுப்படுத்தாது. ஏனெனில் அவரே நம்பிக்கையற்ற முறையில் நடந்து விட்டார் என்றெல்லாம் கூறி என்னுடைய மன உறுதியைத் தகர்த்து விட்டாரே. அவருடைய பொய்யுரைகளால் வீரமும் நல்ல பண்புமுடைய ஒருவரை நான் வெறுக்கும்படி செய்து விட்டாரே'' என்று புலம்பினாள் அரபெல்லா.

இதற்குள் என் மகனால் காயப்பட்டவன் என்று கருதப்பட்டவன் போலி நடிப்பினால் ஏமாற்றி விட்டான் என்று தெரிந்து விட்டதால் என் மகன் நீதியின் கரங்களினின்றும் விடுதலையடைந்து அங்கே வந்தான். ஜென்கின்சன் அவனுடைய ஏவலன் போல அவனுடைய முடியைச் சீவி, உடைகளை ஒழுங்குபடுத்தி விட்டார். எனவே அவன் தன்னுடைய இராணுவ உடையில் பெரிய போர் வீரனைப் போன்ற தோற்றப் பொலிவுடன் அங்கே வந்தான்.

நுழையும்போதே அரபெல்லாவிற்குச் சிறிது தலையைத் தாழ்த்தி வணக்கம் செய்துகொண்டே வந்தான். அவனுக்கு இங்கு நிகழ்ந்த மாற்றங்களோ அல்லது

அரபெல்லாவின் மனத்தை அவன் பக்கம் திருப்பி விட்ட அவனுடைய தாயின் பேச்சாற்றலோ எதுவும் தெரியாது. ஆனால் அரபெல்லாவினுடைய அமைதி யின்மையை எதுவும் தடுக்க முடியவில்லை.

அவள் அவனிடம் மன்னிப்புக்கேட்க எண்ணி னாள். அவளுடைய கண்ணீர், வருத்தம் நிறைந்த பார்வை அனைத்தும் அவளுடைய உள்ளத்திலெழுந்த உணர்ச்சிகளை உள்ளவாறு வெளிப்படுத்தின. அவனுக் களித்திருந்த உறுதியை மறந்து விட்டதற்காக அவள் உள்ளம் துடித்தது. ஏமாற்றக்காரனின் சொல்லை நம்பி ஏமாந்து விட்டோமே என்று வருந்தியதை அவள் பார்வை வெளியிட்டது. அவள் தன்னைக் கண்டு இவ் வளவு அழுவதை என் மகனால் நம்பவே முடியவில்லை.

"அம்மா, நீ ஏன் இப்படிக் கலங்குகிறாய்? இது பொய்த் தோற்றம். நான் இதை என்றுமே மதித்த தில்லை. ஆனால் இவ்வாறு ஆசி கூறியது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது" என்றான் அரபெல்லாவிடம்.

"இல்லை. நான் ஏமாந்து போனேன். மிக மோச மாக ஏமாந்துவிட்டேன். இல்லையேல் எப்பொழுதா வது நான் அளித்த உறுதியை நானே கைவிட்டிருப் பேனா. உங்களுக்கு என் நட்பைப் பற்றித் தெரியும். உங்களுக்கு அது நீண்ட நாட்களாகத் தெரியும். அதனால் அன்பு கூர்ந்து நான் செய்தவற்றை மறந்து விடுங்கள். ஒரு காலத்தில் என்னுடைய நிலையான அன்பைப் பெற்றிருந்தீர்கள் அல்லவா? அதைப்போல இனியும் தொடர்ந்து பெறுவீர்கள். அரபெல்லா உங்க ளுடையவளாக இருக்க முடியாதென்றால் அவள் வேறு யாருடையவளாகவும் இருக்கமாட்டாள் என்பது மட்டும் உறுதி" என்று கூறினாள் அரபெல்லா.



"உன்னுடைய தந்தையை மட்டும் எனக்கு நன்றா கத் தெரிந்திருந்தால் நீ வேறு யாருடையவளாகவும் ஆகமாட்டாய்" என்று கூறினார் வில்லியம்.

என்னுடைய மகன் மோசசுக்கு இக் குறிப் பொன்றே போதும். அவன் உடனே வில்மோட் இருந்த சத்திரத்திற்கு இங்கு நடந்தவற்றையெல்லாம் அவரிடம் கூறப் பறந்தோடி விட்டான். இதற்கிடையில் தார்ன்கில் தாம் எல்லாப் பக்கங்களினின்றும் தாக்கப்படு வதையுணர்ந்தார். புகழுரையாலும் போலியுரையாலும் ஒருவரையும் வெல்ல முடியாது என்று தெரிந்து கொண்டார். எனவே சுற்றியிருப்பவர்களை நேருக்கு நேரே தாக்கிப் பேசுவது என்ற முடிவுக்கு வந்து விட்டார். தம்மிடமிருந்த வெட்கத்தை விலக்கி வைத்துவிட்டு உண்மை வடிவமான கொடியகுணத்தை வெளியிட ஆரம்பித்தார்.

"எனக்கு இங்கே நீதி கிடைக்காது என்று தெரிந்து விட்டது. ஆனால் எனக்கு அது கிடைக்கும்படி செய்வேன். இனியும் நான் நீங்கள் செய்யும் உதவிகளை நாடி வாழவேண்டிய தேவையில்லை. நான் அவற்றை வெறுக்கிறேன். ஆனால் அரபெல்லாவின் சொத்துக் களை என்னிடமிருந்து யாரும் பிரிக்க முடியாது. அவளுடைய தந்தை நெருங்கிப் பழகியதற்கு மிக்க நன்றி. அச் சொத்துக்களைத்துக்கும் பத்திரமொன்று எழுதி அதில் கையெழுத்திட்டுக் கொடுத்திருக்கிறார். அது என்னிடம் பாதுகாப்பாக இருக்கிறது. அவ ளுடைய சொத்துக்காகத்தான் இத்திருமணத்திற்கு இசைந்து கொண்டேனேயன்றி அவளுக்காக அன்று. எனக்குத் தேவையான இரண்டில் ஒன்று கிடைத்து

விட்டது. மற்றென்றை யாரெடுத்துக் கொள்ளப் போகிறீர்கள்'' என்று இரைச்சலிட்டார் தார்ன்கில்.

இது யாரும் எதிர்பாராத தாக்காக இருந்தது. அவர் அவ்வாறு கூறுவதில் எவ்வளவு நியாயம் இருக்கிறது என்பதை வில்லியம் அறிவார். ஏனெனில் அவர்தாம் அந்தப் பத்திரத்தில் இன்னின்ன குறிக்க வேண்டுமென்று கூட இருந்து கூறியவர். தன் சொத்து முழுவதும் பறிபோய் விட்டதை யுணர்ந்த அரபெல்லா உடனே என் மகனை நோக்கிச் சொத்து இல்லாவிட்டால் நான் தரம் குறைந்தவளா என்று கேட்டாள். ''சொத்து என்னுடைய ஆற்றலுக்கப்பாற் போய் விட்டாலும் நான் என்னையே கொடுக்கிறேன், ஏற்றுக்கொள்வீர்களா?'' என்று என் மகனிடம் கேட்டாள்.

அதைக் கேட்ட அவளிடத்தில் உண்மைக் காதலுடைய என் மகன் ''எனக்கு எப்பொழுதும் தேவையானது நீதான். நீ சொத்து இழந்துஇருக்கும் இந்நிலைதான் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது. ஏனெனில் இந்நிலை உனக்கு என்னுடைய உண்மையான காதலைத் தெரியப்படுத்தும். இல்லையேல் நானும் உன்னை உன்னுடைய சொத்துக்காகத்தான் காதலிக்கிறேன் என்று எண்ணியிருப்பாய்'' என்று மகிழ்ச்சியுடன் கூறினன்.

அப்பொழுது அங்கே வந்த வில்மோட் தம்முடைய மகள் பெரிய இடையூற்றினின்றும் தப்பிக் கொண்டதற்கு எல்லையற்ற களிப்புற்றார். அவர்களிருவருடைய திருமணம் தடைபடுவதற்கு ஒப்புக்கொண்டார். ஆனல் அவளுடைய சொத்து முழுவதையும் பத்திரத்தின் மூலம் தார்ன்கில் பறித்துக்கொண்டாரே என்ற ஏமாற்றம் அவருக்குப் பெருங் கவலையை அளித்தது.



தனக்கென்று ஒன்றுமில்லாத ஒருவனைப் பணக்காரனுக்குவதற்குத் தன் சொத்து பயன்படப் போவதைக் கண்டார். தார்ன்கில்லிடம் சிக்கிய சொத்திற்கு ஈடாக வேறெதுவும் வந்தால் போதும். அதற்காக அவர் முட்டாள் என்ற பட்டத்தை வேண்டுமாயினும் ஏற்றுக்கொள்ளத் தயார். சிறிது நேரம் ஆழ்ந்த கவலையோடு பேசாது உட்கார்ந்திருந்தார். அவருடைய வருத்தத்தைக் குறைப்பதற்கு வில்லியம் முயன்றார்.

''உங்களுக்கு இப்பொழுது ஏற்பட்டுள்ள ஏமாற்றம் என்னை யொன்றும் பெரிதும் வாட்டவில்லை. செல்வத்தின்மீது நீங்கள் அளவற்ற பற்று வைத்திருக்கிறீர்கள். அதற்கு இது நல்ல தண்டனை. உங்களுடைய மகள் செல்வ வாழ்க்கை வாழ முடியாவிட்டாலும் நல்ல அமைதியான வாழ்க்கை வாழ்வதற்கு வழி இருக்கின்றது. இதோ நிற்கிறரே இப்படை வீரர் அவளைச் சொத்தில்லாமலே மணந்து கொள்ளத் தயாராக இருக்கின்றார். நீண்ட நாட்களாக அவர்கள் ஒருவரை யொருவர் விரும்பி வருகின்றனர். இவருடைய தந்தை எனக்கு நெருங்கிய நண்பர். அதற்காகவாவது இவருடைய பதவியில் எப்படியாவது நான் உயர்வை வாங்கித் தருவேன். எனவே உங்கள் கவலையை விட்டு விட்டு இவர்களிருவருடைய திருமணத்திற்கும் ஒப்புதலளியுங்கள்'' என்று கூறி அவரைத் தேற்றினர்.

''சர் வில்லியம், நான் என்றும் அவனை எதற்கும் வற்புறுத்தியது கிடையாது. அவளுடைய விருப்பத்துக்கும் இடையூருயிருந்தது கிடையாது. இர்

பொழுதும் தடுக்கமாட்டேன். அவள் இன்னும் இவரை விரும்புகிருளென்ருல் திருமணம் செய்து கொள்ளட்டும். அதற்கு நான் முழுமனத்துடன் ஒப்புத லளிக்கிறேன். ஏதோ இன்னும் கொஞ்சம் சொத்து இருக்கிறது. நீங்களும் உறுதியளித்திருக்கிறீர்கள். அதுவும் உதவி செய்யும். அதோடு தாம் இழந்துவிட்ட செல்வத்தை என்னுடைய பழைய நண்பரும் ஜியார்ஜினுடைய தந்தையுமான பிரிம்ரோசு மீண்டும் அடைந்தால் அதில் ஆருயிரம் பவுன்களை என்னுடைய மகள் பேருக்கு எழுதிவைப்பேன் என்று உறுதியளிப்பாரா? அப்படி அவர் செய்தால் இன்றிரவே அவர்களிருவரையும் ஒன்ருய்ச் சேர்த்து வைக்கத் தயார்" என்று வில்மோட் வில்லியத்திடம் கூறினுர்.

மணமுடிக்கப்போகும் இருவரையும் மகிழச் செய்வது என்னுடைய பொறுப்பில் விடப்பட்டதால் அவர் கேட்டவாறு தொகையை அளிக்க நான் உறுதி கூறினேன். உடனே அவர்களிருவரும் ஒருவரையொருவர் அன்புடன் தழுவிக்கொண்டார்கள்.

"என்னுடைய இன்னல்களுக்கெல்லாம் இத்தகையதொரு வெகுமதி கிடைத்தது மகிழ்ச்சியை யளிக்கிறது. நான் நாளெல்லாம் எதிர்பார்த்துக் கொண்டிருந்ததைவிட இது அதிகமாக இருக்கிறது. பெரிய பெரிய இன்னல்களுக்குப் பிறகு மீண்டும் நல்லவை அனைத்தும் கிடைப்பதென்ருல் இன்பம்தான். என்னுடைய அவாக்கூட இவ்வளவு உயர்ந்திருக்கவில்லை" என்று எல்லையற்ற மகிழ்ச்சியில் திளைத்திருந்த ஜியார்ஜ் கூறினுன்.

"ஆம், ஜியார்ஜ். அந்தக் கொடியவன் வேண்டுமென்ருல் என் செல்வத்தை எடுத்துக் கொள்ளட்டும்.



அது இல்லாவிடினும் நீங்கள் எவ்வளவு மகிழ்ச்சியையடைகிறீர்களோ அவ்வளவு மகிழ்ச்சியை நானும் அடைகிறேன். நான் பெரிய மாற்றத்தையே செய்து விட்டேனே. இழிய குணம் படைத்த ஒரு மனிதனை விட்டு வீரமும் நற்பண்பும் நிறைந்த ஒரு மனிதனையடைந்து விட்டேனே. அவன் நம்முடைய செல்வத்தை அனுபவிக்கட்டும். நான் ஏழையாக இருந்தால்கூட மகிழ்ச்சியாய் இருப்பேன்" என்று அரபெல்லா ஜியார்ஜிடம் கூறினுள்.

"நீங்கள் எதை வெறுக்கிறீர்களோ நான் அதை வைத்துக்கொண்டு மகிழ்ச்சியாக வாழ்வேன்" என்று எக்காளத்தோடு கூறினுர் தார்ன்கில்.

"நிறுத்துங்கள், நிறுத்துங்கள். அதில் இரண்டு சொற்களைப் பற்றி வாதிக்க வேண்டும்" என்று குறுக்கிட்டார் ஜென்கின்சன். "அப் பெண்மணியின் செல்வத்தில் நீங்கள் ஒரு காசைக்கூடத் தொடக்கூடாதே."

உடனே அவர் வில்லியத்தைப் பார்த்து "ஐயா, இவர் வேறு ஒரு பெண்ணை ஏற்கெனவே திருமணம் செய்து கொண்டிருப்பாராயின் இச்சொத்துக்கு உரிமை கொண்டாட முடியுமா?" என்று கேட்டார்.

"இச்சிறு ஐயத்தைப் போய்க் கேட்கிருயே; அவன் வேறு ஒரு பெண்ணை மணந்து கொண்டால் அவனுக்கு இச் சொத்து கிடைக்காது என்பதில் ஐயமேயில்லை" என்று உறுதியாகச் சொன்னுர் வில்லியம்.

"நானும் இவரும் பழைய நாட்களிலிருந்து ஒன்ருக விளையாடியிருக்கிருேம். அதனுல் அவரிடம் ஏற்பட்டுள்ள நட்புக்கு நான் வருந்துகிறேன். நான்

அவரை எவ்வளவு விரும்பினாலும் சரி, அவர் இப்பொழுது வைத்துள்ள பத்திரம் புகையிலை மடிக்கக் கூடப் பயன்படாது. ஏனெனில் அவருக்கு ஏற் கெனவே திருமணமாகி விட்டது'' என்று கூறினார் ஜென்கின்சன்.

“முட்டாள், நீ பொய் சொல்லுகிறாய்'' என்று கத்தினார் தார்ன்கில். இதனால் ஏற்பட்ட அவமானத் தினால் அவருக்குச் சினம் பொங்கிவந்தது. ''சட்டப்படி நான் எந்தப் பெண்ணையும் திருமணம் செய்துகொள்ள வில்லை'' என்று மறுத்தார்.

"இருக்கலாம். என்னை மன்னித்து விடுங்கள். உங்களுக்குத் திருமணமாகி விட்டது. உங்களுடைய மனைவியை நான் அழைத்து வந்தாலாவது உங்க ளுடைய பழைய நண்பனை ஜென்கின்சனுக்கு நன்றி செலுத்துவீர்களென எதிர்பார்க்கிறேன். இங்குள்ள அனைவரும் உங்களுடைய ஆவலைச் சிறிதுநேரம் கட்டுப்படுத்தினால் நீங்கள் அவளைப் பார்க்கலாம்'' என்று கூறிவிட்டு ஜென்கின்சன் தம்முடைய வழக்க மான நடையில் வெளியே சென்றுவிட்டார். அங்கிருந்த எங்களனைவருக்கும் ஜென்கின்சன் இவ்வாறு பேசுவ தில் என்னதான் உண்மை யிருக்கிறது என்று எண்ணிப்பார்க்க முடியவில்லை.

“போனால் போகட்டும். வேறு எதையாவது கூறி யிருந்தால் நான் ஒருவேளை செய்திருப்பேன். ஆனால் இதில் முற்றும் அவனை மறுத்துவிடுவேன். இந்த வெடியை யெல்லாம் நம்புவதற்கு நானொன்றும் இன்னும் சிறு பிள்ளை அன்று'' என்று புன்னகையுடன் கூறினார் தார்ன்கில்.



''அவன் என்ன நினைக்கிறான் என்று எனக்குப் புரியவில்லை'' என்று சொன்னார் வில்லியம். ''ஒரு வேளை இதெல்லாம் வெறும் வேடிக்கை போலிருக் குமோ'' என்றார்.

இதைக் கேட்ட நான் ''இதற்கு உண்மையான பொருள் ஏதாவது அவர் வைத்திருக்கலாம். ஒன்று மறியாதவர்களை ஏமாற்றுவதற்கு இவர் போட்டுள்ள பல திட்டங்களைப் பார்க்கும் பொழுது இவற்றை யெல்லாம்விட இவரையே ஏமாற்றுவதற்கு வேறொருவன் திட்டமிட்டு இவரை ஏமாற்றியிருக்கலாம் அல்லவா? அவர் அழித்துள்ள பல பெண்களை நாம் எண்ணிப் பார்க்கும்பொழுது எத்தனை பெற்றோர்கள் இவரால் தங்கள் குடும்பத்திற்கு ஏற்பட்ட இழிவையும் கேட்டையும் தாங்கிக் கொண்டிருக்கிறார்களோ? அவர் களில் யாராவது ஒரு பெண் இப்பொழுது இங்கு வந்தால்கூட வியப்பதற்கில்லை ஆ....என்ன வியப்பு. இறந்துபோன என் மகளையா நான் காண்கிறேன். நான் அவளையா பார்க்கிறேன். ஆம்...ஆம்....என் னுடைய உயிர்தான். என்னுடைய இன்பம்தான். ஒலிவியா, உன்னை இழந்து விட்டேன் என்று எண்ணினேனே. இன்னுமா நான் உன்னைப் பார்க் கிறேன். நீ இன்னும் என்னை மகிழ்விக்க உயிரோடு இருக்கிறாயா?''

அந்த இரு காதலர்களுடைய தழுவல்கூட நான் என்னுடைய மகளைத் தழுவியபோது ஏற்பட்ட இன்பத் திற்குக் குறைவாகத்தா னிருந்திருக்கும். ஜென்கின்சன் என் மகளை அழைத்து வந்தபோது நான் அவளைக் கைகளில் அணைத்து மகிழ்ந்தேன். அவளுடைய அமைதி அவள்பட்ட துன்பத்தை வெளிப்படுத்தியது.

"என்னுடைய வயது காலத்தில் என்னைத் தேற்று வதற்காக மீண்டு வந்துவிட்டாயா, மகளே."

"அவளே தான்" என்று கூறினர் ஜென்கின்சன். "அவளைப் பற்றி என்ன வேண்டுமானலும் சொல் லுங்கள். ஏனெனில் அவள் உங்களுடைய பெண்ணே தான். இந்த அறையிலுள்ள பிற பெண்களைப் போலவே நல்ல பண்புடையவள்."

தார்ன்கில்லை நோக்கி "நீங்கள் அங்கே நின்று கொண்டிருப்பது என்பது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை இந்தப் பெண் தான் நீங்கள் சட்டப்படி மணந்து கொண்ட மனைவி என்பது. நான் உண்மையைத் தவிர வேருென்றையும் பேசவில்லை என்பதற்குச் சான்ருக நீங்கள் இருவரும் திருமணம் புரிந்துகொண்டீர்கள் என்ற சான்றிதழ் இருக்கின்றது" என்று கூறிக்கொண்டு தங் கையிலிருந்த சான்றிதழை வில்லியத்திடம் கொடுத்தார். அவர் அதைப் படித்துப் பார்த்து அது எல்லா வகையிலும் உண்மையானது என்று சொன்னர்.

"நண்பரே" என்று தொடர்ந்தார் ஜென்கின்சன். "நீங்கள் இவற்றையெல்லாம் கண்டு மிக்க வியப்படை கிறீர்கள் போலும். வேண்டுமென்ருல் நான் கூறப் போகும் சில சொற்கள் உங்களுக்குப் புரிய வைத்து விடும். இப்புகழ் பெற்ற நண்பர் என்னிடமும் நட்புக் கொண்டிருந்தார். சில சமயங்களில் அவர் செய்ய வேண்டிய சிலவற்றை என்னைச் செய்யச் சொல்லு வார். அவற்றுள் ஒன்ருக இப்பெண்ணை ஏமாற்றுவ தற்காகப் பொய்ச் சான்றிதழ் ஒன்றையும் பொய்யான மதகுரு ஒருவரையும் கொண்டுவரச் சொன்னர்.



ஆனல் அவருடைய நெருங்கிய நண்பனுதலால் உண்மையான சான்றிதழ் ஒன்றையும் உண்மையான மதகுரு ஒன்றையும் கூட்டி வந்து வெகுவிரைவாக இவர்களுடைய திருமணத்தை முடித்துவிட்டேன்.

"இதையெல்லாம் நான் பெருந்தன்மையுடன் செய்திருப்பேன் என்று நீங்கள் எண்ணுவீர்கள். அது தான் இல்லை. வெட்கத்தை விட்டு உண்மையைக் கூறுகிறேன். நான் அந்தச் சான்றிதழை வைத்துக் கொண்டு அது உண்மையான சான்றிதழ் என்று அவருக்குக் காட்டி எனக்குப் பணம் தேவையானபொழு தெல்லாம் பணம் பறிக்கலாம். பணம் தரவில்லையேல் இதை வெளியே காட்டி விடுவேன் என்று பயமுறுத் தலாம் என்று எண்ணினேன்."

அப்பொழுது அவர் கூறியதைக் கேட்டு அந்த அறைக்குள் இன்பம் வெடித்துக் கிளம்பியது போல் காணப்பட்டது. எங்களுடைய மகிழ்ச்சி பொதுக் கூடத்தில் இருந்தவர்களுக்குக்கூட எட்டிவிட்டது. ஒவ்வொருவருடைய முகத்திலும் மகிழ்ச்சி துள்ளி விளையாடியது. ஒலிவியாவின் கன்னங்கள்கூட மகிழ்ச் சியால் நெளிய ஆரம்பித்தன. இவ்வாறு பழைய நண்பர்களும் பழைய செல்வமும் மீண்டும் கிடைத்த தனல் நாங்கள் சென்றுகொண்டிருந்த அழிவுப்பாதை தடைப்பட்டுவிட்டது. பழைய வலிமையும் அறிவும் மீண்டும் வந்து விட்டன. அங்குள்ள அனைவரினும் என்னைப்போல் யாரும் மகிழ்ச்சியடைந்திருக்க மாட்டார்கள். இன்னும் என்னுடைய மகளைக் கை களால் தழுவிக்கொண்டு இவையெல்லாம் வெறும் கனவல்லவே என்று என் இதயத்தையே கேட்டுக் கொண்டேன்.

"நான் பட்ட இன்னல்கள் காணுதென்று ஏன் இவள் இறந்துவிட்டாள் என்று கூறி என்னுடைய கவலையைப் பெருக்கினீர்கள். ஆனால் அதைப் பற்றிப் பரவாயில்லை. நான் மீண்டும் அவளைப் பார்ப்பது நான் பட்ட துன்பத்திற்குப் பெரும் கைம்மாருக உள்ளது" என்று மகிழ்ச்சியுடன் ஜென்கின்சனிடம் கூறினேன்.

"அந்தக் கேள்விக்கு எளிதாக விடைகூறி விடலாமே. உங்களை இச்சிறையினின்றும் விடுவிப்பதற்கு நீங்கள் தார்ன்கில்லுக்குப் பணிந்து போவதைத் தவிர வேறு ஒரு வழியும் இல்லையென் றறிந்தேன். அதற்கு நீங்கள் அவருக்கும் வேறு ஒரு பெண்ணுக்கும் நடக்க இருந்த திருமணத்திற்கு ஒப்புதலளிக்க வேண்டுமென்றார். ஆனால் நீங்களோ உங்களுடைய பெண் உயிரோடிருக்கும் வரை ஒப்புதலளிக்க மறுத்துவிட்டீர்கள். எனவே அவள் இறந்து விட்டாள் என்று கூறி உங்களை மாற்றுவதைவிட வேறு ஒரு முறையும் தெரியவில்லை. இந்தப் பொய்க்கு உங்களுடைய மனைவியையும் உடந்தையாக்கினேன். இதை மாற்றி உண்மையைச் சொல்வதற்கு இதுவரை இது போன்ற நல்ல வாய்ப்பு ஏற்படவில்லை" என்று பதிலுரைத்தார் ஜென்கின்சன்.

அங்கிருந்த அனைவருள்ளும் இருவருடைய முகங்கள் மட்டும்தான் மகிழ்ச்சியற்றுக் காணப்பட்டன. தார்ன்கில் கொண்டிருந்த உறுதி அவரைக் கைவிட்டு விட்டது. அவர் செய்த இழிசெயல்கள் பெரும் இடைவெளியை ஏற்படுத்தியிருப்பதைப் பார்த்தார். அதனால் தன் சிற்றப்பாவின் எதிரில் தலையைக் குனிந்து மண்டியிட்டார். வில்லியம் அவரை அப்படியே தள்ளிவிட எண்ணினார். ஆனால் நான் அவரைத் தடுத்ததனால் அவரைத் தோள்களைப் பற்றி எழச் செய்தார்.



சிறிது நேரம் கழித்து "நீ செய்துள்ள கொடுமைகளுக்கும், குற்றங்களுக்கும், நன்றியற்ற செயல்களுக்கும் கருணையே காட்டக்கூடாது. இருந்தாலும் உன்னை முழுவதும் கைவிட்டுவிட விரும்பவில்லை. நீ வாழ்வதற்கு வேண்டிய வசதிகள் கொடுக்கப்படும். குற்றங்கள் புரிவதற்கன்று. உன்னுடைய மனைவியான இந்த இளம் பெண்ணுக்கு உன்னுடைய பழைய செல்வத்தில் மூன்றில் ஒரு பகுதியை யளிக்கிறேன். அவளுடைய கருணையினால்தான் உன்னுடைய எதிர்கால வாழ்க்கையில் வேறு சில நலன்களை நீ பெற வேண்டும்" என்று உரைத்தார்.

அவருக்குக் காட்டப்பட்ட அன்பிற்காக அவர் நன்றி செலுத்த விரும்பினார். ஆனால் அதைக்கூற விடாது வில்லியம் தடுத்துவிட்டார். அவரை அப்பொழுதே அங்கிருந்து போகச் சொன்னார். அவருடைய பழைய வேலைக்காரர்களுள் தகுதியான ஆளாகப் பார்த்து ஒரே ஒரு ஆளை மட்டும் வைத்துக்கொள்ளச் சொன்னார். அப்பொழுதுள்ள நிலைக்கு அது போதும் என்று சொல்லிவிட்டார்.

அவர் அங்கிருந்து போனபின் வில்லியம் மெதுவாக நடந்து தம்முடைய புது மருமகளைப் புன்னகையுடன் பார்த்து மகிழ்ச்சியோடிருக்கச் சொன்னார். அவரைப் போலவே அரபெல்லாவும் அவளுடைய தந்தையும் ஒலிவியாவை வாழ்த்தினர். என்னுடைய மனைவிகூட அவளை அகமுறத் தழுவி முத்தமிட்டாள். அவள் கொண்டிருந்த கவலையெல்லாம்

இப்போது மறைந்துவிட்டது. சோபியாவும் மோசசும் அக்காளை வாழ்த்தினர். ஜென்கின்சனும் வாழ்த்தினுர். எங்களனைவருடைய மனநிறைவும் அதிகரித்தது. நல்லதைச் செய்வதிலேயே மகிழ்ச்சிகண்ட வில்லியம் சுற்றியிருப்பவர்களை நன்ருகப் பார்த்தார். என்னுடைய பெண் சோபியாவைத் தவிர மற்றவர் கண்களி லெல்லாம் மகிழ்ச்சி நிறைந்திருப்பதைப் பார்த்தார். அவள் மட்டும் ஏதோ சில காரணங்களினுல் முழுமன நிறைவு அடைந்தவளாகக் காணப்படவில்லை.

அதைப் பார்த்த வில்லியம் "இங்குள்ளவர்களில் ஒருவர் அல்லது இருவரைத் தவிர மற்ற அனைவரும் மகிழ்ச்சியோடிருப்பது தெரிகிறது. நான் நீதி வழங்க வேண்டியது இன்னும் ஒன்றே ஒன்று இருக்கிறது" என்று சிரித்துக்கொண்டே சொன்னுர். உடனே என்னைப் பார்த்து "திரு ஜென்கின்சனுக்கு நாம் இருவரும் மிகவும் கடமைப் பட்டுள்ளோம் அல்லவா? அதற்குப் பரிசாக நாம் அவருக்கு ஏதாவது ஒன்றை அளிக்க வேண்டும். அவரைச் சோபியா மிக்க மகிழ்வோடு வைத்திருப்பாள் என்று நான் எண்ணு கிறேன். அவளுடைய சொத்தாக ஐந்நூறு பவுன்களை அவர் வைத்துக் கொள்ளட்டும். அதைக் கொண்டு அவர்கள் நலமாக வாழலாம் என்பது எனக்கு உறுதி. என்ன சோபியா, இங்கே வா. நான் சொல்லும் இப் பொருத்தத்தைப் பற்றி நீ என்ன சொல்கிருய்? நீ அவரை மணந்து கொள்கிருயா?" என்று அவளிடம் கேட்டார்.

என்னுடைய மகள் மிக்க வருத்தத்தோடு தன் தாயின் தோள்களில் தன் முகத்தைப் புதைத்துக்



கொண்டாள். அழுது கொண்டே "அவரையா மணப்பது, முடியாது, ஒருபொழுதும் முடியாது" என்ருள்.

"என்ன, ஜென்கின்சனை மணக்க முடியாதா? உங்களைப் போற்றுபவர். அழகும் இளமையும் உடையவர். ஐந்நூறு பவுன்களுக்குரியவர். நல்ல குணம் படைத்தவர்."

"நீங்கள் என்னை விட்டுவிடும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். என்னை இவ்வளவு இழிவாக ஆக்கவேண்டாம்."

"இதைப்போல் முன் நடந்ததேயில்லையே! குடும்பம் முழுவதும் கடமைப்பட்டுள்ள ஒரு மனிதரை மறுக்கலாமா? அவர் உன்னுடைய தமக்கையைப் பாதுகாத்திருக்கிருர். ஐந்நூறு பவுன் உடையவர். வேறு என்ன அவரிடம் இல்லை."

"முடியாது, முடியவே முடியாது. அதைவிட நான் முதலில் இறந்து விடுகிறேன்."

"அதுதான் உன் முடிவென்ருல் நீ அவரை மணக்க முடியாதென்ருல்—நான்தான் உன்னை மணந்து கொள்ளவேண்டும்" என்று கூறிக்கொண்டே அவளை மார்போடணைத்துக் கொண்டார்.

"அன்பே, உனக்கு மட்டுமே உரியவனை பர்செல் உன்னை எப்படி ஏமாற்றுவான் என்று ஏன் நீ எண்ணவில்லை. அல்லது சர் வில்லியம்தான் தன்னைத் தனக்காக மட்டுமே விரும்பிய பெண்ணை மறந்துவிட முடியுமா? நான் சில ஆண்டுகளாகவே பெண்ணைத் தேடிக் கொண்டிருக்கிறேன். என்னுடைய

செல்வத்தைப் பற்றி அறியாது என்னை எனக்காக மட்டும் விரும்பும் பெண்ணைத் தேடினன். அழகும் கவர்ச்சியும் அற்ற பல பெண்களைக்கூடப் பார்த்தேன். ஆனால் இத்தகைய அழகு நிறைந்த பெண் எப்படி எனக்குக் கிடைத்தாள் என்று எனக்கே வியப்பாக உள்ளது.''

அவர் ஜென்கின்சனை நோக்கி ''ஐயா, என்னால் இப்பெண்ணைப் பிரிந்திருக்க முடியாது. ஏனெனில் அவள் என் முகத்தை அழகான முகம் என்று எண்ணி என்னை விரும்பியவள். என்னால் உமக்குச் செய்யக் கூடிய கைம்மாறெல்லாம் அவளுடைய செல்வமனைத்தையும் உமக்கே கொடுத்து விடுகிறேன். நீர் நாளை என்னுடைய வீட்டிற்கு வந்து ஐந்நூறு பவுனைப் பெற்றுச் செல்லும்'' என்றார்.

எனவே அவளுடைய தமக்கையை வாழ்த்தியதைப் போலவே அவளையும் நாங்களனைவரும் வாழ்த்தினோம். இதற்குள் எங்களனைவரையும் விடுதிக்கு அழைத்துச் செல்ல வண்டிகள் காத்திருப்பதாக வில்லியத்தின் ஆள் வந்து சொன்னான். நானும் என் மனைவியும் அந்த இருளடைந்த இடத்தைவிட்டு முதலில் வெளியே வந்தோம். வில்லியம் நாற்பது பவுன்களை அங்கிருந்த கைதிகளனைவருக்கும் பங்கிட்டுக் கொடுக்கச் சொன்னார். அதைப் பார்த்த வில்மோட்டானும் இருபது பவுன்கள் கொடுத்து வழங்கச் சொன்னார். அக்கிராமத்திலிருந்த மக்கள் சிலரால் நாங்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்கப் பெற்றோம். அவர்களிடை நின்று கொண்டிருந்த எங்களுடைய ஊர்க்காரர்களைப் பார்த்து நாங்களும் கைகளை ஆட்டினோம். அவர்கள் எங்களுடனேயே விடுதிக்கு வந்தனர். அவர்



களனைவருக்கும் உண்டி வழங்கப்பட்டது. மற்றவர்களுக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

இரவு உணவு முடிந்தவுடன் நான் ஓய்வெடுக்க விரும்பினேன். ஏனெனில் இன்பமும் துன்பமும் மாறிமாறி வந்து என்னுடைய நலத்தைக் குறைத்துக் களைப்பை உண்டு பண்ணியிருந்தது. நான் படுக்கச் செல்வதற்கு அனுமதிகேட்டு அவர்களை மகிழ்ச்சி விளையாட்டுக்களினிடையே விட்டு விட்டுத் தனியாகச் சென்றேன். நான் தனிமையில் சென்றவுடன் இத்தகு எல்லையற்ற இன்பத்தை யளித்த ஆண்டவனுக்கு நன்றி செலுத்திவிட்டு மறுநாள் காலைவரை அமைதியாக உறங்கினேன்.

# 32. மகிழ்ச்சிதரும் மணங்கள்

மறுநாட் காலையில் நான் எழுந்தவுடன் என் படுக்கையினருகில் என்னுடைய மூத்த மகன் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தேன். அவன் எனக்குப் புதிதாக ஏற்பட்டுள்ள நல்வாய்ப்பைக் கூறி என் மகிழ்ச்சியை அதிகப்படுத்த வந்திருந்தான்.

எனக்குக் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுக்காத வணிகனை ஆன்ட்வெர்ப்பில் கைது செய்து அவன் கடன் கொடுத்தவர்களுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டிய தொகையைவிட அதிகமான தொகையை அவனிடமிருந்து கைப்பற்றியுள்ளார்களாம். இதைப் போன்ற எதிர்பாராத வகையில் செல்வம் கிடைத்ததில் ஏற்பட்ட மகிழ்ச்சியைப் போன்றே மகனுடைய பெருந்தன்மையைக் கண்டும் மகிழ்ச்சியடைந்தேன். அவனிடமிருந்த தொகையைப் பெற்றுக்கொள்வது முறையா என்று தடுமாறிக் கொண்டிருந்தேன்.

அப்பொழுது அங்கே வந்த வில்லியம் என் அறையினுள் வந்தார். அவரிடம் என்னுடைய ஐயங்களைக் கூறினேன். என்னுடைய மகனுக்கு அவனுடைய திருமணத்தின் மூலமாகவே பெருத்த செல்வம் வந்துவிட்டதால் இதை நான் ஏற்றுக்கொள்ளலாம் என்று அவர் கூறினர்.

அவர் அங்கு வந்ததற்குக் காரணம் அவர் அதற்கு முந்திய நாளிரவே திருமணங்கள் நடைபெறுவதற்குரிய அனுமதிகளை வாங்க ஆளனுப்பியுள்ளதாகவும் அவை எந்த நேரத்திலும் வந்துவிடும் என்றும் வந்தவுடன் என்னையே திருமணத்தைச் சிறப்பாக நடத்தி



வைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்வதற்காகத்தான் என்று சொன்னர்.

நாங்கள் பேசிக்கொண்டிருந்த பொழுது வேலையாள் ஒருவன் வந்து ஆள் திரும்பி வந்துவிட்டான் என்று தெரிவித்தான். நானும் இதற்குள் தயாராக இருந்ததால் கீழே சென்றேன். அங்கே அனைவரும் ஒரே மகிழ்ச்சியில் ஒருவரையொருவர் கேலி செய்து விளையாடிக் கொண்டிருந்தனர். இருந்தாலும் முக்கியமான சடங்கு நடக்கவேண்டிய இந்நேரத்தில் அவர்கள் இப்படிச் சிரித்து விளையாடிக் கொண்டிருந்தது எனக்குப் பிடிக்கவில்லை.

இதைப் போன்ற நல்ல நேரங்களில் ஒழுங்காக இருக்கவேண்டும் என்று கூறி இரண்டு துதிப்பாடல்களையும் அறிவுரையொன்றையும் ஓதினேன். இருந்தும் அவர்கள் அடங்கியவர்களாகக் காணப்படவில்லை. நாங்கள் கோயிலுக்குச் செல்லும் வழியில்கூட அடக்கம் என்பதை முழுவதும் கைவிட்டு விட்டார்கள். நான் முதலில் சென்றுகொண்டிருந்தேன். ஆதலின் அடிக்கடி அவர்களைச் சினத்தோடு திரும்பித் திரும்பிப் பார்த்தேன்.

கோயிலுக்குச் சென்றவுடன் புதிதாக ஒரு குழப்பம் உண்டாயிற்று. யாருக்கு முதலில் திருமணம் செய்வதென்ற பிரச்சினை ஏற்பட்டது. என் மகனுடைய மணப்பெண் சோபியாவினுடைய திருமணம்தான் முதலில் நடக்க வேண்டுமென்றுள். ஆனல் இதை அவள் மறுத்துவிட்டாள். உலகம் தன்னைக் கொடியவள் என்று கூறுமென்றுள்.

ஒவ்வொருவரும் தாங்கள் கூறியவற்றையே திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டிருந்தனர். இவ்வளவு நேரம் வேதப் புத்தகத்தை வைத்துக்கொண்டு நின்று கொண்டேயிருந்த எனக்கு இவர்களிட்ட சண்டை பெரும் சலிப்பை விளைவித்தது.

"உங்களில் ஒருவர்க்காவது திருமணம் நடக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லை போலும். இதைவிட எல்லோரும் திரும்பிப் போய்விடலாமே, இன்று இங்கு ஒன்றும் நடைபெறாது என்று எண்ணுகிறேன்" என்று சினத்துடன் கூறினேன்.

இது அவர்களைத் தங்கள் நிலைக்குக்கொண்டு வந்தது. முதலில் வில்லியம்—சோபியா இருவருடைய திருமணமும் நடைபெற்றது. அதன்பின் என் மகன் தன் அருமை மனைவியைக் கைப்பிடித்தான்.

அன்று காலையிலேயே என்னுடைய பழைய நண்பரான பிளேம்பரோவைக் குடும்பத்துடன் அழைத்து வரும்படி ஒரு வண்டியை அனுப்பியிருந்தேன். நாங்கள் கோயிலிலிருந்து விடுதியை அடைந்த பொழுது பிளேம்பரோவும் அவருடைய குடும்பத்தினரும் வண்டியினின்றும் இறங்குவதைப் பார்த்தோம். பிளேம்பரோவின் இரண்டு பெண்களும் வண்டியை விட்டு இறங்கினர். ஜென்கின்சன் மூத்த பெண்ணைக் கையைப் பிடித்து இறக்கினார். என்னுடைய மகன் மோசசு இளைய பெண்ணைக் கைத் தாங்கலாக இறக்கினான். அவன் அப் பெண்ணை உண்மையிலேயே விரும்புவதைக் கவனித்தேன்.

நாங்கள் விடுதியை அடைந்த சிறிது நேரத்தில், என்னுடைய கிராமத்தைச் சார்ந்த சிலர் நான் விடுதலை



யடைந்தது தெரிந்து என்னைப் பாராட்ட வந்திருந்தனர். அவர்களுள் நான் கைதான பொழுது என்னை விடுவிக்க முயன்று என்னிடம் சினவுரைகளைப்பெற்ற சிலரும் இருந்தனர். நான் அக்கதையை என் மருமகனை வில்லியத்திடம் கூறினேன். அவரும் அவர்களைக் கடிந்து கொண்டார். ஆனால் அவர்கள் அடைந்த பெருவருத்தத்தைக் கண்டு ஒவ்வொருவருக்கும் அரைகினி கொடுத்து நன்றாகக் குடித்து மகிழுமாறுசொன்னார்.

அதற்கடுத்துத் தார்ன்கில்லினுடைய சமையற்காரன் சமைத்துவைத்திருந்த விருந்து எங்களுக்காகக் காத்துக்கொண்டிருந்தது. இந்த இடத்தில் தார்ன்கில்லைப்பற்றிக் குறிப்பிடாது இருக்க முடியாது. அவர் நெருங்கிய உறவினர் ஒருவரின் வீட்டில் தங்கியுள்ளார். அவர்களுடனேயே உண்டு அவர்களனைவரும் விரும்பும் வண்ணம் நடந்து கொள்கிறார். சற்றுச் சோகமே உருவெடுத்தாற் போன்று இருந்தாலும் பெரும்பாலான நேரத்தைப் பிரெஞ்சு இசைக்கருவியைப் பயிலுவதிலேயே செலவழிக்கின்றார். ஆனால் என்னுடைய மூத்த மகள் மட்டும் இன்னும் அவரையே எண்ணிக் கொண்டிருக்கிறாள். அவர் திருந்திவிட்டாரானால் தன்னுடைய மனம் இளகி அவரை ஏற்றுக்கொள்வாளென அவள் அடிக்கடி கூறிய கூற்றுக்களினால் தெரிந்தது.

நாங்களனைவரும் உண்பதற்கு உட்கார்ந்த பொழுது எங்களுடைய பழைய பழக்கம் மீண்டும் தொடங்கியது. என்னுடைய மூத்த மகள் புதிதாகத் திருமணமான பெண்களிருவருக்கும் தலைமை வகிக்க வேண்டுமா என்ற கேள்வி பிறந்தது. ஆனால் இவ்

O111,3LGH,N1



விவாதத்திற்கு என்னுடைய மகன் ஜியார்ஜ் ஒரு முற்றுப் புள்ளியை வைத்தான். ஒவ்வொருவரும் அவருடைய மனைவியினருகில் உட்கார வேண்டுமென்று அறிவித்தான். இதை என்னுடைய மனைவியைத் தவிர மற்ற அனைவரும் மகிழ்ச்சியோடு வரவேற்றனர்.

அவள் வழக்கம்போல மேசையின் தலைப்புப் பகுதியில் இருந்து கொண்டு எல்லோருக்கும் உணவைப் பரிமாற வேண்டுமென்றாள். அங்கு உண்டான மகிழ்ச்சியைக் கூறவே முடியாது. வழக்கத்தைவிட அதிகமான கேலிப் பேச்சுக்கள் இருந்தனவாகத் தோன்றவில்லை. ஆனால் வழக்கத்தை விட அதிகமான சிரிப்பு மட்டும் இருந்தது.

விருந்து முடிந்தவுடன் என்னுடைய பழைய வழக்கத்திற்கு ஏற்றவாறு உடனே உணவு மேசைகளைத்தையும் அகற்றி விடச் சொன்னேன். என்னுடைய குடும்பத்தினர் நீண்ட நாட்களுக்குப் பிறகு இவ்வாறு கூடியிருப்பதைக் கண்டு மகிழ்ச்சி யடைந்தேன். என்னுடைய சிறுவர் இருவரும் என்னுடைய மடியில் உட்கார்ந்திருந்தனர். மற்றவர்கள் தங்கள் தங்கள் வாழ்க்கைத்துணையி னருகில் அமர்ந்திருந்தனர்.

இந்த வயதான காலத்தில் எனக்குத் தேவையானது ஒன்றுமே இல்லை. என்னுடைய கவலைகளெல்லாம் மறைந்துவிட்டன. எனக்கு ஏற்பட்ட இன்பம் விவரிக்க முடியாதது. வறுமையில் நான் ஆண்டவன்பால் கொண்டிருந்த பற்றைவிடச் செழுமையில் அப்பற்று இன்னும் அதிகரிக்க வேண்டும் என்ற அவா ஒன்றுதான் அப்பொழுது எஞ்சியிருந்தது.

110347